# "மணிமேகலை கால சமயங்களும்

# அவற்றின் முற்கால நிலையும், பிற்கால நிலையும் "

(செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதி நல்கையுடன் செய்யப்பெற்ற

ஆய்வுத்திட்டம்- F.No. 11- 264/CICT/2015-16/ Research projects-5 )

**ஆய்வுத் திட்ட முதன்மையர்**

முனைவர் மு.பழனியப்பன்

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானை, 623 407

**ஆய்வுத் திட்ட உதவியர்**

முனைவர் மு.பத்மா

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL

केंद्रीय शास्त्रीय तमिळ संस्थान

CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL - CHENNAI

## முன்னுரை

இந்திய மெய்ப்பொருளியல் வரலாறு தொன்மையும், பன்முகமும் கொண்டது. உலக அளவில் மெய்ப்பொருள் சிந்தனைகள் தோற்றம் பெற்ற காலத்திலேயே இந்திய மெய்ப்பொருளியலும் தோற்றம் பெற்று வளரத்தொடங்கியது. உலக அளவில் இந்திய மெய்ப்பொருள் கொள்கைகள் ஒப்பு நோக்கத்தக்கனவாகவும், நன்மதிப்புடையனவாகவும் விளங்குகின்றன. இந்திய அளவில் மெய்ப்பொருள் வரலாறு வளர்ந்ததுபோலவே இந்திய உட்பகுதிகளிலும் மெய்ப்பொருள் தேடலுக்கான வளர்ச்சிகள் வளர்ச்சி பெற்றிருந்தன. குறிப்பாகத் தமிழ் மொழியில் மெய்ப்பொருள் தேடல் என்பது குறிக்கத்தக்க இடம் பெறுவதாக உள்ளது.

தமிழின் செம்மொழி இலக்கியங்களாகக் கருதப்படும் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், இரட்டைக்காப்பியங்கள் போன்றவற்றில் மெய்ப்பொருள் தேடலுக்கான பல கூறுகள் காணக்கிடைக்கின்றன. இரட்டைக்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை தமிழக மெய்ப்பொருள்

தேடலில் குறிக்கத்தக்கப் பதிவாகும். மணிமேகலைக் காப்பியத்தை எழுதிய சீத்தலைச் சாத்தனார் அக்காப்பியத்தைப் பிற சமயக் கொள்கைகளை எடுத்துரைக்கும் வகையில் எழுதியுள்ளார். இதன் காரணமாக பிற சமயப் பதிவுகள் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் மணிமேகலைக் காப்பியம் தொடங்கியே சமய வாதப் பிரதிவாத உத்திமுறை தமிழ் இலக்கியங்களுக்கு அறிமுகம் ஆகி வளரத்தொடங்கியது. அம்முறை பரபக்கம், சுபக்கம் என்ற முறையாகப் பின்னாளில் வளர்ச்சியுற்றது.

மணிமேகலை பௌத்த சமயக் காப்பியம் ஆகும். பௌத்த சமயத்தின் கொள்கைகளை இனிமையாக எளிமையாக மக்களிடம் கொண்டு சேர்க்க ஏற்ற வகையில் கதை நிலையில் எடுத்துரைக்கும் காப்பியம் மணிமேகலையாகும். இதன் பௌத்த சமய எடுத்துரைத்தலைப் பற்றி

‘‘ஒரு விதத்தில் பௌத்த மதக் கொள்கைகளையும் குறிக்கோளையும் இரண்டே இரண்டு அடியுள் அடக்கிக் காட்டிய பெருமை மணிமேகலை என்னும் காப்பியத்தை ஆக்கிய சீத்தலைச் சாத்தனாருக்கு உண்டு.

‘‘துன்பம் தோற்றம் பற்றே காரணம்

இன்பம் வீடே பற்றிலி காரணம்’’

என்பது அவர் வாக்கு. இதனையே மணிமேகலையில் பிறிதோர் இடத்தில்

‘‘பிறந்ததோர் உறுவது பெருகிய துன்பம்

பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்

பற்றின் வருவது முன்னது பின்னது

அற்றோர் உறவது’’

என்கின்றார். இந்த நான்கு அடிகளுக்குள் முறையே துக்கம், துக்க நிவாரணம், துக்க உற்பத்தி, துக்க நிவாரண மார்க்கம் ஆகிய வாய்மைகள் நான்கும் அடங்குகின்றன. பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம் என்பது துக்கம். பிறவார் உறுவது பெருகிய இன்பம் என்பது துக்க நீக்கம். துன்பம் பற்றால் வருவது என்பது துக்கத்தின்

காரணம். இன்பம் பற்றற்றோர் உறுவது என்பது துக்கத்தை நீக்கும் வழி.''[1] என்று மணிமேகலை விளக்கும் பௌத்த தத்துவ எளிமை நிலையை விளக்குகிறார் கி.லட்சுமணன்.

மணிமேகலைக் காப்பியம் பௌத்த சமயக் கருத்துகளை இனிமை, எளிமைபட மொழிவதுடன் தன் கால சமயக் கொள்கைகளை தாழ்த்தாமல் எடுத்துரைப்பது தமிழக மெய்யியலைப் புரிந்து கொள்ள வாய்ப்பளிப்பதாக உள்ளது. தமிழக மெய்யியலை அறிந்து கொள்ள மணிமேகலை மிக முக்கியமான காலக்குறியீடாக விளங்குகிறது.

இவ்வடிப்படையில் மணிமேகலை கால சமயங்கள் பற்றியதான ஆராய்ச்சி என்பது தமிழக மெய்ப்பொருள் தேடலுக்கு ஆக்கம் தரும் ஆராய்ச்சியாக விளங்கும் என்ற நிலையில் இவ்வாய்வுத்திட்டம் நிகழ்த்தப்படுகிறது.

---

[1] கி.லெட்சுமணன், இந்தியத் தத்துவ ஞானம், ப.180

**<u>ஆய்வுத் திட்டத்தலைப்பு</u>**

''மணிமேகலை கால சமயங்களும் அவற்றின் முற்கால நிலையும் பிற்கால நிலையும் " என்பது இவ்வாய்வுத் திட்டத்தின் தலைப்பு ஆகும். மணிமேகலைக் காப்பியத்தின் காலத்தை நடுவாக வைத்து அதற்கு முன்பும், பின்பும் ஆன காலத்தில் இருந்த சமயங்களின் நிலைப்பாட்டை ஆராய்வது என்பது இவ்வாய்வுத் திட்டத்தலைப்பின் விரிவாக்கம் ஆகும்.

**<u>ஆய்வு எல்லை</u>**

இவ்வாய்வுத் திட்டத்தின் எல்லை தெளிவாக வரையறுக்கப்படத்தக்கது ஆகும். செவ்வியல் நூல்களில் ஒன்றாக விளங்கும் மணிமேகலைக் காப்பியத்தை அடிப்படையாக வைத்து இவ்வாய்வுத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. இதன் காரணமாக மணிமேகலைக்கு முன்னான காலம் என்பது சிலப்பதிகாரம், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம் என்பது வரை செல்லும் நிலையில் உள்ளது. மணிமேகலைக்குப் பின்னான காலம் என்பது தற்காலம் வரை நீளும் என்ற நிலையில் இதன் எல்லை செவ்விலக்கிய காலம் வரை

அமைத்துக்கொள்வது என்பது ஏற்கப்பட்டது. இவ்வகையில் மணிமேகலைக்குப் பின்னான காலம் என்பது கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரை அமையத்தக்கதாக உள்ளது. கி.பி. ஆறாம் நூற்றாண்டு என்ற எல்லையைச் சரியாக அமைத்துக்கொள்வதில் சிற்சில இடையீடுகள் ஏற்படுகின்ற நிலையில் ஐஞ்சிறுகாப்பியங்கள் உணர்த்தும் சமயச் செய்திகள் வரை என்பதாக இதனை அமைத்துக்கொண்டு இவ்வாய்த்திட்டம் செய்யப்பெற்றுள்ளது.

**ஆய்வுத் திட்டத்தின் நோக்கங்கள்**

இவ்வாய்வுத் திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு.

1. மணிமேகலைக் காப்பிய காலத்திற்கு முன்பான மெய்ப்பொருள் தேடல் முயற்சிகளை அறிவிப்பது என்பது இவ்வாய்வுத்திட்டத்தின் நோக்கங்களுள் ஒன்றாகும்.
2. மணிமேகலைக் காப்பியத்தில் காட்டப்படும் சமய வகைகள் பற்றி அறிவிப்பதும், அவற்றின் தோற்றம், வளர்ச்சி போன்றவற்றை

அறிவிப்பதும், சமய வல்லுநர்கள் பற்றி செய்திகளை அறிவிப்பதும் இவ்வாய்வுத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

3. மணிமேகலைக் காப்பியத்தில் காட்டப்பெற்ற சமயங்களின் பிற்கால வளர்ச்சிப் போக்கு நிலையை அறிவிப்பதும் இவ்வாய்வுத்திட்டத்தின் நோக்கங்களுள் ஒன்றாக அமைகிறது.

4. சமயம் சார்ந்த மக்கள் வாழ்க்கைமுறை, பெண்களின் சமய நிலைப்பாடு போன்றவற்றைப் பற்றி ஆராய்ந்து முடிவுகளை அறிவிப்பதும் இவ்வாய்வுத்திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாக அமைகிறது.

**கருதுகோள்**

இந்திய மெய்ப்பொருள் தேடல் முயற்சியில் தமிழர்க்கும், தமிழ் இலக்கியங்களுக்கும் குறிக்கத்தக்க இடம் உண்டு. தமிழக மெய்ப்பொருள் தேடல் என்பது வைதிக, அவைதிக முரண்பாடுகளுடன் வளர்ந்து வரும் நிலையில். பல் சமயங்கள் வழியாக உயிரை மேம்பாடு அடையச் செய்யும் முயற்சி தமிழகத்தில்

நடைபெற்றுவருகிறது என்ற கருதுகோள்களை முன்வைத்து இவ்வாய்வுத் திட்டம் செய்யப்பட்டுள்ளது.

**<u>ஆய்வுத்திட்ட அணுகுமுறை</u>**

இவ்வாய்வுத்திட்டம் வரலாற்றியல் அணுகுமுறை, வகை தொகை சார் பகுப்பாய்வு அணுகுமுறை ஆகியவற்றின் அடிப்படையில் நிகழ்த்தப் பெற்றுள்ளது.

**<u>ஆய்வேட்டின் அமைப்பு முறை</u>**

இவ்வாய்வேடு முன்னுரை, முடிவுகள் நீங்கலாகப் பின்வரும் பகுப்புகளை உடையதாக அமைகிறது

1. மணிமேகலை காலமும் அக்காலச் சமயங்களின் பொது அறிமுகமும்
2. மணிமேகலை காலத்திற்கு முந்தைய சமயங்களும் அவற்றின் நிலைப்பாடும்
3. மணிமேகலை கால சமயங்களும் அவற்றின் கொள்கைகளும்

4. மணிமேகலை காலத்திற்குப் பிந்தைய நிலையில் சமயங்களின் வளர்ச்சிப் போக்குகள்
5. சமயப் பின்புலத்தில் மக்கள் வாழ்க்கை முறை
6. சமயங்களில் பெண்களுக்கான இடம்

இவ்வாய்வுப் பகுப்புகளின் விளக்கங்கள் பின்வருமாறு.

**இயல்-1**

மணிமேகலை காலமும் அக்காலச் சமயங்களின் பொது அறிமுகமும் என்ற முதல் இயலில் மணிமேகலைக் காப்பியத்தின் காலம் பற்றிய கருத்துகள் விவாதிக்கப்பெற்று கால எல்லை நிர்ணயிக்கப்பெறுகிறது. மணிமேகலைக் காப்பியத்தில் காட்டடப்படும் சமயங்கள் பற்றிய அறிமுகமும் இதில் செய்யப்படுகிறது.

**இயல்.2.**

மணிமேகலை காலத்திற்கு முந்தைய சமயங்களும் அவற்றின் நிலைப்பாடும் என்ற இயல் இரண்டில் மணிமேகலை காப்பிய காலத்திற்கு முன்னான சமயங்களின்

நிலை எடுத்துரைக்கப்பெறுகிறது. இவற்றை மூன்று வகைகளில் அமைத்துக்கொண்டு இவ்வியல் கருத்துக்களை விவாதித்துள்ளது. அவை ஆரியர் வருகைக்கு முற்பட்ட சிந்து சமவெளி மக்களின் சமயநெறி, வேதநெறி, வேதங்களைப் புறக்கணித்த நெறி என்பனவாகப் பகுக்கப்பெற்று இப்பகுதி விளக்கப்பெறுகிறது.

## இயல்.3

மணிமேகலை கால சமயங்களும் அவற்றின் கொள்கைகளும் என்ற மூன்றாம் இயலில் மணிமேகலைக் காப்பியத்தின் வழியாகப் பெறப்படும் பல் சமயங்களின் கொள்கைகள் எடுத்துரைக்கப்பெறுகின்றன. இவ்வியலில் அளவைகள் , அளவைப் பிழைகள் பற்றிய கருத்துகள் விவரிக்கப்பெற்றுள்ளன. இவ்வளவைகள் வழியாகச் சமய விவாதங்களில் பங்கு பெற இயலும் என்ற நிலையில் இவை இங்கு விளக்கம் பெற்றுள்ளன. மேலும் பௌத்த சமய அளவைகளுள் ஒன்றாக விளங்கும் கருதல் அளவை குறித்தான விவாதங்களும் இங்கு விளக்கப் பெற்றுள்ளன.

## இயல். 4

மணிமேகலை காலத்திற்குப் பிந்தயை நிலையில் சமயங்களின் வளர்ச்சிப் போக்குகள் என்ற நான்காம் இயலில் மணிமேகலைக் காப்பிய காலத்திற்குப் பின்பு ஏற்பட்ட சமய வளர்ச்சி பற்றிய செய்திகள் தொகுத்தளிக்கப்பெறுகின்றன. இவ்வியலுக்கு வளம் சேர்க்கும் வண்ணம் நீலகேசி காப்பியத்தின் வழியாகப் பெறப்படும் பல் சமயக் கருத்துகள் இங்குக் கோடிட்டுக் காட்டப்பெற்றுள்ளன.

**இயல்.5**

‘‘சமயப் பின்புலத்தில் மக்கள் வாழ்க்கை முறை” என்ற ஐந்தாம் இயலில் சமய அடிப்படையில் மக்களின் வாழ்க்கை முறை எவ்வாறு மேம்பட்டது என்பதைக் காட்டும் செய்திகள் தொகுத்துரைக்கப்பெற்றுள்ளன.

**இயல்.6**

‘‘சமயங்களில் பெண்களுக்கான இடம்” என்ற ஆறாம் இயலில் தமிழகச் சமயச் சூழலில் பெண்களுக்கு உரிய இடம் பற்றிய செய்திகள் விவாதிக்கப்பெறுகின்றன.

பௌத்தம், சமணம் போன்ற சமயங்கள் பெண்களை ஏற்காத நிலையில் தமிழ் இலக்கியங்களில் சமண, பௌத்த பெண் துறவிகள் இடம்பெற்ற போக்கு இங்கு எடுத்துக்காட்டப்பெறுகிறது.

இவ்வாய்வுத்திட்டம் வழியாகப் பெறப்பட்ட முடிவுகள் நிறைவில் தொகுத்துரைக்கப்பெற்றுள்ளன. ஆய்வுத்திட்டத்திற்கு உதவிய நூல்களின் விபரம் துணை நூற்பட்டடியலாகத் தரப்பெறுகிறது.

**செம்மொழித் தமிழ் உயராய்வுக்கு இவ்வாய்வுத்திட்டம் தந்திடும் பங்களிப்புகள்**

இவ்வாய்வுத் திட்டம் செய்யப்பெற்றதன் காரணமாக செம்மொழித் தமிழ் உயராய்வுக்குப் பல பங்களிப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவை பின்வருமாறு.

இந்திய அளவில் மெய்ப்பொருளியல் தேடலுக்குத் தமிழரின் கொடைகளை இவ்வாய்வுத்திட்டம் எடுத்தியம்புகிறது.

தமிழ் இலக்கியங்கள் வழியாக நடைபெற்ற மெய்ப்பொருள் தேடலை அறிமுகம் செய்கிறது. ஆசீவகம், வைசேடிகம், சாங்கியம் போன்ற அழிந்து போன

சமயங்களை மீட்டெடுக்க உதவுகிறது. மக்களின் சமயம் சார் வாழ்க்கைமுறையின் இயல்புகளை இவ்வாய்வுத்திட்டம் வெளிப்படுத்தி நிற்கிறது.

# இயல்.1.

## மணிமேகலைக் காப்பியத்தின் காலமும், அக்காலச் சமயங்களின் பொது அறிமுகமும்

தமிழ் இலக்கியம் பல வகைமைகளை உடையது. குறுங்கவிதை, நெடுங்கவிதை, காவியம், காப்பியம், உரையிடையிட்டப் பாட்டுடைச் செய்யுள் போன்ற கவிதை சார்ந்த இலக்கிய வகைகள் ஒரு திறத்தில் அமைகின்றன. சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை போன்ற உரைநடை சார்ந்த இலக்கிய வகைமைகள் மற்றொரு திறத்தில் அமைகின்றன. இவற்றில் ஒற்றைத் தொடரில் அமையும் பாவிகத்தை பேரிலக்கியமாக வார்த்தெடுக்கும் நிலையில் புனையப்பெறுவது காப்பியம் என்ற இலக்கிய வகைமையாகும். தமிழில் தொடர்ந்து காப்பிய படைப்புகள் எழுந்து வருகின்றன. இக்காப்பிய வகைமை சிலப்பதிகாரம் முதலாகத் தொடங்கி கம்பராமாயணத்தில் வளர்ந்து, ”பாண்டவர் பூமி” என்ற புதுக்கவிதை ஆக்கத்தின் வழியாகவும் வளர்ந்து வருகிறது. காப்பியங்களின் வழியாகத் தமிழிலக்கியம் பேரிலக்கியங்களை உடையது என்ற வல்லமை கிடைக்கப்பெற்றது,

இதுதவிர நல்ல கதைக்கோப்புடைய படைப்பாகவும், பண்பாடுகளின் பதிவாகவும் காப்பியங்கள் தமிழில் அமைந்து சிறக்கின்றன. சமணம்,பௌத்தம், இசுலாம், கிறித்துவம் என்ற சமயங்களின் கருத்துகள், கதைகள் சார்ந்தும் காப்பியங்கள் படைக்கப்பெற்றிருப்பது காப்பிய வகைமைக்குக் கிடைத்துள்ள பேரிலக்கிய அங்கீகாரம் ஆகும்.

இக்காப்பியங்களில் சமுதாய மறுமலர்ச்சியும், சமயப் பின்னணியும், எளிமையழகும் கொண்டு படைக்கப்பெற்ற பெருங்காப்பியம் மணிமேகலை ஆகும். இதனைப் படைத்தவர் மதுரை கூலவணிகன் சீத்தலைச் சாத்தனார் ஆவார். மணிமேகலைக் காப்பியம் பொதுவான காப்பிய மரபுகளையும் பல்வேறு தனித்தன்மைகளையும் பெற்ற காப்பியம் ஆகும். இக்காப்பிய மாண்பினைப் பின்வரும் கருத்துகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

**<u>மணிமேகலைக் காப்பியத்தின் பாடுபொருள் சிறப்பு</u>**

கணிகை குலம் சார்ந்து மணிமேகலை உலகவாழ்க்கை, சிற்றின்பம் ஆகியவற்றை வெறுத்து பசிப்பிணி தீர்க்கும் பேரறத்தைச் செய்கிறாள். அவள்

ஞானக்கல்வி கற்று மற்ற சமயத்தாரை வென்று தன் சமயக் கருத்துகளை முன்னிறுத்துகிறாள். இந்நிலையில் மணிமேகலைக் காப்பியத்தின் கதைக் கருவினைச் சுட்ட இயலும். இதன் பாடுபொருள் சிறப்பு பற்றிய அறிஞர்களின் கருத்துகள் பின்வருமாறு.

“மணிமேகலை தமிழில் தோன்றிய முழுமையான சமூக மறுமலர்ச்சி காப்பியமாகத் திகழ்கிறது. ஆண்- பெண் சமத்துவம், சமூக அமைப்பில் சமத்துவம், சமூகநலமேம்பாட்டுப் பணிகள், நீதி வழங்குவதில் புதுமை எனப் பல மறுமலர்ச்சி கருத்துக்களைக் காப்பிய ஆசிரியர் இதில் எடுத்துரைத்துள்ளார்”[2] என்று மணிமேகலைக் காப்பியத்தை மறுமலர்ச்சிக் காப்பியமாகக் காண்கிறார் சுயம்பு.

“மணிமேகலை பசிக் கொடுமையைத் தொலைக்கிறாள். சாதுவன் மதுவை ஒழிக்கிறான். ஆபுத்திரன் சாதியைச் சாடுகிறான். இவ்வாறு காப்பியத்துள் பல மாந்தரை உலவவிட்டுத் தம் காப்பியத்தையே ஒரு புரட்சிக்காப்பியமாக அமைத்த

---

[2] சுயம்பு, பதி.ஆ. மணிமேகலை, ப.3

ஆசிரியர் திறம் வியக்கற்பாலது”[3] என்று மணிமேகலைக் காப்பியத்தைப் புரட்சிக்காப்பியமாகக் காண்கிறார் ஜெ.ஸ்ரீ .சந்திரன்.

“பேரரசையும் பெருங்குடி மக்களையுமே காவியத் தலைவராகக் கொண்டு இலக்கியம் இயற்றப்பட்ட அற்றை நாளிலேயே பழித்தும் இழித்தும் கூறப்படும் கணிகை மகள் ஒருத்தியைக் காவியத் தலைவியாகக் கொண்டு ஒப்பற்ற ஒரு பேரிலக்கியம் இயற்றப்பட்டதென்றால் அது ஒரு சாதாரணப் புரட்சி அல்ல! மணிமேகலை கள்ளும், பொய்யும், காமமும், கொலையும் உள்ளக்களவும் கொண்ட பரத்தமைத் தொழிலைக் கடைப்பட்ட வாழ்க்கையெனத் துறந்து புத்தன் அருளிய அருளறத்தை மேற்கொண்டு சீலம் தாங்கித் தானம் தலை நின்று அரிய தவமியற்றியவள்”[4] என்று மணிமேகலையை விளிம்புநிலை மாந்தர் பற்றிய இலக்கியமாகக் காண்கிறார் துரை. தண்டபாணி.

---

[3] ஜெ. ஸ்ரீ சந்திரன், உ. ஆ, மணிமேகலை,ப. 4

[4] துரை. தண்டபாணி, உ.ஆ, மணிமேகலை, ப. 9

மேற்கண்ட மேற்கோள்களின் வழியாக மணிமேகலைக் காப்பியம், விளிம்புநிலை மாந்தர்களைக் கட்டுப்படுத்தி வைத்திருந்த பழைய மரபுகளை உடைத்து அவர்களை உயர் நிலைக்கு உயர்த்திய மறுமலர்ச்சிக் காப்பியம் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. சமுதாயத்தில் முன்னிலையில் இருந்தவர்களைப் பாடும் நிலை வயப்படாமல் அடித்தட்டு மக்களின் வாழ்க்கையைக் காப்பியமாக்கிய பெரும்படைப்பு மணிமேகலை என்ற கருத்தினையும் மேற்குறித்த அறிஞர்களின் கருத்துகளின் வழியாகப் பெறமுடிகிறது.

**<u>மணிமேகலைக் காப்பியத்தின் நடை நலம்</u>**

மணிமேகலைக் காப்பியத்தின் நடை என்பது எளிமையும் அழகும் இயல்புத் தன்மையும் வாய்ந்தது. இக்காப்பியத்தில் ஞானக் கருத்துகள் எளிமையாகப் புரியும் வண்ணம் விளக்கப்பெறுகின்றன. இக்காப்பியத்தின் நடைத்திறன் பற்றிப் பின்வருமாறு கருத்துரைக்கின்றனர் அறிஞர்கள்.

“மணிமேகலைக் காப்பியம் எளிய இனிய நடை கொண்ட இலக்கியச் செல்வம். இலக்கியநயம் மட்டும் மணிமேகலையின் சிறப்பு அல்ல. அதுபாடும்

மக்கள் நலம், மனிதநேயம், மணிமேகலைக் காப்பியத்தின் மாண்புயர் கருத்துகளாகும்”[5] என்று இதன் நடை பற்றிக் கருத்துரைத்துள்ளார் இராம. லட்சுமணன்.

“எளிய நடையில் கதை சொல்லும் தன்மையும், பௌத்த சமய உண்மைகளையும் நீதிகளையும் தெளிவாக எடுத்துரைக்கும் இயல்புமே இந்தக் காப்பியத்தின் சிறப்பியல்புகள் எனலாம்”[6] என்று கருத்துரைக்கிறார் மு.வரதராசனார்.

இவ்விரு மேற்கோள்கள் வழியாக மணிமேகலை எளிய இனிய நடை கொண்டு படைக்கப் பெற்ற காப்பியம் என்பது வெளிப்படுகிறது.

**மணிமேகலைக் காப்பியத்தின் பரவலாக்கச் சிறப்பு**

---

[5] இராம. லட்சுமணன். ப.ஆ, மணிமேகலை, ப. 8

[6] மு.வரதராசனார், தமிழ்இலக்கியவரலாறு,ப.107

மணிமேகலைக் காப்பியம் பௌத்த சமயக் காப்பியம் என்றபோதும் பல அறிஞர்களாலும் பயிலப்பெற்றுள்ளது. பல அறிஞர்களாலும் எடுத்தாளப்பெற்றுள்ளது. இதுவும் இக்காப்பியத்திற்குக் கிடைத்த சிறப்புகளில் ஒன்றாகும்.

“இளம்பூரணர், பேராசிரியர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார், சயம திவாகர வாமன முனிவர், இலக்கணக்கொத்து உரையாசிரியர், திருவொற்றியூர் ஞானப்பிரகாசர், மயிலை நாதர், சங்கர நமச்சிவாயர் முதலிய உரையாசிரியர்களால் எடுத்துக்காட்டப்பெற்ற பிரமாண நூல்களுள் ஒன்று”[7] என்று மணிமேகலை பலரால் எடுத்தாளப்பெற்ற சிறப்பினைப் பதிவு செய்துள்ளார் உ.வே. சாமிநாதர்.

இவ்வகையில் எளிய, சமய விளக்கமுடைய, இனிய காப்பியம் மணிமேகலை என்பது உறுதியாகின்றது. இது எழுந்த காலம் குறித்துப் பல கருத்துகள் நிலவுகின்றன.

---

[7] உ.வே. சாமிநாதையர். ப.ஆ, மணிமேகலை, ப. 14

**<u>மணிமேகலை - காப்பியத்தின் காலம்</u>**

மணிமேகலை காப்பியம் சிலப்பதிகாரத்திற்குப் பிந்தையது என்பது தெளிவு. இருப்பினும் அதன் காலத்தை வரையறுப்பதில் பல்வேறு கருத்துகள் அறிஞர்களால் எடுத்துரைக்கப்பெற்றுள்ளன.

“சிலம்பினை அடியொற்றி எழுந்த மணிமேகலை கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பர் வி. ஆர்.ஆர். தீட்சித், மயிலை சீனி. வேங்கடசாமி, டாக்டர் உ.வே. சா ஆகியோர் “[8] என்று மணிமேகலை கி.பி. இரண்டாம் நூற்றாண்டு சார்ந்தது என்று அறிஞர்களின் ஒரு சாரார் கருதுகின்றனர்.

மயிலை சீனி. வேங்கடசாமி தன் பௌத்தமும் தமிழும் என்ற நூலில் மணிமேகலை கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பே எழுதப்பெற்றிருக்க வேண்டும் என்று பல்வேறு சான்றுகளை எடுத்துக்காட்டி நிறுவுகிறார். “மணிமேகலை சிலப்பதிகார வரலாற்று நிகழ்ச்சிகள் சேர சோழ பாண்டியர்

---

[8] சிற்பி பாலசுப்பிரமணியம், சொ. சேதுபதி, இலக்கியவரலாறு,ப.166

ஆட்சிக்காலத்தில் (கடைச்சங்க காலத்தில்) நிகழ்ந்தவை. அந்நிகழ்ச்சிகள் நடந்த அண்மைக் காலத்திலேயே இந்நூல்கள் இயற்றப்பட்டவை. ஆகவே இந்நூல்கள் கி.பி 200-க்குள் எழுதப்பட்டவை. கி.பி. 200-க்குப் பிறகு தமிழ்நாட்டைக் களப்பிரர் பிடித்துக் கொண்டு ஏறத்தாழக் கி.பி 575 வரையில் அரசாண்டார்கள். ஆகவே கி.பி 200-க்குப் பின்னர் மணிமேகலையும் சிலப்பதிகாரமும் எழுதப்பட்டிருக்க முடியாது. கி.பி இருநூறுக்குள்ளேயே எழுதப்பட்டிருக்க வேண்டும்."[9] என்ற கருத்தின் வழியாக மணிமேகலையின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முந்தையது என்ற கருத்து பெறப்படுகின்றது.

வையாபுரிப்பிள்ளை மணிமேகலைக் காப்பியம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு அளவில் தோன்றியது என்று உரைக்கிறார். இவரின் கருத்துகளை மா. ராசமாணிக்கனார் கால ஆராய்ச்சி என்ற தம் நூலில் எடுத்துக்காட்டித் தக்க நிலையில் அக்கருத்துகளுக்குப் பதில் சொல்லும் நிலையில் மணிமேகலையின் காலத்தை கி.பி. இரண்டாம் நூற்றாண்டு சார்ந்தது என்றே நிறுவுகிறார். ''மதுரைக்

---

[9] மயிலை சீனி. வேங்கடசாமி, பௌத்தமும் தமிழும், ப.

கூலவாணிகன் சாத்தனார் நெடுஞ்செழியன் காலத்தவர் என்பது உண்மையே. அவர் பாடிய பாடல் எதுவும் தொகை நூல்களில் இல்லை. எனினும், அது கொண்டு அவர் காலத்தால் பிற்பட்டவர் என்பது எங்ஙனம் பொருந்தும்? சாத்தனார் காலத்தவன் நெடுஞ்செழியன் என்ற பாண்டியன். அவன் பேராசிரியர் குறிப்பிட்டபடி அரசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன் மட்டும் அல்லன், வட ஆரியர் படை கடந்த நெடுஞ்செழியன் என்றும் பெயர் பெற்றவன் என்று இளங்கோவடிகளே மதுரைக் காண்டத்தின் இறுதிக் கட்டுரையில் தெளிவாய்க் கூறியுள்ளார். இந்த ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் "உற்றுழி உதவியும்" என்று தொடங்கும் கல்வியின் மேம்பாடு பற்றிய செய்யுளொன்றைப் பாடியுள்ளான். அப்பாடல் புறநானூற்றில் (183) இடம் பெற்றுள்ளது. உண்மை இங்ஙனம் இருப்ப, இவன் கற்பனை அரசன் என்று பேராசிரியர் அவர்கள் எங்ஙனம் கூறத் துணிந்தார்களோ தெரியவில்லை''[10] என்பது மா. ராசமாணிக்கனார் கருத்தாகும்.

[10] மா. ராசமாணிக்கனார், கால ஆராய்ச்சி, பக். 70-71

இக்கருத்துகளின் அடிப்படையில் மணிமேகலைக் காப்பியம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு அளவில் எழுதப்பெற்றது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடிகின்றது.

**மணிமேகலை காப்பியமும் சமயப் பின்புலமும்**

சமய நிலையில் குறிக்கத்தக்க ஒரு காப்பியம் மணிமேகலை ஆகும். மதுரை கூலவணிகன் சீத்தலைச் சாத்தனார் காப்பியக் கதையை "மாவண் தமிழ்த்திறம் கொண்டு"[11] தெளிவுற நடத்திச் செல்கிறார். அவர் காப்பியக் கதைப்பின்னலில், கட்டமைப்பில் நெகிழ்வு ஏற்பட்டுவிடாமல் தன்கால சமய நிலையை மணிமேகலைக் காப்பியத்தில் வெளிப்படுத்தியுள்ளார். இதனை உ.வே.சாமிநாதையர் பின்வரும் நிலையில் விளக்குகிறார். "இக்காலத்தில் வேறொருவகையாலும் விளங்காதனவாகிய சில தெய்வங்களுடைய பெயர்களையும், அத்தெய்வங்களை வழிபடு முறைமையையும், சில சாதியாரையும், அவர்களுடைய நடை முதலியவற்றையும். சில நகரங்கள், தீவுகள், மலைகள், வனங்கள், தோட்டங்கள்,

[11] *சீத்தலைச் சாத்தனார்*, மணிமேகலை பதிகம், அடி. 96;

அறச்சாலைகள், மன்றங்கள் முதலியவற்றையும். அவைகள் இன்ன, இன்ன வண்ணமாக இருந்தனவென்பதையும், இன்ன இன்ன சமயங்கள் இன்ன இன்ன இடத்தில் பரவியிருந்ததனவென்பதையும், அவற்றின் இலக்கணங்களையும், சில அரசர் சில முனிவர் முதலியோருடைய சரித்திரங்களையும், பிறவற்றையும் இந்நூலால் விளங்க அறிந்து கொள்ளலாம்" [12]என்ற உ. வே. சாமிநாதையரின் கருத்து சமுதாயம், சமயம் சார்ந்த பதிவுகளை உள்ளடக்கியது மணிமேகலைக் காப்பியம் என்பதை மெய்ப்பிக்கின்றது.

''மணிமேகலை காப்பியத்தில்தான் முதன் முதலில் சமயம் என்ற சொல் பயின்று வந்துள்ளது''[13] என்று கு. சுந்தரமூர்த்தி அவர்கள் குறிப்பிடுகிறார். இதன் காரணமாக தமிழ் இலக்கிய வரலாற்றில் சமயம் பற்றிய தொடக்கத்தைத் தெளிவாக அறிவிப்பது மணிமேகலைக் காப்பியம் என்பதை உணரமுடிகின்றது.

---

[12] உ.வே.சாமிநாதையர்பதி,ஆ, மணிமேகலை, முகவுரை.ப.14

[13] கு.சுந்தரமூர்த்தி, சங்க இலக்கியங்களில் சமய நோக்கு, ப. 1

மணிமேகலைக் காப்பியத்தில் பின்வரும் இடங்களில் சமயம் என்ற சொல் இடம்பெற்றுள்ளது.

மணிமேகலையின் இடம்பெறும் இருபத்தேழாம் காதைக்குச் சமயக் சமணக் கணக்கர் தம் திறம் கேட்ட காதை என்றே பெயரிடப்பெற்றுள்ளது. இவைதவிர பல இடங்களில் சமயம் என்ற சொல் மணிமேகலைக் காப்பியத்தில் பயின்று வந்துள்ளது.

"மூதூர் அகத்தே அல்லவர் சமயத்து அறிபொருள் கேட்டு"[14] என்ற இடத்திலும், "ஐவகைச் சமயமும் அறிந்தனன்"[15] என்ற இடத்திலும். "நூற்றுறைச் சமய நுண்பொருள் கேட்டே அவ்வுரு வென்ன ஐவகைச் சமயமும் செவ்விது அன்மையிற் சிந்தையின் வைத்திலேன்[16] என்ற இடத்திலும் மணிமேகலைக் காப்பியத்தில் சமயம் என்ற சொல் பயின்றுவந்துள்ளது. சாத்தானர் காலத்தில்

---

[14] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை,வஞ்சிமாநகர் புக்ககாதை, அடிகள்63-64

[15] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, சமயக் கணக்கர்தம் திறம் கேட்ட காதை, அடிகள், 288-289

[16] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை அடிகள் 41 -43

சமயங்கள் ஐவகையாக இருந்தன என்பதும் இவ்வடிகளின் வழியாகத் தெரியவருகிறது. மணிமேகலைக் காப்பியம் தன் கால சமயங்கள் பற்றிய பொது அறிமுகத்தைத் தருவதுடன் பல்வேறு சமய உட்பொருள்களைப் பதிவு செய்து வெளிப்படுத்தும் காப்பியமாகவும் விளங்குகின்றது.

மதம் என்ற சொல்லும் மணிமேகலைக் காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது. இது சாங்கிய மதம் என்று எடுத்து உரைப்போன்''[17] என்ற இடத்தில் மதம் என்ற சொல் உள்ளது. இவ்வகையில் சமயம் சார்ந்த பல செய்திகளுக்கு இடமளிப்பது மணிமேகலை என்பதை உணரமுடிகின்றது.

மணிமேகலைக் காப்பியம், தன் காலத்தில் இருந்த சமயங்களின் கருத்துகளைச், சடங்குகளை, வழிபாடுகளை, தத்துவங்களை வெளிப்படுத்தி நிற்கும் காப்பியம் ஆகும். மணிமேகலைக் காப்பியம் அடிப்படையில் பௌத்த சமய

---

[17] *சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, சமயக்கணக்கர்தம் திறம் கேட்டகாதை, அடி,* 202

சார்புடைய நூல் ஆகும். இந்நூல்வழி தமிழகத்துப் பௌத்த சமய நிலையைத் தெள்ளிதின் அறிந்து கொள்ள முடிகின்றது.

**<u>மணிமேகலைக் காப்பியமும் பௌத்த சமயச் சார்பும்</u>**

மணிமேகலைக் காப்பியம் பல் சமயக் கருத்துகளை உள்ளடக்கியது என்றாலும் அது அச்சமயங்களைப் பௌத்த கண்ணோட்டத்தில் கண்டுள்ளது என்பது குறிக்கத்தக்கது. மணிமேகலை பௌத்த சமயச் சார்புடையது என்பதை அக்காப்பிய வழி தெளிவாக அறிந்து கொள்ள இயலும். அறிஞர்களும் இக்கருத்தினை வழி மொழிகின்றனர்.

“இந்நூல் பௌத்த சமயச் சார்பினளாகிய மணிமேகலையின் சரித்திரமாதலின் இதில் அச்சமயக் கொள்கைகளைப் பரக்கக் காணலாம்”[18] என்று மணிமேகலைக் காப்பியத்தினைப் பௌத்த சமயக் கொள்கைகள் சார்ந்த நூலாக

[18] உ.வே. சாமிநாதையர் ப. ஆ,, மணிமேகலை, முகவுரை. ப. 16

உ.வே.சாமிநாதையர் காண்கிறார். மேலும் அவர் ‘‘எடுத்துக்கொண்ட நூற்கேற்ற கொள்கைகளைச் சிறப்பித்தல் ஆசிரியரது கடப்பாடாதலின், பௌத்த சமயத்தைப் பாராட்டிக் கூறும் இந்நூலில் சுதமதியின் வரலாற்றால் சமணரையும், ஆபுத்திரனது வரலாற்றால் வேள்வியையும் குறைகூறுதல் அறிதற்குரியது”[19] என்றும் குறிப்பிடுகிறார். இக்கருத்தின்படி பௌத்த சமயக் கருத்துகளுக்கு ஏற்றம் தந்து மற்ற சமயக் கருத்துகளுக்கு தடை காட்டுவது மணிமேகலைக் காப்பியம் என்பதை உணரமுடிகின்றது.

“சுபக்கமாகிய தம் நெறியினை நிறுவுதற்குமுன் மாற்றுச் சமய தத்துவ தருக்கங்களை முறையாகப் பயின்று பரபக்கமாகச் சிறுநூல் யாத்தவர். தம் காப்பியப் பெருநூலில். மூன்று சிறு நூல்களை இணைத்துப் பிணைத்துள்ளார். அவைதாம், சமயக் கணக்கர்தம் திறம் கேட்ட காதை, தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை, பவத்திறம் அறுகெனப் பாவை நோற்றகாதை என்பன. இவை முறையே புறச் சமயக்கோவை, பௌத்த தருக்கம், பௌத்த தத்துவம் பற்றியன. அண்ட

---

[19] உ.வே. சாமிநாதையர் ப. ஆ, மணிமேகலை, முகவுரை.ப.24

அமைப்பியல் பற்றிய பகுதி நூலாகச் சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதையினை அமைத்துள்ளார்”[20] என்று மணிமேகலைக் காப்பியத்தின் சுபக்க, பரபக்கத் தன்மையை எடுத்துரைக்கிறார் சோ .ந . கந்தசாமி,. மேலும் சமயக் கணக்கர் தம் திறம்கேட்ட காதை- புறச் சமயக்கோவை – பரபக்கக் கருத்தடங்கியது.தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை – பௌத்த தருக்கச் செய்திகள் அடங்கியது. பவத்திறம் அறுகென பாவை நோற்ற காதை- பௌத்த தத்துவச் செய்திகள் அடங்கியது என்ற சோ. ந. கந்தசாமியின் கருத்து சமய ஆய்வில் குறிக்கத்தக்க விளைகவுகளைத் தரக் கூடியக் கருத்தாகும். . இதன் காரணமாக, சமயங்கள் பற்றிய முழுமையான புரிதலை மணிமேகலைக் காப்பியம் முன்னிலைப் படுத்தி அதன் காலத்திற்கு முன்பும் பின்புமான சமய வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாகப் படைக்கப்பெற்றுள்ளது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

---

[20] சோ. ந. கந்தசாமி, இந்தியத் தத்துவக்களஞ்சியம், ப. 9

**<u>சமயப் பிரிவுகள்</u>**

இந்தியாவில் தோன்றிய சமயங்களை வைதிக சமயம், அவைதிக சமயம் என்று இருவகையாகப் பிரித்துக் கொள்வது இந்திய தத்துவ மரபாகும். “இந்திய தத்துவஞானிகள் அனைவரையும் இருபெரும் பிரிவினராப் பிரிப்பது வழக்கம். ஒரு பிரிவினர், வேத உபநிடதகங்களில் கூறப்பட்டனவற்றைச் சரியென ஒப்புக் கொள்ளுவோர். மற்ற பிரிவினர், அவற்றைச் சரியென ஒப்புக்கொள்ளாதோர். வேதத்தை ஒப்புக் கொள்வோரை வைதிகர் என்ற சொல்லாலும், ஒப்புக் கொள்ளாதோரை அவைதிகர் என்ற சொல்லாலும் குறிப்பிடும் மரபு உண்டு. உலகாயதர், சமணர், பௌத்தர் ஆகிய மூவருமே அவைதிகர் எனப்படும் பிரிவைச் சேர்ந்தவர். வைதிகருள் சாங்கியர், யோக மதத்தினர், நையாயிகர், மீமாம்சகர், வேதாந்திகள், சித்தாந்திகள் எனப் பல உட்பிரிவினர் இடம் பெறுவர்”[21] என்ற கருத்தின் வழியாக இந்திய சமயங்களின் இருவகைப் பகுப்பினை உறுதி செய்து கொள்ள முடிகின்றது.

---

[21] கி.லட்சுமணன், இந்திய தத்துவஞானம், ப.4

மணிமேகலை காலத்தில் இவ்விருவகைப் பகுப்புகள் இருந்துள்ளன. மேலும் 1. அளவை வாதம், 2. சைவவாதம், 3. பிரமவாதம், 4. வைணவவாதம், 5.வேதவாதம், 6. ஆசீவகவாதம், 7. நிகண்டவாதம், 8. சாங்கிய வாதம், 9. வைசேடிக வாதம்,, 10. பூதவாதம் என்ற பத்துவகை சமயங்களும் இருந்துள்ளன. இதனோடு பௌத்தம் என்பதையும் இணைத்துப் பதினோரு சமயங்கள் மணிமேகலை காலத்தில் இருந்துள்ளன. இவற்றை வைதிக, அவைதிகப் பகுப்புக்குள் அடக்கலாம்.

“சாத்தனார் மொழிந்துள்ள பத்து தத்துவங்களையும் வைதிக தரிசனம், அல்லது ஆத்திக தத்துவம் என்றும் அவைதிக தரிசனம், அல்லது நாத்திக தத்துவம் என்னும் இருபெரும் பிரவிற்குள் அடக்கிக் கூறலாம். அசீவகம், நிகண்டவாதம், பூதவாதம், என்ற மூன்றுமே வேதங்களைப் புறக்கணித்த நாத்திக தத்துவங்களாகும். எஞ்சியன ஆத்திகம் சார்ந்தன.“[22] என்ற கருத்து மணிமேகலை சுட்டும் சமயங்களை இருவகைப்பட்டதாக அமைத்துக்காட்டுகின்றது. இவற்றோடு பௌத்த சமயமும் வேதநெறியை ஏற்காதது. அவைதிக சமயம் சார்ந்தது என்பதையும் உணர்ந்து

---

[22] சோ. ந. கந்தசாமி, இந்திய தத்துவக் களஞ்சியம், ப.11

கொள்ளவேண்டும். பின்வரும் பட்டியல் இரு சமயப் பிரிவுகளைக் காட்டுவதாக உள்ளது.

| **வைதிக சமயங்கள்** | **அவைதிக சமயங்கள்** |
| --- | --- |
| அளவைவாதம்,(நையாயிகம், பிரமாணவாதி) | ஆசீவகம் |
| சைவம் | நிகண்டவாதம் (சமணப்பிரிவு) |
| பிரமவாதம் | பூதவாதம் (உலகாயதம்) |
| வைணவம்; | பௌத்தம் |
| வேதவாதம் | |
| சாங்கியம் | |
| வைசேடிகம் | |

மேற்கண்ட பகுப்பினை மணிமேகலைக் காப்பிய ஆசிரியர் சீத்தலைச் சாத்தனாரும் ஏற்று மொழிந்துள்ளார். வைதிக மார்க்கம் என்றே தன் நூலில் அவர் குறிப்பிடுகிறார். "வைதிக மார்க்கத்து அளவ்வாதியை எய்தினள்"[23] என்ற

---

[23] *சீத்தலைச் சாத்தனார்*, மணிமேகலை,துயிலெழுப்பிய காதை, அடிகள் 3 -4 )

மணிமேகலைக் குறிப்பு மணிமேகலைக் காப்பியக் காலத்தில் வைதிக மார்க்கம், அவைதிக மார்க்கம் என்ற இரு நெறிகள் இருந்தன என்பதைக் காட்டுகின்றது.

இவற்றின் வழியாக மணிமேகலை காலச் சமயங்கள் பதினொன்று என்று அறிந்து: கொள்ள முடிகின்றது. இப்பதினொன்றையும் ஐவகை சமயங்களாகச் சாத்தானர் காட்டுகிறார் என்றாலும் இங்கு விரிவு கருதி பதினோரு வகை சமயங்கள் என்ற நிலையில் இங்கு ஆராய எடுத்துக்கொள்ளப்பெறுகின்றன.

இப்பாகுபாடு பிற்காலத்தில் மிகவும் வளர்ந்து பல்கிப் பெருகியது. புறப்புறச்சமயம், புறச்சமயம், அகப்புறச்சமயம், அகச்சமயம் என்று சமயங்கள் வளர்ச்சி பெற்று வளர்ந்தன. அவை பற்றிய விளக்கங்கள் பின்வருமாறு.

**<u>புறப்புறச்சயங்கள் (6)</u>**

1. உலோகாயுதம், 2. சௌத்திராந்திகம், 3. யோகாசாரம், 4. மாத்தியமிகம், 5. வைபாடிகம், 6. சமணம்

**<u>புறச்சயங்கள் (6)</u>**

1. பூருவமீமாம்சம் 2. சாங்கியம் 3. நையாயிகம்  4. வைசேடிகம் 5. யோகம்

6. ஏகான்மவாதமாகிய உத்தரமீமாம்சம் (பாங்சாராத்திரம்)

**<u>அகப்புறச்சமயங்கள் (6)</u>**

1. பாசுபதம் 2. மகாவிரதம் 3. காபாலிகம்4. வாமம் 5. பைரவம்

6. ஐக்கிய வாதம் (காஷ்மீர சைவம்)

**<u>அகச்சமயம் (6)</u>**

1.பாஷாண வாதம் 2. பேத வாதம் 3.ஈசுவர அவிகார வாதம்

4.சிவசம வாதம் 5. சிவசங்கிராந்தவாதம் 6.சிவாத்துவவாதம்

ஆக மொத்தம் இருபத்துநான்கு சமய மரபுகள் தமிழகத்தில் தோன்றியுள்ளன இவை பிற்காலத்தில் வளர்ச்சி பெற்றவை என்பதும் சைவ சமயக் கண்ணோட்டத்தில் வகுக்கப்பெற்றவை என்பதும் இங்குக் கவனித்தற்குரியதாகும்.

**<u>மணிமேகலை காப்பிய காலத்தின் சமுதாயச் சூழலும், சமயச் சூழலும்</u>**

சிலப்பதிகாரத் தமிழகம் என்ற நூலில் சாமி. சிதம்பரனார் சிலப்பதிகாரத் தமிழகச் சமுதாயச் சூழலைச் சித்தரித்துள்ளார். அது அப்படியே மணிமேகலைக் காலத்திற்கும் பொருந்துவதாக உள்ளது.

“நகரத்திலும் நாட்டிலும் ஒரு புறம் இன்பவாழ்வு குடி கொண்டிருந்தது. மற்றொரு புறம் வறுமையாலான துன்ப வாழ்வு குடிகொண்டிருந்தது. வறுமை காரணமாகப் பலர் உழைத்தும், திருடியும் வாழ வேண்டிய நிலையில் இருந்தனர். பொருளாதார ஏற்றத்தாழ்வு நிலைத்திருந்த காரணத்தால் தான் சமுதாயத்திலே இக்குற்றங்கள் குடியேறியிருந்தன.... சிலப்பதிகாரத் தமிழகத்திலே பெரிய செல்வர்கள் இருந்தனர். ஏழை மக்களும் இருந்தனர். பெரிய நிலத் தலைவர்கள் இருந்தனர். நிலமற்ற ஏழை உழவர்களும் இருந்தனர். விபசாரம், பொய், திருட்டு, குடி முதலிய கூடா ஒழுக்கங்கள் இருந்தன. செல்வர்களுக்கு விபசாரப் பெண்கள் தேவையாக இருந்தனர். ஏழை மக்களிலும் இத்தகையவர்கள் இருந்தார்கள்”[24] என்ற குறிப்பும்

---

[24] சாமி.சிதம்பரனார், சிலப்பதிகாரத் தமிழகம், ப. 220

“சிலப்பதிகாரக் காலத்திலே தமிழ்நாட்டில் பல தெய்வ வணக்கம் குடி கொண்டிருந்தது. தெய்வங்களுக்குப் பூசைகளும், திருவிழாக்களும் நடைபெற்று வந்தன. பெரும்பாலான மக்கள் தெய்வ பக்தியள்ளவர்களாகவே விளங்கினர். எங்கும் அறவுரைகளும், நல்லொழுக்கங்களும் போதிக்கப்பட்டன. ஆயினும் விபசாரம், பொய்,திருட்டு, முதலிய குற்றங்களும் நடந்து கொண்டுதான் இருந்தன’’[25] என்ற குறிப்பும் தமிழகத்தின் காப்பிய காலச் சமுதாயச் சூழலை எடுத்துக்காட்டுவனவாக விளங்குகின்றன.

இக்குறிப்புகளின் வழியாகப் பல் சமயங்களின் புகலிடமாகத் தமிழகம் இருந்தது என்பது உறுதியாகின்றது. மணிமேகலையில் இந்திரவிழா கொண்டாடும் நிலையில்

“ஒட்டிய சமயத்து உறுபொருள்வாதிகள்

---

[25] சாமி.சிதம்பரனார், சிலப்பதிகாரத் தமிழகம், ப. 214

பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்”[26]

என்று உரைக்கின்றது. இதன் வழியாக பல் சமயவாதிகளும் வந்து தம் கருத்தை அறிவிக்கும் பட்டிமண்டப அமைப்பு மணிமேகலை காலத்தில் இருந்தது உறுதியாகின்றது.

இவ்வகையில் பல்வகையான சமயங்களுக்கு இடமளிக்கும் நிலையில் மணிமேகலை காப்பியத்தின் களம் நெகிழ்தன்மையுடன் இருந்துள்ளது என்பது தெரியவருகிறது. இதன் காரணமாக பல் சமயக் கருத்துகளையும் தந்து சமய உலகிலும் ஒரு மறுமலர்ச்சியைச் சீத்தலைச் சாத்தனார் ஏற்படுத்தியுள்ளார்.

**<u>மணிமேகலை காப்பிய காலச் சமயங்கள் பொது அறிமுகம்</u>**

[26] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, விழாவறைக் காதை, அடிகள் 59-60

மணிமேகலை காப்பியத்தின் காலத்தில் பதினோரு சமயங்கள் இருந்தன என்பது முன்னரே குறிக்கப்பெற்றது. அப்பதினோரு சமயங்கள் பற்றிய பொது அறிமுகத்தைத் தருவதாகப் பின்வரும் பகுதி அமைகின்றது.

**வைதிக சமயங்கள்**

வேத நெறிப்பட்ட சமயங்கள் வைதிக சமயங்கள் எனப்படுகின்றன. இவை வேதச் சார்பினை ஏற்பனவாகும்.

**அளவை வாதம் (நையாயிகம்) (பிரமாணவியல்)**

அளவை வாதம் என்ற சமயப் பிரிவு பிரமாணவியல், நையாயிகம் என்ற பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. "நியாயம் என்ற சொல் நிய என்ற வேர்ச்சொல்லின் அடியாகத் தோன்றியது. மெய்ப்பொருள் முடிபிற்கு உய்க்கும் வழிகளை ஆராயும் அறிவியல்கலைதான் நியாய சாத்திரம் ஆகும். உண்மைத்தன்மையினை அளக்க உதவும் கருவியினைப் பிரமாணம் என்பார் வடநூலார். இதனை அறவை என்ற அழகிய தமிழில் சாத்தனார் மொழிபெயர்த்துள்ளார். ... இந்நெறிக்குத் தனியே தத்துவம், அறிவியல், மதவியல்

முதலிய துறைகள் இருப்பினும் அளவையியல் ஒன்றையே ஆழ்ந்து நோக்குவது இதன் சிறப்பியல்பாகும். ஆதலின் சாத்தனார் நையாயிகனின் அளவை இயற்கருத்துகளை மட்டுமே தம் நூலில் ஆராய்ந்துள்ளார்”[27] என்ற கருத்து மணிமேகலைக் காப்பியத்தில் சீத்தலைச் சாத்தனாரின் அளவையியல் நோக்கு பற்றி அறிவிப்பதாக உள்ளது. பிரமாணவியல் என்பதைச் சைவ சித்தாந்தம் தன் முக்கிய பகுதியுள் ஒன்றாகக் கொண்டுள்ளதால் இச்சமயம் சைவ மதச் சார்புடைய நிலையில் வளர்ச்சி பெற்றுள்ளது.

மணிமேகலைக் காப்பியத்தில் மணிமேகலை என்ற தலைமைப் பாத்திரம் சமயவாதிகளைச் சந்திக்க முயல்கிறாள். அவ்வகையில் முதன் முதலாக அளவைவாதியைச் சந்தித்து அவர்தம் சமயத்திறத்தை அவள் வினவுகிறாள்.

“வைதிக மார்க்கத்து அளவை வாதியை

[27] சோ. ந. கந்தசாமி, தமிழும் தத்துவமும், ப. 208

எய்தினள் எய்திநின் கடைப்பிடி இயம்புளன,”[28]

என்பது மணிமேகலையின் கூற்றாகும்.

அளவையியல் என்பது மெய்ப்பொருளை அடைவதற்கு முன்னதான அறிவு சார் இயல் என்பதாகப் புரிந்து கொள்ளப் படவேண்டும். இவ்வளவைகளால் மெய்ப்பொருள் அறிந்து கொள்ளப்பெறும். இதனை அறிந்தவன் அளவைவாதியாவான். அளவைகள் பத்து என்றும், எட்டு என்றும், ஆறு என்றும் ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு நிலையில் அமைத்துக்கொள்கின்றன. எனவே அளவை வாதம் அனைத்துச் சமயங்களாலும் எடுத்துக்கொள்ளப்பெறத் தக்க நிலையைப் பெற்றிருந்தது என்பது தெரியவருகிறது.

பிரத்தியட்சம் (காட்சி), அனுமானம் (கருதல்), உவமம், சத்தம் (ஆகமம்), அருத்தாபத்தி, சுபாவம் (இயல்பு), ஐதீகம், அபாவம் (இன்மை), பாரிசேடம் (மீட்சி),

---

[28] *சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, சமயக்கணக்கர்தம் திறம்கேட்ட காதை,* அடிகள். 3- 4

சம்பவம் (உள்ள நெறி அளவை) எனப்படும் பத்து அளவைகளை மணிமேகலைக் காப்பியம் காட்டுகிறது. இப்பத்து அளவைகளின் அடிப்படையில் மெய்ப்பொருள் பற்றிய சிந்தனைகளை ஆய்ந்து அறிய வழி வகுக்கிறது அளவைவாதம். இப்பத்தினையும் விரிவாக மணிமேகலைக் காப்பியம் எடுத்துரைத்துள்ளது. இவை மணிமேகலை கால சமயங்கள் என்ற தனித் தலைப்பில் ஆராயப்பெறுகின்றன.

பத்து அளவைகளில் நான்கு அளவைகளின்வழி மெய்ப்பொருள் அறிபவர்கள் நையாயிக சமயத்தார் ஆவர். நையாயிக சமயம் சார்ந்தோர், பிரத்தியக்கம்(காட்சி), அனுமானம்(கருதல்), ஆகமம்(உரை), உவமானம் ஆகிய நான்கு அளவைகளை முக்கியப்படுத்துகின்றனர்.

காட்சி, கருதல், உரை, உவமானம் ஆகிய நான்கையும் நையாயிகர் அடிப்படைகளாகக் கருதுகின்றனர். ஆனால் இவ்வளவைகளை அளந்து, பகுத்துத் தொகுத்து அறிவதற்கு ஒவ்வொரு உயிருக்கும் அறிவாற்றல் தேவை என்பதை அவர்கள் குறிப்பிடவில்லை. உயிரில் அறிவாற்றல் செயல்படவில்லையெனில் ஐம்பொறிகளும் செயல்பாடது. உயிருக்குக் கருவியாகச் செயல்படுவது அதன்

அறிவாற்றலாகும். எனவே நையாயிகர் கொள்ளும் நான்கும் முடிவான அளவைகளாக ஏற்கப்படவில்லை.

**<u>சைவ வாதம்</u>**

அளவைவாத சமயத்திற்குப் பின் மணிமேகலை சைவவாதியைச் சந்திக்கச் செல்கிறாள். அவரின் வாதங்களைக் கேட்டறிகிறாள். இதன்வழி சைவசமயக் கருத்துகள் மணிமேகலைக் காப்பியத்தில் காட்டப்பட களம் அமைந்தது.

இவையே இப்போது இயன்றுள அளவைகள்

என்றவன் தன்னைவிட்டு, இறைவன் ஈசன்என

நின்ற சைவ வாதிநேர் படுதலும்

பரசுநின் தெய்வம் எப்படித்து என்ன''[29]

---

[29] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, சமயக்கணக்கர்தம் திறம் கேட்ட காதை அடிகள் 86-88,

என்பது சைவவாதியை மணிமேகலை என்ற பாத்திரம் வினவிய முறையாகும்.

“சிவபெருமானை ஆன்மாக்கள் அடைந்து உய்வதற்குரிய பரிசுத்தம் , அறிவு, அருள் முதலியவற்றை அங்கங்களாகக் கொண்டு பேரின்பத்தைத் தருவதாகிய சமயம் சைவ சமயம் எனப்படும்.... சைவம் என்பதற்குச் சிவபெருமானை உயிர்கள் உய்வதற்குரிய வழிகளைக் காட்டும் சமயம் என்பது பொருள்.”[30] என்று சைவ சமயம் குறித்து விளக்கம் தரப்பெறுகிறது.

“சிவம் என்னும் நாமம் தமக்கேயுடைய செம்மேனி எம்மானைப் பரம்பொருளாகக்கொண்டு வணங்கும் நெறியைச் சைவம் என்றும் சிவபரம்பொருளை வணங்குபவர்களைச் சைவர் என்றும் கூறுதல் வெள்ளிடைமலை”[31] என்று சைவ சமயம் குறித்தும் சைவர் குறித்தும் விளக்கம் தருகிறார் வை. இரத்தினசபாபதி

---

[30] கே. ஆறுமுக நாவலர், இந்துமத இணைப்பு விளக்கம், ப. 28

[31] வை. இரத்தினசாபபதி, வீரசைவம், ப.3

மேற்கண்ட விளக்கங்கள் வழியாகச் சைவ சமயம் பற்றிய பொது அறிமுகத்தை அறிந்து கொள்ள முடிகின்றது.

இந்த சைவ சமயம் தனக்கென சைவ சித்தாந்தத் தத்துவத்தைப் பின்னாளில் வளர்த்தெடுத்தது. "சிவ வழிபாடு தொன்மையுடையதெனினும், சைவத் தத்துவம் பிற்காலத்தில்தான் வடிவம் பெற்றது"[32] என்ற கருத்தின் வழியாக சைவசித்தாந்தம் என்பது பின்னாளில்தான் உருவானது என்பதை உறுதிப்படுத்த முடியும்.

"சித்தாந்தம் என்பதற்கு முடிந்த முடிபு என்பது பொருளாகும். ஆகவே சைவ சித்தாந்தம் என்பதற்கு உயிர்கள் சிவபெருமானை அடைந்து உய்வதற்கு வழிகாட்டும் எல்லாச் சமயங்களிலும் சிறந்ததும், எல்லாச் சமயங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருப்பதுமான சமயம் என்பது பொருளாம். சித்தாந்தம் என்பதற்குச் சித்திக்கப்பெற்ற அல்லது கைவரப்பெற்ற முடிந்த முடிபு என்று பொருள்

---

[32] சோ.ந. கந்தசாமி, தமிழும் தத்துவமும், ப. 309

கொள்ளலாம்”[33] என்று சித்தாந்தத் தத்துவ வளர்ச்சியின் இயல்பினை சமய ஆராய்ச்சியாளர்கள் காட்டுகின்றனர்.

“சைவத்தில் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மை மிக விளக்கமாக பேசப்படுகிறது. இவற்றை இறை, உயிர், தளை எனவுங் கூறுவர். இவை மூன்றும் வேறுவேறாக என்றும் நிலைபெற்று உள்ளவை என்றும் கூறுவர்”[34] என்ற கருத்தின் வழியாக சைவ சித்தாந்தந்தின் முப்பொருள் உண்மைகளை அறிந்து கொள்ள முடிகின்றது.

இதன் மணிமேகலைக் கால நிலையைச் சீத்தலைச் சாத்தனார் தன் காப்பியத்தில் எடுத்தியம்பியுள்ளார். இவை பின் இயல்களில் விவரிக்கப்பெறுகின்றன.

---

[33] கே. ஆறுமுக நாவலர், இந்துமத இணைப்பு விளக்கம், ப. 26

[34] கே. ஆறுமுக நாவலர், இந்துமத இணைப்பு விளக்கம், ப. 26

<u>பிரம்ம வாதம்</u>

பிரம்மவாதம் என்ற சமயம் உபநிடதச் சார்புடையது. உபநிடதங்கள் என்பவை வேதங்களின் உட்பிரிவுகளின் ஒரு பகுதியாக அமைந்தனவாகும். “மந்திரம், பிரமாணம், உபநிடதம் ஆகிய மூன்றையும் சேர்த்து வேதம் என்ற பெயராலே வழங்குவது மரபு”[35] என்ற கருத்தின் அடிப்படையில் வேதத்தின் உட்பிரிவாக விளங்குவது உபநிடதங்கள் என்பது உறுதியாகின்றது. “ஈசாவாசியம், கேனம், முண்டகம், மாண்டூக்கியம், பிரச்சினம், பிருக தாரணியகம், சாந்தோக்கியம், சுவேதாசுவதரம், தைத்திரீயம், கைவல்லியம், கௌஷீதகி, அதர்வசிரம், அதர்வசிகை முதலியவை சில முக்கிய உபநிடதங்கள். இவை பல கருத்துகளைக் கொண்டுள்ளன. இவற்றின் பொருள்நிலையை ஆராய்ந்து ஒழுங்குபட எழுந்த நூலே பிரம்ம சூத்தி;ரம் எனப்படும் நூல். .. பிரம்ம சூத்திரம் பிரம்ம ஞானத்தை வற்புறுத்துகிறது. முடிந்த பொருள் ஒன்றே என்று கூறுகிறது. இந்நூல் பற்றி எழுந்த மதங்கள் அனைத்தும் ஏகான்ம வாதம் ( ஓரே ஆன்மாதான் உள்ளது என்னும் பேச்சு) உடையன எனக்

---

[35] கி.லெட்சுமணன், இந்திய தத்துவ ஞானம், ப. 16

கொள்ளப்படுகிறது." [36]என்ற கருத்தின் வழி பிரம்ம வாதத்தின் இயல்பினை அறிந்து கொள்ள முடிகின்றது.

மேலும் பிரம்ம வாதம் பிரம்ம சூத்திரம் என்ற நூலுக்கு செய்யப் பட்ட உரை காரணமாக நான்கு பிரிவுகளாக அமைகின்றது. ''சத்தப் பிரம்ம வாதம், மாயாவாதம், பாற்கரிய வாதம், கீரிடாப் பிரம்ம வாதம் என்னும் நான்கு பிரிவுகளாக பிரம்மவாதம் அமைந்துள்ளது''[37] என்றும் கருதப்படுகிறது.

இச்சமயம் பற்றிய ஈரடிகளில் மணிமேகலை குறிக்கிறது. "பேர் உலகு எல்லாம் பிரமவாதி ஓர் தேவன் இட்ட முட்டை என்றனன்"[38] என்ற நிலையில் பிரம்மவாத மதம் மணிமேகலையில் குறிக்கப்படுகிறது. பேர் உலகங்கள் எல்லாம் பிரம்மன் உருவாக்கியது என்பது இதன் வழி பெறப்படும் கருத்தாகும்.

---

[36] ச. கங்காதரன், சைவ நோக்கில் புறச் சமயங்கள்,ப. 61

[37] ச. கங்காதரன், சைவ நோக்கில் புறச் சமயங்கள்,ப. 61

[38] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, சமயக்கணக்கர்தம் திறம்கேட்ட காதை அடிகள் ,96-97

**<u>வைணவ வாதம்</u>**

மணிமேகலைக் காப்பியத்தில் குறிப்பிடப்பெற்றுள்ள வைணவ வாதம் பின்னாளில் தத்துவச் செழுமை பெற்று மேலோங்கியது. வைணவவாதியிடமும் மணிமேகலைப் பாத்திரம் அவர்தம் தத்துவ முறைமை பற்றிக் கேட்டறிகிறது.

திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் வைணவம் ஆகும். இதனைப் பின்பற்றுபவர்கள் வைணவர்கள் எனப்படுகின்றனர். வேதம், ஆகமம், இதிகாசம், புராணங்கள் ஆகியன இச்சமயத்தின் மூல ஊற்றுக்களாகக் கருதப்பெறுகின்றன. பகவத்கீதை, உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம் ஆகிய மூன்றும் இச்சமயத்தின் மிக முக்கியமான பனுவல்கள் ஆகும். விட்ணுபுராணம், பாகவதம் ஆகியனவும் இவ்வரிசையில் வைத்து எண்ணப்படும்.

வைணவ ஆகமங்கள் இருவகைப்படுகின்றன. 1.பாஞ்சராத்திரம், 2. வைகானசம் என்பன அவை இரண்டும் ஆகும். பாஞ்சராத்திரம் என்பது கடவுளால் உபதேசிக்கப்பெற்ற வழிபாட்டு முறையாகும். இம்முறை எளிமையானது. தந்திர முறைகள் அதிகம் உடையதாகும். வைகானசம் என்ற ஆகமம் முனிவர்களின்

மூலமாக உபதேசிக்கப்பெற்றது. இதில் பூசை முறைகள் மிகக் கவனமாக செய்யத்தக்கனவாக அமைக்கப்பெற்றுள்ளன. மந்திரங்களும் அதிகமாகக் கொண்ட பூசை முறை இதுவாகும்.

தத்துவங்களுக்கு முற்பட்ட தொன்மை சார் வைணவத்தில் முப்பொருள்கள் சுட்டப்பெறுகின்றன. ஈஸ்வரன், சித்து, அசித்து என்பன அம்மூன்றும் ஆகும். அவை பற்றிய விளக்கங்கள் பின்வருமாறு.

"சித்து என்றது ஆன்மாவை. அவ்வாத்மா, தேகேந்திரி யமநப் பிராணப் புத்தி விலட்சணமாய்,அசடமாய், ஆநந்தரூபமாய், நித்யமாய், அணுவாய், அவ்யக்தமாய், அசித்தியமாய், ஞானாச்ரயமாய், ஈச்வரனுக்கு நியாயம்யமாய், தார்யமாய், சேஷமாய் இருக்கும்"[39] என்ற கருத்தின்படி சித்து என்பதைப் பற்றி விளங்கிக்கொள்ள முடிகின்றது. சித்து என்பது ஆன்மாவைக் குறிக்கும் சொல் ஆகும். இது உடலுடன் தொடர்புடையது. ஆனந்த வடிவமானது. அழியாதது. அணுக்களால் இணைந்தது. ஈசுவரனுடன் இணையத்தக்கது போன்ற இயல்புகளை உடையது சித்து ஆகும்.

---

[39] ஆ.சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, ப. 1728

"அசித்து ஞான சூன்யமாய் விகாராஸ்பதமாய் இருக்கும். இது சுத்த சத்வம். மிச்ர சத்வம், சத்வ சூன்யம் என்று மூன்றுவிதம்"[40] என்று அறிவற்ற பொருளாக அசித்து கொள்ளப்படுகிறது.

"ஈசுவரன் அகிலஹேய பரத்யநீகாநந்த, ஞாநாநந்த சொரூபனாய் ஞானசக்தியாகி கல்யாண குண விபூஷிதனாய், சகல ஜகசிருட்டி ஸ்திதி, சம்மார கர்த்தாவாய், ஆர்த்தோ, ஜிஞ்ஞாஸு, ராதார்தீ, ஜ்ஞானி என்கிற சதுர்வித புருஷர்களுக்கும் ஆச்ரயணீயனாய்,தர்மார்த்த காமமோட்சம் என்னும் சதுர்வித பலப்பிரதனாய் விலகட்சண விக்ரஹயுக்தனாய், லட்சுமி, பூமி நீளா நாயகனாய் இருப்பான்"[41] என்று ஈசுவரனாக நாராயணமூர்த்தியைக் காட்டுகிறது வைணவம். ஈஸ்வரனே பரம்பொருள். அவரே அறிவின் வடிவம். இலட்சுமி, பூமி, நீளா ஆகியோரின் நாயகனாக விளங்குபவர்.

---

[40] ஆ.சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, ப. 1728

[41] ( ஆ.சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, ப. 1729

இவ்வாறு வைணவ முப்பொருள்களை விளங்கிக் கொள்ளலாம். இவ்வைணவ சமயத்தில் ஐந்து குறிகள் உள்ளதாகக் காட்டப்படுகிறது. அவை தாடம், புண்டரம், நாமம், மந்திரம், அர்ச்சனம் ஆகியனவாகும். வைணவத்தில் பஞ்சகம் என்றும் ஐந்து முக்கியப் பொருள்கள் காட்டப்பெறுகின்றன. அவை அடைபவன், அடையப்படுவது, பயன், உபாயம், இடையூறு என்பன அவ்வைந்தும் ஆகும். இவ்வகையில் திருமாலை முன்னிறுத்தி முக்தி வழி பரம்பொருளை அடைவது வைணவ சமயம் ஆகின்றது. இச்சமயம் பற்றிய மணிமேகலையின் கருத்துகள் தொடர்ந்த இயல்களில் சுட்டப்பெற்றுள்ளன.

**வேதவாதம்**

‘வேதம் என்பதற்கு அறிவு என்று பொருள். பழைமை விரும்பிகளுக்கு அது மிகவும் மேலான அறிவு. புனிதமானது. வெளிப்படுத்தப்பட்டது”[42] என்று வேதத்திற்குப் பொருள்விளக்கம் செய்யப்படுகிறது. “தெய்வீகமான கருத்துகளைத் தன்னுள் அடக்கி மறைத்து வைத்திருப்பதால் அது மறையெனப் பெயர்பெற்றது.

---

[42] வி.என். ராகவன், இந்தியத் தத்துவ இயல், ப. 63

ஆசிரியரனிடம் கேட்டுத் தெளிவுறவேண்டிய நூலாதலால் இதனைச் சுருதி எனவும் கூறுவர்" [43] என்றும் வேதம் என்பதற்கு விளக்கம் தரப்பெறுகிறது. "இது இருக்கு, எஜஸ், சாமம், அதர்வணம் என்று நான்கு பிரிவுகளையுடையது. இது ஞான காண்ட, கர்ம காண்ட வகையால் ஈசுவரனையும், அவனை உபாசிக்கும் யஞ்ஞாதிகளையும் கூறும்... இது சிக்சை, வியாகரணம், நிருத்தம், சந்தஸ், சோதிஷம், கல்பம் என்ற ஆறு அங்கங்களை உடையது"[44] என்ற கருத்து வேதங்களின் பகுப்புகள் பற்றி அறிவிக்கின்றது.

**<u>நான்கு வேதங்கள்</u>**

"இருக்கு" என்பதற்கு துதித்தல் அல்லது வழிபடல் என்பது பொருள். இறைவனை வழிபடுவதற்கான பாடல்களை உடைய தொகுப்பு "இருக்கு" வேதமாகும். இது பத்து உட்பிரிவுகளாகிய மண்டலகங்களைக் கொண்டுள்ளது.

---

[43] கே. ஆறுமுகநாவலர், இந்துமத இணைப்புவிளக்கம், ப. 5

[44] ஆ.சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, ப. 1728

முதல் ஏழு மண்டலங்களில் இறைவனாக தீ கொள்ளப்படுகிறது. பத்தாவது மண்டலத்தில் பிரமன், இந்திரன் ஆகிய இறைவர்கள் குறிக்கப்படுகின்றனர்.

யஜுர் என்ற சொல்லுக்கு யாகம் என்பது பொருள். யாகம், பலி, தானம் முதலிய கிரியைகளைச் செய்யும் முறைகளை யஜுர் வேதத் தொகுப்பு விளக்குகிறது. ருத்ரம் என்பது இதனுள் அமைந்த முக்கியமான பகுதியாகும்.

ஸாமம் என்னும் இன்னிசையால் பாடப்பட்டது சாமவேதம் ஆகும். இதில் பரமேசுவரன் அக்கினி, இந்திரன் ஆகிய தெய்வங்களால் பாடப்பெற்றுள்ளனர். பாபம் நீங்கி நற்பலன்களைத் தரும் வேதத்தொகுப்பாக இது அமைகிறது.

அனுட்டானங்கள், மந்திரங்களை உச்சரிக்கும் முறைகள், எதிரிகளை வெல்லும் மந்திர முறைகள் ஆகிய கொண்ட வேதத்தொகுப்பு அதர்வண வேதமாகும்.

இந்நான்கு பிரிவுகள் தவிர ஆறு அங்கங்களை உடையதாக வேதங்கள் அமைகின்றன. ஆறு அங்கங்களுக்கான விளக்கத்தைப் பின்வருமாறு உ. வே.சா. குறிப்பிடுகிறார். “உலகியற் சொல்லையொழித்து வைதிகச் சொல்லை ஆராயும்

நிருத்தமும், அவ்விரண்டையும் உடனாராய்ந்த ஐந்திரத் தொடக்கத்து வியாகரணமும், போதயானீயம், பாரத்துவாசம், ஆபத்தம்பம், ஆத்திரேயம் முதலிய கற்பங்களும், நாராயணீயம் வராராகம் முதலிய கணிதங்களும், எழுத்து ஆராய்ச்சியாகிய பிரமமும், செய்யுள் இலக்கணமாகிய சந்தமும் ஆம்”[45] என்ற முறையில் வேதங்களின் ஆறு அங்கங்களாக நிருத்தம், வியாகரணம், போயானீயம், பாரத்துவாசம், ஆபத்தம்பம், ஆத்திரேயம் ஆகியன விளங்குகின்றன.

**வேதப் பொருள்**

வேதங்கள் முக்கியமான நான்கு அடிப்படைக் கருத்துகளைக் கொண்டுள்ளதாக கி. லட்சுமணன் கருதுகிறார். மூலகாரணம், காரண

[45] உ,வே.சாமிநாதையர் (ப.ஆ) மணிமேகலை, , ப. 311

காரியத்தொடர்பு, ஒழுங்கும் ஒழுக்கமும், ஒரு தெய்வவாதம் ஆகிய நான்கு கருத்துகளை[46] வேதங்கள் வலியுறுத்துகின்றன என்பது அவர் கருத்தாகும்.

**மூலகாரணம்**

இயற்கையின் நியதி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தெய்வமே மூல காரணம் என்ற கொள்கை வேதத்தின் காட்டப்படும் மூலகாரணக் கொள்கையாகும்.

**காரண காரியத் தொடர்பு**

இந்த உலகில் நிகழும் ஒவ்வொரு சம்பவத்துக்கும் ஒவ்வொரு காரணம் உண்டு என்று காரண காரியப் படுத்தும் முறையும் வேதங்களின் அடிப்படையாக விளங்குகிறது.

**ஒழுங்கும் ஒழுக்கமும்**

---

[46] கி.லட்சுமணன், இந்தியத் தத்துவஞானம், பக் 21,22 ஆகிய பக்கங்களில் உள்ள செய்திகளின் சுருக்கம்.

உலக நிகழ்வுகள் அனைத்தும் காரண காரியத் தொடர்புடையவை என்றால் அக்காரண காரியத் தொடர்பு ஏற்படுவதற்கு ஓர் ஒழுங்குமுறை அவசியமாகின்றது. இவ்வொழுங்குமுறையை வரையறுக்கும் தெய்வத் தலைமைக்கு ஒழுக்கம் அவசியமாகின்றது. இவ்வகையில் இதனை வலியுறுத்தும் நிலையில் வேதங்கள் அமைகின்றன.

**ஒரு தெய்வம்**

வேதங்களில் பல கடவுளர் பெயர்கள், குறிப்புகள் இடம்பெற்றாலும் எல்லாம் வல்ல ஒருவனே அனைத்தையும் இயக்குகிறான் என்ற அடிக்கருத்து வலுவுடையதாக உள்ளது.

இவ்வகையில் வேதச்சார்புடைய கருத்துகளை எடுத்துரைக்கும் சமய முறை வேதவாதம் எனப்படுகிறது. இச்சமயக் கருத்துகளுக்கும் மணிமேகலை இடம் தந்துள்ளது. வேதம் பற்றிய அறிமுகச் செய்திகள் மட்டுமே இங்குக் காட்டப்பெற்றுள்ளன. இவை அடுத்தடுத்து வரும் இயல்களில் விளக்கப்படுகின்றன.

**சாங்கிய வாதம்**

உபநிடத கொள்கைகளைப் பின்பற்றி சில சமயக் கருத்துகள் உருவாயின. அவை நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாஞ்சை, வேதாந்தம் என்னும் ஆறு தரிசனங்களாக வளர்ந்தன. இவ்வாறினையும் எட்டு தரிசனங்கள் (ஷட் தரிசனங்கள்) என்று அழைக்கும் முறை உண்டு. இவ்வாறில் பழைமையானது சாங்கியம் ஆகும். இவ்வாறில் சாங்கியம், வைசேடிகம் ஆகியன பற்றிய குறிப்புகள் மணிமேகலையில் காணப்படுகின்றன.

“சாங்கியம் என்ற சொல்லுக்குப் பொருள் பூரண அறிவு என்று பெயர்”[47] என்ற பொருள் விளக்கம் தரப்பெறுகிறது, ““சங்க்யா” என்ற தாதுவிலிருந்து சாங்கியம் என்னும் சொல் தோன்றியது. இத் தாதுவிற்குப் பகுத்தறிதல், எண்ணுதல் எனப் பல பொருள்கள் உண்டு. உலகத் தோற்றத்தில் காணப்படும் கூறுகளைச் சிந்தித்து தெளிந்து பலவகை மூலப்பொருள்களாகப் பிரித்து, கண்டறிந்ததத்துவங்கள் என்று

---

[47] கி.லட்சுமணன், இந்தியத் தத்துவ ஞானம், ப. 193

எண்ணுதலால் சாங்கியம் என்ற பெயர் வருகிறது”[48] என்றும் சாங்கிய சமயத்திற்கான பொருள் விளக்கம் தரப்பெறுகிறது.

‘‘சாங்கியத்தை உருவாக்கியவர் கபிலர் என்ற கருத்து உண்டு. இருப்பினும் இவருக்கு முன்னதாக சாங்கியக் கருத்துகள் உதயம் பெற்று இவரால் வரையறுக்கப்பெற்றிருக்க வேண்டும் என்ற கருத்தும் இங்குக் கொள்ளத்தக்கது. உலகத்தை இறைவன் படைத்தான் என்ற கொள்கையைச் சாங்கியம் ஏற்கவில்லை. மாறாக பிரகிருதியாகிய ஒரே மூலத்தினின்று உலகம் இயல்பாகவே பரிணாமம் எய்தியது எனச் சாங்கியம் கருதுகிறது. இதன் காரணமாக இதற்குப் பரிணாமவாதம், சுபாவவாதம் என்ற பெயர்களும் உண்டு’’[49] என்று கருதுகிறார் சோ.ந. கந்தசாமி.

சாங்கியம் பிரகிருதி, புருடன் ஆகிய இரண்டினைத் தத்துவ உலகிற்கு வழங்கியது. எல்லாப்பொருள்களும் தோன்றுவதற்கு மூலகாரணமாக அமைவது

---

[48] ச. கங்காதரன், சைவ சமய நோக்கில் புறச்சமயங்கள்,ப. 78

[49] சோ.ந. கந்தசாமி, இந்தியத் தத்துவக் களஞ்சியம்,பாகம். 2. ப. 14

பிரகிருதி ஆகும். இதிலிருந்து தோன்றுவன எல்லாம் விகுதிகள் ஆகும். இது அசேதனமாக இருப்பது. எப்பொழுதும் இயங்கிக் கொண்டிருப்பது. முக்குணங்களை உடையது. புறமாக இருப்பது. குருட்டுத் தன்மை வாய்ந்தது.

புருட தத்துவம் என்பது பொருளின் பரிணாமத்திற்கு இடம் தருவது. எல்லா உடல்களிலும் பரவி இருப்பது. அழியாதது. உள்ளத்தின் உணர்வாக அமைவது. சேதனமாக அமைவது. சலனமில்லாமல் இருப்பது. முக்குணங்கள் இல்லாதது. அகமாக இருப்பது. முடத்தன்மை வாய்ந்தது.

இச்சமயம் ஆன்மாக்கள் பல என்ற கொள்கை உடையது. பிரகிருதி என்ற மூலப்பகுதியையும், புருடனையும் பிரித்து உணரும் விவேக உணர்வு ஒன்றே வீடு தருவது என்ற கொள்கையினர் ஆவர்.

இதனைத் தொட்டுத் தொடர்வது யோகம் எனப்படும் மற்றொரு சமயப் பிரிவாகும். பிரகிருதி தொடர்பில் இருந்து புருடன் பிரிதலுக்கான ஒரு வழிமுறை யோகத்தால் அமையும் என்பதால் இச்சமயம் சாங்கியத்துடன் பெரிதும் ஒத்துப்போகிறது. அதனைத் தொடர்கிறது. இருப்பினும் யோகம் இறைவன் என்ற

கொள்கையை ஏற்கிறது. ஆனால் இறைவன் என்ற கொள்கையை ஏற்காதது சாங்கியம் ஆகும்.

**<u>வைசேடிக வாதம்</u>**

"விசேடம் என்ற சொல்லின் அடியாகத் தோன்றியது வைசேடிகம். குறிப்பிட்ட ஒரு பொருள் ஏனைய பொருள்களினின்றும் வேறுபடுதற்குரிய விசேட இயல்புகள் அல்லது சிறப்புத்தன்மைகள் பற்றி ஆராய்தலின் இத்தத்துவம் வைசேடிகம் எனப்பெயர் பெற்றது"[50] என்று வைசேடிக சமயத்திற்கான பெயர் பொருள் விளக்கத்தைத் தருகிறார் சோ. ந. கந்தசாமி.

---

[50] சோ.ந. கந்தசாமி, இந்தியத் தத்துவக் களஞ்சியம்,ப.139

நையாயியர் என்ற அளவைவாதிகள் (நியாயவாதிகள்) வைசேடிக சமயத்துடன் நெருங்கிய கருத்து ஒற்றுமை உடையவர்கள் ஆவர். எனவே நியாய வைசேடிகம் என்று இரு மதங்களையும் இணைத்துக் கூறும் மரபும் உண்டு.

"இந்த உலகும், உலகிலுள்ள பொருட்களும் ஒரு பொய்த் தோற்றம் அல்ல. உலகும் உண்மை. அவ்வுலகில் உள்ள பொருள்களும் உண்மை என்று வைசேடியர் கருதினர்" [51] என்று வைசேடிக சமயக் கருத்தினை அறிவிக்கிறார் கி.லட்சுமணன்.

வைசேடிகர்கள் ஒன்பது திரவியங்களை தம் சமய அடிப்படைகளாகக் கொண்டனர். நிலம், நீர், நெருப்பு, காற்று, காலம், இடம், ஆத்மா, மனம் போன்றன வைசேடியருக்கு அடிப்படைப் பொருள்களாகும். இவ்வொன்பது பொருள்களே உருவாவதற்கும், பிரிந்து அழிவதற்கும் காரணமாகும் என்பதும் இவர்தம் கருத்தாகும்.

---

[51] கி.லட்சுமணன், இந்தியதத்துவ ஞானம்,ப. 233

இச்சமயத்தின் முதல் நூலாக கணாதரின் வைசேடிக சூத்திரம் அமைகிறது. இந்நூலுக்குப் பிரசத்தபாதர் என்பவர் உரை வரைந்துள்ளார். இவ்வுரை நூல் முதன்மைநூல் போன்ற பெருமை பெற்றது. இதன் பெயர் பதார்த்த தருமசங்கிரகம் என்பதாகும்.

"ஆன்மா என்றென்றும் விளங்கும் பொருளாகவும் எங்கும் நிறைகின்ற பொருளாகவும் விளங்குகின்றது. அறிதல், விரும்புதல், வெறுத்தல்,செயற்படுதல், இன்பம், துன்பம், நன்மை, தீமை, அல்லது புண்ணியம், பாவம் ஆகிய பண்புகளை இது உடையது ஆகும்"[52] என்று ஆன்மாவிற்கு வைசேடிக நிலையில் விளக்கம் தரப்பெறுகின்றது.

"ஆன்மாக்களுக்குள் தலைசிறந்த ஆன்மாவாகக் கடவுள் இருப்பவர். கடவுள் ஒருவரே. பிரபஞ்சத்தின் தோற்றம், நிலைபேறு, அழிவு ஆகியவற்றிற்குக் காரணமாக இறைவன் வரம்பில்லாத ஆற்றலோடும் எல்லையில்லாத அறிவோடும்

---

[52] சதிஸ் சந்திர சாட்டர்ஜி,முன்னைய நியாய வைசேடிகம், கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாறு,தொகுதி. 1. ப. 383

விளங்குகிறான். இப்பிரபஞ்சமானது இன்மையினின்றும் இறைவனால் தோற்றுவிக்கப்பெறுவதில்லை என்றும் நிலைத்துள்ளனவாகிய திசை, காலம், ஆகாயம், மனங்கள், ஆன்மாக்கள் ஆகியவற்றினின்றும் இப்பிரபஞ்சமானது இறைவனால் தோற்றுவிக்கப்பெறுகிறது. இறைவன் இந்தச் சட உலகத்திற்கு முதல் காரணர் அல்லர். அவர் நிமித்தகாரணர் ஆவார்" [53] என்பது வைசேடிகம் தரும் கடவுள் கொள்கை ஆகும்.

இவ்வாறு மணிமேகலை காலத்தில் அளவைவாதம், சைவம், வைணவம், வேதவாதம், பிரம்மவாதம், சாங்கியம், வைசேடிசம் ஆகிய ஏழு சமயப் பிரிவகள் வைதிக நிலையில் வளர்ச்சி பெற்றிருந்தன என்பதை அறியமுடிகின்றது.

**<u>அவைதிக சமயங்கள்</u>**

---

[53] சதிஸ் சந்திர சாட்டர்ஜி,முன்னைய நியாய வைசேடிகம், கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாறு,தொகுதி. 1. ப. 390

மணிமேகலை காலத்தில் அவைதிக சமயங்களான ஆசீவகம், நிகண்டவாதம் (சமணப் பிரிவில் ஒன்று) பௌத்தம், பூதவாதம் ஆகியன வளர்ச்சி பெற்றிருந்தன. அவை பற்றிய பொது அறிமுகங்கள் பின்வருமாறு.

**ஆசீவக வாதம்**

அசீவகம் என்ற சொல்லுக்குப் பல நிலைகளில் பொருள் கொள்ளப்படுகிறது. ""ஜீவிக்கிறவன் மதம் அசீவகம் என்றும்", "பிறர் தயவில் ஐயமேற்று வாழும் துறவி", "ஜீவனை உண்ணாதவர்" என்றும், "இல்லறத்தவரும், துறவறத்தவரும் வாழும் முறைமையை உரைப்பது"[54] என்று பொருள் கொள்ளப்படுகிறது. இந்நான்கு பொருள்களையும் ஒன்றாய் வைத்து ஆராய்கையில் அவற்றின் மையம் ஒன்றினை நோக்கி அமைவதை உணரமுடிகின்றது. ஜீவனை வருத்தாது வாழ்வது என்பதே அசீவகத்தின் அடிப்படைக் கொள்கை என்பது அறியத்தக்கதாகின்றது.

[54] ( சோ.ந. கந்தசாமி, இந்தியத் தத்துவக்களஞ்சியம். தொகுதி.1.பக் 104-105)

இச்சமயத்தின் தொடக்குநர்களாக விளங்குபவர்கள் பூரணகாசிபர், மர்கலி கோசாலர், பகுத கச்சானர் ஆகியோர் ஆவர். இவர்கள் மூவரும் மூன்று ஆசீவகக் கொள்கைகளை முன்மொழிந்தவர்கள் ஆவர். இவர்களில் பூரண காசிபர் அகிரியாவாதம் என்பதையும் மர்கலி நியதிக் கொள்கை என்பதையும், பகுதகச்சானர்க்கு அணுக்கொள்கை என்பதையும் விரிவுபடுத்தினர்.

ஆசீவகர்கள் என்பவர்கள் காட்சிப் பொருள் உண்மைவாதிகள் ஆவர். இவர்கள்  உலகில் காணப்படும் எவ்வகைப் பொருள்களையும் அணுச்செறிவால் ஆனவை என்றும் அவை ஐவகைப்படும் என்றும் கண்டனர். நுண்பொருள் ஐந்து, அணு ஐந்து என்று இவ்வைம்பொருள்கள் அழைக்கப்படுகின்றன. நிலவணு, நீரணு, தீயணு, காற்றணு என்ற நால்வகைப் பூதங்களும் உயிரணு என்னும் அறிவுடை பொருளும் ஆக அணு ஐந்து என்கிறது ஆசீவகம். வானம் என்ற பூதத்தை ஆசீவகர்கள் ஏற்பதில்லை.

**<u>ஆசீவக சமயத்தின்  குறிக்கத்தக்க சில அடிப்படைக் கருத்துகள் பின்வருமாறு</u>.**

“பொருளின் ஆக்கத்திற்குக் காரணம் என்பது வேண்டாம். காலம் என்பது ஒரு பொருளன்று. அணுக்களால் ஆகிய ஐவகைப் பொருள்களே உண்மை. பொருள்கள் யாவும் ஆழ்தல், மிதத்தல் என்னும் நிகழ்வுகள் உடையவை. பொருள்களுக்குக் குணம், இயல்பு, பால் பகுப்பு உண்டு. நால்வகை நியதிக் கொள்கை ஒட்டிய சமயம் ஆசீவகம்”[55] ஆகியன இச்சமயத்தின் இயல்புகள் ஆகும் என்பன இச்சமயத்தின் அடிப்படைக் கருத்துகளாக விளங்குகின்றன.

இவ்வகையில் அணுக்கொள்கை என்பது ஆசீவகத்தின் அடிப்படைக் கொள்கையாக அமைந்துள்ளது. இச்சமயம் பற்றியும் சீத்தலைச் சாத்தனார் தன் மணிமேகலைக் காப்பியத்தில் குறித்துள்ளார். அச்செய்திகள் பின்வரும் இயல்களில் விவரிக்கப்பெறுகின்றன.

**நிகண்டவாதம்**

---

[55] சோ.ந. கந்தசாமி, இந்தியத் தத்துவக்களஞ்சியம்,ப.121

நிகண்டவாதம் என்பது சமண சமயப் பிரிவுகளுள் ஒன்றாகும். மணிமேகலை காலத்தில் சமண சமயத்தின் ஒரு பிரிவான நிகண்டவாதம் தமிழகத்தில் பரவி இருந்துள்ளது. எனவே அதனைச் சீத்தலைச் சாத்தனார் தன் மணிமேகலைக் காப்பியத்தில் குறித்துள்ளார்.

“சமணக் கடவுள் பற்றற்றவர். ஆதலின் நிர்கந்தர் . . . அல்லது நிகண்டர் எனப்பட்டார். அது பற்றிச் சமணசமயம் நிகண்டமதம் எனப் பெயர் பெற்றது”[56] என்று நிகண்டவாத சமணத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார் மயிலை சீனி. வேங்கடசாமி  சமண சமயம் பல பெயர்களால் அழைக்கப்பெற்று வந்துள்ளது. “ஜைனம், ஆருகதம், நிகண்டவாதம், அநேகாந்தவாதம், கியாத்வாதமதம்” என்பன இச்சமயத்திற்கான வேறுபெயர்கள் ஆகும்.

புலன்களை அடக்கி வெற்றிகண்டவர் என்ற நிலையில் ஜீனர் - வெற்றி கண்டவர் என்ற அடிப்படையில் இம்மதம் ஜைனம் எனப்பட்டது.  அருகக்கடவுளை வணங்குவதால் ஆருகதம் எனவும் அழைக்கப்பட்டது. இச்சமயம் பல முடிபுகளை

[56] மயிலை சீனி. வேங்கடசாமி, சமணமும் தமிழும்,ப. 11)

உடையதாகையால் அநேகாந்தவாதம் எனப்படுகிறது. கியாத்வாதம்[57] என்பதும் அநேகாந்த வாதத்தைக் குறிக்கும் மற்றொரு சொல் ஆகும். இவ்வாறு இச்சமயம் பல பெயர்கள் குறிக்கப்பெறுகின்றது.

மணிமேகலையில் குறிக்கப்படுவது நிகண்டவாதம் என்ற சமணசமயத்தின் ஒரு பிரிவு என்பதை உ.வே.சாமிநாதையர் தெளிவாகத் தான் மணிமேகலைக் காப்பியத்தின் குறிப்புரையில் குறிப்பிடுகிறார். “நிகண்டவாதி சமணர் இரு திறத்தாரில் ஒருவகையான், இவன் நிர்கந்தவாதியென்றும், திகம்பரவாதி என்றுங் கூறப்படுவான்”[58] என்ற குறிப்பின்வழி நிகண்டவாதம் என்பது சமணத்தின் ஒரு பிரிவு என்பதும் அதுவே மணிமேகலை காலத்தில் தமிழகத்தில் இருந்தது என்பதும் பெறப்படுகிறது.

பொதுவாக சமணம், சமணர் என்ற சொற்களுக்குத் துறவு, துறவியர் என்று பொருள். துறவு நிலை பெற்றவர்களே வீடுபேறு அடைய இயலும் என்பது

[57] கு. சுந்தர மூர்த்தி, சங்க இலக்கியங்களில் சமய நோக்கு, ப.588

[58] உ,வே.சாமிநாதையர், (ப.ஆ), மணிமேகலை,ப.316

இச்சமயத்தின் கருத்தாகும். துறவு நிலையின் வழியில் வீடுபேற்றை அடையச் செய்யும் சமயம் சமணம் ஆகின்றது.

சமணசமயக் கருத்துகளைப் பரப்புவதற்காக உலகம் வந்த பெரியோர்களைத் தீர்த்தங்கரர்கள் என்று அழைப்பர். அவ்வகையில் சமண சமயத் தீர்த்தங்கரர்களாக இதுவரை இருபத்துநான்கு பெரியோர்களை அடையாளம் காட்டுகிறது சமண சமயம். இதில் வர்த்தமான மகாவீரர் என்பவர் இருபத்துநான்காவது தீர்த்தங்கரர் ஆவார்.

சமண சமயம் தன் வளர்ச்சியில் மூன்று பிரிவுகளாக வளர்ந்தது. “அவை சுவேதாம்பர சமணம், திகம்பர சமணம், ஸ்தானகவாசி சமணம் என்பனவாகும். சுவேதாம்பர் சமணத் துறவிகள் வெண்ணிற ஆடை அணிவர். இவர்களின் ஆலயங்ளில் உள்ள தீர்த்தங்கரர் திருவுருவங்களுக்கு வெண்ணிற ஆடை உடுத்துவர். சுவேதாம்பரம் என்பதற்கு வெண்ணிற ஆடை என்பது பொருள். திகம்பர சமணத் துறவிகள் ஆடை அணியமாட்டார்கள். …திகம்பரம் என்றால் திசைகளை ஆடையாக உடுத்தவர் என்பது பொருள் . . . இவர்களின் கோயில்களில் உள்ள தீர்த்தங்கரர்

திருவுருவங்களுக்கு ஆடையுடுத்தப்பெறாமல் திகம்பரமாகவே இருக்கும். சுவேதாம்பர சமணரும், திகம்பர சமணரும் உருவவழிபாட்டினர். ஸ்தானவாசி சமணருக்கு உருவ வழிபாடு உடன்பாடு அன்று. அவர்கள் தம் கோயில்களில் சமண ஆகம நூல்களை வைத்து அவற்றையே தீர்த்தங்கரர்களாகவும்,அருகக் கடவுளாகவும் பாவித்து வணங்குவர்''[59] என்று சமண சமயப் பிரிவுகள் பற்றிய அறிமுகத்தைத் தருகிறார் மயிலை சீனி வேங்கடசாமி.

இவ்வாறு மணிமேகலை காலத்தில் நிகண்டவாதம் என்ற நிலையில் தமிழகத்தில் சமண சமயம் பின்பற்றப்பட்டு வந்துள்ளது.இச்சமயம் குறித்து மணிமேகலைக் காப்பியம் தரும் செய்திகள் பின்வரும் இயல்களில் விவரிக்கப்பெறுகின்றன.

<u>**பூதவாதம்**</u>

---

[59] ” மயிலை சீனி, வேங்கடசாமி, சமணமும் தமிழும்,பக். 18-19

பூதவாதம் என்பது அவைதிக சமயங்களில் ஒன்றாகும். உலகாயுதம் என்ற நிலையிலும் இதனை அறிந்து கொள்ள இயலும்.

பூதங்கள் ஐந்து எனக் கொள்வது பூதவாதிகளின் முடிபாகும். மற்ற சமயங்கள் வானம் என்ற பூதத்தைத் தவிர்க்க இவ்வாதம் வானத்தையும் ஏற்று ஐந்து பூதங்களின் இயல்பால் உலகம் நடைபெறுகிறது என்று உரைக்கின்றது. “பிருதிவி முதலிய ஐந்து தத்துவங்களின் சமவாயத்தில் அறிவு உதிக்கும்”[60] என்று பூத வாத சமயத்தின் இயல்பு மொழியப்பெறுகிறது. ஐந்து தத்துவங்களின் இயல்பினால் அறிவு விளக்கம் பெறும் என்பது பூதவாத சமயத்தின் அடிப்படையாகும். பூத வாத கொள்கைகள் பற்றி நீலகேசி விரிவாக உரைக்கின்றது. ஐம்பூதங்களும் என்றும் உள்ள மெய்ப்பொருள், அவற்றிற்கு அழிவே கிடையாது, அவற்றின் கலப்பே உலகம். உலகிற்குப் படைப்பு, அழிவு எதுவும் கிடையாது என்பன இவ்வாதத்தின் அடிப்படைக் கொள்கைகள் ஆகும்.

---

[60] உ.வே. சாமிநாதையர்,(ப.ஆ), மணிமேகலை ப.323

மேற்சுட்டியவை அனைத்தும் மணிமேகலை அறிந்து கொண்ட, அல்லது மறுக்க முயன்ற மெய்ப்பொருள் கொள்கைகள் ஆகும். இவற்றைப் பற்றி சமயக் கணக்கர்தம் திறம் கேட்ட காதை என்ற காதை வழி அறிந்து கொள்ள முடிகின்றது. பௌத்த சமயம் பற்றிய கருத்துகளை மணிமேகலை பரவலாக காப்பியந்தோறும் காணமுடிகின்றது. எனவே பௌத்த சமயம் பற்றிய அடிப்படை செய்திகள் இதன் பின்னிலையில் எடுத்துரைக்கப்பெறுகின்றன.

**<u>பௌத்தம்</u>**

பௌத்த மத எழுச்சிக்கு முக்கியக் காரணமாக அமைபவர் கௌதம புத்தர் ஆவார். இவருக்கு முன்பாக பல புத்தர்கள் இருந்ததாகவும், அவர்கள் பௌத்த மத அடிக்கருத்துகளை உணர்த்தியதாகவும் வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்கின்றன. இவ்வரிசையில் இருபத்து நான்காவது புத்தராகக் கௌதம புத்தர் தோன்றினார். அவரின் ஞானத் தேடல் பௌத்த சமயத்திற்கு மேலும் வலுவூட்டியது.

பௌத்த சமயம் அவைதிக சமயமாகும். இது காட்சி, அனுமானம் என்ற இரு அளவைகளை அடிப்படையாகக் கொண்டது. வேதவாக்கியம் என்ற அளவையை

ஏற்காதது. இதன் காரணமாக வேதம் சார்ந்த கொள்கைகளுக்கு முரணாக பௌத்தம் அமைந்தது.

புத்தருக்குப் பின்னால் அவரின் மாணவர்கள் புத்தரின் உபதேசங்களை பதிவு செய்தனர். புத்தரின் காலத்திலேயே சங்கம் உருவானது. இச்சங்கம் புத்தக் கருத்துகளைப் பரப்பியது. சீடர்களை உருவாக்கியது. புத்தரின் கருத்துகள் சுத்த பிடகம், அபிதம்மபிடகம், விநய பிடகம் என்ற தொகுப்புகளாகப் புத்தரின் அறிவுரைகள் தொகுக்கப்பெற்றன. புத்தருக்குப் பின்பு அவரின் கருத்துகள் இருவகை நெறிகளாகப் பரவின. ஈனயானம், மகாயானம் என்பன அவை இரண்டுமாகும். இவற்றை முறையே சிறுவழி, பெருவழி என்றும் அழைக்கலாம்.

பெருவழியும் இருவகைப் பிரிவாக வளர்ந்தது. அவை மாத்துமிகம், யோகாசாரம் என்பனவாகும். சௌத்திராந்திகம், வைபாடிகம், ஆகியன சிறுவழிப் பிரிவுகளாகும். பெருவழிப் பிரிவுகள் சீனா, ஜப்பான், திபெத் போன்ற நாடுகளுக்குப் பரவின. சிறுவழிப் பிரிவுகள் தென்னிந்தியாவில், பர்மாவில், இலங்கையில் பரவின.

துக்கம், துக்கோற்பத்தி, துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் என்ற நான்கும் பௌத்த சமயத்தின் உயர் வாய்மைகள் ஆகும். துக்க நிவாரணமே நிர்வாணம் எனப்படும் நிறைநிலை ஆகின்றது. துக்க நிவாரணத்திற்கு எட்டு வழிகளைப் பௌத்தம் காட்டுகிறது. நற்காட்சி, நற்கருத்து, நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கொள்கை, நல்லமைதி ஆகிய இவ்வெட்டும் துக்க நிவாரணத்திற்கான வழிகள் ஆகும்.

பௌத்த சமயத்தில் ஐவகை நெறிகள் கடைபிடிக்க நெறிப்படுத்தப்படுகிறது. அவை கொல்லாமை, கள்ளாமை, காமமின்மை, பொய்யாமை, கள்ளுண்ணாமை, விலக்கப்பட்ட காலங்களில் உண்ணாமை, ஆடல் பாடல் கூத்துகளை நாடாமை, ஒப்பனை செய்யாமை, அதனுடன் இருக்கைகளைப் பயன்படுத்தாமை ஆகியனவாகும்.

புத்தம், தர்மம், சங்கம் ஆகிய மூன்றும் பௌத்த சமய வளர்ச்சிக்கு உதவிய திரிரத்தினங்கள் ஆகும். இவற்றின் வளர்ச்சியால் பௌத்த சமயம் உலகு தழுவிய

சமயமாக உயர்ந்தது. இச்சமயம் குறித்த பல தகவல்களை மணிமேகலைக் காப்பியம் அளிக்கின்றது. அவையும் பின்வரும் இயல்களில் விவரிக்கப்பெறுகின்றன.

இவ்வாறு பொதுவான அறிமுக நிலையில் மணிமேகலை காலச் சமயநிலை இவ்வியலில் எடுத்துரைக்கப்பெற்றுள்ளது.

**<u>தொகுப்புரை</u>**

மணிமேகலை காப்பியம் பௌத்த சமய சார்புடைய நூல் என்ற போதிலும் அதனுள் மற்ற சமயக் கருத்துகளுக்கு இடம் தரும் நிலையில் காப்பியப் போக்கு அமைக்கப்பெற்றுள்ளது. இதன் காரணமாக தென்னிந்தியாவில் எழுந்த மெய்ப்பொருள் கொள்கைகள் பற்றியும் அவற்றின் நிலை பற்றியும் அறிந்துகொள்ள முடிகின்றது. மணிமேகலை தென்னிந்திய மெய்ப்பொருளியல் தேடலில் புதிய பாதையைத் தோற்றுவித்துள்ளது. தன் சமயத்தின் நன்மைகளைக் கூறுவோர் மற்ற சமயங்களைப் பற்றியும் அவற்றின் கொள்கைகள் பற்றியும் அறிந்துகொள்வது அவசியம் என்ற நிலையை மணிமேகலைக் காப்பியம் வழங்கியுள்ளது.

சுபக்கம், பரபக்கம் என்ற மரபினை மணிமேகலை துவங்கி வைக்கிறது. இந்தத் துவக்கம் பின்னாளில் அனைத்துச் சமயவாதிகளும் மற்ற சமயக் கருத்துகளைத் தம் சமயக் கருத்துகளோடு ஒப்பிட்டு உரசிப் பார்த்துக் கொள்ள வழி வகுத்துள்ளது.

உலக நாடுகளில் தோன்றிய மெய்ப்பொருள் பற்றிய தேடல், தத்துவம், கொள்கை போன்ற இந்தியாவிலும் இருந்தது என்பதை மெய்ப்பிக்கும் முக்கிய இலக்கியச் சான்றாக மணிமேகலைக் காப்பியம் விளங்குகின்றது.

மணிமேகலை காட்டும் இந்தியத் தத்துவ மரபுகளை வேதச் சார்புடையது (வைதிகம்), வேதச் சார்பற்றது (அவைதிகம்) என்ற இரு நிலைகளில் காணமுடிகின்றது. அளவைவாதம், சைவவாதம், பிரமவாதம், வைணவவாதம், வேதவாதம், சாங்கிய வாதம், வைசேக வாதம் ஆகியன வைதிக சமயங்கள் ஆகும். அசீவகம், நிகண்டவாதம் (சமணப்பிரிவு), பூதவாதம், பௌத்தம் ஆகியன வேதங்களை மறுத்த அவைதிக சமயங்கள் ஆகும். அவைதிக நிலை சார்ந்த

சமணமும், பௌத்தமும் இந்தியாவில் ஆதி சமயங்களாக, வளர்ச்சி கண்ட சமயங்களாகக் கொள்ளத்தக்கனவாகும்.

ஒவ்வொரு சமயமும் தனக்கான அளவைகள் பிரமாணங்களின் வாயிலாக வேறுபடுத்த பெற்றுள்ளன. குறிப்பாக வேத வாக்கியம் என்பது ஓர் அனுமானம். இந்த அனுமானத்தின்படி வேதங்கள் சொன்ன கருத்துகளை ஏற்ற சமயங்கள் வைதிக சமயங்கள் ஆகின்றன. வேத வாக்கினை ஏற்காத சமயங்கள் அவைதிக சமயங்கள் ஆகின்றன. வேதங்கள் கடவுள் உண்டு என்றன. அவைதிக சமயங்கள் கடவுள் என்றொருவர் இல்லை என்றன. இருப்பினும் இவ்விரு நெறிகளும் மனித குலத்திற்குத் தக்கவகையில் ஆன்மிக பலத்தை நல்கி வந்திருக்கின்றன என்பது உறுதி.

# இயல். 2

## மணிமேகலை காலத்திற்கு முந்தைய சமயங்களும், அவற்றின் நிலைப்பாடும்

கிறிஸ்து பிறப்பதற்கு முன்னதான பத்து நூற்றாண்டுகளில் உலக அளவில் மெய்ப்பொருள் பற்றிய தேடல் என்பது நிகழ்த்தப்பெற்று வந்துள்ளது. மெய்ப்பொருள் பற்றிய தேடல் என்பது சமயம் சார்ந்த தேடலாக முதலில் அமைந்தது. பின்னால் அச்சமயக் கருத்துகள் வலுப்பெற்றுத் தத்துவங்கள் உருப்பெற்று வளரத் தொடங்கின. சமயக் கருத்துகளும் தத்துவங்களும் ஒரே வழிப் பாதையின அவற்றின் இயல்புகள் வேறானவையாகும். இதனை "இப்பிரபஞ்சத்தின் மூலத்தை இயல்பினை ஆராய்வது தத்துவம். வாழ்க்கைக்கொரு குறிக்கோளையும், அக்குறிக்கோளையடைய ஒருவழியினையும் காட்டுவது சமயம்"[61] என்ற ஞானனின் கருத்து வரையறை செய்கிறது.

---

[61] இ.எஸ்.டி, ஞானன், தொகுப்பாசிரியர்கள், தத்துவ தரிசனங்கள்,ப.

“மக்களின் வேண்டல்களைப் பூர்த்தி செய்து, அவர்களை ஈடேற்ற வல்ல ஒரு முழுமுதற்கடவுளைப் பற்றுக் கோடாகக் கொள்பவையே (பெரும்பாலானவை) மதங்கள். தத்துவ ஆய்வின் முடிவாகி மூலப்பரப்பொருளும் சமயவாதிகள் இயம்பும் முழு முதற் கடவுளும் ஒன்றேயெனக் கொள்ள விரும்பியதன் முடிவே சமயம்” என்ற கருத்து மதமும் தத்துவமும் ஒருங்கு கூடும் இடத்தைச் சுட்டுகிறது. மெய்ப்பொருள் தேடல் என்பது மூலத்தைத் தேடும் ஆராய்ச்சியாகும். மதம் என்பது மூல முதற்பொருளாக கடவுளைக் காட்டி அக்கடவுளை சந்தேகமறத் தொழச் செய்யும் முயற்சியாகிறது. மதத்தில் மூலப் பரப்பொருள் பற்றிய ஆராய்ச்சிக்குப் பெரும்பாலும் இடம் இருப்பதில்லை. ஆனால் மூலப்பரம்பொருளை ஆராதிக்கிற மனப்பாங்குச் செயல்படுத்தப்படுகிறது. இந்நிலையில் மெய்ப்பொருள் தத்துவம் என்பதும் மதம் என்பதும்  ஒரு கோட்டில் செல்லும் இரு பயண அனுபவங்களாகின்றன.

எகிப்து, இந்தியா, சீனா போன்ற பல நாடுகளில் மெய்ப்பொருள் பற்றிய பரவலான தேடல்கள் இருந்துள்ளன. இந்நாடுகளிலும் மத வழிபாடுகள் இருந்துள்ளன.  இம்மெய்ப்பொருள் தேடல்களில், கடவுள் பற்றிய மதக் கருத்துகளில் ஓர் ஒப்புமைத் தன்மை இருந்துள்ளது. “கிரேக்கர் மெய்ப்பொருள் இயல் கொள்கை

முறைகளுக்கும், இந்தியக் கருத்து முறைகளுக்கும் வியக்கத்தக்கவாறு ஒப்புமை காணப்படுகிறது"[62] என்ற கருத்து கிரேக்க மெய்ப்பொருள் இயலுக்கு இணையானது இந்திய மெய்ப்பொருள் வரலாறு என்பதை உணர்த்துகிறது.

"உலகு தழுவிய தத்துவ இயல் வரிசையை ஆராய்ந்தால் அது தேசியமாக இருப்பதை விட சர்வதேசியமாக இருப்பதைக் காணலாம். ஒரு மதம் இதர நாடுகளில் உள்ள மதங்களின் கருத்துகளைத் தாராள மனத்துடன் ஏற்றுக் கொண்டதைப் போல தத்துவ இயலும், பிற தத்துவக் கருத்துகளை ஏற்றுக் கொள்ளும் தாராள மனப்பான்மை காட்டியிருக்கிறது"[63] என்ற செய்தியும் உலகு தழுவிய மெய்ப்பொருள் தேடலின் ஒன்று பட்ட ஒற்றை இழையைக் காட்டுவதாக உள்ளது.

. "தத்துவ இயலில் கிரேக்கர்கள் கி.மு 600 - 300. வரை முன்னேறிக் கொண்டிருந்தனர். ஆனால் இந்துக்கள் கி.மு. 400 ஆண்டுக்கெல்லாம் களைத்து

---

62 சர்வபள்ளி இராதா கிருஷ்ணன், பதிப்பாசிரியர், கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருள் இயல் வரலாறு, தோற்றுவாய்,ப.

63 ராகுல் சாங்கிருத்தியாயன், இந்தியத் தத்துவ இயல், முன்னுரை, ப. 8

உட்கார்ந்து விட்டனர். ஐரோப்பாவில் கி.மு.500 –லேயே இருள் சூழ்ந்து விட்டது. பின்னர் கி.பி. 600 இல் பத்தொன்பது நூற்றாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் புதிய ஒளி (மறுமலர்ச்சி) ஏற்பட்டது”[64] என்ற கருத்தின்வழியாக உலக அளவில் மெய்ப்பொருள் தேடலுக்கான முயற்சிகள் தொடங்கப்பெற்ற நிலையை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

“மெய்ப்பொருள் இயல் வரலாறுகளை ஆராய்ந்தால், மெய்ப்பொருளியல் கருத்துகள், கிரீஸ் நாட்டில் தோன்றுவதற்கு முன்பே, இந்திய நாட்டில் தோன்றின என்ற முடிவை எவரும் எதிர்க்க முடியாத முறையில் பெறுகிறோம். கிரீஸ் நாட்டில் மெய்ப்பொருளியல் தோற்றங்களை கி.மு. ஆறாம் நூற்றாண்டு குறிக்கின்றது. ஆனால இந்தியாவிலே அப்போது மெய்ப்பொருளியல் மிகவும் விரிவடைந்திருந்த காலமாக அது இருந்தது. ஆதலின் மெய்ப்பொருள் இயலின் பொது வரலாற்றை இந்திய நாட்டில் இருந்துத் தொடங்கவேண்டும். கிரீஸ் நாட்டில் இருந்து அன்று”[65]

---

[64] ராகுல் சாங்கிருத்தியாயன், இந்தியத் தத்துவ இயல். முன்னுரை பக். 7

[65] (சர்வபள்ளி இராதா கிருஷ்ணன், பதிப்பாசிரியர், கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருள் இயல் வரலாறு, தோற்றுவாய்,ப.

என்ற கருத்து இந்திய மெய்ப்பொருளியல் சிந்தனைத் தோற்றத்தின் பழமையை எடுத்துரைப்பதாகும்.

மேற்குறிப்பிட்ட கருத்துகளின் வாயிலாக உலக அளவில் நிகழ்ந்த மெய்ப்பொருள் தேடல்களில் இந்திய தத்துவ முன்னோடிகளும் பங்கு வகிக்கின்றனர் என்பதும், உலகிற்கு அனைத்து நாடுகளுக்கும் முன்னதாக மெய்ப்பொருள் பற்றிய தேடலில் இந்தியா முதலிடம் வகிக்கிறது என்பதும் தெரியவருகிறது.

இந்திய மெய்ப்பொருள்சார் தத்துவங்கள் வேத சார்பின. வேத மறுப்பின என்ற இரு வேறு பாதைகள் உடையனவாகும். ஆனால் இவை இரண்டும் மூல முதலைத் தேடிச் சென்ற பயணங்கள் என்பதில் ஐயமில்லை. இந்திய மெய்ப்பொருள் தேடலைச் மதச் சார்புடையதாக மட்டும் கொண்டுவிடாமல் தத்துவச் சார்புடையதாகக் கொண்டு ஆராய்வதே பொருத்தமானது. ஏனெனில் மதம் மூல முதலாக கடவுளைக் காட்டுகிறது. தத்துவம் மூல முதலாக கடவுள் அல்லாத ஒன்றை முன்வைக்கிறது. மணிமேகலை காலத்தில் கடவுளை நம்பும் மதங்களும் இருந்தன. கடவுள் அல்லாத ஒன்றை முதலாக் காட்டும் தத்துவ நிலைகளும் இருந்தன. எனவே

மணிமேகலை கால சமயங்கள் என்ற நிலையில் மெய்ப்பொருளைத் தேடிப் பயணிப்பது என்பது இருவழிகளைக் கொண்டது என்றாலும் அவற்றின் தேடல் திசை ஒன்று என்பதை உணர்ந்து கொள்ளவேண்டியுள்ளது.

இவ்வியல் மணிமேகலை காலத்திற்கு முன்னதான மெய்ப்பொருள் தேடல் முயற்சிகளைத் தொகுத்து மொழிவதாக அமைக்கப்பெற்றுள்ளது.

**<u>தொடக்க காலத்தில் மெய்ப்பொருள் தேடலில் அமைந்திருந்த மூவகை நிலைகள்</u>**

இந்திய மெய்ப்பொருள் தேடலின் தொடக்க காலத்தில் மூவகை நிலைகள் காணப்பெறுகின்றன. அவை

1. ஆரியர் வருகைக்கு முற்பட்ட சிந்து வெளி மக்களின் சமய நெறி,
2. வேதநெறி,
3. வேதங்களைப் புறக்கணித்த நெறி

என்பனவாகும்.[66]. இம்மூன்று முயற்சிகள் பற்றிய செய்திகளின் விளக்கங்கள் பின்வருமாறு.

**சிந்துவெளி மக்களின் சமயநெறி**

சிந்துவெளி மக்களின் சமய நெறி என்பது ஆரியர் வருகைக்கு முன்னதாக இந்தியப் பகுதிகளில் இருந்த சமய நெறிமுறை ஆகும். ஆரியர் வருகைக்கு முன்பாக இந்தியாவில் மெய்ப்பொருள் தேடல் நிகழ்ந்துள்ளது என்பதற்குச் சிந்துசமவெளி நாகரீகம் ஓர் அடையாளம். அதுவே முழுமையான அடையாளம் இல்லை என்றாலும் உறுதிப்படுத்தப்பட்ட அடையாளமாகின்றது.

சிந்து சமவெளி நாகரீக மெய்ப்பொருள் தேடல் என்பது காடு சார்ந்த தேடல் ஆகும். காடுகளில் ஆசிரமங்கள் அமைத்து அமைதியான நிலையில் மெய்ப்பொருள்

[66] சோ. ந. கந்தசாமி, அசீவகம், தமிழும் தத்துவமும், ப. 127

தேடல்களைச் சிந்துசமவெளியினர் நிகழ்த்தினர். ஆரியர்தம் கடவுளர்கள் நகரத்தில் இருந்தவர்கள். காட்டில் உறையாதவர்கள். தேர்களில் பயணித்தவர்கள். இந்த அடிப்படை வேறுபாடு தொடங்கி பல வேறுபாடுகள் சிந்துசமவெளி சார் மெய்ப்பொருள் தேடலின் வழியாகக் காணக்கிடைக்கின்றன.

சிறப்பான நாள்களில், சிறப்பான இடங்களில் வேள்விகளை முன்வைத்துச் செய்யப்படும் வழிபாடு ஆரிய வழிபாடு. ஆனால் கோயில் என்ற நிலையான இடத்தில் கடவுளை வழிபடும் முறைமை சிந்து சமவெளி மக்களிடத்தில் இருந்துள்ளது. திண்ணிய உருவம், பலரும் ஒன்று சேர்தல், தொடர்ந்து வழிபடல், கடவுளைப் பற்றியும் அண்டப் பகுதிகளைப் பற்றியும் அவற்றின் தொடர்பு பற்றியும் ஆராய்தல் ஆகிய பண்புகள் சிந்து சமவெளி நாகரீகத்தில் காணப்படுவதாக அறிஞர்கள் உரைக்கின்றனர்.[67]

---

[67] ஸி. குன்ஹன் ராஜா, இந்தியக் கருத்துக்களுள் காணப்படும் வேதத்திற்கு முற்பட்ட மூலக் கருத்துக்கள், சர்வபள்ளி இராதா கிருஷ்ணன், பதிப்பாசிரியர், கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருள் இயல் வரலாறு, ப.

மேலும் சிந்து நதி மக்கள் லிங்க வழிபாடு, தாய்த் தெய்வ வழிபாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தியிருந்தனர். இதுபற்றிய குறிப்புகள் வேதங்களில் இல்லை என்றே கூறுமளவிற்குக் குறைவாக உள்ளன. பறவைகள், விலங்குகள் ஆகியவற்றைப் போற்றி வளர்க்கும் செயல்பாடுகள் சிந்து வெளி நாகரீகத்தில் இருந்துள்ளன. அவற்றைப் பலியிடும் வழக்கம் வேத வழக்கமாகின்றது.

இன்னுமொரு குறிக்கத்தக்க வேறுபாடு இறந்தவர்கள் புதைத்தல், புதைத்தாழியில் வைத்தல் என்ற மரபாகும். வேதநெறி இறந்தவர்களை எரித்துவிடக் கோரும் நிலையில் இது மிக முக்கியமான வேறுபாடாக அமைகின்றது. இவ்வகையில் ஆரியர்க்கு முன்னதாக ஒரு மெய்ப்பொருள் தேடல் சிந்து வெளி நாகரீகத்தில் இருந்துள்ளது என்பது உறுதியாகின்றது.

சிந்து வெளி நாகரீகத்தின் மெய்ப்பொருள் நிலையைப் பின்வரும் நிலையில் தொகுக்கலாம்.

1. மக்கள் வாழ்வில் காடுகள் தந்த ஊக்கம்,

2. திண்ணிய வடிவில் தெய்வச் சிந்தனைகளோடு கூடிய கோயில்

வழிபாடு

2. விலங்குகள், பறவைகள், மரங்கள் முதலியவை உலக அமைப்பில் பெற்ற உயர்வு,

4. தெய்வத்தின் பெண்மைத் தன்மையின் உயர்வு

5. கடவுளது படைக்கும் தன்மை

6. தெய்வங்கள் நாட்டின் வீரர்களாகத் தோன்றும் முறை

ஆகிய முக்கியமான ஆறு கூறுகள் கொண்ட சமய நிலை சிந்துவெளி நாகரீகத்தில் காணப்பெற்றுள்ளது. இவை வேதத் தொடர்பற்ற திராவிட மூலக் கருத்துகள் என்று அறிஞர்கள் காட்டுகின்றனர். [68]

---

[68] ஸி. குன்ஹன் ராஜா, இந்தியக் கருத்துக்களுள் காணப்படும் வேதத்திற்கு முற்பட்ட மூலக் கருத்துக்கள், சர்வபள்ளி இராதா கிருஷ்ணன், பதிப்பாசிரியர், கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருள் இயல் வரலாறு, ப.

இதே கருத்தை ராகுல் சாங்கிருத்தியாயனும் முன்வைக்கிறார். “சிந்துப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மக்கள் மெஸபடோமியா, எகிப்து, மக்களைப் போலவே தனித்தனிக் கடவுள்களை வழிபட்டனர். கடவுள் விக்கிரங்களும் அடையாளங்களும் அங்குத் தோன்றின. ஆனால் ஆரியா வர்த்த ஆரியர்களுக்கு இவையெல்லாம் பிடிக்கவில்லை. குறிப்பாக அவர்கள் சிந்து பள்ளத்தாக்கு மக்களின் லிங்க வழிபாட்டை வெறுத்தனர்”[69] என்ற கருத்து வேதச் சார்பற்ற சிந்துவெளி நாகரீத்தின் தனித்தன்மையைக் காட்டுவதாக உள்ளது.

மேற்குறித்ததன் வழி ஆரியர் வருகையால் எழுந்த வேதங்களுக்கு முன்னதாக இந்திய சமுதாயத்தில் மெய்ப்பொருள் பற்றிய அறிவு,தெளிவு, கொள்கை, கோட்பாடுகள் இருந்துள்ளன என்பது தெளிவாகின்றது.

[69] ராகுல் சாங்கிருத்தியாயன், இந்துத் தத்துவ இயல்,ப.9

**<u>வேத நெறி</u>**

வேதமரபு மணிமேகலை காலத்திலும் அதற்கும் முன்னும், அதற்குப் பின்னும் இந்திய மெய்ப்பொருளியல் வரலாற்றில் நீங்கா இடம் பெற்று வளர்ந்து வருகிறது. எனவே அதனை மணிமேகலை காலச் சமயங்களின் முற்கால நிலை என்ற பகுப்பில் அடங்கி இங்கு அந்நெறி பற்றிய கருத்துகள் அறிவிக்கப்பெறுகின்றன.

வேத நெறி காலத்தை கி.மு.1500 முதல் என்று வரையறுக்கின்றனர் வரலாற்று ஆய்வாளர்கள்.[70] இதற்கு முன்னதான காலம் சிந்துசமவெளிக்காலம் என்பதையும் இதன் கால எல்லையை வைத்து உணர்ந்துகொள்ள முடிகின்றது.

வேதங்கள் நான்காகும். இவற்றில் இருக்கு வேதத்தைப் பல தலைமுறைகளைச் சார்ந்த முனிவர்கள் படைத்ததாக கருதப்படுகிறது. அங்கிரா, பிரகஸ்பதி, பரத்வாஜர், நர், ஸம்க்ருதி, கவுரவீதி ஆகிய தலைமுறையினர் இருக்கு வேதப் படைப்பாளர்கள் ஆவர். இவர்கள் கி.மு. முதல் கி.மு.1520 முதல் 1420 வரை

---

[70] வேதங்கள், தரபத சௌத்ரி, சர்வபள்ளி இராதா கிருஷ்ணன், பதிப்பாசிரியர், கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருள் இயல் வரலாறு, ப.

இருக்கு வேதப் படைப்பில் ஈடுபட்டதாக ராகுல் சங்கிருத்யாயன் குறிக்கிறார்.[71] இருக்குவேதமே அடிப்படை வேதம் என்றும், அது பின்னாளில் நான்காகக் கிளைக்கப்பட்டது என்றும் ஒரு கருத்து நிலவகிறது.

. சாமவேதத்தைப் பரப்பியர் ஜைமிநி முனிவர் ஆவார். வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது தர்மமே என்ற அடிப்படையில் இதனை ஜைமிநி முனிவர் பரப்பினார். யஜுர் வேதத்தைப் பரவச் செய்தவர் வைசம்பாயர் ஆவார். அதருவ வேதத்தைப் பரவச் செய்தவர் சுமந்து என்பவர் ஆவார்.

இந்நான்கு வேதங்களில் அடிப்படையாக சில மூலக்கருத்துகள் அமைக்கப்பெற்றுள்ளன. "மனித ஆற்றல் கடந்த வல்லமை, ஞானம், ஒளி. அழியாப்பேறு, நன்மை செய்யும் விருப்பம், பாவத்தைப் பொறுக்காத தன்மை ஆகியவை வேத தெய்வங்கட்கும், அத்தெய்வங்களைச் சேர்ந்தவற்றிற்கும் இயல்பாக அமைவன"[72] என்று வேதம் சார் கடவுள் கொள்கை வரையறுக்கப்பெறுகிறது.

---

[71] ராகுல் சாங்கிருத்தியாயன், இந்துத் தத்துவ இயல்,ப.6

[72] ராகுல் சாங்கிருத்தியாயன், இந்துத் தத்துவ இயல்,ப.9

“தெய்வங்களின் வல்லமையான தெய்வீகம் ஒன்றே” என்று ஒரு கடவுள் நெறியை வேதங்கள் வற்புறுத்துகின்றன. வேதங்கள் பொதுவான அறங்களையும் மொழிகின்றன. “ஒருவருக்கொருவர் அன்பாக இருத்தல், மதிப்பு கொள்ளுதல், இணங்குதல், பெற்றோரைப் பணிதல், சமூகமாகக் கூட்டு முயற்சிகள் மேற்கொள்ளல், வேட்ப மொழிதல், பயனுள பேசுதல், மணவுறவின் அன்பு, கடப்பாடு ஆகியவை குடும்ப உறுப்பினர்க்கான அறங்களாகக் கொள்ளப்பெறுகின்றன.

வேதங்களுடன் தொடர்புடைய சில பகுதிகளும் உண்டு. அவை பிரமாணம், ஆரண்யகம், உபநிடதம் ஆகியனவாகும். பிரமாணங்கள் என்பவை சடங்குகள், யக்ஞங்கள் பற்றி அறிவிப்பன. ஆரண்யகம் என்பது காட்டில் எழுதப்பெற்ற எழுத்துகள் என்று பொருள்படுவன. வேதத்தின் நிறை பகுதி உபநிடதங்கள் ஆகும். இரகசியமான பேச்சுவார்த்தை என்று அதற்குப்பொருள். வேத காலத்தில் எழுந்த இந்தப் பிரதிக் குழுமத்தைப் பின்வருமாறு வகைப்படுத்திக்கொள்ளலாம்.

| **சம்ஹிதை** | **பிரமாணம்** | **ஆரண்யகம்** | **உபநிடதம்** |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| **ரிக்வேதம்** | ஐதரேயம் கௌசிடாகி | ஐதரேயம்<br><br>கௌசிடாகி | ஐதரேயம்<br><br>கௌசிடாகி |
| **சாமவேதம்** | தண்டயமகாஅல்லது பங்கவிம்சா சத்விம்சா .ஜைமினியா | ஜைமினியா உபநிடதம்<br><br>பிராமணம் | சாண்டயோகா<br><br>கேனா |
| **வெள்ளை**<br><br>**யஜுர்வேதம்** | சதபதம் | | பிர்ஹதரண்யகா<br><br>ஈசா |
| **கருப்பு யஜுர்வேதம்** | தைத்ரீயம் | தைத்ரீயம் | தைத்ரீயம்<br><br>கதா<br><br>மைத்ரி<br><br>ஸ்வெதாஸ்வரம் |
| **அதர்வண வேதம்** | கோபதம் | | பரஸ்னா<br><br>முண்டகா<br><br>மண்டூக்கியா |

என்ற நிலையில் வேதம் சார் குழுமங்களை அட்டணைப்படுத்தமுடிகிறது.[73]

வேதத்தின் நிறைவுப் பகுதியான உபநிடதங்கள் பல தத்துவ விசாரங்களுக்கு வாய்ப்பளித்தது. இதன் காரணமாக வேதத்திற்குப் பின்பு வேதம் சார் கருத்துகளை நிலைநிறுத்தியன உபநிடதங்களே ஆகின்றன. இவற்றின் கால அளவைப் பின்வருமாறு பிரிக்கிறார் ராகுல் சங்கிருத்தியாயன்.[74]

**1. பழங்கால உபநிஷத்துக்கள்(கி.மு.700)**

(1) ஈசா (2) சாந்தோக்யம் (3)பிரகதாரண்யகம்

**2. இரண்டாம் காலகட்ட உபநிஷத்துகள் (கி.மு.600-500)**

1) ஐதரேயம் (2) தைத்ரீயம்.

---

[73] (தேவிபிரசாத் சட்டோபாத்யாயா, இந்தியத்தத்துவ இயல் ஓர் எளிய அறிமுகம்.ப. 75)

[74] ராகுல் சாங்கிருத்யாயன்,இந்துத் தத்துவ இயல்,ப.16

**3. மூன்றாம் காலகட்ட உபநிஷத்துகள் (கி.மு.500-400)**

(1) பிரஸ்னம் (2) கேணம் (3) கதா (4) முண்டகம் (5) மாண்டூக்யம்

**4. நான்காம் காலகட்ட உபநிஷத்துகள்(கி.மு.200-100)**

(1) கவுஷீதகி (2) மைத்ரீ (3) ஸ்வேதாஸ்வரம்.

என்ற நிலையில் நான்கு காலகட்டங்களாக உபநிடதங்கள் தோற்றம் பெற்ற காலம் வரையறுக்கப்பெறுகிறது. உபநிடதங்கள் புத்தர் காலத்திற்கு முந்தையன என்பதை வரலாற்று ஆய்வாளர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர். உபநிடதங்கள் பிரம்மம், ஆன்மா, மறுபிறப்பு, முக்தி ஆகிய கருத்துகளை முன்வைத்து விவாதித்தன. உபநிடதங்களின் எண்ணிக்கை மொத்தம் நூற்றியெட்டு என்று முத்திகா என்ற உபநிடதம் குறிக்கிறது.

இளமை, யாக்கை, செல்வம் ஆகியனவற்றின் நிலையற்ற தன்மையை உபநிடதங்கள் உணர்த்துகின்றன. ஆத்மாவைப் பற்றியும், பரம்பொருளைப்

பற்றியும் பல்வேறு விவாதங்களை உபநிடதங்கள் கொண்டுள்ளன. பற்பல கடவுளர் கொள்கையில் இருந்து ஒரு தெய்வக் கொள்கைக்கு உபநிடதம் வழி வகுக்கிறது. பிரம்மமே மெய்ப்பொருள் என்று உபநிடதத்தால் ஏற்கப்படுகிற்து.

இந்த உபநிடதக் கருத்துகளை விளக்க எழுந்தன பிரம்ம சூத்திரமும் பகவத் கீதையும் ஆகும். அவை பற்றிய விளக்கங்கள் பின்வருமாறு.

**<u>பிரம்ம சூத்திரம்</u>**

பிரம்ம சூத்திரம் என்பது உபநிடதங்களில் உள்ள முரண்பாடுகளை நீக்கி, ஒருமைப்பாட்டைக் கண்டறியச் செய்யும் வகையில் எழுதப்பெற்றுள்ளது. பாதராயணர் என்பவரே உபநிடதக் கருத்துகளை ஒழுங்குபடுத்தி நூற்பாவடிவில் பிரம்ம சூத்திரத்தை இயற்றினார் என்ற கருத்து உண்டு. பிரம்ம சூத்திரத்திற்கு வேதாந்த சூத்திரம், சாரீரிக மீமாம்சை என்று வேறு பெயர்களும் உண்டு. பிரம்மம்

என்ற பரம்பொருளை விளக்குவதால் இது பிரம்ம சூத்திரம் எனப்பட்டது. வேத முடிவுகளை விளக்குவதால் வேதாந்த சூத்திரம் எனப்படுகிறது. ஆன்மாவைப் பற்றியும் ஆராயும் இதன் திறன் கருதி இதனை சாரீரிக மீமாம்சை என்று அழைப்பர். பிரம்ம சூத்திரம் நான்கு அத்தியாயங்களை உடையது. அத்தியாயங்களில் நான்கு பாதங்கள் உள்ளன. ஐநூறுக்கும் மேற்பட்ட நூற்பாக்கள் இதனுள் உள்ளன. பிரம்ம சூத்திரம் அடிப்படையில் தனி மனித ஆன்ம ஈடேற்றத்தை முன்வைத்து எழுதப்பெற்றுள்ளது.

இப்பிரம்ம சூத்திரத்திற்குப் பலர் விரிவுரை செய்தனர். சங்கரர், இராமாநுஜர், மத்வர், நீலகண்டர் போன்றோர் அவர்களுள் குறிக்கத்தக்கவர்கள். பிரம்ம சூத்திரம் இந்திய மெய்யியல் வளர்ச்சியில் குறிக்கத்தக்க இடம் வகிக்கின்றது.

**<u>பகவத்கீதை</u>**

இராமாயணமும், மகாபாரதமும் இந்திய மெய்யியல் சார் இதிகாசங்கள் ஆகும். இவையும் இந்தியத் தத்துவ இயலில் வேதம் சார் கருத்துகளை மொழிவன என்றாலும் மகாபாரதத்தின் ஒரு பகுதியாக விளங்கும் பகவத்கீதை உபநிடத, வேதப் பொருள்களின் விழுமிய பொருள்களைத் தன்னுள் பொதிந்து வைத்துள்ளது. பகவத் கீதையில் வேதங்களில் நான்  சாமவேதமாக இருக்கிறேன் என்று கிருஷ்ணனர் உரைக்கிறார். கீதையின் ஒவ்வோர் அத்தியாய முடிவிலும் உபநிஷத்தும், பிரம்ம வித்தையும், யோக சாஸ்திரமும் ஸ்ரீ கிருஷ்ணார்ச்சுன பம்பாஷணையுமாகிய ஸ்ரீமத் பகவத் கீதையில்.... யோகம் முற்றிற்று என்று வருகிறது" என்பதனால் கீதை வேத, உபநிடச் சார்பினது என்பதை உறுதிப்படுத்த முடிகின்றது.

பகவத் கீதை எழுந்த காலத்தைப் பின்வருமாறு ஞானன் விளக்குகிறார். "சிவனையும் வேறு சிறு தெய்வங்களையும் வணங்கிய ஆரிய வருகைக்கு முற்பட்ட தொல் இந்தியா காலம்- இயற்கைக் கூறுகளாகத் தேவர்களைப் படைத்து, வேள்விகள் இயற்றி, வளத்தை வேண்டி நூற்றாண்டு கால மண்ணுலக வாழ்வில் ஆசையுற்று வணங்கிய வேதகாலம், வேதகாலத்தில் முளைத்த வேள்விகளை எதிர்த்து அகிம்சையை ஆதரித்த சமணம், புத்தம், ஆசீவகம் மற்றும் உலகாயதம்

ஆகிய மதங்களின் கலகக்குரல் காலம், இந்தத் தத்துவங்களை உள்வாங்கி, வேதத்தில் வற்புறுத்திய சடங்குகளை நிராகரித்து இறைக் கொள்கையை உள்முகமாகத் திருப்பி பிரம்மம் - ஆன்மா என்ற கருத்துருவாக்கத்திற்கு உட்பட்ட உபநிடதகாலம் ஆகிய நான்கு வித் தத்துவ காலங்களுக்குப் பின் ஏற்பட்ட சூழலை முன்னிட்டு மன்னராட்சி காலம் ஓங்கிய பின்னணியில் முழுமுதற் கடவுள் தேவைப்பட்ட காலத்தில் எழுந்த நூல் பகவத்கீதை."[75] என்ற கருத்தானது இந்திய மெய்ம்மையியல் வரலாற்றின் தொடர்ச்சியை எடுத்துரைப்பதாக உள்ளது. இந்திய மெய்யியல் வளர்ச்சியில் மணிமேகலை காப்பியம் எழுவதற்கு முன்பே வேதமரபு தழைத்து ஓங்கியது என்பதை மேற்குறித்த சான்றுகளின் வழி அறியமுடிகின்றது.

கீதை ஜீவன்கள், பிரகிருதி, காலம், கருமம் ஆகிய ஐந்து பொருள்களை வரையறுக்கின்றது. நிஷ்காமியமாக அனைத்துச் செயலையும் செய்ய வேண்டும். செயற்பலனில் பற்று வைக்கக் கூடாது. முடிவை இறைவனிடம் விட்டுவிட

---

[75] ஞானன்,பகவத்கீதை, தத்துவதரிசனங்கள் .ப.83

வேண்டும். எல்லாம் ஈசனே என்று சரணாகதி அடையவேண்டும்[76] என்று கீதையின் தத்துவ விளக்கம் அமைகிறது.

இவ்வளவில் வேதகாலத்தின் இந்திய மெய்யியல் நிலை விரிந்த கால எல்லையையும், பரவலான வேதப் பிரதிகளையும் கொண்டிருந்தது என்பதை அறியமுடிகின்றது. வேதங்கள் தமக்கு எதிரான அல்லது முரண்பாடான கருத்துகளையும் தனக்குள் ஏற்றுக் கொள்ளும் நிலையில், மற்ற மதத்தின் கோட்பாடுகளைத் தன் வயப்படுத்தும் நிலையில் செயல்பட்டுள்ளன என்பதற்கு அதன் உபநிடத, பிரம்ம சூத்திர, பகவத் கீதை ஆகியவை உள்ளிட்ட வளர்ச்சியே சான்றாகின்றது.

**<u>தமிழகச் சூழலில் வேதநெறி</u>**

தொல்காப்பியத்தில் வேதநெறி குறித்தும் அந்தணர் பற்றியும் பல குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. தொல்காப்பிய சிறப்புப் பாயிரத்தில்

---

[76] ஞானன்,பகவத்கீதை, தத்துவதரிசனங்கள் .ப.83

“ வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்

தமிழ்கூறு நல்லுலகத்து

வழக்கும் சொல்லும் ஆயிரு முதலின்

எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்

செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு

முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்

புலம் தொகுத் தோனே போக்கறு பனுவல்

நிலந்தரு திருவின் பாண்டியன் அவையத்து

அறங்கரை நாவின் நான்மறை முற்றிய

அதங்கோட்டு ஆசாற்கு”[77]

---

[77] தொல்காப்பியர், தொல்காப்பிய சிறப்புப்பாயிரம்,அடி.

என்ற பகுதியில் உள்ள ‘நான்மறை முற்றிய’ என்ற தொடர் வேதங்களைக் குறிப்பதாகும். தொல்காப்பியத்தில் அந்தணர் வேதம் ஓதும் முறை பற்றி ஒரு நூற்பாவில் பதிவு செய்யப்பெற்றுள்ளது.

“ எல்லா வெழுத்தும் வெளிப்படக் கிளந்து

சொல்லிய பள்ளி யெழுதரு வளியின்

பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்

தகத்தெழு வளியிசை யரில்தப நாடி

அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே” [78]

என்ற பகுதியில் அந்தணர் மறைத்தே என்ற குறிப்பு இங்குக் கவனிக்கத்தக்கது. இவை தவிர வாகைத் திணையில் அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும் என

---

[78] தொல்காப்பியம், தொல்காப்பியம், நூற்பா எண் 102

வருகின்றது. உயர்ந்தோர் என்ற நிலையில் தொல்காப்பிய காலத்தில் அந்தணர் வைத்து எண்ணப்பெற்றுள்ளனர். இவ்வகையில் வேதச்சார்பு தொல்காப்பியத்தில் காணப்படுவதை அறியமுடிகிறது.

சங்க இலக்கியத்தில் நான்மறைகள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. அவை பின்வருமாறு. "பதினாயிரங்கை முதுமொழி முதல்வ" [79] என்று பரிபாடலிலும், "நான்மறை முதுநூல் "[80] என்று அகநானூற்றிலும், "சிறந்த வேதம் விளங்கப்பாடி" என்று மதுரைக்காஞ்சியிலும்,[81] "நாஅல் வேத நெறிதிரியினும்"[82], "கெடுவில் கேள்வியுன் நடுவாதலும்" [83], "வாய் மொழி உரைதர" [84] என்ற பாடலடிகளில் நான்மறைகள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. இவற்றின்

---

[79] கடுவெண் இளவெயினனார், பரிபாடல், பாடல். 3, அடி. 42

[80] பரணர், அகநானூறு, பாடல் 181 அடி.16

[81] மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சி, அடி.468

[82] மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சி, அடி.429

[83] கீரந்தையார், பரிபாடல், பாடல் எண்.2, அடி 25

[84] கடுவெண் இளவெயினனார், பாடல்எண்.3. அடி11

வாயிலாக சங்க காலத்தில் வேத வாக்கியம் நடைமுறையில் இருந்தது என்பதை அறியமுடிகின்றது.

சங்க இலக்கியங்களில் அந்தணர்கள், அவர்கள் இயற்றிய வேள்விகள் பற்றிப் பல குறிப்புகள் காணப்பெறுகின்றன. "எண்நாணப் பல வேட்டும்[85] என்று அந்தணர்கள் வேள்வி இயற்றிய முறையைப் புறநானூறு காட்டுகிறது. அந்தணர்க்கு உரிய ஒழுக்கம் வேள்வி செய்தல் என்பதைப் பின்வரும் பதிற்றுப்பத்துப் பகுதி விளங்குகிறது.

"ஓதல் வேட்டல் அவைபிறர்ச் செய்தல்

ஈதல் ஏற்றலென்று ஆறுபுசித் தொழுகும்

அறம்புரி அந்தணர் வழிமொழிந்து ஒழுகி"[86]

---

[85] ஆவூர் மூலங்கிழார், புறநானூறு, பாடல் 166 அடி.23

[86] பாலைக்கௌதமனார், பதிற்றுப்பத்து, மூன்றாம் பத்து,பாடல் எண் 4அடிகள் :6-8

என்னும் இப்பாடலடிகள் சங்ககாலத்தில் அந்தணர் வேள்வி செய்தற்கு உரியவர்களாக விளங்கினர் என்பதைக் காட்டுகின்றன.. புறநானூற்றில் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி போன்றோர் பற்றிய குறிப்புகள் உள்ளன. இவ்வரசர்ளின் பெயர்களுடன் வேள்வி, யாகசாலை முதலிய அமைந்திருப்பதன் வாயிலாக இவர்கள் வேள்விகள் இயற்றினர் என்பது தெரியவருகிறது. இதன் காரணமாக அரசர்களின் தொடர்பு கிடைக்கும் அளவிற்கு அந்தணர்கள் வேள்வித் திறம் புரிந்துள்ளனர் என்பது தெரியவருகிறது.

பாலைக் கௌதமனார் என்ற புலவர் தானும் தன் மனைவியும் சுவர்க்கம் பெற வேள்வி நடத்த வேண்டும் என்ற வேண்டுகோளைப் பல்யானைச் செல்கெழுகுட்டுவன் என்ற மன்னனிடத்தில் வைக்கின்றனர். அவனும் பத்து யாகங்களைச் செய்தான் என்பது வரலாறு. இதனைச் சிலப்பதிகாரமும், பதிற்றுப்பத்தும் உரைக்கின்றன.

‘‘சொற்பெயர் நாட்டங் கேள்வி நெஞ்சமென்

றந்துடன் போற்றி யவை துணையாக

எவ்வஞ் சூழாது விளங்கிய கொள்கைக்

காலை யன்ன சீர்சால் வாய்மொழி

உருகெழு மரபிற் கடவுட் பேணியர்

கொண்ட தீயின் சுடரெழு தோறும்

விரும்புமெய் பரந்த பெரும்பெய ராவுதி''[87]

என்ற பாடலில் வேள்வி செய்யும் முறைகள் சுட்டப்பெற்றுள்ளன. பாலைக்கௌதமானர் தன் விருப்பத்தை நிறைவேற்றிய சேரனுக்காகப் பாடிய இப்பாடலில் வேள்விச் செயல் குறிக்கப்பெற்றதன் வாயிலாக அக்கால வேள்வி நிலையைப் பற்றி அறிந்துகொள்ள முடிகின்றது.

"அறம் கரைந்து வயங்கிய நாவின் பிறங்கி

உரைசால் வேள்வி முடித்த வேள்வி

---

[87] பாலைக்கௌதமனார், பதிற்றுப்பத்து, மூன்றாம்பத்து, அடிகள் 1-8

அந்தணர் அருங்கலம் ஏற்ப நீர்பட்டு

இருஞ்சே றாடிய மணல்மலி முற்றம்”[88]

என்ற கபிலர் பாடலிலும் வேள்வி பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மேலும் “கேள்வி கேட்டுப் படிவம் ஒடியாது வேள்வி வேட்டனை”[89] என்ற அடியிலும் வேள்வி வேட்டல் பற்றிய செய்தி இடம்பெறச் செய்யப்பெற்றுள்ளது. “மன்மருங்கு அறுத்த மழுவாள் நெடியோன் முன்முயன்று அரிதினில் முடித்த வேள்வி”[90] என்ற அகநானூற்றுக் குறிப்பிலும் வேள்வி பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது.

“அறுதொழில் அந்தணர் அறம்புரிந்து எடுத்த

தீயொடு விளங்கும் நாடன்” [91]

---

[88] கபிலர், பதிற்றுப்பத்து, ஏழாம்பத்து, பாடல்எண். 4, அடிகள் 3-6

[89] கபிலர், பதிற்றுப்பத்து, ஏழாம்பத்து, பாடல்எண். 4, அடிகள் 1-2

[90] கயமனார், அகநானூறு, பாடல்எண். 220, அடி.5

[91] எருக்கட்டூர் தாயங்கண்ணனார், புறநானூறு, பாடல்எண். 397, அடி21

என்று புறநானூற்றில் அந்தணர் தீ பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

“பல்சாலை முதுகுடுமியின்

நல்வேள்வித் துறை போகிய

தொல்லாணை நல்லாசிரியர்” [92]

என்ற மதுரைக் காஞ்சியடிகளிலும் வேள்வித்துறை பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது.

வேள்வி இயற்றிய முறையைப் புறநானூற்றின் இருபாடல்கள் காட்டுகின்றன.

நல் பனுவல், நால் வேதத்து,

அருஞ் சீர்த்திப் பெருங் கண்ணுறை

---

[92] மாங்குடி மருதனார், மதுரைக்கஞ்சி, அடிகள் 759-761

நெய்ம் மலி ஆவுதி பொங்க, பல் மாண்

வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி,

யூபம் நட்ட வியன் களம் பலகொல்?

யா பலகொல்லோ? பெரும! " [93]

என்ற பாடலில் வேள்வியாற்றிய முறை அறிவிக்கப்படுகிறது. வேள்வி முறை பற்றிப் பேசும் மற்றுமொரு பாடல் பின்வருமாறு.

வினைக்கு வேண்டி நீ பூண்ட

புலப் புல்வாய்க் கலைப் பச்சை

சுவல் பூண் ஞாண்மிசைப் பொலிய

மறம் கடிந்த அருங் கற்பின்,

---

[93]நெட்டிமையார், புறநானூறு, பாடல் 15 அடிகள் 17-22

அறம் புகழ்ந்த வலை சூடி,

சிறு நுதல், பேர் அகல் அல்குல்,

சில சொல்லின், பல கூந்தல், நின்

நிலைக்கு ஒத்த நின் துணைத் துணைவியர்

தமக்கு அமைந்த தொழில் கேட்ப்

காடு என்றா நாடு என்று ஆங்கு

ஈர் ஏழின் இடம் முட்டாது,

நீர் நாண நெய் வழங்கியும்,

எண் நாணப் பல வேட்டும்,

மண் நாணப் புகழ் பரப்பியும்,

அருங் கடிப் பெருங் காலை,

விருந்துற்ற நின் திருந்து ஏந்து நிலை,

என்றும், காண்கதில் அம்ம, யாமே''[94]

என்ற பாடலிலும் வேள்வியாற்றும் முறை பற்றி எடுத்துரைக்கப் பெறுகிறது. இவ்வாறு வேதங்கள், வேள்விகள் பற்றிய பல்வேறு குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணப்பெறுகின்றன. மேலும் வேதங்கள் சுட்டும் சுவர்க்கம், நரகம் போன்றவற்றைப் பற்றிய குறிப்புகளும் சங்க இலக்கியங்களில் காணப்பெறுகின்றன. இவற்றின் வழியாகத் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் ஆகியவற்றுக்கு முந்தைய காலம் வேதகாலம் என்பது மெய்ப்பிக்கப்படுகிறது.

தொடர்ந்து எழுந்த அற இலக்கியங்களில் வேதச் சாயல் இடம்பெற்றிருந்தது. "அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின்"[95] என்ற வேள்வி மரபு திருக்குறளில் காட்டப்பெறுகிறது, இல்லறம் வேள்வி செய்தலுக்கு ஈடானது என்று வள்ளுவர் மொழிகிறார்.

---

[94] ஆவூர் மூலங்கிழார், புறநானூறு பாடல் 166:அடிகள் 10-26)

[95] திருவள்ளுவர், திருக்குறள், பாடல், 259)

“இனைத்துணைத்து என்பது ஒன்று இல்லை விருந்தின்

துணைத் துணை வேள்விப் பயன்” [96]

“பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி

வேள்வி தலைப்படா தார் “ [97]

ஆகிய குறள்களில் வேள்வி செய்தல் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இருப்பினும் வேள்வியை வள்ளுவர் ஏற்கவில்லை என்பதும் இங்கு எண்ணப்படவேண்டியது. வேள்விக்கு மாற்றாக அவர் விருந்தோம்பலைக் காட்டுகிறார் என்பது தமிழ்ச்சமுதாய மரபிற்குக் காட்டும் வேறுபாடாகும். வேள்வியில் உயிர்க்கொலை செய்யப்படுதல் வழக்கமாக இருந்துள்ளது. இதனைத் தமிழ்ச்சமுதாயம் ஏற்கக் கூடாது என்ற கருத்து அக்காலத்தில் இருந்துள்ளது.

---

[96] திருவள்ளுவர், திருக்குறள்,பாடல். 87

[97] திருவள்ளுவர், திருக்குறள், பாடல். 88

“ஊனுண் டுயிர்கட்கு அருளுடையேம் என்பானும்

தானுடன் பாடின்றி வினையாக்கும் என்பானும்

தாமுறு வேள்யிற் கொல்வானும் இம்மூவர்

தாமறிவர் தாங்கண்ட வாறு”[98]

என்ற திரிகடுகப் பாடலில் வேள்வி பற்றிய குறிப்பு இருந்தாலும் அதில் உயிர்ப்பலி கூடாது என்று உரைக்கப்பெற்றுள்ளது. இதன் காரணமாக வேள்வி நெறியும் அதற்கு மாற்றான நெறியும் சங்கம் மருவிய காலத்தில் இருந்தன என்பது அறியத்தக்கதாக உள்ளது.

ஏலாதியில் வேதத்தைக் கற்றவர்கள்அதன் படி ஒழுக வேண்டும். ஒழுகினால் விண்ணுலக வாழ்வைப் பெறலாம் என்ற கருத்து இடம்பெற்றுள்ளது.

“மறைபுரிந்து வாழுமேல் மண்ணொழித்து விண்ணோர்க்கு

---

[98] நல்லாதனார், திரிகடுகம், பாடல் 35

இறைபுரிந்து வாழ்தல் இயல்பு"[99]

ஏலாதியில் மற்றுமொரு பாடல், மறையின் வழிவந்தார்கண்ணே வனப்பு என்ற குறிப்பினைப் பெற்றுள்ளது.

"சென்றபுகழ் செல்வ மீக்கூற்றஞ் சேவகம்

நின்ற நிலைகல்வி வள்ளன்மை- என்றும்

வழிவந்தார் பூங்கோதாய் ஆறும் மறையின்

வழிவந்தார் கண்ணே வனப்பு" [100]

இப்பாடல்கள் தவிர நான்மணிக்கடிகையிலும் ""தொன்மரபின் வேதம் கூறுவன பாட்டுள" [101] என்று வேதத்தின் தொன்மரபு சுட்டப்பெறுகிறது. இவ்வகையில்

---

[99] கணிமேதாவியார், ஏலாதி, பாடல்.1

[100] கணிமேதாவியார், ஏலாதி,பாடல்.2.

[101] விளம்பிநாகனார், நான்மணிக்கடிகை, பாடல் 54

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் வேதமரபு சுட்டப்பெற்றுள்ளது என்று கொள்ளமுடிகின்றது.

அடுத்து சிலப்பதிகாரத்தில் அந்தணர், வேள்வி, வேதம் ஆகியன பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. “நான்மறை அந்தணர் நவின்ற ஓதையும் ’’[102] , ஒத்து உடை அந்தணர் உரை_நூல் கிடக்கையின்[103], ‘‘அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும் ’’[104], ‘‘ஆசான் பெருங்கணி அறக்களத்து அந்தணர் காவிதி மந்திர கணக்கர் தம்மொடு ’’[105] , அறு தொழில் அந்தணர் பெறு முறை வகுக்க ’’[106],

---

[102] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், புறஞ்சேரி இறுத்த காதை, அடி.141

[103] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், அடைக்கலக்காதை, அடி.70

[104] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், கொலைக்களக்காதை, அடி.71

[105] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், அழல்படுகாதை, அடிகள் 7-8

[106] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், கட்டுரைக் காதை, அடி 70

அரு மறை அந்தணர் ஆங்கு உளர் வாழ்வோர் ''[107],'' அறுகளத்து அந்தணர் ஆசான் பெருங்கணி''[108] என்ற பாடலடிகளில் அந்தணர் பற்றிய குறிப்புகள் சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ளன.

வேள்விகள் பற்றி பதினோரு இடங்களில் சிலப்பதிகாரத்தில் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. ''வேதமுதல்வன் வேள்வி கருவியோடு''[109] , ''அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும் ''[110], ''மறக்கள வேள்வி செய்வோய் ஆயினை''[111] , ''மது கொள் வேள்வி வேட்டோன் ஆயினும்''[112] , ''நான்மறை மருங்கின் வேள்வி

---

[107] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், வஞ்சிக் காண்டம், கால்கோள் காதை,அடி.102

[108] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டம், நடுகல்காதை, அடி 222

[109] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், அழல்படுகாதை, அடி350

[110] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டம், நடுகல் காதை, அடி 131

[111] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டம், நடுகல்காதை,அடி 132

[112] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டம், நடுகல்காதை,அடி 148

பார்ப்பான்''[113], ''பெரு நல் வேள்வி நீ செயல் வேண்டும்''[114] , ''வேள்வி கிழத்தி இவளொடும் கூடி''[115], ''கேள்வி முடித்த வேள்வி மாக்களை ''[116], ''வேள்வி சாந்தியின் விழா கொள ஏவி'' [117] , ''நன் பெரு வேள்வி முடித்ததன் பின் நாள் ''[118], ''வேள்வி சாலையின் வேந்தன் போந்த பின் '' [119] என்பன அவையாகும்.

வேதம் என்ற சொல் சிலப்பதிகாரத்தில் பயன்படுத்தப்பெற்றுள்ளது. "விண்ணவன் வேத முதல்வன் விளங்கு ஒளி''[120] , ''வேதமுதல்வன் பயந்தோன்

---

[113] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டம், நடுகல்காதை,அடி 176

[114] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டம், நடுகல்காதை, அடி.178

[115] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டம், நடுகல்காதை,அடி183

[116] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டம், நடுகல்காதை,அடி.192

[117] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டம், நடுகல்காதை, அடி.194

[118] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டம், நடுகல்காதை, அடி. 199

[119] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டம், வரந்தருகாதை, அடி170

[120] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், புகார்க்காண்டம், நாடுகாண்காதை, அடி180

என்பது''[121] -, ''வேதமுதல்வன் வேள்வி கருவியோடு" [122] என்பன அவற்றிற்கான சான்றுகளாகும்.

சிலப்பதிகாரத்தில் குறிக்கத்தக்க பாத்திரம் மாடல மறையோன் பாத்திரம் ஆகும். இவனால் சிலப்பதிகார மாந்தர் தம் வாழ்க்கையில் நடைபெற்ற பல நிகழ்வுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. இவன் சேரனை வேள்வி செய்ய அறிவுறுத்துகிறான்.

"மறையோன் மறைநா உழுது வான்பொருள்

இறையோன் செவிசெறு வாக வித்தலின்

வித்திய பெரும்பதம் விளைந்துபத மிகுத்துத்

துய்த்தல் வேட்கையிற் சூழ்கழல் வேந்தன்

---

[121] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், ஊர்காண்காதை, அடி.48

[122] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், அழல்படுகாதை, அடி.35

நான்மறை மரபின் நயம்தெரி நாவின்

கேள்வி முடித்த வேள்வி மாக்களை

மாடல மறையோன் சொல்லிய முறைமையின்

வேள்விச் சாந்தியின் விழாக்கொள ஏவி" [123]

என்ற அடிகளில் வேள்வி செய்ய வலியுறுத்தப்பெற்றுள்ளது. மதுரைக்காண்டத்தில் பராசரன் என்ற அந்தணன் பற்றிய வரலாறும் உரைக்கப்பெற்றுள்ளது. இவற்றால் சிலப்பதிகாரத்தில் வேதநெறி தழைத்தோங்கியது என்பதை உணர முடிகின்றது.

வேத நெறிகளை ஏற்ற நிலையில் இந்திய மெய்ப்பொருள் நிலையில் பல சமயங்கள் விளங்குகின்றன. சைவம், வைணவம், சாங்கியம், வேதாந்தம், வைசேடிகம், பிரம்மவாதம், அளவையியல் ஆகியன வேதச் சார்பினை ஏற்கும் சமயங்கள் ஆகும். வைதிக சமயங்களான இவற்றி;ன் நிலையை மணிமேகலை

---

[123] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், நடுகற்காதை, அடி 187-194

காப்பிய காலத்திற்கு முன்னதாக அமைந்த நிலையை பின்வரும் பகுதி காட்டுகின்றது.

**<u>சைவம்</u>**

தொன்மைக் காலச் சமயங்களுள் ஒன்று சைவ சமயம் ஆகும். இதன் தொடக்க நிலை சிந்து சமவெளி நாகரீகத்தில் தொடங்கி வேதங்களில் வளர்ச்சி பெற்றுள்ளது. தமிழ்ப் பரப்பில் சங்ககாலத்திலேயே இச்சமயத்தின் கூறுகள் படைக்கப்பெற்றிருந்தன.

**<u>சிந்து சமவெளி நாகரீகமும் – சைவ சமய அடையாளங்களும்</u>**

ஆங்கிலேயர்கள் இருப்புப்பாதை பதித்தல் பணியின்போது தற்போதைய பாகிஸ்தான் பகுதிகளை ஒட்டி அமைந்த சிந்துசமவெளிப் பகுதிகளில் புதையுண்ட இரு நகரங்களைக் கண்டுபிடித்தார்கள். அந்த நகரங்கள் தொன்மைக் காலம் நாகரீகச் சான்றுகளாகக் கொள்ளப்பெற்றன. சிந்துசமவெளி நாகரீகம் என்று அழைக்கப்பெற்று அதன் மீதான ஆய்வுகள், அகழ்வு ஆய்வுகள் தொடங்கப்பெற்றன.

சிந்து சமவெளி நாகரீகம் திராவிட நாகரீகம் என்று ஆய்வாளர்களால் உறுதிசெய்யப்பட்டுள்ளது. அதன் கலை, பண்பாடு, சமயம் போன்ற பற்றிய பல கருத்துகள் ஆய்வாளர்கள் வாயிலாக வெளியிடப்பெற்றது. அங்குக் கிடைத்த ஒரு முத்திரை மிக முக்கியமான சமயச் சான்றாக விளங்குகின்றது.

1930 ஆம் ஆண்டில் இப்பகுதியை ஆய்வு செய்த ஜான் மார்சல் என்ற அறிஞர் அங்குக் கிடைத்த ஒரு முத்திரையை யோகி வடிவ முத்திரை என்றும். யோகிகளுள் சிறந்தவரான சிவனின் உருவம் அது என்றும் இந்த முத்திரையைக் குறித்து அறிவித்தார். இரு கொம்புகளைத் தாங்கிய நிலையில் கால்களை மடித்து அமர்ந்த கோலத்தில் விலங்கினங்கள் சூழ இந்த யோகி அமர்ந்துள்ளார். காளைகள் சூழ்ந்திருப்பதன் காரணமாக இவ்வுருவை அவர் சிவபெருமானின் உருவம் என்றார்.

ஆனால், பின்னால் வந்த அறிஞர்கள் பலர் இது பெண் தெய்வம் என்றும், புத்த சமயத்தின் ஆதிவடிவம் என்றும், சமணத் தீர்த்தங்கரரின் முன் நிலை என்றும் பல்வேறு கருத்துகளை வெளியிட்டனர். ஆய்வு உலகில் இன்னமும் இது குறித்தான சர்ச்சைகள் நிலவி வருகின்றன.

இவற்றை ஒருபுறம் வைத்துக்கொண்டாலும் சிந்துசமவெளிப் பகுதிகளில் பல்வேறு சிவலிங்க வடிவங்கள் கிடைத்துள்ளன.

இந்த உருவச் சான்றுகளை வைத்துப் பார்க்கும்போது சிந்து சமவெளி நாகரீக காலத்திலேயே சிவலிங்க வழிபாடு இருந்துள்ளது என்பது தெரியவருகிறது. இதன் காலம் ஐயாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்கிறார்கள் ஆய்வாளர்கள். அதாவது இப்போது இருக்கும் இரண்டாயிரம் ஆண்டுகளைத் தள்ளிவிட்டுப் பார்த்தால் கி. மு. மூவாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது. சைவ சமயம் என்பது தெரியவருகிறது.

ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய சிந்துசமவெளியில் சைவ சமயப் பண்பாட்டு எச்சங்கள் இருந்துள்ளன என்றால் அதற்கு முன்பு சைவ சமயம் தோன்றியிருக்க வேண்டும் என்பது குறிக்கத்தக்கதாகும்.

**<u>வேதங்கள் சுட்டும் பழமை:</u>**

இந்தியாவின் மிகப் பழமை வாய்ந்த எழுத்தாவணங்கள் வேதங்கள் ஆகும். நால்வகை வேதங்களில் யஜுர் வேதத்தில் மையப்பகுதியில் அமைந்திருப்பது ருத்ரம்

என்பதாகும். இது சமகம் நமகம் என்று இருபிரிவுகளை உடையது. சமகம் என்ற பகுதியில் நமக்கு வேண்டும் பொருள்களின் பட்டியலும், நமகம் என்பதில் சிவபெருமானுக்கான பெயர்கள் பலவும் தரப்பெற்றுள்ளன. இவ்வேதப் பகுதி தவிர ரிக் வேதத்திலும் சிவபெருமான் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ருத்திரன் என்ற பெயரைச் சிவனாகக் கொள்ளலாம் என்றாலும் சிவனுக்கு உரியப் பல தன்மைகளுக்கு முரணாக சில பகுதிகளும் ருத்திரத்தில் காணப்படுகிறது. பசுபதி – விலங்குகளின் தலைவன் என்று யஜுர் வேதம் ருத்திரனைக் குறிப்பிடுகிறது. அம்பிகாவின் உடன் பிறந்தவன் ருத்திரன் என்றும் குறிப்புகள் காணப்படுகின்றன. இவற்றால் ருத்திரன் வேறு சிவன் வேறு என்று வேற்றுமை பாராட்டினாலும் பெரும்பாலும் ருத்திரன் என்ற பெயர் சிவனுக்கு உரியது என்பதே சரியாகும்.

யஜுர், ரிக் வேதங்களில் சிவன் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றிருப்பதால் சைவத்தின் அடிப்படைகளை வேதங்களே சொல்லியுள்ளன என்ற அடிப்படையில் சைவம் வேதகாலத்திற்கும் முந்தைய சமயம் என்பதும், அது ஆரியர் வருகைக்கு, ஆரிய எழுச்சிக்கு முன்பே இருந்த திராவிட கலாச்சாரம் என்பதும் இவற்றின் வழி தெளிவாகின்றது.

**<u>பண்டைத்தமிழ்ப் பனுவல்களின் வாயிலாகப் பெறப்படும் சைவ சமயத் தொன்மை</u>**

தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும் தமிழின் பழமையான பனுவல்கள் ஆகும். இவற்றில் பல இடங்களில் சிவபெருமான் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. தொல்காப்பியத்தில் கடவுள் என்ற சொல் காணப்படுகிறது.

''காமப்பகுதி கடவுளும் வரையார்'' [124]என்று தொல்காப்பியர் கருதும் கடவுள் முழு முதற் கடவுள் என்று கொண்டால் அவர் சிவபெருமான் என்று கொள்வது பொருத்தமானதாகும்.

'கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற

வடுநீங்கு சிறப்பின் முதலான மூன்றும்

கடவுள் வாழ்த்தோடு கண்ணிய வருமே'[125]

---

[124] தொல்காப்பியர், தொல்காப்பியம். புறத்திணையியல், நூற்பா.81

[125] தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், 85

என்ற தொல்காப்பிய நூற்பாவிலும் கடவுள் என்ற சொல் பயின்று வந்துள்ளது. இவை அனைத்தும் சிவபெருமானைக் குறிப்பதாகக் கொள்ளலாம். மற்றொரு இடத்தில்,

> ‘வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப
>
> பழிதீர் செல்வமொடு வழி வழி சிறந்து
>
> பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே’[126]

என்ற நூற்பா இடம்பெற்றுள்ளது. இதில் உள்ள வழிபடு தெய்வம் என்ற சொல் வழிபடக் கூடிய தெய்வம் உண்டென்று சொல்வதன் காரணமாக அது சிவபெருமானைக் குறித்தது என்று கொள்ளமுடிகின்றது.

---

[126] தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம் நூற்பா. 415

இவ்வாறு தொல்காப்பிய காலத்தில் தெய்வம், கடவுள் என்ற பொதுப்பெயர்கள் அக்காலத்தில் வழிபடு தெய்வமாக இருந்த சிவபெருமானைக் குறித்தது என்று முடிவு கொள்ளவேண்டியுள்ளது.

சங்க இலக்கியங்களில் சிவன் பற்றிய பல குறிப்புகள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு.

"நீரும் நிலனும் தீயும் வளியும்

மாக விசும்போடு ஐந்துடன் இயற்றிய

மழுவாள் நெடியோன் தலைவனாக''[127]

என்ற சங்க இலக்கியப் பகுதியில், நெடியோன் என்று சிவபெருமான் குறிப்பிடப் பெறுகிறார்.

''இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை யந்தணன்

---

[127] மாங்குடி மருதன், மதுரைக்காஞ்சி, அடிகள் 453-455

உமை யமர்ந் துயர்மலை இருந்தனனாக

ஐயிரு தலையின் அரக்கர் கோமான்

தொடிப்பொலி தடக்கையிற் கீழ்புகுத் தம்மலை

எடுக்கல் செல்லாது உழப்பவன் போல.......''. [128]

என்று கலித்தொகையில் இராவணனை வென்ற புராணச் செய்தி குறிப்பிடப்படுகிறது. இவ்வாறு பல நிலைகளில் சிவன் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.'' நீல மணி மிடற்று ஒருவன் போல ''[129] என்று புறநானூற்றில் ஆலகால விடம் உண்டதன் வாயிலாக மிடறு நீல நிறமானதைப் பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது.

சிலப்பதிகாரத்தில் அதிக அளவில் சைவ சமயம் பற்றியும் சிவ பெருமான் பற்றியும் ஆன குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. ''பிறவா யாக்கைப் பெரியோன்''

---

[128] கபிலர், குறிஞ்சிக்கலி, பாடல் 38, அடிகள் 1-5

[129] ஔவையார், புறநானூறு, பாடல்எண். 91, அடி 6

[130]என்று சிவபிரானைச் சிலப்பதிகாரம் குறிக்கிறது. சிவ வழிபாடு பற்றிய செய்திகளும் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றன. சிவ வழிபாட்டின் வழியாகப் பெறப்பெற்ற வில்வத்தினைத் தன் தலையில் சூடினான் சேரன் செங்குட்டுவன் என்று குறிக்கிறார் இளங்கோவடிகள்,

'நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி

உலகுபொதி யுருவத் துயர்ந்தோன் சேவடி

மறஞ்சேர் வஞ்சி மாலையொடு புனைந்து

இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி வலங்கொண்டு'[131]

என்ற சிலப்பதிகார அடிகள் சிவ வழிபாட்டு முறையை எடுத்துரைப்பதாக உள்ளது. சிவபிரான் ஆடிய கொடிகட்டிக் கூத்து பற்றிய செய்திகளும் சிலப்பதிகாரத்தில் காட்டப்பெற்றுள்ளன.

---

[130] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், இந்திவிழவூரெடுத்த காதை, அடி. 170

[131] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், கால்கோள்காதை:, அடிகள் 54-57

''சீர்இயல் பொலிய நீர்அல நீங்கப்

பாரதி ஆடிய பாரதி அரங்கத்துத்

திரிபுரம் எரியத் தேவர் வேண்ட

எரிமுகப் பேர்அம்பு ஏவல் கேட்ப

உமையவள் ஒருதிறன் ஆக ஓங்கிய

இமையவன் ஆடிய கொடுகொட்டி ஆடலும்,''[132]

என்ற நிலையில் திரிபுரம் எரித்த கடவுள் தேவர்கள் வேண்ட, உமையவள் தாளம் இசைக்கக் கொடிகட்டி என்ற வகையான ஆடலை ஆடினான் என்பது இவ்வடிகள் தரும் செய்தியாகும். மற்றொரு இடத்தில் இவ்வாடலின் திறத்தை வியக்கிறார் இளங்கோவடிகள்.

''திரு நிலைச் சேவடிச் சிலம்பு வாய் புலம்பவும்,

---

132 இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், கடலாடு காதை,அடிகள் 38-43

பரிதரு செங் கையில் படு பறை ஆர்ப்பவும்,

செங் கண் ஆயிரம் திருக் குறிப்பு அருளவும்,

செஞ் சடை சென்று திசைமுகம் அலம்பவும்;

பாடகம் பதையாது, சூடகம் துளங்காது,

மேகலை ஒலியாது, மென் முலை அசையாது,

வார் குழை ஆடாது, மணிக்குழல் அவிழாது,

உமையவள் ஒரு திறன் ஆக, ஓங்கிய

இமையவன் ஆடிய கொட்டிச் சேதம்'' [133]

என்று சிவன் ஆடிய கூத்தின் திறம் வியக்கப்பெறுகிறது. மேலும் சிவபெருமானின் மகன் முருகன் என்ற குறிப்பும் சிலப்பதிகாரத்தில் காட்டப்பெறுகிறது. அப்பகுதி பின்வருமாறு.

---

[133] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், நடுகற்காதை, அடிகள், 67-75

‘கயிலை நல் மலை இறை மகனை! நின் மதி நுதல்

மயில் இயல் மடவரல் மலையர்-தம் மகளார்,

செயலைய மலர் புரை திருவடி தொழுதேம்

அயல்-மணம் ஒழி; அருள், அவர் மணம் எனவே’’[134]

இவ்வாறு சிவபிரான் பற்றியும் அவனை வழிபடும் முறை பற்றியும் அவனின் ஆடல் பற்றியும், அவனின் மகன் பற்றியுமான பல செய்திகளைச் சிலப்பதிகாரம் வழங்குகிறது.

இதன் காரணமாக சிலப்பதிகார காலத்தில் சைவ சமயமும் உயர்நிலையில் இருந்தது என்பது தெரியவருகிறது. இருப்பினும் சைவ சமயம் சார் தத்துவங்கள்,

---

[134] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டம், குன்றக்குரவை, அடிகள். 12-15

கொள்கைகள் ஆகியன மணிமேகலைக் காப்பிய காலத்திற்குப் பின்புதான் எழுந்தன என்பதும் இங்குக் குறிக்கத்தக்கது.

**வைணவம்**

வேதங்கள், இதிகாசங்கள், பகவத்கீதை ஆகியவற்றில் முழுக்க முழுக்க திருமாலை முன்வைத்த வைணவ சமயச் செய்திகள் காணப்படுகின்றன. வைணவத் தத்துவ வளர்ச்சியில் மிகவும் அண்மைக் காலத்தில் அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம் என்பன உருவாக்கப்பெற்றன. என்றாலும் தொடக்க காலத்தில் மூன்று வைணவ தத்துவங்கள் இருந்துள்ளன. அவை தத்துவம், இதம், புருஷார்த்தம் என்பனவாகும்.

இவற்றுள் தத்துவம் என்பது மூன்றாக அமைவது. சித்து. அசித்து, ஈசுவரன் ஆகியன கொண்டது. இதனைத் தத்துவத்திரயம் என்பர். இதம் என்பது வீடுபேற்றிற்காக கடைபிடிக்கப்படும் வழியாகும். இது இருவகைப்படும். பக்தி, பிரபக்தி என்பன அவையிரண்டும் ஆகும்.

பக்தி நெறி என்பது கடினமானது. வீடுபேறு அடையும் வரை கடைபிடிக்கப்பட வேண்டியதுபக்தி நெறியாகும். பிரபக்தி நெறி என்பது ஆண்டவனித்தில் தன்னைச் சரணாகதி அடைவித்துக் கொள்வதாகும். இந்நிலை உயிர்களுக்குக் கடைபிடிக்க எளிமையானது. உயிர்கள் தம்மைத் திருமாலிடம் அடைக்கலப்படுத்திய பிறகு அனைத்தும் அவன் செயல், அவன் இயக்கம் என்று செயல்பட இயலும். புருஷார்த்தம் என்பது பரமபதநாதனுக்கு அடிமைத் தொழில் புரிவது, அதன் காரணமாக எம்பெருமான் மகிழ்தல் ஆகியன கொண்டதாகும்.

இவ்வாறு வைணவத் தத்துவங்கள் முளைவிடும் நிலையில் மணிமேகலை காப்பியகாலத்திற்கு முன்பாக வைணவ வளர்ச்சி இருந்தது.

**<u>தமிழகச் சூழலில் வைணவம்</u>**

தொல்காப்பியம் முல்லை நிலத் தெய்வமாக வைணவக் கடவுளாக ஏற்றப்பெறும் திருமாலைக் காட்டுகிறது. “மாயோன் மேய காடுறை உலகம்”[135] “மாயோன் மேய

---

[135] தொல்காப்பியர், தொல்காப்பியம்,அகத்திணையியல்,நூற்பா.5

மண்பெருஞ்சிறப்பில்’’[136] என்று தொல்காப்பியத்தில் மயோனாகிய திருமால் பற்றிய குறிப்புகள் உள்ளன.

சங்க இலக்கியங்களில் முல்லைத் திணை சார்ந்த பாடல்களில் பல வைணவக் கருத்துகள் பரவிக்கிடக்கின்றன. திருமாலின் நீல நிறம் பற்றிய குறிப்புகள் பதினாறு இடங்களில் இருப்பதாக கு.சுந்தரமூர்த்தி காட்டுகிறார்.[137] பரிபாடலில் திருமால் பற்றிய பாடல்கள் பல அமைந்துள்ளன. பரிபாடலின் முதற்பாடல் திருமாலின் உருவ அழகை விவரிக்கிறது.

எரிமலர் சினைஇய கண்ணை; பூவை

விரிமலர் புரையும் மேனியை; மேனித்

திரு ஞெமிர்ந்து அமர்ந்த மார்பினை; மார்பில்

தெரிமணி பிறங்கும் பூணினை; மால் வரை

---

136 தொல்காப்பியர், தொல்காப்பியம், புறத்திணையியல், நூற்பா.5

137 கு.சுந்தரமூர்த்தி, சங்க இலக்கியங்களில் சமய நோக்கு,ப.373

எரி திரிந்தன்ன பொன் புனை உடுக்கையை-

சேவல் அம் கொடியோய்! நின் வல வயின் நிறுத்தும்

ஏவல் உழந்தமை கூறும்,

நா வல் அந்தணர் அரு மறைப் பொருளே.[138]

என்பது திருமாலின் உருவ அழகைச் சிறப்பிக்கும் பாடலாகும்.

பரிபாடலில் பதிமூன்றாம் பாடலிலும் திருமால் உருவ அழகு காட்டப்பெற்றுள்ளது. வைணவத்தில் அவதாரம் என்பது முக்கியமானதாகும். திருமால் பத்து அவதாரங்களை எடுத்து உலகைக் காத்தார் என்ற கருத்து வைணவத்தின் உயிர்க்கருத்தாகும். ஒன்பது அவதாரங்களைப் பற்றிய செய்திகள் பரிபாடல், கலித்தொகை, பெரும்பாணாற்றுப்படை ஆகியவற்றில்

---

[138] ----------------, பரிபாடல் பாடல் 1 அடிகள் 6-13

குறிக்கப்படுகின்றன. இராமாவதாரம் பற்றிய செய்திகள் பல சங்க இலக்கியங்களில் காணப்பெறுகின்றன.

'கடுந்தெறல் இராமன் உடன் புணர் சீதையை

வலித்த கை அரக்கன் வெளவிய ஞான்றை

நிலஞ்சேர் மதர் அணி கண்ட குரங்கின்

செம்முகப் பெருங்கிளை இழை பொலிந்து ஆங்கு' [139]

என்று இராவணன் சீதையைத் தூக்கிச் செல்லும்போது விட்டெறிந்த அணிகலன்களைக் குரங்குகள் அணிந்த நிலையைப் பாடுகிறார் ஊண்பொதி பசுங்குடையார்.

---

[139] ஊண்பொதி பசுங்குடையார்., புறநானூறு, பாடல். 378, அடிகள் 19-22

இராமனின் மந்திராலோசனை நடைபெற்ற நிலையைப் பின்வரும் அகநானூற்றுப் பாடல் காட்டுகிறது. பின்வரும் அப்பாடலைப் பாடியவர் கடுவன் மள்ளனார் ஆவார்.

“ 'வென்வேல் கவுரியர் தொன்முது கோடி

முழங்கு இரும் பௌவம் இரங்கும் முன் துறை

வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த

பல்வீழ் ஆலம் போல

ஒலி அவிந்தன்று இவ் அழுங்கல் ஊரே'[140]

இவ்வாறு இராமாயணச் செய்திகள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. கருடக்கொடி, சக்கர ஆயுதம் துளசி மாலை போன்ற பல திருமால் பற்றி குறிப்புகள் சங்க இலக்கியங்களில் கிடைக்கின்றன. மகாபாரதச் செய்திகளும் சங்க

---

[140] கடுவன் மள்ளனார், அகநானூறு. பாடல்70 அடிகள் 13-17

இலக்கியங்களில் காணப்படுகின்றன. முல்லைக் கலியில் பாரதப் போர்க்களம் உவமையாக்கப்பெற்றுள்ளது. மேலும் வீமன் வீரம், துச்சாதனின் அடாத செயல், பரசுராமன் பற்றிய குறிப்பு போன்றனவும் குறிக்கப்பெற்றுள்ளன.

அம் சீர் அசைஇயல் கூந்தற் கைநீட்டியான்

நெஞ்சம் பிளந்துஇட்டு நேரார் நடுவண், தன்

வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்''[141]

என்ற பாவடிகளில் பாஞ்சாலி கூந்தல் கைநீட்டி இழுக்கப்பெற்ற வரலாறு காட்டப்பெறுகிறது. இவ்வாறு சங்க இலக்கிய காலத்தில் திருமால் திணைத் தெய்வமாகப் போற்றப்பெற்றுள்ளார். அதுமட்டுமின்றி அவரின் அவதாரங்கள் பற்றிய குறிப்பும் சங்க இலக்கியங்களில் உள்ளன என்பது குறிக்கத்தக்க செய்தியாகும்.

---

[141] சோழன் நல்லுருத்திரன், கலித்தொகை பாடல் – 101 அடிகள் – 18-20

அற இலக்கியங்களில் அகம் சார் முல்லைப்பாடல்களில் திருமால் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. பழமொழி நானூறில் இராமாயணச் செய்தி உள்ளது. இலங்கை அரசன் இராவணனின் தம்பி வீடணன். இவன் இராமனை நண்பனாகப் பெற்று இலங்கை அரசனானான் என்று அந்தப் பாடல் குறிப்பிடுகிறது.

''பொலந் தார் இராமன் துணையாகப் போதந்து,

இலங்கைக் கிழவற்கு இளையான், இலங்கைக்கே

இறை ஆயதூஉம் பெற்றான்;-பெரியாரைச்

சார்ந்து கெழீஇயிலார் இல் " [142]

என்ற பாடலில் இராமயணக் குறிப்பு இடம்பெற்றுள்ளது.

---

[142] முன்றுரையரையனார், பழமொழி நானூறு, பாடல். 92

அற இலக்கியங்களில் குறிக்கதக்கதான திருக்குறளில் பல இடங்களில் திருமால் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. தாமரைக்கண்ணான் உலகு (1103) என்று திருமாலின் கண்ணழகு குறிக்கப்படுகிறது.

''மடியிலா மன்னவன் எய்தும், அடியளந்தான்

தாஅயது எல்லாம் ஒருங்கு'' [143]

என்ற குறளில் அடியளந்த திருமாலின் வாமன அவதாரம் காட்டப்பெறுகிறது. தொடர்ந்து சிலப்பதிகாரத்தில் திருமால் பற்றியும், அவர் சோ அழித்தது பற்றியும் பாற்கடல் கடைந்தது பற்றியும் ஆன குறிப்புகள் கிடைக்கின்றன. ஆய்ச்சியர் குரவையில் திருமால் பற்றிய பல செய்திகள் குறிக்கப்பெற்றுள்ளன. மாபாரதச் செய்திகளும் இதனில் இடம்பெற்றுள்ளன.

கதிர் திகிரியான் மறைத்த கடல்வண்ணன் இடத்துளான்

மதிபுரையும் நறுமேனித் தம்முளோன் வலத்துளான்[144]

---

[143] திருவள்ளுவர், திருக்குறள், பாடல் 610

இப்பகுதியில் மகாபாரதத்தில் கண்ணன் சூரியனைச் சக்கரத்தால் மறைத்த கதை கூறப்படுகிறது.

''வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்

கடல்வண்ணன் பண்டொருவன் கடல் வயிறு கலக்கினையே''[145]

என்பதும்,

''மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா வகைமுடிய

தாவிய சேவடி செப்பத் தம்பியுடன் கான்புகுந்து

சோவரணம் போய் மடியத் தொல்லிலங்கை கட்டழித்த

சேவகன் சீர் கேளாத செவியென்ன செவியே

---

[144] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், ஆய்ச்சியர் குரவை, அடி.25

[145] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், ஆய்ச்சியர் குரவை, அடி.32

திருமால் சீர் கேளாத செவியென்ன செவியே ''[146]

என்பதும்

''மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்

கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்

படர்ந்து ஆரணம் முழங்கப் பஞ்சவர்க்குத் தூது

நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே

நாராயணா என்னாத நாவென்ன நாவே''[147]

என்பதும்

---

146 இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், ஆய்ச்சியர் குரவை, அடி.35

147 இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், ஆய்ச்சியர் குரவை, அடி.37

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் திருமால் பற்றிய குறிப்புகள் ஆகும். இவ்வாறு வைணவம், மணிமேகலைக் காப்பியம் எழுவதற்கு முந்தைய கால நிலையில் சமய அளவில் மிகப்பெரும் இடத்தைப் பெற்றிருந்தது என்பது மேற்கண்ட சான்றுகளின் வழியாகத் தெரியவருகிறது

**சாங்கியம்**

சாங்கிய சமயம் பற்றிய கருத்துகள் உபநிடதங்களில் உள்ளன என்பதால் அச்சமயம் பழமை வாய்ந்தது என்பது அறிஞர்களின் பொதுமுடிவு. பகவத்கீதையில் சாங்கியம், யோகம் ஆகியன பற்றிய கருத்துகள் இடம்பெற்றுள்ளன. சாங்கியத்தை ஷட் தரிசனங்கள் ஆறனுள் ஒன்றாகக் கருதுவது இந்திய மரபாகும். சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், பூர்வமீமாம்சை, உத்தர மீமாம்சை என்ற ஆறும் ஷட் தரிசனங்கள் ஆகும். கால அளவில் புத்தருக்கும், கீதைக்கும் முந்தையதாக சாங்கியம் கருதப்பெறுகின்றது.

**சாங்கியத்தை நிறுவியவர்**

சாங்கியத்தை நிறுவியவர் கபில முனிவர் ஆவார். இவரின் காலம் கி.மு. 72 என்று கணக்கிடப்பெறுகிறது.[148] இவர் சாங்கிய சூத்திரம் என்பதனைப் படைத்தார். கபிலரின் சீடர்களாகக் கருதப்பெறுபவர்கள் ஆசூரி, பஞ்சசீகர் ஆகியோர் ஆவர். பஞ்சசீகர் தன் சீடர்களான கார்க்கிக்கும், உலுகருக்கும் சாங்கியக் கொள்கைகளை அறிவித்தார். இவ்வாறு வழி வழியாக வந்த சீட மரபினரும் சாங்கிய தத்துவங்களை விவரித்து நூல்கள் படைத்தனர். ஆனால் அவை தற்போது கிடைக்கவில்லை.

ஈஸ்வர கிருஷ்ணர் என்பவர் எழுதிய சாங்கிய காரிகை என்ற நூல் மட்டுமே தற்போது சாங்கியத்தைப் பற்றி அறியக் கிடைக்கும் பனுவல் ஆகும். இவை தவிர சாங்கியத் தத்துவ கௌமுகி என்பதை வாசஸ்பதி என்பவர் எழுதியுள்ளார். யுக்தி தீபிகை என்றொரு நூலும் சாங்கியத்தைப் பற்றி அறிவிக்கிறது. சாங்கிய பிரவசன சூத்திரம் என்ற நூலும் அதற்கு விஞ்ஞான பிட்சு என்பவர் எழுதிய பாஷ்யமும் சாங்கியக் கருத்து வளர்ச்சிகளை அறிந்துகொள்ளப் பெரிதும் உதவுகின்றன.

**சாங்கிய தத்துவங்கள்.**

---

[148] சோ. ந. கந்தசாமி, இந்தியத் தத்துவக்களஞ்சியம், தொகுதி.2.ப. 12

சாங்கியம் இருபத்து ஐந்து தத்துவங்களைக் குறிப்பிடுகிறது. இத்தத்துவங்களின் அடிப்படை இரண்டு ஆகும். ஒன்று பிரகிருதி, மற்றொன்று புருடன். பிரகிருதியைப் பிரபஞ்சத் தோற்றத்தின் முதற் காரணம், மூல காரணம் எனக் கொள்கிறது சாங்கியம். புருடன் என்பது மாறாத நிலை பெறுகின்ற ஆன்மா என்று கொள்கிறது சாங்கியம். ஆன்மா என்பது ஓர் அகக்காட்சிப் பொருள். மஹத் (புத்தி), அகங்காரம், மனம், ஞானேந்திரியங்கள் (5), கர்மேந்திரியங்கள் (5), தன்மாத்திரைகள்(5), பஞ்ச பூதங்கள்(5) என்ற நிலையில் இருபத்தைந்து தத்துவங்கள் அமைகின்றன. இவை தற்போது சைவ சித்தாந்தத் தத்துவங்களுக்குள் கொள்ளப்பெறுகின்றன என்பது கவனிக்கத்தக்கது.

சாங்கியத்தின் மற்றொரு முக்கியமான கொள்கை சத்காரியவாதம் என்பதாகும். “ஒரு பொருள் உருவாகி பல மாற்றங்களோடு அளவிலும் அமைப்பிலும் வேறுபாடுகளோடு தோற்றமளிக்கின்றன. குடம்,மரம், சேலை, நாற்காலி போல பல பொருள்கள் நாம ரூபங்களோடு காட்சி தருகின்றன. நாம் காணும் இப்பொருள்கள்

உருவாகவும் அதன் பண்புகள் வெளிப்படுவதும் மூல காரணத்திலேயே அடங்கிக்கிடக்கிறது" என்பது சத்காரிய வாதமாகும்.[149]

**தமிழகத்தில் சாங்கிய சமயம்**

தொல்காப்பியத்தில் காணப்படும் உயிர்க்கொள்கை சாங்கிய வயப்பட்டதாகும்.

"ஒன்ற றிவதுவே உற்ற றிவதுவே,

இரண்டறிவதுவே அதனொடு நாவே

மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே

நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே

ஐந்தறிவதுவே அவற்றோடு செவியே

ஆறறிவதுவே அவற்றொடு மனனே!

---

[149] இ.எஸ்.டி., ஞானன், தத்துவ தரிசனங்கள், ப.153

நேரிதின் உயர்ந்தோர் நெறிப்படுத்தினர்''[150]

என்ற தொல்காப்பிய நூற்பா தன்மாத்திரைகள், ஞானேந்திரியங்கள் ஆகியவற்றை முறைமைப் படுத்தி மனம் என்ற ஒன்றைக் காட்டுகிறது. இது சாங்கிய வயப்பட்டது ஆகும். சங்க இலக்கியங்களிலும் இக்கூறுகள் பற்றிய பாடல்கள் காணப்படுகின்றன. சாங்கியரின் பரிணாமக் கோட்பாடு பரிபாடலில் பயின்று வந்துள்ளது.

“பாழ் எனக் கால் எனப் பாகு என ஒன்றென

இரண்டு என மூன்று என நான்கு என ஐந்துஎன

ஆறு என ஏழ் என எட்டு எனத் தொண்டு என

நால்வகை ஊழி எண் நவிற்றும் சிறப்பினை” [151]

---

[150] தொல்காப்பியர், தொல்காப்பியர்,பொருளதிகாரம், மரபியல், நூற்பா.571)

[151] கடுவன் இளவெயினனார், பரிபாடல், பாடல்3. அடிகள் 77-80

என்ற பாடலில் சாங்கிய எண் திறம் காட்டபெற்றுள்ளது. சாங்கியம் என்றால் எண்ணுதல் என்று பொருள்படும். அவ்வகையில் ஒன்று முதல் தொண்டு (ஒன்பது என்பதின் மறுவடிவம்) வரை இப்பாடலில் எண்ணப்பெற்றுள்ளது. மேலும் பாழ், கால், பாகு, ஒன்று முதல் ஒன்பது வரை ஆகிய பன்னிரு சொற்களும் சாங்கியத் தத்துவ நிலையில் உள்ள இருபத்தைந்து தத்துவங்களின் முன்னை நிலையினவாகக் கருதப்பெறும். பாழ் என்ற சொல்லும் தொண்டு என்ற சொல்லும் மூலப் பிரகிருதிக்கு உரியனவாகும். மற்ற பத்தும் இருபத்து மூன்று தத்துவநிலைகளின் நிலைப்பாட்டைத் தெரிவிப்பதாகும்.

இப்பாடலில் குறிக்கப்பெற்ற பாழ் என்பது மூலப் பிரகிருதி என்று கொள்ளத்தக்கது. கால் என்பது ஐம்பெரும் பூதங்கள் பற்றியது. பாகு என்பது தொழில் கருவிகளான கன்மேந்திரியங்களைப் பற்றியதாகும். ஒன்று முதல் எட்டு வரை உள்ள எண்கள்; ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்ற தன்மாத்திரைகளை உணர்த்தும் எண் குறியீடாகும். இவ்வாறு சாங்கியத் தன்மை பரிபாடலில் அமைந்துள்ளது.

பரிபாடலில் அமைந்துள்ள பதிமூன்றாம் பாடலில் சாங்கிய எண்திறம் உரைக்கப்பெறுகிறது. இப்பாடலைப் பாடியவர் நல்லெழுநியார் ஆவார். இவரும் எண்ணும் திறம் சாங்கிய வயப்பட்டது.

''சுவைமை, இசைமை, தோற்றம், நாற்றம், ஊறு,

அவையும் நீயே, அடு போர் அண்ணால்!

அவைஅவை கொள்ளும் கருவியும் நீயே;

முந்து யாம் கூறிய ஐந்தனுள்ளும்,

ஒன்றனில் போற்றிய விசும்பும் நீயே;

இரண்டின் உணரும் வளியும் நீயே;

மூன்றின் உணரும் தீயும் நீயே;

நான்கின் உணரும் நீரும் நீயே;

ஐந்துடன் முற்றிய நிலனும் நீயே:

அதனால், நின் மருங்கின்று மூ ஏழ் உலகமும்''[152]

என்ற பகுதியில் சுவை,ஒலி, ஒளி, ஊறு, நாற்றம் ஆகிய தன்மாத்திரைகள் நீயே, அவற்றை அறிந்து கொள்ளும் அறிகருவிகள் (ஞானேந்திரியங்கள்) நீயே, ஐம்பூதங்களும் நீயே என்று சாங்கியத் தத்துவ அடிப்படை இப்பாடலில் காட்டப்பெறுகிறது.

இவ்வகையில் சங்க இலக்கியத்தில் சாங்கியக் கருத்துகள் பரவியிருப்பதை உணரமுடிகின்றது. தொடர்ந்து எழுந்த அற இலக்கிய வகைமைகளிலும் சாங்கியக் கூறுகள் காணப்பெறுகின்றன. அறநூல்களில் ஒன்றான திருக்குறளில் சாங்கியக் கருத்துகள் இடம்பெற்றுள்ளன.

"சுவைஒளி ஊறுஓசை நாற்றமென் றைந்தின்

வகைதெரிவான் கட்டே உலகு" [153]

---

[152] நல்லெழுதியார், பரிபாடல் பாடல் எண்.13. அடி 14-23

[153] திருக்குறள், நீத்தார் பெருமை குறள் எண்:27

என்ற குறளில் தன்மாத்திரைகளின் வகை தெரிந்தவன் உலக இயல்பு அறிந்தவன் என்கிறார் வள்ளுவர். இதற்கு உரை வரைந்த பரிமேலழகர் சாங்கிய நிலையில் இதற்கு உரைவிளக்கம் செய்துள்ளார்.

“சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தின் வகை - சுவையும், ஒளியும், ஊறும், ஓசையும், நாற்றமும் என்று சொல்லப்பட்ட தன் மாத்திரைகள் ஐந்தனது கூறுபாட்டையும்; தெரிவான்கட்டே உலகு - ஆராய்வான் அறிவின்கண்ணதே உலகம்.

அவற்றின் கூறுபாடு ஆவன: பூதங்கட்கு முதல் ஆகிய அவைதாம் ஐந்தும், அவற்றின்கண் தோன்றிய அப்பூதங்கள் ஐந்தும், அவற்றின் கூறு ஆகிய ஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும் ஆக இருபதும் ஆம். 'வகைதெரிவான் கட்டு' என உடம்பொடு புணர்த்ததனால், தெரிகின்ற புருடனும், அவன் தெரிதற் கருவி ஆகிய மான் அகங்கார மனங்களும், அவற்றிற்கு முதல் ஆகிய மூலப்பகுதியும் பெற்றாம். தத்துவம் இருபத்தைந்தனையும் தெரிதல் ஆவது,

மூலப்பகுதி ஒன்றில் தோன்றியது அன்மையின் பகுதியே ஆவதல்லது விகுதி ஆகாது எனவும், அதன்கண் தோன்றிய மானும், அதன்கண் தோன்றிய அகங்காரமும், அதன்கண் தோன்றிய தன் மாத்திரைகளும் ஆகிய ஏழும், தத்தமக்கு முதலாயதனை நோக்க விகுதியாதலும் , தங்கண் தோன்றுவனவற்றை நோக்கப் பகுதியாதலும் உடைய எனவும், அவற்றின்கண் தோன்றிய மனமும், ஞானேந்திரியங்களும், கன்மேந்திரியங்களும், பூதங்களும் ஆகிய பதினாறும் தங்கண் தோன்றுவன இன்மையின் விகுதியே ஆவதல்லது பகுதி ஆகா எனவும், புருடன், தான் ஒன்றில் தோன்றாமையானும் தன்கண் தோன்றுவன இன்மையானும் இரண்டும் அல்லன் எனவும், சாங்கிய நூலுள் ஓதியவாற்றான் ஆராய்தல். இவ்விருபத்தைந்துமல்லது உலகு எனப் பிறிதொன்று இல்லை என உலகினது உண்மை அறிதலின், அவன் அறிவின்கண்ண தாயிற்று. இவை நான்கு பாட்டானும் பெருமைக்கு ஏது ஐந்து அவித்தலும், யோகப் பயிற்சியும், தத்துவ உணர்வும் என்பது கூறப்பட்டது."[154] என்ற பகுதியில் சாங்கிய நூலுள் ஓதியவற்றால் எனக் குறிக்கிறார் பரிமேலழகர்.

---

[154] பரிமேலழகர், திருக்குறள் உரை, பக். 21-22

இவ்வுரையில் இருபத்தைந்து தத்துவங்களும், புருடன் பற்றிய குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன. இதன் காரணமாக திருக்குறள் படைத்த காலம் முதல் பரிமேலழகர் உரை எழுதிய காலம்வரை சாங்கியம் உயிர்ப்புடன் தமிழகத்தில் விளங்கியது என்று அறியமுடிகிறது.

சிலப்பதிகாரத்தில் சாங்கிய சாயல் மிக்க கருத்துக்கள் இடம்பெற்றள்ளன. கோவலன் கண்ணகியைப் பாராட்டும் முறைமை சாங்கிய வயப்பட்டதாக உள்ளது. மாசறு பொன்னே (ஒளி) வலம்புரி முத்து (ஊறு), காசறு விரையே (நாற்றம்) கரும்பே(சுவை), தேனே (ஒலி) என்பன தன்மாத்திரைகளின் அடிப்பபடையில் பாரட்டும் பாரட்டுமுறை உடையதாகும்.

இவ்வாறு மணிமேகலை காலத்திற்கு முன்பாக சாங்கிய சமயம் தமிழகத்தில் பரவியிருந்தமையை இச்சான்றுகள் காட்டுகின்றன.

## வைசேடிகம்

வைசேடிகம் இருவகை கால எல்லையை உடையதாக உள்ளது. கி.மு மூன்றாம் நூற்றாண்டு அளவில் எழுந்த வைசேடிகத்தை முன்னையது என்றும், கி.பி. 12 ஆம் நூற்றாண்டளவில் எழுந்த வைசேடிகத்தை பிந்தையது என்றும் வரலாற்று ஆசிரியர்கள் கொள்கின்றனர். முந்தைய வைசேடிகத்தை வளப்படுத்தியவர்கள் கௌதமர், கணாதர் ஆகியோர் ஆவர். பின்னைய வைசேடிகத்தை வளப்படுத்தியவர் காங்கேசர் ஆவார்.

“வைசேடிகம் பௌதிகத்தையும், புலன் இறந்த மெய்ப்பொருள் இயல் ஆய்வையும் தலைமையாகக் கொண்டதாகும்”[155] என்பது வைசேகடி சமய மரபை உணர்த்தும் கருத்தாகும்.

---

[155] தீஸ் சந்திர சாட்டர்ஜி, முன்னைய நியாய வைசேடிகம், சர்வபள்ளி இராதா கிருஷ்ணன் (ப.ஆ), கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாறு,ப.369

**<u>வைசேடிக நூல்கள்</u>**

வைசேடிகத்தின் அடிப்படை நூல் கணாதர் எழுதிய வைசேடிக சூத்திரம் ஆகும். இராவணன் இந்நூலுக்கு உரையெழுதியதாக ஒரு குறிப்பு கிடைக்கிறது. ஆனால் அவ்வுரை தற்போது கிடைக்கவில்லை. பிரஸாஸ்த பாதர் என்பவர் இந்நூலுக்கு எழுதிய "பதார்த்த தர்ம சங்கிரகம்" என்பது குறிக்கத்தக்கதாகும். இது ஓர் உரைநூல் என்ற கருதப் பெற்றாலும் தனி நூல் போன்று வைசேடி நெறிகளை எடுத்துரைக்கிறது. இந்நூலை விரித்து உரைக்கும் நிலையில் மூன்று நூல்கள் எழுந்தன.

1. வியோம சிவம் எழுதிய வியோமவதி,
2. ஸ்ரீதரதர் எழுதிய நிய்ய கந்தலி,
3. உதயணர் எழுதிய தீரணாவலி

ஆகியன அவையாகும். இதனைத் தொடர்ந்து எழுந்த, சிவாதித்தரது சப்தபதார்த்தமும், வல்லபாச்சாரி எழுதிய நியாய லீலாவதியும் இச்சமய நூல்களில் குறிக்கத்தக்கனவாகும்.

**<u>வைசேடிக சமயக் கருத்துகள்</u>**

வைசேடிகம் பௌதீகப் பாங்குடையது. உலகப் பொருள்களை பதார்த்தம் என்று வைசேடிகர் அழைப்பர். இப்பதாரத்தங்கள் ஏழு ஆகும். அவை திரவியம், குணம், கருமம், சாமானியம், விஷேசம், சமவாயம், அபாவம் என்பனவாகும்.

திரவியம் ஒன்பது வகைப்படும். அவை மண், நீர்,தீ, காற்று, ஆகாயம், காலம், திசை, ஆன்மா, மனம் ஆகியன என்பது முன்னரே குறிக்கப்பட்டது.

குணங்கள் என்பன பதினேழு ஆகும். உருவம், சுவை, மணம், ஊறு, எண், பரிமாணம், தனித்துவம், சமயோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், புத்தி, சுகம், துக்கம், பற்று, வெறுப்பு, முயற்சி என்பனவாகும்.

கருமம் என்பது, மேலெழுதல், கீழேவிழல், சுருங்குதல், விரிதல், கமனம் என்பனவாகும். சாமானியம் என்பது மரம் போன்ற பொதுமைப் பண்பு குறித்தது. விஷேசம் என்பது முன் சொன்ன பொதுமைக்கு எதிரானது. சிறப்பான இத்தத்துவமே வைசேடிகம் என்ற பெயரை இம்மதம் பெறக் காரணமாகியது.

சமவாயம் என்பது தொடர்பு பற்றியது. பொருள்களுக்கு இடையேயான தொடர்பு இழைகளைப் பல நிலைகளில் காண்கிறது வைசேடிகம். ஆடைக்கும் நூலுக்கும் உள்ள தொடர்பு, நீருக்கும் குளிர்மைக்கும் உள்ள தொடர்பு, பூமிக்கும் பூமிச் சுழற்சிக்கும் உள்ள தொடர்பு, பசுமந்தைக்கும் தனிப்பசுவிற்கும் உள்ள தொடர்பு, பரமாணு ஆகாயம் ஆகியவற்றுக்கான தொடர்பு என்று வைசேடிகர் காட்டுகின்றனர்.

அபாவம் என்ற பதார்த்தம் இன்மை பற்றியதாகும். இது பிராகபாவம், பிரத்வம்சாபாவம், அத்தியன்தா பாவம், அன்னயோன்யா பாவம், சாமயிகா பாவம் என்ற ஐவகைப்படுகிறது. இவற்றை முறையே முன் இன்மை, அழிவுபாட்டின்மை,

முற்றிலுமின்மை, வேறுபாட்டுறவின்மை, காலத்து இன்மை என்பதாகக் கொள்ளலாம்.

இன்ப துன்பம் அற்ற பேரின்பத்தை அடைவதே வைசேடிகரின் நோக்கமாகும். நலமும் வீடுபேறும் தருவது தருமம் என்று அது வீடுபேற்றின் இயல்பினைக் குறிப்பிடுகிறது

## தமிழகச் சூழலில் வைசேடிகம்

திருக்குறளில் வைசேடிகக் கருத்துகள் இருப்பதாக பரிமேலழகர் குறிக்கிறார். வைசேடிகக் கருத்து பின்வரும் குறளில் இடம்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிடுகிறார்.

சினத்தைப் பொருள் என்று கொண்டவன் கேடு

நிலத்தறைந்தான் கைபிழையாது அற்று[156]

என்ற குறளுக்குப் பொருள் தரவந்த பரிமேலழகர்

---

[156] திருவள்ளுவர், திருக்குறள், குறள். எண். 307)

“சினத்தைப் பொருள் என்று கொண்டவன் கேடு - சினத்தைத் தன் ஆற்றல் உணர்த்துவதோர் குணம் என்று தன்கட் கொண்டவன் அவ்வாற்றல் இழத்தல்; நிலத்து அறைந்தான் கை பிழையாது அற்று - நிலத்தின்கண் அறைந்தவன் கை அந்நிலத்தை உறுதல் தப்பாதவாறு போலத் தப்பாது என்று பொருள் விளக்கம் செய்கிறார்.

மேலும் குணம் என்பதைப் பொருளாக எவ்வாறு கொள்ள இயலும் என்ற வினா எழும் என்பதால் அதற்கு விடை தரும் நிலையில் குணம் என்பதற்கு வைசேடிகர் கொண்ட பொருளைக் காட்டுகிறார். “வைசேடிகர் பொருள், பண்பு, தொழில், சாதி, விசேடம், இயைபு என்பனவற்றை அறுவகைப் பொருள் என்றாற் போல ஈண்டுக் 'குணம்' 'பொருள்' எனப்பட்டது” என்று சொற் பொருள் விளக்கம் செய்கிறார். “.விசேஷம் என்னும் பதார்த்தத்தை (கணாதரது நியாய மதத்தை)அங்கீகரித்தவர் வைசேடிகர்”[157] என்ற குறிப்பும் இக்குறளுக்கு

---

[157] பரிமேலழகர், (உ.ஆ), திருக்குறள் உரை, ப.123

அளிக்கப்பெற்றுள்ள நிலையில் திருக்குறள் காலத்தில் வைசேடிக சமயக் கருத்துகள் இருந்தன என்பதை அறியமுடிகிறது.

இதற்கு அடுத்த நிலையில் மணிமேகலையில் வைசேடிகம் பற்றிய கருத்துகள் இடம்பெற்றுள்ளன. .

**பிரமவாதம்**

மணிமேகலைக் காப்பியத்திற்கு முன்பாக ஓரளவே அறியப்பெற்ற சமயமாக விளங்கியது பிரமவாதம் ஆகும். இவ்வுலகம் பிரம்மன் ஈன்ற முட்டை என்ற கருத்தை உடையது பிரமவாத மதம் என்கிறார் சீத்தலைச் சாத்தனார். கீரீடாப் பிரமவாதம், சத்தப்பிரம வாதம் என இது இரு பிரிவுகள் உடையதாக அறியப்படுகிறது. குறிப்பாக இம்மதம் வேதாந்தத்தின் கிளை மதாமாகக் கொள்ளத்தக்கதாகும்.

சங்க இலக்கியங்களில் பிரம வாதம் சார்ந்த கருத்துகள் காணப்படுகின்றன. “தெய்வ பிரமம் செய்குவோரும்”[158] என்ற குறிப்பு கலித்தொகையில் கிடைக்கிறது.

---

[158] நப்பண்ணனார், பரிபாடல், பாடல் 19, அடி.40

இதனை பிரமவீணை என்று உரையாசிரியர்கள் குறிக்கின்றனர். இக்குறிப்பு சமயம்சார் குறிப்பாகவும் கொள்ளத்தக்கதாகும்.

இவ்வகையில் மெல்லிய நிலையில் பிரம்மம் என்ற சமயம் மணிமேகலை காப்பிய காலத்திற்குமுன்பு விளங்கியது என்பது தெளிவாகின்றது.

இவ்வாறு வேதச்சார்புடைய நெறிகள் மணிமேகலை காப்பியகாலத்திற்கு முன்பு வளர்ந்திருந்தன என்பதை உணரமுடிகின்றது.

**<u>வேதங்களைப் புறக்கணித்த நெறி</u>**

வேத நெறிகளை மறுத்த, வேத மரபுகளை விவாதத்திற்கு உள்ளாக்கிய, வேதக் கருத்துகளைப் புறக்கணித்த இந்தியத் தத்துவ மரபு ஒன்றும் காலந்தோறும் நிலவி வந்துள்ளது. சிந்துவெளி நாகரீக காலத்திலும், வேத காலத்திலும் வேதத்தை மறுத்த சிந்தனைகள் இருந்துவந்துள்ளன. இச்சிந்தனைகளை சாருவாகம், உலகாயதம் என்ற பெயரால் அழைத்தனர். பொருளே முதல் என்ற கொள்கையினை உடையவர்கள் சாருவாகர் ஆவர். வேத நெறி கடவுள் என்ற கருத்தையே முதலாகக்

கொண்டது. அஜிதகேச கம்பலின், பாயாசி, பாகுதி, சாந்திரஷிதா ஆகியோர் சாருவாகக் கொள்கையின் முன்னோடிகளாகக் கொள்ளத்தக்கவர்கள் ஆவர்.

சாருவாகத்திற்குப் பல பெயர்கள் உண்டு. பார்ஹஸ்பத்யம், உலகாயதம், நாத்திக மதம், விதண்டாவாதம், பூதவாதம் என்பன அவற்றில் குறிக்கத்தக்கனவாகும். மணிமேகலை குறிக்கும் பூதவாதம் இதுவேயாகும்.

பிரகஸ்பதி என்பவரால் எழுதப்பெற்ற நூல் பிகற்பதி சூத்திரம் என்பதாகும். இது உலகாயதக் கருத்துக்களை உள்ளடக்கியது. பிரகஸ்பதி ஏற்படுத்தியதால் இவ்வகை பார்ஹஸ்பத்யம் எனப்படுகிறது. கி.மு 300 அளவில் பாகுரீ என்பவர் இயற்றிய உலகாயத சரித்திரம் என்பது மக்களால் நன்கு அறியப்பெற்றிருந்தது. மக்களால் நன்கு அறியப்பெற்றது என்பதே உலகாயதத்தின் பொருள்.

பிரகற்பதியின் சீடர் சார்வாகன் என்பவர் பரப்பியதால் இம்மதத்திற்கு சார்வாகம் என்ற பெயர் ஏற்பட்டது என்றும் கருதப்பெறுகிற்து. கடவுள் இல்லை என்ற கருத்தினை இம்மதம் காட்டுவதால் இது நாத்திக மதம் எனப்படுகிறது. காகம் வெள்ளை என்று சாதிக்கும் நிலையில் இதனை விதண்டாவாதம் என்றும்

குறிக்கலாம். உலகத் தோற்றத்திற்குக் காரணமான நான்கு பூத இயல்புகளை விளக்கும் கொள்கை இதுவானதால் இதனைப் பூதவாதம் என்றும் குறிக்கலாம்.

மேலும் இக்கொள்கை சார்ந்தோரைத் தேகாத்துமவாதிகள், இந்திரியாத்துமவாதிகள், மனோ ஆத்துமவாதிகள், அந்தக் கரண ஆத்துமவாதிகள் என்றும் குறிப்பிடும் முறைமையும் இருந்துள்ளது.

பொருள்முதல் வாதத்தை மையப்படுத்துவதாகச் சாருவாகம் அமைந்துள்ளது. இச்சிந்தனையின் அடிப்படையில் சமணம், பௌத்தம், அசீவகம் ஆகியன ஊக்கம் பெற்றன. கி.மு மூன்றாம் நூற்றாண்டு அளவில் மக்களால் அறியப்பெற்ற நெறியாக உலகாயுதம் விளங்கியது என்றால் அதற்கு முன்னதாகவே அதனுடைய தோற்றமும் வளர்ச்சியும் அமைந்திருக்கவேண்டும் என்ற நிலையில் வேத காலத்திற்கு இணையாக வேதத்திற்கு முரணான கருத்துகளின் ஊற்றாக சாருவாகம் விளங்கியிருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளமுடிகின்றது.

இதுவரை இந்திய அளவிலான உலகாயத வளர்ச்சி எடுத்துரைக்கப்பெற்றது. இனி தமிழகம் சார்ந்த மணிமேகலை காப்பிய காலத்திற்கு முன்னதான உலகாயத வளர்ச்சி நுண்மையாக எடுத்துக்காட்டப்பெறுகிறது.

தமிழ்ச்சமுதாயத்தில் உலகாயுத கருத்துகள் தொல்காப்பியம் முதலாக இக்கால இலக்கியங்கள் வரை பயின்று வந்துள்ளன. இது குறித்து சோ. ந. கந்தசாமி இந்தியத் தத்துவக்களஞ்சியம் என்ற நூலில் விரிவாக உரைத்துள்ளார்.

“நிலம்தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்

கலந்த மயக்கம் உலகம் ஆதலின்” [159]

என்ற நூற்பாவில் பூத இயல்பு சுட்டப்பெறுகிறது. இந்தப் பூதச்சேர்க்கை பற்றிய கருத்து உலகாயுதச்சார்புடையது என்று கொள்ளத்தக்கது. சங்க இலக்கிய நூல்களுள் ஒன்றான மதுரைக்காஞ்சியில் உலகாயத கருத்துகள் காணப்படுகிறது.

“நீரும் நிலனும் தீயும் வளியும்

---

[159] தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம். நூ. 635)

மாக விசும்போ டைந்துடன் இயற்றிய'' [160]

என்ற பாடலடிகளில் படைப்புக் கோட்பாடு காட்டப்பெற்றுள்ளது.

புறநானுற்றுப் பாடலொன்றில் வேதநெறி திரியினும் என்ற குறிப்பும், ஐம்பூத இயற்கையும் ஒருங்கே சுட்டப்பெற்றுள்ளது. இதன் காணரமாக வேதநெறிக்கு மாற்றான நெறி உண்டு என்பதையும், ஐம்பூத இயற்கையை நாடும் உலகாயத உள்ளமும் சங்க இலக்கியத்தில் இருப்பதை உணரமுடிகின்றது,

மண்டிணிந்த நிலனும்

நிலனேந்திய விசும்பும்

விசும்புதைவரு வளியும்

வளித்தலைஇய தீயும்

தீமுரணிய நீரு மென்றாங்

---

[160] மாங்குடி மருதனார், மதுரைக்காஞ்சி, 453-55)

கைம்பெரும் பூதத் தியற்கை போலப்

போற்றார்ப் பொறுத்தலுஞ் சூழ்ச்சிய தகலமும்

வலியுந் தெறலு மளியு முடையோய்

நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்துநின்

வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்

யாணர் வைப்பி னன்னாட்டுப் பொருந

வான வரம்பனை நீயோ பெரும

அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ

நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை

ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்

பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்

பாஅல்புளிப்பினும் பகலிருளினும்

நாஅல்வேத நெறிதிரியினும்

திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி

நடுக்கின்றி நிலியரோ வத்தை யடுக்கத்துச்

சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை

அந்தி யந்தண ரருங்கட னிறுக்கும்

முத்தீ விளக்கிற் றுஞ்சும்

பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே'' [161]

என்ற இப்பாடலில் வேதச்சார்புடைய மகாபாரதம், அந்தணர், முத்தி ஆகியன சுட்டப்பட்டபோதும் அதற்கு எதிரான பூத இயற்கை, வேதநெறி திரிதல்

---

[161] முரஞ்சியூர் முடிநாகராயர், புறநானூறு, பாடலடி.2)

ஆகியவற்றிற்கும் இடமளித்திருப்பது வைதிக அவைதிக நெறிகள் சங்ககாலத்தில் இருந்தன என்பதைத் தெரிவிப்பனவாக உள்ளன.

திருமுருகாற்றுப்படையில் “முரணினர் உட்க”[162] என்ற பகுதி உலகாயதர் பற்றிக் குறிப்பிடும் குறிப்பு ஆகும். இவ்வாறு உலகாயதர் பற்றிய சான்றுகள் பல்வேறு நிலையில் கிடைக்கின்றன.

வேதமரபுகளை மறுக்கும் கருத்துகைள் உடைய சங்கப்பாடல்கள் பல படைக்கப்பெற்றுள்ளன. பின்வரும் பாடல் அதற்கு ஒரு சான்று

‘ நன்று ஆய்ந்த நீள் நிமிர் சடை

முது முதல்வன் வாய் போகாது,

ஒன்று புரிந்த ஈர் இரண்டின்,

ஆறு உணர்ந்த ஒரு முது நூல்

---

[162] நக்கீரர், திருமுருகாற்றுப்படை, அடி243

இகல் கண்டோர் மிகல் சாய்மார்,

மெய் அன்ன பொய் உணர்ந்து,

பொய் ஓராது மெய் கொளீஇ,

மூ ஏழ் துறையும் முட்டு இன்று போகிய

உரைசால் சிறப்பின் உரவோர் மருக! ''[163]

இப்பாடலைப் பொருள் உணர்ந்து கொள்வதில் குழப்பம் ஏற்படுவதுண்டு. இப்பாடல் வேத மரபை ஏற்றி உரைப்பதுபோன்று தோன்றும். ஆனால் வேதநெறியின் பொய்த்தன்மைகளை வெளிப்படுத்தி நிற்கிறது.

சிவபெருமானின் வாய்விட்டு நீங்காத ஆறு அங்கங்களை உடைய வேதங்களின் பொய்யை உணர்ந்து மெய் சொன்னவன் கௌணியன் விண்ணந்தாயன் என்னும் பார்ப்பான் ஆவான். இவன் வேதநெறியின்

---

[163] ஆவூர் மூலங்கிழார், புறநானூறு, பாடல்எண் 166

பொய்ம்மையை எடுத்துரைத்து மெய்யான தமிழ்நெறியை ஏற்றவன் என்று இப்பாடல் பொருள் தருகிறது. வேதமரபிற்கு எதிர் நிலையில் அமைந்த பாடல் இது என்பது கருதத்தக்கது.

பரிபாடலில் உள்ள செவ்வேள் பற்றிய பாடல் ஒன்றில் வேத மரபு மறுக்கப் பெற்றுள்ளது.

‘ நான்மறை விரித்து, நல் இசை விளக்கும்

வாய்மொழிப் புலவீர்! கேண்மின், சிறந்தது;

காதற் காமம், காமத்துச் சிறந்தது;

விருப்போர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி:

புலத்தலின் சிறந்தது, கற்பே அது தான்

இரத்தலும் ஈதலும் இவை உள்ளீடாப்

பரத்தை உள்ளதுவே: பண்புறு கழறல்,

தோள் புதிது உண்ட பரத்தை இல் சிவப்புற

நாள் அணிந்து, உவக்கும் சுணங்கறையதுவே;

கேள் அணங்குற மனைக் கிளந்துள, சுணங்கறை;

சுணங்கறைப் பயனும் ஊடலுள் ளதுவே.

அதனால், அகறல் அறியா அணி இழை நல்லார்

இகல் தலைக்கொண்டு துனிக்கும் தவறு இலர்; இத்

தள்ளாப் பொருள் இயல்பின் தண் தமிழ் ஆய்வந்திலார்''[164]

என்று தமிழின் சிறப்பை இப்பாடல் எடுத்துரைக்கிறது.

---

[164] குன்றம்பூதனார், பரிபாடல் பாடல் எண்.9 அடிகள் 12-26

நான்குமறை வல்லவர்களே! களவு, கற்பு போன்ற அகம் சார்ந்த இலக்கண, இலக்கிய, வாழ்வியல் கூறுகளைப் பெற்றது தமிழ் என்று அதன் பெருமையை எடுத்துரைக்கின்றார் குன்றம்பூதனார் என்ற புலவர்.

வேதநெறி சார்ந்து இயங்கும் பார்ப்பனர்களை விமர்சிக்கும் சில பாடல்களும் சங்க இலக்கியங்களில்உண்டு.

‘அன்னாய் வாழி வேண்டன்னை நம்மூர்ப்

பார்ப்பனக் குறுமகன் போலத் தாமுங்

குடுமித் தலைய மன்ற

நெடுமலைநாடன் ஊர்ந்த மாவே (ஐங்குறுநூறு பாடல் எண். 202)

என்ற பாடல் அந்தணச்சிறுவனின் குடுமியைப்போல குதிரையின் முடியும் இருந்தது என்று குறிப்பிட்டிருப்பது அந்தணர்களுக்கு சங்கச் சமுதாயத்தில் தரப் பெற்றிருந்த இடத்தை உணர்த்தும்.

சங்க காலத்தில வேத மரபு கலந்திருந்தாலும் பல்யாகங்களைச் செய்யச் சொல்லிப் புலவர்களே அரசர்களை வற்புறுத்தி இருந்தாலும் இவற்றுக்கு ஈடாக தமிழர் கொள்கையும் நடைபெற்றுவந்துள்ளது.

''உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்

அமிழ்தம் இயைவதாயினும் இனிது

எனத் தமியர் உண்டலும் இலரே

முனிவு இலர் துஞ்சலும் இலர்

பிறர் அஞ்சுவது அஞ்சிப்

புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்

உலகொடு பெறினும் கொள்ளலர் அயர்வு இலர்

அன்ன மாட்சி அனையராகித்

தமக்கென முயலா நோன்தாள்

பிறர்க்கென முயலுநர் உண்மையானே’[165]

என்ற இப்பாடலில் இந்திரர் என்ற ஆரியர் கருதும் புராணச் செய்தி இடம் பெற்றிருந்தாலும் தனியாக உண்ணாத தமிழ் மரபு எடுத்துரைக்கப் பெற்றுள்ளது. இந்த உலகம் தனக்கென வாழாத தகைமையாளர்களால் இன்னும் இருப்பதாக உள்ளது என்ற கொள்கை தமிழரின் கொள்கை எனக் கொள்வது இங்குப் பொருந்துவதாகும்.

எனவே மணிமேகலை காப்பியத்திற்கு முன்பும் உலகாயதர் கொள்கை இருந்தது என்பது உறுதி.

**சமணம்**

இந்திய மெய்ப்பொருள் வரலாற்றில் மிகப் பழமையான மெய்ப்பொருள் சார் தத்துவங்களில் ஒன்றாகக் கொள்ளத்தக்கது சமண சமயம் ஆகும். வேதகாலத்திற்கு

---

165 கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி புறநானூறு பாடல் எண். 182

முன்னதாகவே சமணம் நிலைபெற்றிருந்தது என்று வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதுவும் வேத மரபிற்கு எதிரானது. வேதம் சாராத மரபினைச் சார்ந்ததாக சமணம் நிறுவப்பட்டது.

"ஜைனமரபு 24 தீர்த்தங்கரர்களைக் குறிக்கிறது. அவர்களுள் முதல்வர் ரிஷபதேவர். அஹிம்சா தர்மத்தை வெளியிட்டவர். தீர்த்தங்கரர்களுள் கடைசியாகத் தோன்றியவர் மஹாவீரர். இவர் புத்தருக்கு மூத்தவர். ஆனால் இருவரும் ஒத்த காலத்தவர்களே. ஜைனம் பௌத்தத்தைவிடத் தொன்மை வாய்ந்தது. மஹாவீரர் கி.மு. 599 முதல் கி.மு. 527 வரையில் வாழ்ந்தவர். அவர் ஜைனத்தைத் தோற்றுவித்தவர் அல்லர். மஹாவீரருக்கு 250 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய பார்சவரும் மஹாவீரரும் வரலாற்றின்படி உண்மையாக வாழ்ந்தவர்களே." [166]என்று சமணத்தின் வரலாறு பதிவு செய்யப்பெற்றுள்ளது.

சமண மதத்தில் காட்டப்பெறும் 24 தீர்த்தங்கரர் வரிசை பின்வருமாறு.

---

[166] ஏ. சக்கரவர்த்தி, ஜைன மெய்ப்பொருள், சர்வபள்ளி இராதா கிருஷ்ணன், பதிப்பாசிரியர், கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருள் இயல் வரலாறு, பக். 219-220)

1. விருஷபர் , 2. அஜிதநாதர்,3. சம்பவநாதர், 4.அபிநந்தனர், 5.சுமதிநாதர்

6. பதுமநாபர், 7. சுபார்சவநாதர், 8. சந்திரப்பிரபர், 9.புஷ்பநந்தர், 10.சீதளநாதர்,

11.சிறீயாம்சநாதர், 12. வாசுபூஜ்யர் 13. விமலநாதர், 14.அநந்தநாதர்,

15. தருமநாதர், 16. சாந்திநாதர், 17. குந்துநாதர், 18. அரநாதர், 19. மல்லிநாதர்

20. முனிசுவர்த்தர், 21. நமிநாதர், 22. நேமிநாதர், 23. பார்சுவநாதர், 24. மகாவீரர்

இவ்வரிசையில் நிறைவில் உள்ள ஐவர் வரலாற்று காலத்தில் வாழ்ந்தவர்கள் ஆவர். இருபத்து மூன்றாம் தீர்த்தங்கரர் பார்சுவநாதரின் காலம் கி.மு. 817 முதல் கி.மு. 717 என்று கருதப்படுகிறது. மற்ற தீர்த்தங்கரர்கள் அவருக்கு முன்னவர்கள் ஆவர். இதன் காரணமாக சமணசமயம் தொன்மைக் கால சமயம் என்பது தெரியவருகிறது.

சமண சமயத்தின் அடிப்படை பின்வருமாறு. “இந்த உலகம் சீவன், அசீவன் ஆகிய இரண்டனால் ஆயது. சீவனது உண்மையியல்பு முற்றறிவு: பரிபூரண ஞானம். அது தனக்கு நேர்மாறான அசீவத் தொடர்பால் முற்றறிவு கெட்டுச் சிற்றறிவுற்று அல்லற்படுகின்றது. எனவே , சீவன் முயல வேண்டியது முற்றறிவை மீண்டும் எய்துதற்கு. அதனை எய்தின் அல்லல் நீங்கும். சீவனுக்கு அசீவத்தொடர்பு ஏற்படுவதற்கும், அதனால் அறிவு மழுங்குவதற்கும் நேர் காரணம் கன்மம். எனவே, அசீவத் தொடர்பை நீக்கி அறிவே மயமாக வேண்டுமாயின், கன்மத் தளையை நீக்கவேண்டும். இவை தாம் சாதாரணமாகத் தத்துவ ஞானிகள் பலரும் கூறுவதன் சுருக்கமும் சாரமும் ஆகும். சமணத் தத்துவத்தின் சாரமும் இதுவே”.[167] என்று சமணத்தின் தத்துவ அடிப்படை விளக்கப்படுகிறது.

“சரியான நம்பிக்கை, சரியான அறிவு, சரியான நடத்தை ஆகிவற்றின் மூலம் மனிதர்கள் விடுதலை பெற்ற ஆன்மாக்களாகி ஆனந்தமாக வாழலாம். அவர்களுக்கு மறுபிறவி கிடையாது. ஓர் உயிரினம் தனது பல்வேறு பிறவிகளில் செய்த

167 கி.லட்சுமணன், இந்தியத் தத்துவ ஞானம்,ப. 109

செயல்களின் கர்ம விளைவாகவே பல்வேறு உடல்களில் பிறந்து உழல்கிறது. கர்ம பந்தங்களில் இருந்து விடுதலை பெற்று ஆனந்தப் பெருவெளியில் மற்ற சுதந்திர ஆன்மாக்களுடன் சேருவதே வாழ்க்கையின் இலட்சியமாக இருக்க வேண்டும். எனச் சமணம் கூறுகிறது" [168]என்ற சமண சமயத்தின் நிறைநிலையான ஆனந்த நிலை விளக்கப் படுகிறது. இவ்வானந்த நிலையைப் பெற பதினான்கு கட்டங்களைக் கடக்கவேண்டியுள்ளது என்றும் சமணம் குறிக்கிறது.

மகாவீரர் சித்தாந்தம், ஆகமம் என்பதை அருளினார். இவரின் வாய்மொழி அருளுரைகளை இவரின் உத்தம சீடர்களான கணதரர் என்றழைக்கப்பெறும் பதினொருவர் தொகுத்தளித்துள்ளனர்.

அவ்வகையில் சமணத்தின் மூலமாக அமைவன

- அங்கம் 12,
- உபாங்கம்-12,

---

[168] கே.என். இராமச்சந்திரன், சமண சமய வரலாறும், விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்,ப.244)

- பிரகீரணம் 10,
- சேதசூத்திரம் 6,
- மூல சூத்திரம் 4,
- நந்தி,
- அனுபோகதாரம்

ஆகியனவாகும்.

இவற்றில் ஆகமம் என்பது புராதனப் பனுவல்கள் எனப்படும். அங்கம் எனப்படுவன முதல் நிலை விதிகளாகும். உபாங்கம் என்பன இரண்டாம் நிலை விதிகள் ஆகும். பலவகைப்பட்டவை ஒன்று சேர்ந்து அமைவது பிகரினகங்கள். சேத சூத்திரம் என்பது ஒழுக்க விதிகள் ஆகும். மூலச் சூத்திரங்கள் என்பவை அடிப்படைச்சட்டங்கள் ஆகும். சமண நூல்கள் முதலில் பிராகிருத மொழியில் எழுதப்பெற்றன. பின்பே வடமொழி உட்பட்ட பிற மொழிகளுக்கு ஆக்கம் செய்யப் பெற்றன.

சமணத்தில் பன்னிரு பனுவல்கள் (அங்கம்) முக்கியமானவை. ஆசாரங்கம், சூத்ர கிருதாங்கம், சமவாயங்கம், வியாக்யா பிரக்ஞாப்தி, ஞாதா தர்ம கதா, உபாசக தாசா, அந்தக்ரித்தசா, அன்னுத்தர உபபாதிக தசா, பிரச்ன வியாகரணா, விபாக சூத்திரம், கிரஸ்திவாதம் ஆகியன அப்பன்னிரு பனுவல்கள் ஆகும்.

உபாங்கமும் பன்னிரண்டு ஆகும். ஔபாதிக சூத்திரம், இராஜப்பிரஸ்னியா, ஜீவாபிகம சூத்திரம், பிரக்ஞாபனா சூத்திரம், சூரிய பிரக்ஞப்தி, ஜம்புத்வீப பிரக்ஞபதி, சந்திர பிரக்ஞபதி, நிரயாவலிகா, கல்பாவதம்சிகா, புஷ்பிகா, புஷ்பகலிகா, விருஷ்ணிதசா ஆகியன அப்பன்னிரண்டும் ஆகும்.

ஆதுரப்ரத்யாக்யானம், பக்த பரிக்ஞா, சம்தாரா, தண்டுல வைசாரிகா, சந்திரவேத்யகம், தேவேந்திர ஸ்தவம், கணித வித்யா, மகாப் பிரத்யாக்யானம், வீரஸ்தவம் போன்றன பிரகிரணங்கள் ஆகும்.

உத்ராத்யயனம், தசவைகாலிக சூத்திரம், ஆவஸ்யக சூத்திரம், அனுயோகத்வார சூத்திரம், நந்தி சூத்திரம், பிரதமானு யோகம், கரணானுயோகம், சரணானுயோகம், திரவியானுயோகம் போன்றன மூல சூத்திரங்கள் ஆகும்.

ஆசாரதசா, தசாஸ்ருதங்கந்தா, பர்யூஷனகல்பம், பிருகத் கல்பம், வியவகாரா, நிசிம், மகாநிசிதம், பஞ்சகல்பம், ஜிதகல்ப சூத்திரம் ஆகியன சேத சூத்திரங்கள் ஆகும்.

இவ்வகையில் பெருமளவில் பனுவல்களைக் கொண்ட சமயமாக சமண சமயம் விளங்குகின்றது.

மகாவீரர் முக்திப்பேறடைந்த பின்பு, இந்திரபூதி, சுதர்மர், சம்புசுவாமி, விட்ணுநந்தி, நந்தி மித்திரர், அபராசிதர், கோவர்த்தனர், பத்திரபாகு என்பவர்கள் சமண சமயத்தை வளர்த்தனர். பத்திரபாகு காலத்தில்தான் தமிழகத்திற்குச் சமணம் பரவ ஆரம்பித்தது, இதனை “பத்திரபாகு முனிவர் காலத்திலேதான் சமண சமயம் தமிழ் நாட்டிற்கு வந்தது என்பர். பத்திரபாகு முனிவர் கி.மு.317 முதல் கி.மு.297 வரையில் சமண சமயத் தலைவராக இருந்தவர். இவர், சமண சமயத் தலைவராக இருந்ததோடல்லாமல், பேர்பெற்ற சந்திரகுப்தன் (கி.மு.322-298) என்னும் மௌரிய அரசனுக்கு மத குருவாகவும் இருந்தார். இந்தச் சந்திரகுப்த மௌரியன் கிரேக்க அரசனாகிய மகா அலெக்சாந்தர் காலத்தவன். இந்தியாவை அரசாண்ட அசோக

சக்கரவர்த்தியின் பாட்டன்" (மயிலை சீனி வேங்கடசாமி, சமணமும் தமிழும், ப. 50) என்று மயிலை சீனி வேங்கடசாமி வரையறுக்கிறார். இக்குறிப்பில் அசோகர் பின்னாளில் பௌத்த சமய சார்பாளராக மாறியதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

சங்க இலக்கியங்களான மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை ஆகியவற்றில் சமணப் பள்ளிகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மதுரையில் உள்ள அருகதேவன் கோயில் நல்ல நிழலுடையதாக அமைந்திருந்தது. பள்ளியின் சுவர்கள் பெரிதாக அழகான ஓவியங்கள் தீட்டப்பெற்றதாக அமைந்திருந்தன. பூவும், புகையும் கொண்டு சமணர்களை மக்கள் வழிபட்டனர். முக்காலம் உணர்ந்து உலகத்தாருக்கு அதனைச் சொல்ல சமண முனிவர்கள் நோற்கின்றனர் என்று மதுரைக்காஞ்சி குறிக்கிறது.

"வண்டுபடப் பழகிய தேனார் தோற்றத்துப்

பூவும் புகையும் சாவகர் பழிச்சச்

சென்ற காலமும் வரூஉம் அமயமும்

இன்றிவண் தோன்றிய ஒழுக்கமொடு நன்குணர்ந்து

வானமும் நிலனுள் தாமுழுதுணரும்

சான்ற கொள்கைச் சாயா வாழ்க்கை

ஆன்றடங் கறிஞர் செறிந்தனர் நோன்மார் ''[169]

என்ற பகுதியும்,

''.................... வயங்குடை நகரத்துச்

செம்பியன் றன்ன செஞ்சுவர் புனைந்து

நோக்குவிசை தவிர்ப்ப மேக்குயர்ந்தோங்கி

இறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையும்

குன்றுபல குழீஇப் பொலிவன தோன்ற''[170]

---

[169] மாங்குடி மருதனார், மதுரைக்காஞ்சி, அடிகள் : 475-482

என்ற அடிகளும் மதுரைக்காஞ்சி காலத்தில் இருந்த சமண சமய நிலையை விளக்குவனவாகும்.

பட்டினப்பாலையில் அமண் பள்ளி இருந்த குறிப்பு காணப்படுகிறது. ‘‘தவப்பள்ளி‘‘[171] என்ற குறிப்பு அதனுள் இடம்பெற்றுள்ளது. இக்குறிப்பு அமண் பள்ளியைக் குறிப்பதாகும்.

மேலும் உலோச்சனார், நிக்கண்டன் கலைக்கோட்டு தண்டனார் போன்ற சங்க காலப் புலவர் பெயர்கள் சமணச் சார்புடையன. இவை தவிர சமணர்களின் வினைக்கோட்பாடு, நிலையாமைத் தத்துவம், வடக்கு இறுத்தல் போன்றவற்றைக் காட்டும் சங்க இலக்கியப் பாடல்கள் பல உள்ளன. இவ்வகையில் மணிமேகலைக் காப்பியத்திற்கு முன்னான சங்க காலத்தில் சமண சமயம் தமிழகத்தில் வளர்ச்சி பெற்றிருந்தமை தெரியவருகிறது.

---

[170] மாங்குடி மருதனார், மதுரைக்காஞ்சி, அடிகள் 484-488

[171] கடியலூர் உருத்திரங்கண்ணனார், பட்டினப்பாலை, அடி. 56

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் சமணம், பௌத்தம், உலகாயதம் போன்றவற்றின் கூறுகள் சுட்டப்பெற்றுள்ளன. "திருக்குறளில் சமண மும்மணிகளான நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் ஆகியவற்றின் செயன்மை நெறிகள் அமைந்துள்ளதாக"[172] சு.மாதவன் குறிக்கிறார். வள்ளுவம் பிறப்பறுத்தல் என்ற சமணக் கோட்பாட்டையும் எடுத்தியம்புகிறது. நாலடியாரில் உடலின் அளவைப் பொறுத்து உயிரின் அளவு அமையும் என்ற கருத்தும், பழமொழி நானூறில் பிச்சை ஓடு தானம் செய்யும் அறங்கள் செய்யும் முறை பற்றியும், நான்மணிக்கடிகையில் ஆயுள் முடிவடைந்த பிறகு ஏற்படும் இயல்பு மரணம் பற்றியும், சிறுபஞ்ச மூலத்தில் யாக்கை நிலையாமை பற்றியும் ஆன பல குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. மேலும் சிறுபஞ்சமூலம், ஏலாதி ஆகிய நூல்களின் கடவுள்வாழ்த்துப் பாடல்கள் தீர்த்தங்கரர் வணக்கமாக அமைந்துள்ளன. இக்குறிப்புகள் சமண சமய வளர்ச்சியில் எண்ணத்தக்கனவாகும்.

---

[172] சு. மாதவன், தமிழ் அற இலக்கியங்களும், பௌத்த சமண அறங்களும், ப.311

நாலடியார் சமண சமயம் சார்ந்த பலரால் எழுதப் பெற்றது. இதன் கடவுள் வாழ்த்துப்பகுதியில், இடம்பெறும் பாடல் பின்வருமாறு.

''வான்ஈடு வில்லின் வரவறியா வாய்மையால்

கால்நிலம் தோயாக் கடவுளை- யாம் நிலம்

சென்னி யுறவணங்கிச் சேர்தும் எம் உள்ளத்து

முன்னி யவைமுடிக என்று"[173]

என்ற இப்பாடல் அருக வணக்கமாக அமைகின்றது.

வானவில்லின் வரவையும் போக்கினையும் அறிய இயலாது. அதுபோன்று உயிர்களின் பிறப்பு இறப்பு ஆகியன பற்றியும் எது, எப்போது, ஏன் என்ற நிலைகளில் அறிந்துகொள்ள இயலாது. பாதம் புவியில் பாடாத அளவு பெருமை உடைய அருகக்கடவுளை வணங்கி நாம் எண்ணியதை முடிக்க வேண்டுவோம்

---

[173] சமண முனிவர்கள், நாலடியார், பாடல்எண் 1.

என்பது நாலடியாரின் தெய்வ வணக்கம் ஆகும். இந்த அருக வணக்கம் என்பது, தீர்த்தங்கரர்களை வணங்கும் நிலையது ஆகும்.

மேலும் நாலடியாரில் நிலையாமை கருத்துக்கள் பெரிதும் எடுத்துரைக்கப்பெற்றுள்ளன. செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை ஆகியனவும் வலியுறுத்தப்பெற்றுள்ளன. இவற்றின் வழி சமண சமயக் கருத்துகளை அறிந்து கொள்ள முடிகின்றது.

பழமொழி நானூறில் வரும் கடவுள் வாழ்த்து பின்வருமாறு

"அரிதவித்து ஆசின்று உணர்ந்தவன் பாதம்

விரிகடல் சூழ்ந்த வியன்கண் மாஞாலத்து

உரியதனிற் கண்டுணர்ந்தார் ஓக்கமே போலப்

பெரியதன் ஆவி பெரிது''[174]

---

174 முன்றுரையறையனார், பழமொழி நானூறு, பாடல்எண். 1

என்ற பாடல் பழமொழி நானூற்றின் முன்பகுதியில் அமைந்துள்ள கடவுள் வாழ்த்துப் பாடலாகும். இதில் பெரியதன் ஆவி பெரிது என்று ஒரு பழமொழி எடுத்தாளப்பெற்றுள்ளது கவனிக்கத்தக்கது. எனவே இக்கடவுள் வாழ்த்தும் பிறிதொரு புலவரால் எழுதப்படாது முன்றுறையரையனாராலேயே எழுதப்பெற்றிருக்க வேண்டும் என்பது தெரியவருகிறது.

பெரியதன் ஆவி பெரிது என்ற இந்த உவமை சமணசமயம் சார்ந்த உவமையாகும். சமண சமயத்தில் உடல் பெரியதாக இருந்தால் அதனுள் இருக்கும் உயிரும் பெரியதாக இருக்கும் என்ற கருத்து விளங்குகின்றது. சீவன் அல்லது உயிருக்குப் பருமனும் அளவும் குறிக்கின்றது.

‘‘ சமணரது தத்துவம். உயிர் எந்த உடலை தனக்கு உறைவிடமாகக் கொள்கின்றதோ அந்த உடலின் பருமனுக்கு ஏற்பத் தன்னைக் கூட்டவும் குறைக்கவும் விரிக்கவும் சுருக்கவும் வல்லது‘‘ [175] என்ற கருத்தினை மேற்கொண்டு

---

[175] கி.லெட்சுமணன், இந்தியத் தத்துவ ஞானம்,ப.96

பார்க்கையில் பழமொழிநானூற்றின் கடவுள் வாழ்த்து சமண சமயக் கொள்கைக்கு இடம் தருவதாக இருப்பதை அறியமுடிகின்றது.

பரந்த கடல் சூழ்ந்த உலகில் காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று குற்றங்களையும் கெடுத்துக், குற்றமற்றவராக விளங்கும் இறைவனின் திருவடிகளை அறிந்தவர்களின் உயர்வு பெரிதாகும். அது பெரிய உடலின் ஆவி பெரியதாக அமைவதுபோல் அமையும் என்பது இப்பாடலின் கருத்தாகும்.

இந்நூலுக்கு ஒரு தற்சிறப்புப் பாயிரம் ஒன்று உள்ளது. இதிலும் இந்நூல் சமணம் சார்ந்தது என்பது தெரிவிக்கப்பெற்றுள்ளது.

"பிண்டியின் நீழல் பெருமான் அடிவணங்கிப்

பண்டைப்பழமொழி நானூறும் கொண்டு இனிதா

முன்றுறை மன்னவன் நான்கடியும் செய்தமைத்தான்

இன்றுறை வெண்பா இவை''[176]

என்ற இப்பாடலில் அசோக மரத்தின் நிழலில் இருக்கும் பெருமான் என்று அருகப் பெருமான் வாழ்த்தப் பெறுகிறார். இவற்றின் வாயிலாகப் பழமொழி நானூறு சமண சமயம் சார்ந்தது என்பது தெளிவாகின்றது. இந்நூல் எழுந்த காலத்தில் சமண சமயத்தின் பரவல் இருந்தது என்பது உறுதியாகின்றது.

சிறுபஞ்சமூலமும் சமண சமயம் சார்ந்த நூலாகும். இந்நூலில் இடம்பெற்றுள்ள கடவுள் வாழ்த்து பின்வருமாறு.

'முழுதுணர்ந்து மூன்றொழித்து மூவாதான் பாதம்

பழுதின்றி ஆற்றப் பணிந்து – முழுதேத்தி

மண்பாய ஞாலத்து மாந்தர்க்கு உறுதியா

வெண்பா உரைப்பான் சில''[177]

---

[176] முன்றுரையறையனார், பழமொழி நானூறு, தற்சிறப்புப்பாயிரம், பாடல்எண். 1

என்ற கடவுள் வாழ்த்து காரியாசான் படைத்த, சிறுபஞ்சமூலத்தின் முன்பகுதியில் இடம்பெறுகின்றது.

காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்றினையும் ஒழித்து, முழுதுணர்ந்து, முதுமை பெறாத இறைவனின் பாதத்தைக் குற்றமின்றி வணங்கி அப்பெருமானின் குணங்களைப் போற்றி இவ்வுலகத்திற்கு நன்மை உண்டாகும் வண்ணம் சிறுபஞ்சமூலம் என்ற நூலை நான் உரைப்பேன் என்ற ஆசிரியர் கூற்றாகக் கடவுள் வாழ்த்து அமைகின்றது. இதன்வழி இந்நூலின் காலத்திலும் சமணசமயத்தின் பரவல் இருந்துள்ளது என்பது உறுதியாகின்றது.

ஏலாதி என்ற நூலும் சமண சமயச் சார்புடைய நூலாகும்.

''அறுநால்வர் ஆய்புகழ்ச் சேவடி யாற்றப்

பெறுநாலவர் பேணி வழங்கிப் பெறுநூல்

மறைபுரிந்து வாழுமேல் மண்ணொழிந்து விண்ணோர்க்கு

---

[177] காரியாசான், சிறுபஞ்சமூலம், பாடல்எண்.1.

இறைபுரிந்து வாழ்தலியல்பு''[178]

என்ற இப்பாடலில் சமண சமய அடிப்படைகள் பல கூறப்பெற்றுள்ளன.

சமண சமயத்தில்தீர்த்தங்கரர்கள்- 24, அவதராங்கள்-24, தேவராசி -4, சக்கரவர்த்திகள் -12, பலதேவர்-9, வாசுதேவர் -9 என்ற கூறுபாடுகள் ஏற்கப்படுகின்றன. இவர்கள் கொல்லாமை முதலான அறங்களை உலகில் பரவச் செய்தவர்கள் ஆவர்., புண்ணிய நூல்களால் உணர்த்தப்படுகின்ற உயர்ந்தோரை எப்போதும் துதி செய்து வாழுங்கள். இறந்தபின் இதற்கு வாய்ப்பில்லை. தேவர்களுக்கு அரசனும் இதனையே செய்து பெரும்பதவி பெற்றான் என்கிறது இப்பாடல்.

ஏலாதி நூலின் ஆசிரியராக விளங்கும் கணிமேதாவியார் பாடிய அகத்துறைப் பாடல் திணைமாலை நூற்றைம்பது ஆகும். இந்நூலும் சமண சமயத்தவரால் எழுதப்பெற்றது என்பதற்கு ஏலாதி சான்றாக அமைகின்றது.

---

178 கணிமேதாவியர், ஏலாதி, பாடல்.1

இவ்வாறு சமண சமய நூல்களின் கடவுள் வாழ்த்துகள் அக்கடவுளின் தன்மைகளை, இயல்புகளை, அவர்களின் சுற்றத்தை எடுத்துக்காட்டுகின்றது. இதன் காரணமாக பதினெண் கீழ்க்கணக்கு காலத்தில் சமணத்திற்கு உயரிய இடம் இருந்ததை உணரமுடிகின்றது. அதாவது ஏறக்குறைய ஐந்து நூல்கள் என்ற பெரிய எண்ணிக்கை சமண சமயத்தின் ஆளுமை உயர்வை இக்காலத்தில் காட்டுவதாக உள்ளது.இவ்வகையில் சங்க இலக்கியம், சங்கம் மருவிய இலக்கியம் ஆகிய காலங்களில் தமிழகத்தில் சமணம் பரவலாக மக்களின் புழங்கு சமயமாக இருந்தது என்பதை உணரமுடிகின்றது.

இதனைத் தொடர்ந்து எழுந்த காப்பிய காலத்திலும் சமணச் சார்புடைய பல காப்பியங்கள் படைக்கப்பெற்றன. முத்தமிழ்க்காப்பியமான சிலப்பதிகாரத்தில் சமண சமயம் பற்றிய பல குறிப்புகள் காணப்படுகின்றன. புறநிலைக்கோட்டம் என்ற நிலையில் சமண ஸ்ரீகோயில் இருந்ததைச் சிலப்பதிகாரம் காட்டுகின்றது.

“அறவோர் பள்ளியும் அறனோம் படையும்

புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத்தானமும்

திறவோர் உரைக்கும் செயல் சிறந் தொருபால்" [179]

என்ற நிலையில் இப்புறநிலைக்கோட்டம், கோயில், சமணத் துறவியர் தங்குமிடம் ஆகியன கொண்டு விளங்கியது. இக்கோட்டத்தில் கவுந்தியடிகளின் தவப்பள்ளி அமைந்திருந்ததாகச் சிலப்பதிகாரம் குறிக்கிறது. திருவரங்கத்திலும், உறையூரிலும், மதுரையிலும் புறநிலைக் கோட்டங்கள் இருந்ததாகச் சிலப்பதிகாரம் குறிக்கின்றது.

சாரணர் ஒருவர் அருகதேவனின் புகழை அடுக்கி மொழிகிறார். இப்பகுதியில் பலபேர் சொல்லி அருகனை வாழ்த்துகிறார் இளங்கோவடிகள்.

"அறிவன், அறவோன், அறிவு வரம்பு இகந்தோன்,

செறிவன், சினேந்திரன், சித்தன், பகவன்,

தரும முதல்வன், தலைவன், தருமன்,

---

179 இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், அடிகள்., இந்திரவிழவூரெடுத்த காதை,அடிகள். 179-181

பொருளன், புனிதன், புராணன், புலவன்,

சினவரன், தேவன், சிவகதி நாயகன்,

பரமன், குணவதன், பரத்தில் ஒளியோன்,

தத்துவன், சாதுவன், சாரணன், காரணன்,

சித்தன், பெரியவன், செம்மல், திகழ் ஒளி

இறைவன், குரவன், இயல் குணன், எம் கோன்,

குறைவு இல் புகழோன், குணப் பெரும் கோமான்,

சங்கரன், ஈசன், சயம்பு, சதுமுகன்,

அங்கம் பயந்தோன், அருகன், அருள் முனி,

பண்ணவன், எண் குணன், பாத்து இல் பழம் பொருள்,

விண்ணவன், வேத முதல்வன், விளங்கு ஒளி" [180]

என்ற பாராட்டு மொழிகள் அருகதேவனை வணங்கும் பாமாலையாகும். அடுத்தநிலையில் அருகக் கடவுளின் இயல்பினை ஏறக்குறைய இருபது அடிகளில் இளங்கோ பாடியுள்ளார்.[181] இவை தவிர கவுந்தியடிகள் சமண நெறிப் பரப்புநராகவும் விளங்குகிறார். சமணரின் அங்காகமங்கள், சாதகக் கதைகள், மெய்ப்பாட்டியற்கை முதலானவற்றைப் பற்றியும் குறித்துள்ளார். இதன் காணரமாக மணமேகலைக் காப்பியத்திற்கு முன்னதான சிலப்பதிகார காலத்தில் சமண சமயம் எழுச்சி நிலையில் விளங்கியது என்பது தெரியவருகிறது.

**<u>பௌத்தம்</u>**

---

[180] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், நாடுகாண்காதை,அடிகள் 176-189

[181] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், நாடுகாண்காதை, அடிகள். 176-189

கௌதமன் என்ற இளவரசன் ஞானத்தைத் தேடி அடைந்ததன் வாயிலாக பௌத்தம் என்ற தத்துவ நெறி தோற்றம் பெற்றது. "புத்தர் கி.மு. 573இல் பிறந்தார் என்றும், கி.மு. 563 இல் பிறந்தார் என்றும் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. புத்தர் பிறந்து முப்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் வைகாசி மாதம் முழுமதி நிறைந்த நன்னாளன்று போதிஞானம் பெற்றார்" [182]என்று குறிக்கப்பெறுகிறது. முதலில் சொல்லப்பட்ட காலத்தைச் சரியெனக் கொண்டால் கி.மு. 538 ஆம் ஆண்டளவில் பௌத்த சமயம் கௌதம புத்தரால் பரப்பத் தொடங்கப்பெற்றது என்று முடியலாம்.

துறவு நெறியைக் கைக்கொள்ளுதல், ஆசிரியரைச் சார்ந்து தத்துவ விளக்கம் பெறுதல், நோன்பிருத்தல் போன்ற பல செயல்களைச் செய்தும் கௌதம புத்தர் தாம் தேடியதைப் பெற இயலவில்லை. சமணம், ஆசீவகம், வைதிக மத குருக்களை அண்டி நோன்பிருந்து உடலை வருத்தி ஒருபயனும் இல்லை என்றுணர்ந்தார்.[183]

---

[182] சு. மாதவன், தமிழ் அற இலக்கியங்களும், பௌத்த சமண அறங்களும், ப.32

[183] . மு.கு. ஜகந்நாத ராஜா, பவுத்தம், தத்துவ தரிசனங்கள்,ப.129

தானே ஆன்மா பற்றியும், மனிதர்களின் முடிவு பற்றியும், உலகம் பற்றியும் அவர் ஒரு தெளிவான முடிவிற்கு வர தானே முயன்றார்.

“நெரஞ்சரா” (நைரஞ்சரை என்றும் அழைக்கப்படுகிறது) என்ற ஆற்றின் கரையில் உருவெலா என்ற இடத்தில் இருபத்தெட்டு நாட்கள் (நாற்பத்தொன்பது நாட்களும் என்றும் குறிக்கப்பெறுகிறது) சிந்தனையில் ஆழ்ந்தார். பகலும், இரவும் துயிலாமல் துக்க நீக்கத்திற்கான வழி யாது எனத் தேடினார்;. இருபத்தொன்பதாவது நாளில் புத்தர் தெளிவான காட்சிகள் சிலவற்றைக் கண்டார்.

அவை பற்றி பல நிகழ்வுகள் சுட்டப்பெறுகின்றன. “போதி விருஷத்தினடியே யிருந்த நாட்களுள் ஒரு நாளிரவில் புத்தர் தியானஞ் செய்கையில் முதல் யாமத்திற் செய்த தியானத்திற் பழம்பிறப்பின் நிலைமைகளெல்லாம் அவருக்குத் தெரியவந்தன. இரண்டாம் யாமத்திற் செய்த தியானத்தில் அப்பொழுதுள்ள பிறப்பின் நிலைமைகளெல்லாம் அவருக்குத் தெரியவந்தன. மூன்றாம் யாமத்திற் செய்த தியானத்தில் துவாதச நிதானரூபமாகிய ஏது நிகழ்ச்சி அவருக்குத் தெரியவந்தது.

நான்காந் தியானத்திற் சூரியன் உதியா நிற்கையில் முழுவதும் அவருக்குத் தெரியவந்தது''[184] என்று குறிக்கப்பெறுகிறது.

"உடலுக்கு நோயும் நோய்க்குக் காரணமும், நோயின் நீக்கமும், நோய் நீக்கும் வழியும் உளவாதல் போல, துக்கம் என்பதும் அதன் காரணமும் துக்க நீக்கமும் அவை நீக்கும் வழியும் உள. ... துக்கம், துக்கத் தோற்றம் (சமுதாய), துக்க நீக்கம் (நிரோத), துக்க நீக்க நெறி (மார்க்க என்னும் வாய்மை) நான்கும் உள. இவற்றை ஒப்புக் கொள்ளாமல் மெய்ப்பொருளைத் தேடுதல் பொருளற்றதாகும்''[185] என்பதும் புத்தர் கண்ட உண்மையாகின்றது.

"உலகப் புலனின்பங்களை நாடும் வைதிக நெறிக்கும், புலனின்பங்களைக் கடுமையாக ஒறுக்கும் சமண நெறிக்கும் இடைப்பட்டதான நடுவழி ஒன்றைத்

---

[184]"(உ. வே. சாமிநாதையர், (ப.ஆ) மணிமேகலை , ப. 561

[185] எச். டி. பட்டாச்சார்யா, தொடக்க காலப் பௌத்தமதம், சர்வபள்ளி இராதா கிருஷ்ணன், பதிப்பாசிரியர், கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருள் இயல் வரலாறு, பக்.349

தேர்ந்து, மனித குலம் முழுவதையும் நேசிக்கும் அன்பும் அருளும் பரிவுணர்வும் மிக்க புது நெறியை உபதேசித்தார்"[186] என்று புத்தர் கண்ட நெறி மதிப்பிடப்பெறுகிறது.

புத்தர் நிர்வாணம் அடைந்த பல நூறு ஆண்டுகளுக்குப் பிறகு தான் அவரின் வாழ்வு,கொள்கைகள் பற்றிய பதிவுகள் எழுதப்பெற்றன என்ற நிலையில் அவ்வாறு எழுதப்பெற்ற பதிவுகள் வழியாக புத்தர் இவற்றைத்தான் கண்டிருக்க இயலும் என்ற முடிவிற்கே ஆய்வாளர்கள் வருகின்றனர்.

இவரின் பெருமை கருதி இவர் பல பெயர்களால் அழைக்கப்பெற்றார். ஜினன், சர்வக்ஞன், சுகதர், ததாகதர், பகவன் என்பன அவற்றுள் சிலவாகும்.

கௌதம புத்தருக்கு முன்னதாக பல புத்தர்கள் இருந்ததாகவும் குறிப்புகள் பல கிடைக்கின்றன. "சுத்த பிடாகத்தின் முதல் நான்கு நிகாயங்களில் கௌதம புத்தருக்கு முன் ஆறு புத்தர்கள் இருந்தனர் என்ற செய்தி காணப்படும். புத்தவமிசம் என்ற

---

[186]மு.கு. ஜகந்நாத ராஜா, பவுத்தம், தத்துவ தரிசனங்கள்,ப.129

நூலில் 24 புத்தர்களைப் பற்றிய குறிப்பு உண்டு” [187]என்பதன்படி பௌத்த சமயம் பழமையானது என்பது தெரியவருகிறது. விபஸி, சிகி, வெஸபு, ககஸ{ந்தா, கொன்னாகமன, கசப்பா ஆகிய அறுவறும் புத்தருக்கு முந்தைய புத்தர்களாகக் கொள்ளப்பெறுகின்றனர். இவர்களுள் கௌதமபுத்தர் பௌத்த சமயம் பரவ வழி செய்தவர் என்பதும் பெறப்படுகிறது. இவை தவிர எதிர்காலத்தில் தோன்ற உள்ள புத்தர் மைத்ரேயர் என்றும் குறிக்கப்பெற்றுள்ளார்.

**பௌத்த சங்கம்**

புத்தம், தருமம், சங்கம் என்பன பௌத்த மும்மணிகள் ஆகும். இவற்றில் சங்கம் வழியாகப் பௌத்தம் பெருவளர்ச்சியைப் பெற்றது. புத்தர் ஞானக் காட்சியைப் பெற்ற பின்னர் தன்னுடன் சில ஆண்டுகளுக்கு முன்பு உடனுறைந்த ஐந்து துறவிகளைத் தேடிச் சென்றார். அவர்கள் அனைவரும் இறப்பை எய்தினர் என்றறிந்துப் புத்தர் வருந்தினார். ஒருமுறை உருவேலா வனத்தில் தாம் கண்ட ஐந்து துறவியரை மீளவும் கண்டு அவர்களிடத்தில் தன் மதத்தை நிறுவச் சென்றார்.

---

[187] சோ. ந. கந்தசாமி, பௌத்தம்,ப.2

அவர்கள் முதலில் மறுத்தாலும் பின்னர் ஏற்றுப் புத்தரின் சீடர்கள் ஆயினர். இவ்வகையில் புத்த சங்கம் தோற்றம் பெற்றது. இதன் பின் யசன் என்பவன் தன் ஐம்பத்துநான்கு நண்பர்களுடன் புத்தரை அடைந்தான். தற்போது சீடர்களின் தொகை அறுபதை எட்டியது. அவ்வப்போது சீடர்களுக்கு ஞான உரை வழங்குவது அவர்களுடன் உடன் உறைவது என்பது புத்தரின் செயல்பாடாகிறது. மழைக்காலத்தில் தன்னுடன் சீடர்களை அமைத்துக்கொண்டு அவர்களிடம் ஞான போதனை செய்து மற்ற நாள்களில் அவர்களைச் சமயம் பரப்பும் கடமைக்குச் செல்லச் செய்வது என்பது புத்தரின் சங்கச் செயல்பாடாகும்.

எளிமையான வாழ்க்கை வாழப் புத்த சங்கத்தார் கற்றுக்கொண்டனர். எடுத்து உண்ணும் வழக்கமே அவர்களின் உயிருக்கான உணவாக இருந்தது. அதிலும் அவ்வேளைக்குத் தேவையான உணவை மட்டுமே பிட்சையாகப் பெற வேண்டும். இவர் வீட்டுக்குப் போகலாம், போகக்கூடாது என்ற வேறுபாடு காட்டக் கூடாது. பிட்சைப் பாத்திரம் ஒன்று, துணிவகை மூன்று, இடையிற் கட்டும் கச்சை, கந்தை தைக்க ஊசி, சவரக்கத்தி, நீர் வடிகட்டுகிற துணி ஆகிய எட்டு மட்டுமே கைக்கொண்டவர்களாக புத்தப் பிட்சுகள் இருந்தனர்.

**<u>பௌத்த நூல்கள்</u>**

கௌதம புத்தருக்குப் பின்பு, அவரின் சீடர்களான சாரிபுத்தர், மௌத்கல்யாயனர், காசியபர், ஆனந்தர் போன்றோர் பௌத்த சமயம் பரவ வழி செய்தனர். கௌதம புத்தருக்குப் பிற்காலத்தில் பௌத்த சமயக் கருத்துகள் தொகுக்கப்பெற்றன. அவை த்ரிபீடங்கள் என வகைப்படுத்தப்பட்டன. இவை அனைத்தும் பாலி மொழியில் எழுதப்பெற்றுள்ளன. அவை பின்வருமாறு.

1. வினய பீடகா

2. சுத்த பீடகா

3. அபிதம்ம பீடகா

இவையே த்ரிபீடங்கள் ஆகும். புத்த பிட்சுகள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் பற்றி உரைப்பது வினய பீடகா என்பதாகும். புத்தர் மற்றும் அவர்தம் சீடர்கள் வழங்கிய மதம், தர்மம் இவை பற்றிய கருத்துகள் சுத்த பீடகா எனத்

தொகுக்கப்பெற்றது. இலக்கியச் செறிவுடன் எழுதப்பெற்றது அபிதம்ம பீடகா ஆகும்.

இவை தவிர வடமொழியில் எழுதப்பெற்ற நூல்களும் பௌத்த சமயத்தின் அடிப்படைகளாக விளங்குகின்றன. மகாவத்க, லலிதவிஸ்தாரா, புத்தசரிதம், ஜாடக மாலா இலங்காவதார சூத்திரம், சத்தரும புண்டரீகம், சுகாவதி வியூகம், கருணா புண்டரிகம், பிரஞ்யுபாரதமித சதகம் போன்றன இங்குக் குறிக்கத்தக்கன.

**பௌத்தத்தின் அடிப்படைகள்**

புத்தர் கண்டறிந்த நற்காட்சிகளின் அடிப்படையில் அவரின் பௌத்த சமயக் கொள்கைகள் அவரின் சீடர்களால் உருவாக்கப்பெற்றன. அவற்றில் குறிக்கத்தக்க சில பின்வருமாறு.

"புத்தர் நிறுவிய பௌத்த மதம் நான்கு உன்னத உண்மைகளையும், எட்டு (அஷ்டாங்க) மார்க்கங்களையும் அடிப்படையாகக் கொண்டது. உலகில் நிறைந்துள்ள துன்பங்களுக்கு முதுமை, மரணம், பிறவி, மறுபிறவி, சிற்றின்பங்கள், மூவாசைகள். முற்பிறவிகளின் கர்மம், அறியாமை, உடல், உள்ளம் ஆகியவையே

காரணம். நன்னெறி(சீலம்), மனக்கட்டுப்பாடு (சமாதி), அறிவு (பிரக்ஞை) ஆகியவற்றின் அடிப்படையிலான அஷ்டாங்க மார்க்கம் மோட்சமளிக்கும். சரியான பேச்சு, சரியான செயல். அஹிம்சை, திருடாமை, பொய் சொல்லாமை, தகாத பாலுறவு தவிர்த்தல், கள்ளுண்ணாமை, சரியான வாழ்க்கை முறை ஆகியவை நன்னெறிகள். மனத்தில் தவறான எண்ணங்கள் தோன்றாமல் தடுத்தலும், மனம், மெய், மொழி மூலமாகத் தவறுகள் செய்யாமல் இருத்தலும், தியானத்தில் ஈடுபடுதலும் மனக்கட்டுப்பாடு ஆகும். நிஜத்தைச் சரியாக உய்த்துணர்தலும் சுயநலமின்மை, கருணை , பற்றறுத்தல் ஆகியவற்றைப் பற்றிய சரியான சிந்தனைகளும் அறிவு ஆகும். “ [188]

“புத்தருடைய உபதேசங்களை நான்கு சீரிய உண்மைகளாக பௌத்த மரபு கூறுகிறது.(ஆர்யசத்யம்) அவை பொருள்களின் தோற்றம் சார்ந்த கொள்கையுடன் தொடர்புள்ளவை. (பிரதீத்ய-சமுத்பாதம்) உலகத் துன்பங்களுக்கு பன்னிரெண்டு காரணங்கள் இருப்பதாகவும், நிர்வாணம் பற்றியும் நான்கு உண்மைகளில்

---

188 கே.என். ராமச்சந்திரன், சமண சமய வரலாறும், விஞ்ஞானமும், மெய்ஞ்ஞானமும்,ப. 408

கூறப்பட்டுள்ளன. (துவாதச நிதானம்) பிரதீத்ய சமுதாயத்தில் உலகின் நிரந்தரமற்ற தன்மை(அநித்யதா வாதம்) ஆத்மா என ஒன்று இல்லை என்பதும் (அனாத்ம வாதம்) இரண்டும் இடம் பெற்றுள்ளன.நான்கு சீரிய உண்மைகளாவன: 1. எல்லாமும் துன்பத்தில் வாழ்ந்தவை 2. துன்பத்திற்கு ஒரு காரணம் உள்ளது. 3. துன்பத்தை அழிக்கமுடியும்.4. முடிவுக்கு ஒரு வழி உள்ளது.“[189] என்ற கருத்து பௌத்த அடிப்படையை விளக்குவதாக உள்ளது.

**<u>பௌத்த சமயப் பிரிவுகள்</u>**

கால வெள்ளத்தில் பௌத்த சமயத்தில் இரு பிரிவுகள் தோன்றின. அவை ஹீனயானம், மகாயானம் என்பனவாகும். ஹீனயான பௌத்தம் புத்த கொள்கையில் சிறிதும் மாறுபடாதது. மகாயான பௌத்தம் புத்தர், போதி சத்துவர் ஆகியோரைச் சிலைகளாக வடித்து அவர்களைக் கடவுளாக வணங்கும் தன்மையது.

இப்பிரிவினர் தவிர

---

[189] தேவிபிரசாத் சட்டோபத்யாயா,இந்தியத் தத்துவ இயல், ப. 151

- வைபாடிகர்கள்.
- சௌத்திராந்திகர்கள்,
- யோகசாரர்கள்,
- மாத்யமிகர்கள்

என்ற பிரிவினரும் பௌத்த சமயம் சார் பிரிவினராக விளங்குகின்றனர்.

**வைபாடிகர்கள்**

காஷ்மீர் பகுதியில் விளைந்த பௌத்த சமயம் தனக்கான தனித்தன்மைகளின் வழியாக வைபாடிகம் என்னும் தனிப்பிரிவாக ஆனது. இவர்கள் காட்சி அளவையாக புற உலகைக் கண்டனர். அபிதம்ம பீடகாவிற்கு விபாஷா என்ற பேருரை செய்யப்பெற்றது. இப்பேருரை செய்யப்பெற்ற காலம் கனிஷ்கர் என்ற அரசரின் காலமாகும். இப்பேருரையின்பால் ஏற்பட்ட ஈர்ப்பின் காரணமாக தோன்றிய பௌத்த சமயம் வைபாடிகம் ஆயிற்று. இவ்வைபாடிகமும் இருவகைப்பட்டதாக அமைந்தது. காஷ்மீரத்து வைபாடிகர், அபராந்தகர்கள் என்பன அவ்விரு பிரிவுகள் ஆகும். இவற்றில் அபராந்தகர்கள் என்பவர்கள் மேற்கு எல்லை சார்ந்தவர்கள் ஆவர்.

**<u>சௌந்திராந்திகர்கள்</u>**

குமாரலாதர் என்பவரால் உருவாக்கப்பெற்ற பௌத்த சமயப்பிரிவு சௌந்திராந்திகம் ஆகும். இவர்கள் உலகைக் கருதல் அளவையால் உணர்ந்தனர்.

**<u>யோகசாரம்</u>**

கருத்து முதல் கொள்கை, யோகம் பயிலல் ஆகியவற்றினைக் கொண்ட பௌத்தப் பிரிவு யோகசாரம் ஆகும். யோக சாரம் என்பது சமாதி நிலையைக் கூட்டுவிக்கிற அனுபவம் ஆகும். இது விஞ்ஞான வாதம் என்றும் கொள்ளப்பெறுகிறது. மைத்ரேய நாதர் என்பவர் இப்பகுப்பை முறைமை செய்தார்.

**<u>மாத்யமிகர்கள்</u>**

நாகார்ஜுனர் மூல மாத்யமகக் காரிகை என்ற நூலை எழுதினார். இதனுள் இச்சமயக் கருத்துகள் இடம்பெற்றுள்ளன. இவரின் சீடரான ஆரிய தேவர் சதுசாதிகா என்ற நூலை எழுதினார். மற்றொரு சீடரான சந்திரகீர்த்தி என்பவர்

மாத்யமகக் காரிகை பெரிதும் விளக்கம் செய்தார். புத்தர் கண்ட நடுநெறியைப் பின்பற்றுபவர்கள் மாத்யமிகர்கள் ஆவர்.

இவ்வாறு சமயம் என்ற கட்டமைப்பில், பல்கிப் பெருகிப் பரவலாக மக்களிடம் செல்வாக்கு பெற்ற சமயமாக பௌத்த சமயம் விளங்குகிறது. இது தமிழகத்திற்கு கி.மு மூன்றாம் நூற்றாண்டில் வந்திருக்க இயலும் என்று முடிவு காண்கிறார் மயிலை சீனி வேங்கடசாமி[190] அசோகர் காலத்தில் மகிந்தர் என்பவரால் பௌத்தம் சமயம் தமிழகத்தில் பரவச் செய்யப்பெற்றது என்பது ஆராய்ச்சியாளர்களால் ஏற்கப்பெற்ற கருத்தாகும்.

சங்க இலக்கியங்களில் பௌத்த சமயம் பற்றிய பல குறிப்புகள் கிடைக்கின்றன. பக்குடுக்கை நன்கணியார், இளம்போதியார், சங்க வருணர், சிறுவெண்தேரையார், தேரதரன் முதலிய சங்க இலக்கியப் புலவர் தம் பெயர்கள் பௌத்தச் சார்பினவாகும். மோரியர், திகிரி, வம்ப மோரியர் போன்ற குறிப்புகள் சங்க இலக்கியத் தொகுப்பில் காணப்பெறுகின்றன. இதன் காரணமாக சங்க

---

[190] மயிலை சீனி வேங்கடசாமி, பௌத்தமும் தமிழும், ப. 2

காலத்திலேயே பௌத்த சமயக் கூறுகள் காணப்படுகின்றன என்பது உறுதியாகின்றது. மேலும் சாத்தன் என்ற பெயரை உடைய புலவர்கள் பலர் சங்க இலக்கியத்தில் காணப்பெறுகின்றனர். அவர்களின் பாடல்களும் பௌத்தச் சார்பினைப் பெற்றனவாக அமையத்தக்கன.

புறநானூற்றில் பல பாடல்களில் பௌத்த மதக் கருத்துகள் காணப்படுகின்றன. குறிப்பாக, முன்னூற்று அறுபது, முன்னூற்று அறுபத்து மூன்று ஆகிய எண்ணுடைய பாடல்களில் பௌத்தமதக் கருத்துகள் காணப்படுகின்றன.

“பெரிது ஆராச் சிறு சினத்தர்

சில சொல்லால் பல கேள்வியர்

நுண்ணுணாவினாற் பெருங் கொடையா

கலுழ் நனையால் தண் தேறலா

கனி குய்யாற் கொழுந் துவையர்,

தாழ் உழந்து தழூஉ மொழியர்

பயன் உறுப்பப் பலாக்கு ஆற்றி

ஏமமாக இந்நிலம் ஆண்டோர்

சிலரே பெரும் கேள் இனி நாளும்,

பலரே தகை அ.து அறியாதோரே

அன்னோர் செல்வமும் மன்னி நில்லாது

இன்னும் அற்று, அதன் பண்பே அதனால்

நிச்சமும் ஒழுக்கம் முட்டிலை பரிசில்

நச்சுவர் கையின் நிரப்பல் ஓம்புமதி

அச்சுவரப் பாறுஇறை கொண்ட பறந்தலைமாக

கள்ளி போகிய களரி மருங்கின்,

வெள்ளில் நித்த பின்றைக் கள்ளொடு

புல்லகத்து இட்ட சில்லவிழ் வல்சி,

புலையன் ஏவப் புன்மேல் அமருந்துகொண்டு,

ஆழல்வாய்ப் புக்க பின்னம்,

பலர்வாய்த்து இரா அர், பகுத்துஉண்டோரே? ‘‘[191]

என்ற பாடலில் பௌத்த சமயக் கருத்துகளில் முக்கியமான மூன்று சுட்டப்பெறுகின்றன. செல்வம் நிலையில்லாதது, உயிரில் பொருள், உயிருள் பொருள் இரண்டும் நிலையில்லாதவை, நாளம் ஒழுக்கத்தில் குறைவு படாது வாழவேண்டும்

ஐயாதிச் சிறுவெண்டேரையர் எழுதிய முன்னூற்று அறுபத்து மூன்றாம் பாடலில் நிலையாமை பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

“இருங்கடல் உடுத்தஇப் பெருங்கண் மாநிலம்

---

[191] சங்க வருணர் என்னும் நாகரையார், புறநானூறு, பாடல்எண். 360

உடைஇலை நடுவணது இடைபிறர்க்கு இன்றித்

தாமே ஆண்ட ஏமம் காவலர்

இடுதிரை மணலிலும் பலரே சுடுபிணக

காடுபதியாகப் போகித், தத்தம்

நாடு பிறர்கொளச் சென்று மாய்ந்தனரே

அதனால் நீயும் கேண்மதி அத்தை வீயாது

உடம்பொடு நின்ற உயிரும் இல்லை

மடங்கல் உண்மை மாயமோ அன்றே

கள்ளி ஏய்ந்த முள்ளியம் புறங்காட்டு

வெள்ளில் போகிய வியலுள் ஆங்கண்,

உப்பிலாஅ அவிப்புழுகல்

கைக்கொண்டு, பிறக்கு நோக்காது,

இழி பிறப்பினோன் ஈயப் பெற்று,

நிலங்கலனாக, இலங்குபலி மிசையும்

இன்னா வைகல் வாரா முன்னே,

செய்ந்நீ முன்னிய வினையே,

முந்நீர் வரைப்பகம் முழுதுடன் துறந்தே”[192]

என்ற பாடலில் யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை போன்றன சுட்டப்பெற்று, துறவு நெறி வலியுறுத்தப்பெறுகிறது.

புறநானூற்றுப் பாடலான

“நாடாகொன்றோ காடாகொன்றோ

[192] ஐயாதி சிறுவெண்தேரையார், புறநானூறு, பாடல்எண். 363

அவலா கொன்றோ மிசையா கொன்றோ

எவ்வழி நல்லவர் ஆடவர்

அவ்வழி நல்லை வாழிய நிலனே" [193]

என்ற பாடல் தம்மபதத்தின் மொழி பெயர்ப்பு என்று ஆய்வாளர்களால் முடிவு கட்டப்பெற்றுள்ளது.

"நாடாக இருந்தாலும் காடாக இருந்தாலும்

பள்ளமாக இருந்தாலும் மேடாக இருந்தாலும்

எங்கே சான்றோர்கள் நடமாடுகின்றார்களோ

அந்த நிலமானது எழில் நலமுடையதாகும்"

---

[193] ஔவையார், புறநானூறு, பாடல்எண்.187

என்ற தம்மபதப் பாடல் மேற்காட்டிய பாடலுடன் ஒற்றுமைப் பட்டு நிற்கிறது. அசோகரின் தர்ம சக்கரத்தைப் பற்றிய குறிப்பு புறநானூறு நூற்று எழுபத்தைந்தாம் பாடலில் சுட்டப்பெற்றுள்ளது.

இவ்வாறு புறநானூற்றில் பௌத்த சமயக் கருத்துகள் அடங்கிய பாடல்கள் இருப்பதன் வாயிலாகச் சங்க காலத்தில் பௌத்தம் நிலைபெற்றிருந்தது என்பதை உணரமுடிகின்றது.

மதுரைக்காஞ்சியில் பௌத்தப்பள்ளி பற்றிய குறிப்பு தரப்பெற்றுள்ளது.

“திண்கதிர் மதாணி ஒண்குறு மாக்களை

ஒம்பினர்த் தழீஇத் தாம் புணர்ந்து முயங்கித்

தாதணி தாமரைப் போது பிடித்தாங்கு

தாமும் அவரும் ஓராங்கு விளங்கக்

காமர் கவினிய பேரிளம் பெண்டிர்

பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சி

சிறந்து புறங்காக்கும் கடவுள் பள்ளியும்" [194]

கணவன், மனைவி, பிள்ளை ஆகிய மூவரும் இணைந்து தாமரைப் பூக்களைப் பறித்துக் கொண்டு பௌத்தப்பள்ளிக்குச் சென்ற காட்சியை மேற்கண்டவாறு மதுரைக்காஞ்சி குறிக்கிறது.

இவ்வகையில் மணிமேகலை காப்பியத்திற்கு முன் காலமான சங்க இலக்கியத்தில் பல்வேறு பௌத்த சமயக் கருத்துகள் இடம் பெற்றுள்ள நிலையில் தமிழக மக்களிடத்தில் பௌத்தமதம் செல்வாக்கு பெற்றிருந்ததை உணரமுடிகின்றது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பரவலாக பௌத்த சமயக் கருத்துகள் விரவி வந்திருப்பதைப் பல ஆய்வாளர்கள் சுட்டியுள்ளனர். சோ.ந. கந்தசாமி, சு.மாதவன் ஆகியோர் தம் கருத்துகள் இங்கு நோக்கத்தக்கன. பாதபீடிகை வணக்கம்

---

[194] மாங்குடி மருதனார், மதுரைக்காஞ்சி, அடிகள் 461- 468

வள்ளுவரால் ஏற்கப்பெற்ற பௌத்த வழிபாட்டு நெறியாகும். மேலும் கள்ளுண்ணாமை, காமமின்மை, கொல்லாமை, கள்ளாமை, பொய்யாமை ஆகிய ஐந்து திறக் கோட்பாடுகளையும் வள்ளுவர் தம் நூலில் வலியுறுத்தியுள்ளார். மேலும் தம்மபதக் கருத்துகளான சிற்றினம் சேராமை, பெரியாரைத் துணைகோடல், நீத்தார் பெருமை, அவாவறுத்தல் ஆகியனவும் திருக்குறளில் காட்டப்பெற்றுள்ளன. இதன் காரணமாக திருக்குறள் பௌத்த சமயக் கருத்துகளை உள்வாங்கி அதனை மக்கள் நலத்திற்கேற்ற வகையில் வெளிப்படுத்தியுள்ளது என்பது தெரியவருகிறது.

இன்னாசெய்யாமை, சான்றாண்மை, ஒப்புரவு அறிதல், கூடா ஒழுக்கம் போன்றனவும் பௌத்த சாயல் பெற்றன என்கிறார் மாதவன். இவ்வகையில் திருக்குறளில் பௌத்த கருத்துகள் இடம்பெற்றுள்ளன என்று துணியலாம்.

நாலடியாரில் பௌத்த சமயக் கருத்துகளான பல் சமய அற ஒருமை, பேதைமை, நிலையாமை, ஐவகை நெறிகள் ஆகியன சுட்டப்பெற்றுள்ளன. சமண சமயத்தவர்களால் எழுதப்பெற்ற போதும் இதனுள் பௌத்த நெறிகளும் காட்டப்பெற்றிருப்பது குறிக்கத்தக்கது. திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்ச மூலம் ஆகியவற்றிலும் பௌத்த சமய பஞ்சசீலக கொள்கைகள் வலியுறுத்தப்பெற்றுள்ளன.

சங்கம் மருவிய காலத்திற்கு அடுத்த நிலையில் மணிமேகலைக்கு முன்னதாக எழுந்த காப்பியம் சிலப்பதிகாரம். இதனுள் பௌத்த சமயக் கருத்துகள் படைக்கப்பெற்றுள்ளன. சிலப்பதிகாரத்தில் பௌத்த மும்மணிகளான புத்தம், தருமம், சங்கம் ஆகியன பற்றிய குறிப்பு கிடைக்கிறது.

"பணைணைத் தோங்கிய பாசிலைப் போதி

அணிதிகழ் நீழல் அறவோன் திருமொழி

அந்தர சாரிகள் அறைந்தனர் சாற்றும்

இந்திர விகாரம் ஏழுடன் போகி" [195]

என்ற நிலையில் பௌத்த மும்மணிகள் சிலப்பதிகாரத்தில் இடம்பெறச் செய்யப்பெற்றுள்ளன. போதி அணிதிகழ் நீழல்அறவோன் என்பது புத்தரைக்

---

[195] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம் நாடுகாண்காதை அடிகள்:11-14)

குறிப்பதாகும். திருமொழி என்பது தருமத்தைக் குறிப்பதாகும். அந்தர சாரிகள் என்பது சங்கத்தைக் குறிப்பதாகும்.

கோவலன் கொலையுண்ட பிறகு, கோவலனின் தந்தை மாசாத்துவான் தன் செல்வங்கள் அனைத்தையும் பௌத்த நிலையத்திற்கு அளித்தான் என்று இளங்கோவடிகள் குறிக்கிறார்.

‘‘கோவலன் தாதை கொடுந்துயர் எய்தி

மாபெருந் தானமா வான் பொருள் ஈந்தாங்கு

இந்திர விகாரம் ஏழுடன் புக்காங்கு‘‘[196]

என்ற நிலையில் பௌத்த விகாரம் குறிக்கப்படுகிறது.

---

[196] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், நீர்ப்படைக் காதை, அடிகள் 91-93)

மாதவி மணிமேகலையைப் பௌத்த சமயத்திற்கு அளித்தாள் என்பதையும் குறிப்பிடுகிறார் இளங்கோவடிகள்

"அணிதிகழ் போதி அறவோன் தன்முன்

மணிமேகலையை மாதவி அளிப்பவும்" [197]

என்ற பகுதியில் போதி அறவோன் என்று புத்தர் குறிக்கப்பெறுகிறார். இச்செய்திகள் தவிர காவிரிப்பூம்பட்டிணம், மதுரை, திருத்தங்கால், வஞ்சி ஆகிய ஊர்களில் பௌத்தப் பள்ளிகள் இருந்தன என்று சிலப்பதிகாரம் குறிக்கிறது. மேலும் பௌத்த கதைகளான சிபிச் சக்கரவர்த்தி கதை, மணிமேகலா தெய்வக் கதை போன்றன பற்றிய குறிப்புகளும் சிலப்பதிகாரத்தில் உள்ளன. மேலும் காப்பியத்தில் நிறைவில் வரும் பொது அறங்கள் அனைத்தும் பௌத்தசமய அறங்கள் சார்ந்தனவாகும்..

---

[197] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை,அடிகள், 103-104)

இவ்வகையில் மணிமேகலை காப்பிய காலத்திற்கு முன்னதாக தமிழகத்தில் விளங்கியது என்பது அறியத்தக்கதாகின்றது.

**ஆசீவகம்**

சமணத்தைப் பரவலாக்கியவர் மகாவீரர். பௌத்தத்தைப் பரவலாக்கியவர் கௌதம புத்தர். ஆசீவகத்தைப் பரவலாக்கியவர் மற்கலி. இம்மூவரும் ஒரே காலத்தவர்கள் என்பது குறிக்கத்தக்கது. மர்கலியும், கௌதம புத்தரும் சமணத்தில் இருந்து வேறுபட்டே தனித்த கொள்கைகளை உருவாக்கியவர்கள் என்பது இன்னும் கவனிக்கப்பெற வேண்டிய கருத்தாகும். இதன் காரணமாக இந்திய அளவில் மெய்ப்பொருள் தேடலில் மிக முக்கியமான காலகட்டம் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னதான பத்து நூற்றாண்டுகள் என்பது உறுதியாகின்றது. மேலும் இதே கால எல்லையில் எகிப்தில் எழுந்த மெய்ப்பொருள் தேடலான இயற்கை மெய்யியலாளர்களின் கருத்துகளோடு மேற்சமயங்களின் கருத்துகளும் ஒத்து அமைந்திருப்பது வியப்பிற்குரியதாக உள்ளது.

**ஆசீவகத்தினை நிறுவியவர்**

பௌத்த சமயத்தின் நூல்களுள் ஒன்று தீக்க நிகாயத்தின் சாமஞ்ஞுபலசுத்தம் என்பதாகும். இதில் பௌத்தத்திற்கு எதிரானவர்களாக அறுவர் குறிப்பிடப்படுகின்றனர். அவர்களில் பூரணகாசிபர், மர்கலி கோசலர், பகுதகச்சானர் என்ற மூவரும் ஆசீவகக்கொள்கை வயப்பட்டவர்கள் ஆவர். இம்மூவரின் கொள்கைகளே ஆசீவகமாக வடிவம் பெற்றது. மற்கலி நியதிக் கொள்கையை வரையறுத்தார். பூரண அகரியாவாதத்தையும், பகுத கச்சானர் அணுக்கொள்கையையும் வரையறுத்தனர். மற்கலி கோசலனார் தவிர்க்க முடியாத உண்மைகள் ஆறு என்று உணர்த்தினார். பெறுதல், இழத்தல், இன்பம், துன்பம், பிறப்பு, இறப்பு என்பன அவ்வாறும் ஆகும். இதனை ஆறு திசாச்சரர் என்று ஆசீவகவாதிகள் அழைப்பர். மற்கலியின் கொள்கைகளை சாண, கலந்து கணியாரன், அச்சித்தன், அக்கிவேசாயணன், அச்சுண்ணகோமாயு புத்தன் என்பவர்கள் இந்தியாவின் பல பகுதிகளுக்குப் பரவச் செய்தனர். மற்கலி நூல், ஒன்பது வாங்கதிர் என்ற ஆசீவக நூல்கள் இருந்ததாக மணிமேகலை குறிக்கிறது. ஆனால் அவை யாவும் தற்போது கிடைக்கவில்லை.

**<u>ஆசீவக சமயக் கொள்கைகள்</u>**

ஆசீவகத்திற்கு மகாநிமித்தங்கள் எட்டும், ஆடல், பாடல் ஆகிய இரு மார்க்கங்கள் இரண்டும் உரியனவாக விளங்குகின்றன. பகவதி சூத்திரம் என்ற சமண நூலில் மகாநிமித்தங்கள் எட்டும் குறிக்கப்பெறுகின்றன.

- திவ்வியம் - தெய்வம் பற்றியன
- ஔத்பாதம் - அற்புதம் பற்றியன
- ஆந்தரிக்சம் - வான் பற்றியன
- பௌமம் - பூமி பற்றியன
- அங்கம் - உடல் உறுப்புகள் பற்றியன
- சுவாரம் - ஓசை பற்றியன
- இலக்கணம் - இயல்புகள் பற்றியன
- வியஞ்சனம் - குறிப்புகள் பற்றியன

இவற்றைக் காணும்போது சோதிட அறிவு என்பது அசீவத்திற்கு உரிய தனித்த அறிவுசார் பண்பு என்பது தெரியவருகிறது.

**<u>ஆசீவகக் கொள்கைகள்</u>**

ஆசீவகத்தின் கொள்கைகளைப் பற்றிய அதிகம் இயம்புவது மணிமேகலைக் காப்பியமே ஆகும். மற்றமொழிகளில் அமைந்த ஆசீவக நூல்கள் எதுவும் இதுவரை முழுமையாகக் கிடைக்காத நிலையில் ஆசீவக் கொள்கைகளை அறிந்து கொள்ள முழுவதும் பயன் தருவது மணிமேகலை மட்டுமே ஆகும்.

ஆசீவகம் வண்ண மயமானது. அறுவகையான நிறக் கோட்பாடுகளை இது கற்பிக்கிறது. மெய்யியல் படிநிலைக்கு ஏற்ப வண்ண உடைகள் வழங்கப்பெறும். இவ்வண்ணங்கள் கதிரவனின் உதிப்பு சார்ந்து அமைக்கப்பெற்றுள்ளன. ஆசீவகத்தில் இணையும் முதல் படிநிலை சார்ந்தவர்க்கு முதலாவதாக வழங்கப்பெறும் வண்ண உடை கருப்பு வண்ணம் சார்ந்ததாக அமையும். இது கதிரவன் மறைந்த இருள் நிலையைக் குறிக்கும் வண்ணம் ஆகும். அடுத்த நிலையில் வழங்கப்படும் ஆடை நீலம் ஆகும். இது இரவு முடிந்து விடியற்காலையில் கதிரவன் உதிப்பால் கிடைக்கும் வண்ணம் ஆகும்.. மூன்றாம் நிலையில் பசுமை வழங்கப்படுகிறது. இவ்வண்ணம் கதிரவன் உதிப்பதற்குச் சற்று முன்பு அதுவும்

குறைந்த கால எல்லையில் அமையம் வண்ணம் ஆகும். நான்காம் நிலை செம்மை வண்ணமாகும். கதிரவன் உதித்த பிறகு ஏற்படும் வண்ணம் இதுவாகும். ஏறக்குறைய பாதி நிலையில் தத்துவப் பயிற்சி பெற்ற நிலை; இதுவாகும். நண்பகலுக்குச் சற்று முன்னதாகக் கதிரவன் கொள்ளும் மஞ்சள் நிறம் ஐந்தாம் நிலையில் தரப்பெறுகிறது. நண்பகலுக்கு உரிய வண்ணமான வெள்ளையே நிறைநிலை வண்ணமாகும். இவ்வாறு இருளில் இருந்து முற்றொளியை நோக்கிய பயணமாக ஆசீவகம் பயணிக்கிறது. குறிப்பாக வானநூல் கற்றவர்கள் ஆசீவகர்கள் என்பதால் கதிரவனின் இயக்கத்தைத் தம் சமய இயக்கத்துடன் ஒப்பிட்டு இவ்வண்ணச் சேர்க்கையை அமைத்துள்ளனர். தமிழகத்தில் உள்ள ஐயனார் வழிபாடு ஆசீவக வழிபாட்டின் எச்சமாகக் கொள்ளப்பெறுகிறது. வெள்ளை நிறம் என்பது அய்யனார் கோயில் வழிபாட்டில் மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறது.

அறுவகை வண்ணநிலையில் முதல், இடை, கடை என்ற படிநிலைகளும் பின்பற்றப்பெற்றுள்ளன. முதல் படிநிலை நுழை நிலையாகும். இடைப் படிநிலை தேர்ச்சி பெறுவதைக் காட்டுவது. நிறை படிநிலை அடுத்த வண்ணத்திற்குச் செல்லும்

தொடர் நிலையாகும். இந்நிலையைப் பின்வருமாறு வரிசைப் படுத்தி அமைக்கலாம்.

கரும்பிறப்பில்

1. கருமை முதல் படி
2. கருமை இரண்டாம் படி
3. சாம்பல் மூன்றாம் படி

நீலப் பிறப்பில்

1. கருநீலம் முதல் படி
2. நீலம் இரண்டாம் படி
3. வான்நிறம் மூன்றாம் படி

பசும் பிறப்பில்

1. அடர்பச்சை முதல் படி

2. பச்சை இரண்டாம் படி

3. வெளிர்பச்சை மூன்றாம் படி

செம்பிறப்பில்

1. செம்மை முதல் படி

2. இளம்சிவப்பு இரண்டாம் படி

3. காவி மூன்றாம் படி

மஞ்சள் பிறப்பில்

1. அடர் மஞ்சள் முதல் படி

2. இளமஞ்சள் இரண்டாம் படி

3. பொன்மை மூன்றாம் படி

. வெண்பிறப்பில்

வெண்மை மூன்று படிகளிலும்.

என்ற நிறப் பாகுபாடு அமைக்கப்படுகிறது. இப்படிநிலைகள் பதினெட்டு ஆகின்றன. தற்காலத்தில் உள்ள பதினெட்டு என்ற எண்ணிற்கும் ஆசீவத்திற்கும் உள்ள தொடர்பு இங்கு நோக்கத்தக்கது. பதினெட்டு படிநிலைகளைக் கடக்க பதினெட்டு ஆண்டுகள் ஆறுவண்ண ஆடைகளில் முந்நிற பாகுபாடு கொண்டு அணிந்து நிறைவில் தென்னங்கன்றை வைத்து வழிபாட்டை நிறைவு செய்யும் முறை உள்ளது. ஏறக்குறைய இம்முறைகள் சாஸ்தா வழிபாட்டில் பின்பற்றப்பெறுகிறது.

பாலி நூலின்படி இவ்வண்ண வேற்றுமை வேறுநிலையில் கொள்ளப்பெறுகிறது.

| **எண்** | **நிறம்** | **இயல்பு** |
|---|---|---|
| 1 | கரும்பிறப்பு | கொலை, கொடுமை புரியும் வேட்டுவர், வலைஞர், கள்வர், சூதர், முதலியோரின் பிறப்புகள் |

| | | |
|---|---|---|
| 2 | நீலப்பிறப்பு | படிற்றொழுக்கம் படைத்த துறவியர் இந்நிறத்திற்கு உரியவர்கள் |
| 3 | செம்பிறப்பு | ஓராடை உடுத்துவோர், நிகண்டர் என்ற பிறப்பு இவ்வகைப்படும் |
| 4 | பசும்பிறப்பு | ஆசீவக இல்லறத்தார் இவ்வகைப் பிறப்பு சார்ந்தவர் ஆவர். |
| 5 | வெண்பிறப்பு | அசீவகர், ஆசீவினி ஆகிய இருபால் துறவியர் இவ்வகை நிறத்திற்கு உரியோர் ஆவர். |
| 6 | கழிவெண்பிறப்பு | நந்தவச்சர், கிச சங்கிச்சர், மக்கலி, கோசலர் இப்பிறப்பினர் |

என்ற நிலையில் பண்பிற்கு ஏற்ற நிலையில் வண்ணவேறுபாடு காட்டலும் ஆசீவக முறை என்று காட்டப்பெறுகிறது.[198]

ஆசீவகத்தின் குறியீடாகக் கொள்ளப்பெறுவது ஆண்யானையாகும். யானை பிறக்கும் போது கருமையாகப் பிறக்கும். வளர வளர அது சாம்பல் நிறம் கொள்ளும். அதன்பிறகு சற்று நீல நிறம் கொள்ளும். ஒரு படிநிலையில் இருந்து மற்றொரு படிநிலைக்கு மாறும் இயற்கை நிகழ்வு இதுவாகும். பல ஐயனார் கோவில்களில் வெள்ளை யானை நிறுவப்பெற்றிருப்பது இவ்வடிப்படையில்தான். வெள்ளை நிறைநிலைக்கானது. யானை ஆசீவத்தின் குறியீடு. ஆக வண்ணமயமான சமயமாக விளங்குவது ஆசீவகம் ஆகும்.

பிற்காலத்தில் தோன்றிய வள்ளலாரின் நிறம் காட்டும் திரைகள் ஆசீவகத் தன்மையுடன் ஒப்புநோக்கத்தக்கவையாகும்.

---

198 சோ. ந. கந்தசாமி, இந்தியத்தத்துவக்களஞ்சியம்,ப114

இவ்வாறு ஆசீவகம் வடநாட்டில் தோன்றி தென்னாட்டிற்கு வந்து நிலைபெற்றுள்ளது என்பதை உணரமுடிகிறது.

**ஆசீவகக் கொள்கைகள்**

ஆசீவகத்தில் நியதிக்கொள்கை, சுபாவக் கொள்கை போன்றன குறிக்கத்தக்கனவாகும். நியதிவாதம் தனிமனிதன் தனக்குப் புறம்பே உள்ள நியதியின் ஆற்றலால் கட்டுப்படுத்தப் பெறுகிறான் என்ற தன்மையை உணர்த்துவது. சுபாவவாதம் தனக்குள்ளே பொதிந்து கிடக்கும் சுபாவத்தால் தீர்மானிக்கப்பெறுகிறான் என்பதைக் காட்டுவது. இவ்விரு கொள்கைகளை இவர்கள் பெற்றதன் வாயிலாக அஹேதுகவாதியர், அகிரியாவாதயர் என்றும் இவர்கள் அழைக்கப்பெற்றனர்.

சங்க இலக்கியங்களில் ஆசீவகக் கொள்கை சார் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. கணியன் பூங்குன்றனாரின் “யாதும் ஊரே, யாவரும் கேளீர் “ என்ற பாடல் அசீவகம் சார்ந்தது என்பர் ஆய்வாளர்கள். இது வாழ்வியலைக்

கணிக்கும் பாடலாகும். கணிமேதையார், பக்குடுக்கை நன்கணியார் போன்றோர் கணித்துக் கூறும் இயல்பினைப் பெற்றிருந்தால் கணித்தல் சார்ந்த பெயரடைகளைப் பெற்றிருந்தனர். இவர்களின் பாடல்களும் ஆசீவக வயப்பட்டன என்று கருத இடமுண்டு.

யாதும் ஊரே யாவரும் கேளிர்

தீதும் நன்றும் பிறர்தர வாரா

நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன

சாதலும் புதுவது அன்றே, வாழ்தல்

இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்

இன்னா தென்றலும் இலமே, மின்னொடு

வானம் தண்துளி தலைஇ யானாது

கல் பொருது மிரங்கு மல்லல் பேரியாற்று

நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்

முறை வழிப் படூஉம் என்பது திறவோர்

காட்சியில் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்

பெரியோரை வியத்தலும் இலமே,

சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே''[199]

என்ற பாடலில் உகலம், பிறப்பு, இறப்பு, வாழ்க்கை ஆகியவற்றைக் கணித்துக் காட்டுகிறார் கணியன் பூங்குன்றனார். அதுமட்டுமில்லாமல் முறைவழிப்படும் திறத்ததாக அதாவது நியதிக் கொள்கை சார்ந்ததாக உலக நடப்புகளை அவர் காட்டுகிறார்.

பக்குடுக்கை நன்கணியார் பாடலும் உலகியலைக் கணிக்கும் பாடலாகும்.

"ஓர் இல் நெய்தல் கறங்க, ஓர் இல்

---

[199] கணியன் பூங்குன்றனார், புறநானூறு, பாடல் எண். 192

ஈர்ந் தண் முழவின் பாணி ததும்ப,

புணர்ந்தோர் பூ அணி அணிய, பிரிந்தோர்

பைதல் உண்கண் பனி வார்பு உறைப்ப,

படைத்தோன் மன்ற, அப் பண்பிலாளன்!

இன்னாது அம்ம, இவ் உலகம்;

இனிய காண்க, இதன் இயல்பு உணர்ந்தோரே.''[200]

என்ற இப்பாடலில் வாழ்க்கைக் கணக்கு துன்ப, இன்ப வரவு போன்றன கணித்து உரைக்கப்பெறுகின்றன. இவ்வகையில் சங்க இலக்கியங்களில் ஆசீவகச் சார்பு இருப்பதை உணரமுடிகின்றது.

திருக்குறளிலும் ஆசீவகச் சார்பு இருப்பதை உணரமுடிகின்றது. திருக்குறள் காட்டும் ஊழ் பற்றிய செய்திகள் ஆசீவகச் சார்புடையன.

---

[200] பக்குடுக்கை நன்கணியார், புறநானூறு, பாடல்எண். 194

“ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று

சூழினும் தான் முந்துறும்” [201]

என்ற ஊழ் வலியுறுத்தும் குறள் ஆசீவகரின் நியதிக் கொள்கையின் பாற்பட்டதாகும்.

சிலப்பதிகாரத்தில் மிகத் தெளிவாக ஆசீவகக் குறிப்பு காணப்படுகிறது. கோவலன் இறந்தபின்பு கண்ணகி வானுலகம் புகுகின்றாள். இவ்விளைவுகளை அறிந்த கண்ணகியின் தந்தை ஆசீவகர் முன் புண்ணிதானங்கள் பல புரிந்து துறவு மேற்கொண்டார் என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிற:து.

“கண்ணகி தாதை கடவுளர் கோலத்து

அண்ணலம் பெருந்தவத்து ஆசீவகர் முன்

புண்ணியதானம் புரிந்தறம் கொள்ளவும்” [202]

---

[201] திருவள்ளுவர், திருக்குறள் எண். 380

என்ற இப்பாடலடி தரும் செய்தி சிலப்பதிகார காலத்தில் ஆசீவகம் வளமோடு இருந்ததைத் தெரிவிக்கின்றது. இதுவே மணிமேகலைக் காப்பியக் காலத்திலும் தொடர்ந்துள்ளது என்பது இங்கு எண்ணத்தக்கது.

இவ்வாறு வேத மறுப்பு நெறிகளான சாருவாகம், சமணம், பௌத்தம், ஆசீவகம் ஆகியன வேதநெறிகளுக்கு ஈடாக மக்களிடம் பரவியிருந்தன, வேதகாலத்திற்கு முன்பே இச்சமயங்கள் வளர்ச்சி பெற்றிருந்தன என்பதையும் உணரமுடிகின்றது.

அளவை வாதம் பிற சமயக் கருத்துகளுடன் இயைந்து செயலாற்றி வருவதால் அதனைத் தனித்த வளர்ச்சி மிக்க சமயமாகக் கொள்ள இயலவில்லை.

## தொகுப்புரை

கிறிஸ்து பிறப்பதற்கு முன்னதான பத்து நூற்றாண்டு காலஅளவில் உலக அளவில் நடைபெற்ற மெய்ப்பொருள் நாட்ட தத்துவ விளக்கம் இந்தியாவிலும்

---

[202] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், நீர்ப்படைக்காதை, அடிகள் 98-100

இருந்துள்ளது. இம்மெய்ப்பொருள் தேடல் என்பது உலக அளவில் இந்தியாவிற்கு உரிய இடத்தை உயரிய இடத்தை வழங்கத்தக்கதாக உள்ளது.

உலக அளவில் இருந்த கருத்து முதல்வாத, பொருள் முதல் வாத மெய்யியல் சிந்தனைகள் இந்தியாவிலும் அதே காலகட்டத்தில் விளைந்திருந்தன.

இந்திய அளவில் சிந்துவெளி சமுதாயத்தில் காடு சார்ந்த இயற்கை சார் சமயநிலை இருந்துள்ளது. அதனைத் தொடர்ந்து வேத நெறி எனப்படும் ஆரிய நெறி இந்திய மெய்யியல் நிலையில் கோலோச்சியது. இதே நேரத்தில் வேதநெறியை மறுக்கும் மறுத்த மெய்யியல் நெறியும் இருந்துள்ளது.

வேதநெறி சார்புடையன வேதாந்தம் எனப்பட்டன. வேத நெறியை ஏற்பன வைதிக நெறி எனப்பட்டன. முரணான நெறி அவைதிக நெறியானது. வேத நெறியைப் பெரிதும் ஏற்ற சமயங்கள் சைவமும், வைணவமும் ஆகும். அசீவகம், வைசேடிகம் ஆகியன ஓரளவிற்குக் கடவுள் கொள்கையை ஏற்றன. வேதநெறிக்கு எதிரான அவைதிக நெறி சார் சமயங்களா பூதவாதம், சமணம், பௌத்தம் போன்றன அமைந்தன.

மேற்காட்டிய சமயங்கள் அனைத்தும் வடநாட்டில் வடமொழிச்சார்புடையனவாக விளங்கின.அவை மெல்ல தமிழகத்தில் நுழைய ஆராம்பித்தன. தமிழ்ச சமுதாய சூழலில் மேற் குறித்த சமயங்கள் மணிமேகலைக்கு முன்னதாக இருந்தன.அவை கொள்கை அளவில் வலிமையும், பொலிவும் பெறவில்லை என்றாலும் அவற்றை நோக்கி வளர ஆரம்பித்தன. இத்தகைய தத்துவப் பின்புலம் பிற்காலத்தில் வலுவடையாத வருவிக்கப்பெற்று ஏற்கப்பெற்றது.

மணிமேகலை காலத்திற்கு முன்பு இருந்த இச்சமயங்கள் மணிமேகலையால் சரியாக வரையறுத்து வெளிப்படுத்தப்பட்டன என்பது குறிக்கத்தக்கது.

பௌத்தம், சமணம் ஆகியன தத்துவ வளர்ச்சி பெற்றிருந்தன. உலகாயதம் தொடர்ந்து தன் கடவுள் எதிர்நிலையை வலியுறுத்தி வந்துள்ளது. வேதாந்தம் பெருவளர்ச்சி பெற்ற சமயமாக விளங்கியுள்ளது. வேதாந்த நிலையில் தத்துவ விளக்கங்கள் முகிழ்த்தநிலை காணப்படுகிற:து. சைவம், வைணவம் ஆகியன தத்துவ வளர்ச்சிக்கு முன்னதான சமய அடிப்படை வளர்ச்சியை மணிமேகலைக் காப்பிய

காலத்திற்கு முன்னதாகப் பெற்றிருந்தன. அசீவகம், வைசேடிகம், பிரம்மம் ஆகிய சமயங்கள் வளர்ச்சியும் தேய்வும் உற்ற நிலையில் இருந்தன.

## இயல். 3.

## மணிமேகலை கால சமயங்களும் அவற்றின் கொள்கைகளும்

மணிமேகலைக் காப்பியம் தன் கால சமயநிலையைப் பதிவு செய்து வெளியிடும் காப்பியமாக அமைந்துள்ளது. இக்காப்பியம் எழுந்த காலம் தமிழகச் சூழலில் சமயங்களின் எழுச்சி அதிகம் இருந்த காலமாக விளங்குகிறது. இக்காப்பியத்தை எழுதிய சீத்தலைச் சாத்தனார் இதனை ஒரு கதை சார்ந்த காப்பியமாக எழுதாமல், சமயங்கள் தழுவிய காப்பியமாகப் படைத்துள்ளார். இதன் காரணமாக பற்பல சமயச் செய்திகளை இணைத்து இக்காப்பியம் செய்யப்பெற்றுள்ளது. இக்காப்பியம் தமிழ்ச்சமய வரலாற்றில் முக்கியமான அடையாளமாகின்றது.

பௌத்த சமயம் சார்ந்த காப்பியம் என்ற அடையாளத்தை ஏற்றுக்கொண்டு, அதே நேரத்தில் மற்ற சமயங்களுக்கும் அவற்றின் கொள்கைகளுக்கும் இடமளித்துள்ள சீத்தலைச் சாத்தனாரின் திறம் தனித்தன்மை வாய்ந்தது. பெருந்தன்மை கொண்டது. தன் காப்பிய சமயச் செய்திகளை மட்டும் வழங்காமல்

மற்ற சமயச் செய்திகளையும் வழங்கிய காரணத்தால் ஆய்வாளர்களால் தமிழக மெய்ப்பொருளியல் தேடலில் மணிமேகலைக் காப்பியத்திற்குக் குறிக்கத்தக்க இடம் தரப்பெறுகிறது. இக்காப்பியம் வழங்கும் சமயச் செய்திகளை, அவற்றின் கொள்கைகளை வகுத்துரைப்பதாக இவ்வியல் அமைகிறது .

**<u>பௌத்த காப்பியம்</u>**

மணிமேகலைக் காப்பியம், பௌத்த மதம் சார் காப்பியம் என்பதற்குப் பல அகச்சான்றுகள் அக்காப்பியத்தில் உள்ளன. வஞ்சி மாநகர் புக்க காதையில் புத்தர் வரலாறு எடுத்துரைக்கப்பெறுகிறது. அதன்பின் வஞ்சி மாநகர் புக்க காதையில் பௌத்த சமயக் கருத்துகள், தத்துவங்கள் எடுத்துரைக்கப்பெறுகின்றன.

‘‘புத்த தன்ம சங்கம் என்னும்

முத்திற மணியை மும்மையின் வணங்கிச்

சரணாகதியாய் சரண் சென்று அடைந்தபின்''[203]

என்று மணிமேகலை மனம்,மொழி, மெய் என்ற மூன்றாலும் புத்தம், தம்மம், சங்கம் ஆகிய மும்மணிகளை வழிபட்டுச் சரணாகதி அடைந்த நிலையை மணிமேகலை காட்டுகின்றது. காப்பியத்தலைவி மணிமேகலை புத்த தரும நியதிகளின்படி பௌத்தம் சார்கிறபோது அவளின் சமயநிலை மணிமேகலைக் காப்பியத்தில் முழுவதும் நிரம்பியிருக்கும் என்பது தெளிவாகின்றது.

**புத்தர் வரலாறு**

புத்தரின் வரலாறு இரு இடங்களில் மிக அழுத்தமாக மணிமேகலையில் பதிவு செய்யப்பெற்றுள்ளது. பூம்புகார் உறைந்த அறவணடிகள், கண்ணகி, ஆகிய இருவரும் புத்தபிரானின் பிறப்பு பற்றிப் பதிவு செய்துள்ளனர்.

**மணிமேகலை சுட்டும் புத்தர் பிறந்த ஆண்டு**

---

[203] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, பவத்திற மறுகெனப் பாவை நோற்ற காதை, அடி 3-5

அறவணர்த் தொழுத காதையில் அறவணடிகள், புத்தர் பிறந்த செய்தியைக் குறிப்பிடுகிறார். அவ்வாறு அவர் குறிக்கும்போது அவர் குறிப்பாதக் காட்டப்படும் ஆண்டு புத்தர் பிறந்த ஆண்டாகக் கொள்ளத்தக்கதாக உள்ளது. மேலும் புத்தர் பிரான் பிறந்தால் உலகில் நிகழ்ந்த அமைதியையும் அவர் குறிப்பிடுகிறார்.

‘‘இருள்பரந்து கிடந்த மலர்தலை உலகத்து
விரிகதிர்ச் செல்வன் தோன்றினன் என்ன
ஈர்எண் ணூற்றோடு ஈர்எட்டு ஆண்டில்
பேர்அறி வாளன் தோன்றும்அதன் பிற்பாடு
பெருங்குள மருங்கில் சுருங்கைச் சிறுவழி
இரும்பெரு நீத்தம் புகுவது போல
அளவாச் சிறுசெவி அளப்புஅரு நல்அறம்
உளம்மலி உவகையோடு உயிர்கொளப் புகூஉம்
கதிரோன் தோன்றுங் காலை ஆங்குஅவன்
அவிர்ஒளி காட்டும் மணியே போன்று
மைத்துஇருள் கூர்ந்த மனமாசு தீரப்

புத்த ஞாயிறு தோன்றுங் காலை”[204]

என்ற அறவாணரின் கருத்துரையில் புத்தர்பிரான் பிறந்த காலம் குறிக்கப்படுகிறது. இதனை ஆராய்ந்த அறிஞர்கள் பின்வரும் முடிவிற்கு வருகின்றனர்.

. 'புத்தர் பெருமானைத் தமிழிற் காட்டும் ஒரு மணி நிலையம்' என்று புகழப்பெறும் 'மணிமேகலை புத்தர் அவதரித்த ஆண்டு 1616 (ஈரெண்ணுற்றொடு ஈரெட்டாண்டில்) என்று கூறியுள்ளது. இவ்வாண்டு எந்த சகாப்தத்தைச் சேர்ந்தது என்பது விளங்கவில்லை. மகா மகோபாத்தியாய திரு. உ.வே.சாமிநாய ஐயரவர்கள், கௌதம புத்தர் பிறந்த தினம் ஈசான சகாப்தம், 68-ம் வருஷம், வைகாசி மாதத்திற் பூர்ணிமையும் விசாக நட்சத்திரமும் கூடிய வெள்ளிக் கிழமையென்று சொல்லுவர்" என்று குறித்துள்ளார்கள். ஈசான சகாப்தம் எப்போது, எவர் காலத்தில் ஆரம்பித்ததென்று தெரியவில்லை.

---

[204] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, அறவாணர் தொழுத காதை, அடிகள். 76-83

நெல்லை ஜில்லாவைச் சேர்ந்த தமிழறிஞரும், பஞ்சாங்க கணிதத்தில் விசேஷ ஆராய்ச்சியும், அநுபவமும் பெற்ற திரு.இ.மு.சுப்பிரமணிய பிள்ளையவர்கள், மேலே குறித்த நான்கு நிகழ்ச்சிகளையும் ஆதாரமாய்க் கொண்டு, புத்தர் காலத்தைத் தீர்மானித்து வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆராய்ச்சியின்படி தெரிந்துள்ள தேதிகளும் விவரங்களும் வருமாறு: 1. புத்தர் பிறந்த நாள் - கி.மு. 573, வைகாசி மீ", 3-ம் தேதி, வெள்ளிக்கிழமை, பூர்ணிமை. 2. அவர் அரண்மனையைவிட்டு வனம் சென்ற நாள் - கி.மு.5:15, வைகாசி, மீ, 24-ம் தேதி, வெள்ளிக்கிழமை, பூர்ணிமை. 3. அவர் புத்த கயையில் போதி மரத்தடியில் ஞானமடைந்த நாள் கி.மு.538, வைகாசி மீ, 6-ம் தேதி, புதன்கிழமை, பூர்னிமை. 4. அவர் குசீநகரில் மகா-பரி-நிருவாணமடைந்த நாள் - கி.மு.193. வைகாசி மீ, 19-ம் தேதி, செவ்வாய்க் கிழமை, பூர்ணிமை. இந்த முடிபுகளைச் சரித்திரமும், இலங்கைத் "தீப வம்ச 'மும், 'மகா வம்சமும் அரண் செய்கின்றன”[205] என்ற குறிப்பு புத்தர்பிரான் பிறந்த ஆண்டினை வரையறை செய்வதாக உள்ளது. மணிமேகலைக்கு முந்தயை

---

[205] ப.ராமஸ்வாமி, புத்தஞாயிறு, ப. 64

ஆயிரத்துப் பதினாறு ஆண்டு என்பதாகக் கொண்டால் ஓரளவிற்குப் புத்தர் பிறந்ததாகக் கருதப்படும் ஆண்டினைத் தொடுவதாக மணிமேகலையின் காலக்குறிப்பு உள்ளது. இருப்பினும் இக்கால அளவு இன்னும் ஆராயத்தக்கதாக உள்ளது.

மேற்கண்ட பாடலடிகளில் இருளே செறிந்து கிடந்த அகன்ற இவ்வுலகத்தில் விரிந்த கதிர்களைப் பரப்பும் ஞாயிற்றுச் செல்வன் போல புத்தர் பிரான் தோன்றினார் என்று குறிக்கப்படுகிறது.

**<u>கண்ணகி குறிக்கும் புத்தபிரான் அவதரித்த செய்தி</u>**

வஞ்சி மாநகர் புக்க காதையில் கண்ணகி படிமமாக நின்று மணிமேகலையிடம் புத்தர் பற்றிய செய்திகளை விளக்குகிறாள். அந்நேரத்தில் அப்படிமம் சொல்வதாக புத்த பிரான் பிறப்பு செய்தி உரைக்கப்பெறுகிறது.

“மறந்தும் மழைமறா மகதநல் நாட்டுக்கு
ஒருபெருந் திலகம்என்று உரவோர் உரைக்கும்
கரவுஅரும் பெருமைக் கபிலையம் பதியின்

அளப்புஅரும் பாரமிதை அளவின்று நிறைத்துத்

துளக்கம்இல் புத்த ஞாயிறு தோன்றிப்

போதி மூலம் பொருந்திவந் தருளித்

தீதுஅறு நால்வகை வாய்மையும் தெரிந்து

பன்னிரு சார்பின் பகுதித் தோற்றமும்

அந்நிலை எல்லாம் அழிவுறு வகையும

இற்றுஎன இயம்பிக் குற்றவீடு எய்தி

எண்அரும் சக்கர வாளம் எங்கணும்

அண்ணல் அறக்கதிர் விரிக்கும் காலைப்  உரை

பைந்தொடி தந்தை யுடனே பகவன

இந்திர விகாரம் ஏழும்ஏத் துதலின்

துன்பக் கதியில் தோற்றரவு இன்றி

அன்புஉறு மனத்தோடு அவன்அறம் கேட்டுத்

துறவி உள்ளம் தோன்றித் தொடரும்

பிறவி நீத்த பெற்றியம் ஆகுவம்

அத்திற மாயினும் அநேக காலம்

எத்திறத் தார்க்கும் இருத்தியும் செய்குவம்.

நறைகமழ் கூந்தல் நங்கை நீயும்

முறைமையின் இந்த மூதூர் அகத்தே

அவ்வவர் சமயத்து அறிபொருள் கேட்டு

மெய்வகை இன்மை நினக்கே விளங்கிய

பின்னர்ப் பெரியோன் பிடகநெறி கடவாய்

இன்னதுஇவ்வி யல்புஎனத் தாய்எடுத்து உரைத்தலும்,''[206]

என்ற இப்பகுதியில் கண்ணகி கபிலவஸ்து என்ற இடத்தில் புத்தபிரான் தோன்றிய செய்தியைக் குறிக்கிறாள். மேலும் ஏழு இந்திர விகாரங்கள் காவிரிப்பூம்பட்டிணத்தில் இருந்தன என்ற செய்தியையும் குறிப்பிடுகிறாள். இதன் காரணமாக தமிழகத்தில் மணிமேகலை காலத்தில் பௌத்த விகாரங்கள் சிறப்பான நிலையில் இருந்தன என்பது தெரியவருகிறது.

மேலும் இப்பகுதியில் பிடக நெறி என்று பௌத்தநெறி சுட்டப்பெறுகிறது. மணிமேகலையைக் கண்ணகி பௌத்த வழிப்படுத்துவதாகக் காட்டப்பெறுகிறது.

---

[206] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, வஞ்சி மாநகர் புக்க காதை, அடிகள்

இவ்வகையில் புத்தர் வரலாற்றைப் பதிவு செய்துள்ள மணிமேகலைக் காப்பியம், பௌத்த கொள்கைகளையும் வலியுறுத்தி நிற்கிறது.

**<u>மணிமேகலை உணர்த்தும் பௌத்த மதக் கொள்கைகள்</u>**

மணிமேகலை அவைதிக நெறிப்பட்டதாகும். அது கடவுள் உண்டு என்பதை ஏற்காத பௌத்த நிலைப்பாட்டை உடையது. இது இரு அளவைகளை மட்டும் ஏற்கிறது. அவை குற்றமற்ற காட்சி அளவை, குற்றமற்ற கருதல் அளவை என்ற இரண்டுமாகும்.

காட்சி அளவை என்பது கண்ணால் கண்டதை உண்மை என்று ஏற்பது. கருதல் அளவை என்பது ஒரு பொருளைப் பல அனுமானக் கருத்துகள் கொண்டு இருப்பதாக உணர்வது. காட்சி அளவையில் பிழை ஏற்படுவது இல்லை. ஆனால் கருதல் அளவையில் பிழைகள் ஏற்பட வாய்ப்புண்டு.

**<u>காட்சி அளவை</u>**

“சுட்டுணர்வைப் பிரத்தியகக்கம் என்று சொலிவிட்டனர்”[207] என்று காட்சியளவையை விளக்குகிறது மணிமேகலைக் காப்பியம். குற்றமற்ற நிலையில் இது இப்பொருள் என்று உணர்வது காட்சியளவையாகின்றது. தானே ஒரு பொருள் இருப்பதை உணர்ந்துஅறிவது காட்சியளவையாகும்.

**<u>கருதல் அளவை</u>**

ஒரு பொருளின்

1. பெயர்
2. சாதி,
3. குணம்
4. தொழில்

---

207 சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை,அடி49

ஆகியன கருதி அப்பொருள் பற்றிய கருத்துக்களை உருவாக்கி அப்பொருள் இருக்கும் நிலைப்பாட்டை உணரவைப்பது கருதல் அளவையாகின்றது. பிறர் சொல் கொண்டு ஒரு பொருள் இருப்பதை உணர்வது கருதல் அளவையாகும்.

**கருதல் அளவையின் ஐந்து வகை உறுப்புகள்**

ஒரு பொருளை இது என அறிய கருதல் அளவையில் ஐந்து வகை உறுப்புகள் கொள்ளப்படுகின்றன. 1. பக்கம், 2. ஏது, 3. எடுத்துக்காட்டு, 4. உபநயம், 5. நிகமனம் என்ற ஐந்து உறுப்புகள் வழியாக கருதல் அளவை உறுதிப்படுத்தப்படுகிறது.

**பக்க உறுப்பு**

பக்கப் உறுப்பு என்பது  பொருளின் இருப்பிடம் கருதி அதனை இருப்பதாகக் கருதுவது. எனவே பொருளின் இருப்பிடம் பற்றிய விவாதங்கள் பக்க உறுப்பு விவாதங்களாகின்றன.

“இம்மலை நெருப்புடையது” – என்று பக்கச் சார்பு கொண்டு நெருப்பு மலையின் இருப்பிடம் பற்றி அறிவது பக்க உறுப்பு ஆகின்றது. மலையில் நெருப்பு இருப்பதைக் காணாத நிலையில் மற்றவர்கள் சொன்ன கருத்துகளை அடியொற்றித் தானும் இம்மலை நெருப்புடையது என்று ஏற்பது பக்க உறுப்பு ஆகின்றது. எதிரே மலை உள்ளது .ஆனால் அது எரிமலை என்பதை அப்போது அறிய இயலவில்லை. மற்றவர்கள் இம்மலை எரிமலை என்று குறிப்பிடுகிறார்கள். அதன் காரணமாக இம்மலையில் நெருப்பு உள்ளது என்று ஏற்பது பக்கச் சார்பு ஆகும். இவ்வகையில் கருதல் அளவை ஏற்கப்படுகிறது.

இந்தப் பக்க உறுப்பு காட்சிவழி பெறப்படாத கருத்துகளைக் கொண்டது. காணாமல் ஒரு பொருள் பற்றிய முடிவிற்கு வருவது. தொடர்புடைய கருத்துகளால் ஒரு பொருள் பற்றி அறிவது.

அங்கு ஒரு குடம் இருக்கிறது

அங்கு ஒரு குடம் இல்லை

மேற்கண்ட இரு தொடர்களில் குடம் இருக்கிறது – இல்லை என்ற இரு கருத்துகள் உள்ளன. குடத்தைக் காணாத ஒருவனிடத்தில் குடம் இருக்கிறது அல்லது இல்லை என்பதை எப்படி நிறுவ முடியும்.

குடம் இல்லை என்பதைக் குறிக்க

''இவ்வெற்றிடத்தில் குடம் இல்லை '' என்று குறிப்பிட்டால் வெற்றிடம் என்ற பக்கமொழி கருதி குடம் இல்லை என்ற கருத்து வலுப்பெறுகிறது. வெற்றிடத்தில் என்பது நல்ல பக்க மொழியாகும். இதனை அன்னுவயம் என்று குறிக்கின்றனர். அதாவது தொடர்புடைய நல்ல பக்கமொழி என்பது அன்னுவயம் ஆகின்றது.

குடம் இல்லை என்பதைக் குறிக்க

''அது தோன்றாமையால் அங்குக் குடம் இல்லை '' என்றும் குறிக்கலாம். அவ்வாறு குறிப்பது பக்க தன்மவசனம் ஆகும்.

“தோன்றிய குடம் அழியும். ஏனெனில் அது செய்யப்பட்டது” என்ற தொடர் குடம் பற்றியது என்றாலும் அதன் அழிவுத் தன்மையைக் குறிக்கிறது. இது சபக்கத் தொடர்ச்சிப் பக்கமாகும்.

செய்யப்படாத வானம் அழியாத் தன்மையது என்ற தொடர் விபக்கத் தொடர்ச்சி சார்ந்த பக்கமாகும்.

இவ்வாறு பக்க மொழிகளால் ஒரு பொருளின் இருப்பை உணர்த்துவது என்பது பக்க கருதல் அளவை உறுப்பாகும்.

**பக்கப் போலி**

தொடர்புடைய அல்லது தொடர்பற்ற மொழிகளால் சுட்டப்பெறும் பொருளின் இருப்பிடம் என்பது குறையுடையது. முழுமையான உண்மையாக அது அமையாது. அதனுள் போலிகள் அமையலாம். பக்கச் சொற்களால் கட்டப்பெற்ற சொல் கட்டுமானத்தில் ஒன்பது வகைப் போலிகள் அமையலாம். அவை பின்வருமாறு.

1. பிரத்தியக்க விருத்தம், 2. அனுமான விருத்தம், 3. சவசன விருத்தம், 4.உலோக விருத்தம், 5. ஆகம விருத்தம், 6. அப்பிரத்த விசேடனணம், 7. அப்பிரசித்த விசேடியம், 8. அப்பிரசித்த உபயம், 9. அப்பிரசித்த சம்பந்தம் என்பன அப்போலிகள் ஆகும். இவற்றையும் மணிமேகலைக் காப்பியம் விளக்குகின்றது.

**<u>பிரத்தியக்க விருத்தம்</u>**

கண்ணால் கண்டு உணர்ந்த காட்சிக்கு மாறுபட உரைப்பது பிரத்தியக்க விருத்தம் என்பதாகும். சத்தம் செவிக்குப் புலனாகாது என்ற தொடர் பிரத்தியக்க விருத்தமுடைய தொடராகும்.

**<u>அனுமான விருத்தம்</u>**

அழியும் தன்மையுடைய குடத்தை அழியாது என்று சாதிப்பது அனுமானப் பிழையாகும்.

**சுவசன விருத்தம்**

சொல்லும் சொற்கள் ஒன்றுக்கு ஒன்று மாறுபடக் கூறுதல் சுவசன விருத்தம் ஆகும். ‘ என்னைப் பெற்றெடுத்த தாய் மலடி ” என்று உரைப்பது இவ்வகைப் பிழையாகும்.

**உலக விருத்தம்**

உகல வழக்கிற்கு மாறுபட உரைப்பது என்பது உலக விருத்தம் ஆகின்றது. வானத்து நிலவைச் சந்திரன் என்று உலகோர் அழைக்கும் நிலையில் அதனை சந்திரன் அன்று என்று உரைப்பது இவ்வகைப் பிழையாகும்.

**ஆகம விருத்தம்**

சான்றாகக் காட்டும் நூலின் கருத்திற்கு மாறாக உரைப்பது என்பது ஆகம விருத்தம் ஆகும்.

**<u>அப்பிரசித்த விசேடணம்</u>**

விவாதிக்கும் பொழுது தாம் சாதிக்கும் பொருள் எதிரில் விவாதிப்பவருக்கு அறியப்படாமல் இருப்பதால் ஏற்படும் பிழை இதுவாகும்.

**<u>அப்பிரசித்த விசேடியம்</u>**

வாதி, பிரதிவாதி ஆகிய இருவருள்ளும் விவாதிக்கும் பொருளின் எழுவாய் பற்றியே அறியா நிலையில் ஏற்படும் பிழை இதுவாகும். சாங்கிய மதம் சார்ந்தவர்கள் ஆன்மா அறிவுடைய பொருள் என்று பௌத்த மதத்தாரிடம் சாதிக்கும் நிலையில் பௌத்தர்கள் ஆன்மாக என்ற ஒன்றே இல்லை என்ற கருத்துடையவர்கள் ஆக இருப்பது இக்குறை நேர வழி செய்கிறது.

**<u>அப்பிரசித்த உபயம்</u>**

இது உரைக்கப்படும் பொருளின் எழுவாய், பயனிலை என எதுவும் தெரியாத நிலையால் ஏற்படும் குறையாகும். ஆன்மா இன்பம் துன்பம் தரவல்லது என்ற கருத்தினைப் பௌத்தர்கள் ஆன்மாவே ஏற்காத நிலையில் அது இன்பம் துன்பம் தரும் என்ற பயனிலைக் கருத்தினுக்குச் சார்பாக எதிராக எதுவும் சொல்ல இயலாத நிலையைப் பெறுவது இக்குறையாகும்.

**<u>அப்பிரசித்த சம்பந்தம்</u>**

எதிரிக்கு ஏற்ற பொருளைத் தானே அமைத்துக் கொடுத்தல் என்பது இக்குறையாகும்.

இவ்வாறு பக்கம் என்ற உறுப்பு பற்றியும் அதன் போலிகள் பற்றியும் மணிமேகலை குறிக்கிறது.

**<u>ஏது</u>**

ஏது என்பது காரணம் கூறப்படுவது. ‘‘புகையடைத்து ஆதலால்’’ எனல் பொருந்து ஏது”[208] என்கிறது மணிமேகலைக் காப்பியம்.

பொருளுக்கான ஏது நேர்மறையாகவும் உணர்த்தப்படலாம். எதிர்மறையாகவும் உணர்த்தப்படலாம். நேர்மறையாக உணர்த்தப்படும் முறை அன்னுவயம் ஆகும். உடன்பாட்டு அடிப்படைப வாய்ந்தது. புகையுள்ள இடத்தே நெருப்பு உண்டு என்பது. எதிர்மறையாக உணர்த்தப்படும் முறை வெதிரேகம் ஆகும். நெருப்பிலா இடத்துப் புகையும் இல்லை என்பது இவ்வகை ஏதுவாகின்றது. இவை இரண்டும் பிழை படலாம்.

பொருளுக்கான நல்ல ஏது மூன்று வகையாகத் தோன்றுகிறது. அவை சொல்லப்பெற்ற பொருளில் தானே நிலை பெற்று இருத்தலும், சபக்கப் பொருளிடத்தில் உண்டாதலும், பக்கத்தின் மீட்சியாகிய விபக்கப் பொருளில் அறவே இல்லையாதலும் ஆம்

---

[208] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை, அடி 60

பொருளுக்கான கெட்ட ஏது மூவகைப்படும். அவை 1. அசித்தம், அநைகாந்திகம், விருத்தம் என்பனவாகும். இவற்றில் அசித்தம் நான்கு வகைப்படும். அவை உபய அசித்தம், அன்னியதரா அசித்தம், சித்த அசித்தம், ஆசிரயா அசித்தம் என்பனவாகும். அநைகாந்திகம் ஆறு வகைப்படும். அவை. 1. சாதாரணம், 2.அசாதாரணம், 3. சபக்கைக தேச விருத்தி விபக்க வியாபி, 4. விபக்கைக தேசவிருத்தி சபக்க வியாபி, 5. உபயைக தேசவிருத்தி, 6. விருத்த வியபிசாரி என்பன அவையாகும். விருத்தம் நான்கு வகைப்படும். அவை 1. தன்மச் சொரூப விபரீத சாதனம், தன்ம விசேட விபரீத சாதனம், தன்மிச் சொரூப விபரீத சாதனம், தன்மி விசேட விபரீத சாதனம் என்பனவாகும்.

அசித்தம் (4)

அசித்தம் வழியாக ஏற்படும் ஏதுக் குறை நான்காகும். அவை பற்றிய சிறு விளக்கங்கள் பின்வருமாறு. உபய அசித்தம்- வாதி, பிரதிவாதி இருவருக்கும் சாதனமாக அமையாநிலை ஆகும். முரண்பட்ட இருவரிடையே கூறப்படும் ஏது பயனின்று போகும் நிலை அன்னியதரா அசித்தம் ஆகும். ஐயத்தில் தோன்றும்

ஏதுவையே மெய்யாக்கிச் சாதிப்பது சித்தர் அசித்தம் ஆகும். பிரதிவாதிக்குச் சம்பந்தமில்லா ஒன்றைக்காட்டி சாதிக்க முயலும் குறை ஆசிரயா அசித்தம் என்பதாகும்.

## அநைகாந்திகம் (6)

அநைகாந்திகம் ஆறு வகைக் குறைகளை உடையது. அவை பற்றிய விளக்கங்கள் பின்வருமாறு. சாதாரணம் என்பது உடன்பாடு , எதிர்மறை இரண்டுக்கும் பொதுவாய் நிற்கும் குறையாகும். அசாதாரணம் என்பது உடன்பாடு, எதிர்மறை இரண்டுக்கும் பொருத்தம் இல்லா நிலையில் அதனையே காட்டிச் சாதித்தல் ஆகும். சபைக்கக தேச விருத்தி விபக்க வியாபி என்பது சபைக்கப் பொருளில் ஏதேனும் ஒன்றில் பொருந்தி விபக்க நிலையில் அனைத்தும் பொருந்தும் குறையாகும். விபக்கைக தேச விருத்தி சபக்க வியாபி என்பது விபக்கத்தில் ஏதேனும் ஒன்றில் பொருந்தி, சபைக்கத்தில் முழுவதும் சார்வது இக்குறையாகும். உபயைக தேச விருத்தி என்பது உடன்பாடு எதிர்மறை இரண்டுக்கும் ஒவ்வொன்றுக்கும்

ஒவ்வொரு இடத்தில் பொருந்தும் நிலைப்பாடு. திருந்தாத ஏது விருத்தவியபிசாரியாகும்.

**<u>விருத்தம் (4)</u>**

விருத்த ஏதுக்குறை நான்குவகை உடையது. துணிப்பொருளின் சிறப்பியல்பு கெட மொழிவது தன்மச் சொரூப விபரீத சாதனம் ஆகும். சாத்திய தன்மத்தின் விசேடம் கெடுமாறு உரைப்பது தன்ம விசேட விபரீத சாதனம் ஆகும். எழுவாயின் சிறப்பியல்பினை ஏதுவே குறைசொல்லும் நிலை தன்மிச் சொரூப விபரீத சாதனம் ஆகும். எழுவாயின் சிறப்புத்தன்மையைக் குறை கூறுவது தன்மி விசேட விபரீத சாதனம் ஆகும்.

**<u>திட்டாந்தம்</u>**

திட்டாந்தம் என்றால் கருதல் அளவையால் அனுமானிக்கப்படும் ஒரு பொருளை எடுத்துக்காட்டு சொல்லி அதனை உறுதிப்படுத்தல் என்பது பொருளாகும். குற்றமற்ற திட்டாந்தம் இருவகைப்படும். அவை 1. சதான்மியம் 2. வைதன்மியம் என்பனவாகும்.

சதான்மிய திட்டாந்தம் என்பது யாகசாலை போல புகை உடைய மலை நெருப்புடையது என்று குறிப்பது போன்றது. இங்கு யாகசாலை மலைக்குக் காட்டாக அமைந்தது.

வைதன்மிய திட்டாந்தம் என்பது நெருப்பின்றி புகையில்லை. தண்ணீரைப்போல என்ற நிலையில் அமையும்.

போலி திட்டாந்தங்களும் உண்டு. சாதான்மிய திட்டாந்தத்திலும் போலிகள் உண்டு. அவை ஐந்தாகும். 1. சாதன தன்ம விகலம், 2. சாத்திய தன்ம விலகம், 3. உபய தன்ம விகலம், 4. அநந்நுவயம் 5. விபரீதாந்நுவயம் என்பனவாகும்.

எடுத்துக்காட்டப்படும் பொருளிடத்துக் காணப்படும் குறை சாதன தன்ம விலகம் ஆகும். எடுத்துக்காட்டப்படும் பொருளின் சாத்தியத் தன்மை குறைவுபடுதல் சாத்திய தன்ம விலகம் ஆகும். சாத்தியம், சாதனம் இரண்டும் குறையுடையது உபயதன்ம விகலம் ஆகும். இது இன்னும் இருவகைப் பிரிவுகளை உடையது. சன்னு உபய தன்ம விலகம், அசன்னு உபய தன்ம விலகம் என்பன அவையாகும். சன்னு உபய தன்ம விலகம் என்பது பொருளின் சாத்தியத் தன்மமும், சாதன

தன்மமும் பொருந்தாத பிழையாகும். பொருள் இல்லை என்று சாதிக்கும் இடத்தில் இருவகைதன்மமும் பிழைபடுதல் அசன்னு உபய தன்மவிளக்கம் ஆகும். அநன்னுவயம் என்பது இருபிரிவிற்கும் உள்ள ஒற்றுமையை மட்டும் காண்பதாகும். வியாபகத்தைக் கொண்டு வியாப்பியத்தை உரைப்பது விபரீதான்னுவயம் என்னும் குறைபாடாகும்.

வைதன்மிய திட்டாந்தத்திலும் போலிகள் உண்டு. அவையும் ஐந்தாகும். 1. சாந்தியா வியாவிருத்தி, 2. சாதனா வியாவிருத்தி, 3. உபயா வியா விருத்தி, 4. அவவெதிரேகம் 5. விபரீத வெதிரேகம் என்பனவாகும்.

சாத்தியா வியா விருத்தி சாதன தன்மம் நிற்க சாத்திய தன்மம் நில்லாத நிலையாகும். சாத்திய தன்மம் இருக்க சாதன தன்மம் ஒழிதல் சாதான வியா விருத்தி எனப்படுகிறது. இரண்டும் மீளாமல் போவது உபயா வியாவிருத்தி என்ற குறையாகும். இது உண்மை, இன்மை என்று இரண்டுவகைப்படும். சாத்திய தன்மம் இல்லாநிலையில் சாதன தன்மமும் இல்லாமல் ஆவது அவ்வெதிரேகம் என்னும்

குறையாகும். பிரிவினைத் தலைதடுமாறச் செய்வது விபரீத வெதிரேகம் என்பதாகும்.

**<u>உபநயம்</u>**

கருதல் அளவையின் நான்காம்பகுதி இதுவாகும். இம்மலையும் புகை உடையதாக இருக்கிறது என்று குறிப்பது உபநயம் ஆகும்.

**<u>நிகமனம்</u>**

ஐந்தாம் பகுதியாகிய இது ‘எது எது புகையுடையது அது அது நெருப்புடையது’ என்று துணிவது நிகமனம் ஆகும்.

உபநயம், நிகமனம் இரண்டும் திட்டாந்தம் என்பதனுள் அடங்கிநிற்பவை.

இவ்வகையில் கருதல் அளவை வழி ஒரு பொருள் பற்றி அறிந்து கொள்ளும்போது நன்மை, தீமை, உண்மை , போலி போன்றன அறிந்து மெய்யறிதல் வேண்டும் என்று மணிமேகலைக்கு அறிவுறுத்துகிறார் அறவாணர். இதன்வழி பௌத்த

முறைப்படி கருதல் அளவையின் மெய்யாம்தன்மையை அறிந்து கொள்ள முடிகின்றது.

**<u>வீடுபேறு</u>**

மணிமேகலைக் காப்பியத்தில் அறவாணர் மணிமேகலைக்கு அறவுரை வழங்குகிறார். அவ்வறவுரைகள் போதி மரத்தடியில் அமர்ந்து மூவகைக் குற்றங்கள் விலக்கி வாழ்ந்த போதி சத்துவர் பிரபாபாலர் என்பவரின் வழிப்பட்டன என்று மணிமேகலைக் காப்பியம் குறிக்கிறது. இவ்வடிப்படையில் பௌத்த கொள்கைகளை மணிமேகலையில் அறிந்து கொள்ளமுடிகின்றது.

ஆன்மா இல்லை, கடவுள் இல்லை என்ற கொள்கை உடைய பௌத்த சமயம் வீடுபேறு என்பதை ஏற்கிறது.

‘‘எப்பொருளும் ஆன்மா இலை என

இப்படி உணரும் இவை வீட்டு இயல்பு''[209]

என்ற கருத்து இதனை உணர்த்தும்.

வீட்டு நெறியைப் பற்றி அறிய பன்னிரண்டு இயல்புகள் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்கிறது பௌத்தம்.

''இற்று என வகுத்த இயல்பு ஈர் ஆறும்

பிறந்தோர் அறியின் பெரும்பேறு அறிகுவர்

அறியார் ஆயின் ஆழ் நரகு அறிகுவர்''[210]

என்று மணிமேகலைக் காப்பியம் குறிக்கிறது. இதன் காரணமாக பன்னிரு நிலைகளை முதலில் அறிந்து கொள்ளவேண்டியுள்ளது. அவை பின்வருமாறு.

---

[209] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை,அடி 176-77

[210] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, பவத்திறம் அறுகென பாவை நோற்ற காதை,அடி 48-50

**பேதமை**

காட்சி, கருதல் என்ற இரு அளவைகளால் அறிந்தவற்றை மறந்து, மற்றவர்கள் சொல்லக் கேட்டு அதனையே உண்மையே நம்பி அவ்வழியே செல்லுதல் பேதமையாகும்.

**செய்கை**

உயிர்கள் செய்யும் தீவினை, நல்வினை ஆகியன செய்கைகள் ஆகும். இச்செய்கைகள் காரணமாக பேரின்பம், பெருங்கவலை ஆகிய அடுத்த அடுத்த பிறவிகளுக்குத் தொடரும்.

தீவினை என்பது உடல், சொல், உள்ளம் ஆகியவற்றால் செய்யப்படும் இழிவான செயல்கள் ஆகும். உடல் காரணமாக கொலை, களவு, காமம் ஆகிய மூவகைத் தீவினைகள் எழுகின்றன. சொல் காரணமாக பொய், புறங்கூறல், கடுஞ்சொல் சொல்லுதல், பயனில கூறல் ஆகிய நான்கு குற்றங்கள் நிகழ்கின்றன. உள்ளத்தின் காரணமாக பிறர் பொருளைக் கைக்கொள்ளல், வெகுளுதல், குற்றம் பட உணர்தல் ஆகிய குற்றங்கள் நிகழ்கின்றன. இவ்வகையில் பத்துவகைக் குற்றங்கள்

எழுகின்றன. இப்பத்துவகைக் குற்றங்கள் செய்வோர் அடுத்த பிறவிகளில் விலங்கு, பேய். நரகர் ஆகிய கதிகளில் பிறந்துக் கலக்குமுறுவர்.

நல்வினை என்பது மேற்சொன்ன பத்து தீவினைகளை மனம், மொழி, செயல் ஆகியவற்றால் செய்யாது இருத்தலாகும். சீலத்துடன் வாழ்ந்து தானங்கள் பலவற்றையும் புரியும் உயிர்கள் மக்கள், தேவர், பிரமர் ஆகிய கதிகளில் தொடர்ந்து பிறந்து பேரின்பம் அடைவர்.

**உணர்வு**

உணர்வு என்பது மேலிடாமல் உறங்குவோர் இடத்தில் அடங்கி இருப்பதுபோல இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் உணர்ச்சி மேலோங்கினால் அது உணர்ச்சி வசப்படல் என்ற குற்றத்திற்கு அழைத்துச்செல்லும்.

**அருவுரு**

உணர்ச்சியோடு கூடிய உயிரும் உடம்பும் அருவுரு எனப்படுகிறது.

**வாயில்**

இந்திரியங்கள் ஐந்து, மனம் என்பதனுடன் இணைந்து ஆறும் உள்ளத்தில் பொருளுணர்ச்சி எய்தி, அவை பொருந்துவதற்கு உரிய இடங்களாக இருப்பது.

**ஊறு**

மனமும் இந்திரியங்களும் தம்மின் வேறான பொருள்களைப் பொருந்துதல்

**நுகர்வு**

புலன் உணர்வில் ஆட்படுதல்

**வேட்கை**

நுகர்ச்சி மேல் கொள்ளும் ஆசை அடங்காது மேலும் மேலும் எழும் நிலை

**பற்று**

அடங்காது எழுந்த ஆசையால் அந்த ஆசையையே பற்றுதல்

**பவம்**

பயனை அனுபவித்தல் ஆகும்.

**<u>தோற்றம்</u>**

செய்த வினைகளுக்கு ஏற்ப உயிர்கள் பிறவிகளை அடைவது

**<u>வினைப்பயன் (பிணி, மூப்பு, சாக்காடு)</u>**

செய்த வினைகள் காரணமாக பிணி, மூப்பு, சாக்காடு ஆகிய இப்பிறவிகளிலேயே தக்கபடி அமையும் நிலை வினைப்பயன் ஆகின்றது.

இப்பன்னிரு நிலைகளையும் அறிந்து நீக்கிக் கொள்வது பேரின்ப வழி செல்ல வாய்ப்பளிக்கும் என்கிறது மணிமேகலைக் காப்பியம்.

உயிரின் பன்னிரண்டு இயல்புகளும் ஒன்றை ஒன்று சார்ந்தனவாகும். ஒன்றை நீக்க அடுத்தது நீக்கப்படும் தொடர்ச்சியைப் பெற்றது. இதனை மணிமேகலைக் காப்பியத்தில் சீத்தலைச் சாத்தனார்

''பேதைமை மீளச் செய்கை மீளும்
செய்கை மீள உணர்ச்சி மீளும்
உணர்ச்சி மீள அருவுரு மீளும்

அருவுரு மீள வாயில் மீளும்

வாயில் மீள ஊறு மீளும்

ஊறு மீள நுகர்ச்சி மீளும்

நுகர்ச்சி மீள வேட்கை மீளும்

வேட்கை மீளப் பற்று மீளும்

பற்று மீளக் கருமத் தொகுதி

மீளும் கருமத் தொகுதி மீளத்

தோற்றம் மீளும் தோற்றம் மீளப்

பிறப்பு மீளும் பிறப்புப் பிணிமூப்புச்

சாக்காடு அவலம் அரற்றுக் கவலை

கையாறு என்றுஇக் கடையில் துன்பம்

எல்லாம் மீளும்இவ் வகையான் மீட்சி''[211]

என்று ஒன்றின் ஒன்றினைத் தொடர்வதாக அமைகிறது. இவற்றை உயிர்கள் அறிந்து கொள்ளச் செய்வதே பௌத்த சங்கத்தின் கடமையாகின்றது.

---

[211] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை,அடி 119-134

மணிமேகலைக் காப்பியம் பேரின்பம் அடைய நான்கு உண்மைகளை முன்வைக்கின்றது. துக்கம், துக்கத் தோற்றம், துக்க நீக்கவழி என்பன அவையாகும்.

**துக்கம்(துன்பம்)**

உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, பிறப்பு, பிணி, மூப்பு, சாவு, அவலம், அழுகை, கவலை, கையாறு என்ற நிதானங்கள் துக்கமாகும்.

**துக்கத் தோற்றத்திற்கான காரணங்கள்**

பேதமை, செய்கை, வேட்கை, பற்று, வினைப் பயன் ஆகியன துக்கத் தோற்றத்திற்கான காரணங்கள் ஆகும்.

**துக்க நீக்கம்**

துன்பத்திற்கும், பிறப்புக்கும் காரணம் பற்றுடைமையே என்று அறிவது துக்க நீக்கம் ஆகும்.

**<u>துக்க நீக்க நெறி</u>**

பற்றினைத் துறப்பது துக்க நீக்க நெறியாகும்.

'யாம் மேல் உரைத்த பொருள்கட்கு எல்லாம்

காமம் வெகுளி மயக்கம் காரணம்

அநித்தம் துக்கம் அநான்மா அசுசி எனத்

தனித்துப் பார்த்துப் பற்று அறுத்திடுதல்''[212]

என்பது மணிமேகலை தரும் துக்க நீக்க நெறியாகும். இது மணிமேகலைக்கு அறவாணர் உணரத்திய நெறியாயினும் மற்ற உயிர்களுக்கு இவ்வழி உளதாகும்.

இவ்வாறு பௌத்த நெறிகளை மணிமேகலைக் காப்பியவழி அறியமுடிகிறது.

---

212 சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை,அடி. 252-255

## மணிமேகலை சுட்டும் பிற சமயங்களும் அவற்றின் கொள்கைகளும்

மணிமேகலைக் காப்பியத்தில் சைவவாதம், பிரம்மவாதம், வைணவவாதம், வேதவாதம், ஆசிவக வாதம், நிகண்ட வாதம், சாங்கியவாதம், வைசேடிக வாதம், பூதவாதம் போன்ற சமயக் கருத்துகளை உட்பொதிந்து வைத்துள்ளார் சீத்தலைச்சாத்தனார். இச்சமயங்கக் கருத்துகளை வாதங்களாக எதிர் கொள்ளுகிறாள் மணிமேகலை. வாதங்களை எதிர்கொள்ள ஏற்ற நிலையில் முன்னுரையாக அளவைவாதம் பற்றிய செய்திகள் வைக்கப்படுகின்றன. சமயங்கள் தத்தம் அளவைகள் வழி தம் பொருளை மெய்ப்பிக்கின்றன. இவ்வகையில் அளவைவாதத்தில் தொடங்குகிறார் சீத்தலைச்சாத்தனார்.

அளவைகளில் காட்சி, கருதல் என்ற இரண்டு மட்டுமே பௌத்தத்திற்குப் பொருந்துவது. ஆனால் மற்ற மதங்கள் தத்தம் சார்பிற்கு ஏற்ப அளவைகளைப் பெற்றுள்ளன.

### அளவைகள்

ஒரு பொருளின் இருப்பை அறிந்து கொள்ள பத்து வகையான அளவைகள் பயன்படுகின்றன. காட்சி, கருதல், உவமம், ஆகமம், அருத்தாபத்தி, இயல்பு, ஐதீகம், அபாவம், மீட்சியால் உணரும் ஒழிவறிவு, தொன்றி உளதாகும் சம்பவம் ஆகிய பத்து அளவைகள் சமயங்கள் கொள்ளும் அளவைகள் ஆகும். அவை பற்றிய விளக்கங்கள் பின்வருமாறு.

**காட்சியளவை**

காட்சியளவை என்பது ஒரு பொருளை ஐந்து பொறிகளாலும், மனதாலும் மயக்கமின்றி சூரிய சந்திர தீ ஆகிய ஒளிகளின் உதவியால் அறிதல் ஆகும். ஐந்து பொறிகளால் அறிதலால் இது ஐந்து வகைப்படும். கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் நிலையில் கண், காது, நாக்கு, மெய், மூக்கு என்ற ஐந்தின் வழியாகக் காட்சி அளவை உறுதிப்படுத்தப்படுகிறது.

**கருதல் அளவை**

கருத்துகள் சொல்லும் அனுமான வழி பொருளின் உண்மைத்தன்மையை அறிதல் கருதல் அளவையாகும். இது பொது, எச்சம், முதல் என்று

மூவகைப்படுவதாகும். இவை முறையே இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய முக்கால அனுமானத்தின் பாற்பட்டனவாகும்.

<u>உவமை அளவை</u>

காணப்படும் ஒன்று கொண்டு காணப்படாத ஒன்றை ஒப்புமைப்படுத்திக் காண்பது உவமை அளவையாகும்.

**<u>ஆகம அளவை</u>**

சான்றோர் தம் நூல்கள் கொண்டு சொல்லவந்த கருத்தை உறுதிப்படுத்துவது ஆகம அளவையாகும்.

**<u>அருத்தாபத்தி அளவை</u>**

ஒரு பொருளின் இயல்பினை அறிந்து கொண்டு அதனுடன் தொடர்புடைய மற்றொரு பொருளின் இயல்பினை அறிதல் என்பது அருத்தாபத்தி என்ற அளவையாகும்.

**<u>இயல்பு அளவை</u>**

இயல்பு அளவை என்பது இயல்பான தன்மை கொண்டு அறிதல் ஆகும். அதாவது யானைமீது இருக்கும் ஒருவனிடம் தா என்று கேட்டால் அவன் தன் கையில் இருக்கும் அங்குசத்தையே கேட்கிறார் எனக் கொடுத்தல் போன்றது இவ்வளவை

**ஐதீக அளவை**

உலகினரால் தொன்று தொட்டு வழங்கிவரும் நிலையில் ஒரு கருத்தை ஏற்பது ஐதீக அளவையாகும்.

**அபாவ அளவை**

அபாவ அளவை என்பது இல்லாத தன்மையாம். ஒரு பொருளின் இன்மைத் தன்மையை உறுதி செய்வது இவ்வளவையாகும்.

**மீட்சி அளவை**

ஒன்று வென்றது என்றால் மற்றது தோற்றது என்ற பொருள்படி உணர்தல் மீட்சி அளவையாகும்.

**சம்பவ அளவை**

இது உள்ள நெறி அளவை எனப்படுகிறது. இயற்கைப்பொருளின் தன்மையைக் குறிப்பது இவ்வளவையாகும்.

இவ்வாறு பத்துவகை அளவைகள் பற்றிய பொதுவான செய்திகளை மணிமேகலைக் காப்பியம் முதலாவதாக வழங்குகிறது. இதனைப் பின்வரும் தத்துவவாதிகள் பிரமாணவியல் என்று அழைத்தனர். இப்பிரமாணவியலில் எட்டுவகைக் குற்றங்கள் அமையலாம். அவை சுட்டுணர்வு, திரியக் கோடல், ஐயம், தேராது தெளிதல், கண்டு உணராமை, இல்வழக்கு, உணர்ந்ததை உணர்தல், நினைப்பு ஆகியனவாகும்.

**சைவவாதி**

மணிமேகலை சமயக்கணக்கரில் முதலாவதாக சைவவாதியைச் சந்திக்கிறாள். அவரிடம் அவர் வணங்கும் தெய்வம் பற்றி வினா எழுப்பினாள்.

சைவவாதி தன் கடவுள் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

1. ஞாயிறு, திங்கள், இயமன், மண், நீர், தீ, காற்று, வான் ஆகிய எட்டு வகைகளிலும் உயிரும் உடம்புமாகப் பிணிப்புண்டு நிற்பவன்.
2. யாவற்றையும் படைத்துத் திருவிளையாடல் புரியும் பண்பினன்
3. படைத்தவற்றை அழிக்கும் இயல்பினன்
4. பிறவித் துயரினைத் தீர்த்தருள்கின்ற சிறப்பினை உடையவன்
5. தன்னினும் வேறாகத் தனக்கு ஒப்பதும் மிக்கதுமாகிய இல்லான்
6. அவனே சிவன்

என்று சிவக்கடவுள் பற்றிய செய்திகளை மணிமேகலையிடம் கூறுகிறான் சைவவாதி.

**<u>பிரம வாதி</u>**

அடுத்து பிரம வாதியிடம் அவர் கொள்கை பற்றி வினவுகிறாள் மணிமேகலை. பிரமவாதி ‘‘இந்த உலகங்கள் எல்லாம் ஒப்பற்ற பிரம தேவன் இட்ட அண்டம்’ என்று குறிக்கிறார். படைப்புக் கடவுளான பிரம்மன் படைத்தது இந்த உலகம் என்ற நிலைப்பாட்டை பிரமவாதி முன்வைக்கிறார்.

**<u>வைணவவாதி</u>**

திருமாலின் வரலாற்றை ஓதி உணரும் வைணவவாதி நாராயணன் உலகைக் காக்கும் கடவுள் என்று குறிப்பிடுகிறார்.

இம்மூவரும் உலகை அழித்தல், படைத்தல், காத்தல் என்ற நிலையில் முக்கடவுள்களாக முச்சமய அமைப்பினராக மணிமேகலையால் கருதப்பெற்றுள்ளதால் முன்னர் இடம்பெற்றனர்.

**<u>வேதவாதி</u>**

வேதங்கள் படி நடப்பதே தம் வாழ்க்கைமுறை என்றார் வேதவாதி. வேதம் ஆக்கிய வேத புருடனுக்கு ஆதியும் இல்லை. அந்தமும் இல்லை என்ற கருத்துகளை வேதவாதி குறிப்பிட்டார்.

மேற்சொன்ன சமயவாதிகளின் கருத்துகளை மணிமேகலை மெய்த்திறம் இல்லை என்றும் வழக்கிற்கு ஒவ்வாதது என்றும் கூறி மறுக்கிறாள். ''மெய்த்திறம், வழக்கு என விளம்புகின்ற எத்திறத்திலும் இசையாது இவர் உரை '[213] என்பது மணிமேகலைக் காப்பியத்தில் சொல்லப்பட்ட மறுப்பு ஆகும்.

**<u>அசீவகவாதி</u>**

அடுத்து இருந்த சான்றோரிடம் அவரின் இறைவன் பற்றிய இயல்புகளை மணிமேகலை கேட்டறிந்தாள். அந்தச் சான்றோர் ஆசீவ நெறி சார்ந்தவர். அவர் பின்வருமாறு தான் வணங்கும் கடவுள் பற்றியும் அவர் சமயக் கொள்கைகள் பற்றியும் விளக்கினார்.

---

[213] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதை, அடி.106-107

**ஆசீவகக் கடவுள்**

ஆசீவகக் கொள்கையின்படி இறைவன் என்பவர் எல்லையற்ற பொருள்களில் நீங்காமல் நிறைந்து இருப்பவர், எங்கும் இருப்பவர், வரம்பில் அறிவு உடையவர் என்று கொள்ளப்படுகிறார்.

**ஆசீவகக் கொள்கை**

உயிர், நிலம், நீர், தீ, காற்று என பொருள்கள் ஐந்து வகைப்படும். இவற்றில் நிலம், நீர், தீ, காற்று ஆகியன தம்முள் கூடுதலும், பிரிதலும் உண்டு. இவை பற்றிய கூடுதல் விளக்கங்கள் பின்வருமாறு.

அணுக்கள் திரண்டு விரியும் நிலையில் உயிர் உருவாகும். நிலஅணுக்கள் வலிமையானவை. நீரணு குளிர்ச்சி, சுவை உடையதாய் தாழ்ந்து விழும் தன்மையதாய் நிலம் சேர்ந்து ஆழ்வது. தீயணுக்குள் எரிக்கும் இயல்புடையதாகி மேல் நோக்கி எழும். காற்றணு குறுக்கிட்டு அசையும் இயல்புடையது.

நிலம்,நீர், காற்று, தீ ஆகிய நான்கு அணுக்களும் என்று அழிவதில்லை. அணுக்கள் புதிதாகத் தோன்றுவதில்லை. ஒன்றில் இருந்து ஒன்றுக்குள் புகுவதுமில்லை. இந்த அணுக்காட்சி தெளிவுடையோர்க்கு மட்டுமே அறியமுடிவது.

ஆசீவகம் நிறக் கோட்பாடு உடையது. உயிருக்கு பல்வேறு நிற வேற்றுமைகளை அளித்து வெண்மை நிறத்தன்மையில் வீடுபேறு அடையும் போக்குடையதாக ஆசீவகம் கொள்கிறது.

‘‘கரும்ம் பிறப்பும் நீலப் பிறப்பும்

பசும்ம் பிறப்பும் வெண்ண் பிறப்பும்

பொன்ன் பிறப்பும் வெண்ண் பிறப்பும்

என்று இவ்வாறு பிறப்பினும் மேவி

பண்புறு வரிசையின் பாற்பட்டுப் பிறந்தோர்

சுழி வெண்பிறப்பில் கலந்து வீடு அணைகுவர்”[214]

என்பது ஆசீவக நெறியாகும். இவ்வழி செல்வது உயிரின் செம்போக்கு ஆகின்றது.

**உயிரின் இயல்பு**

ஆசீவக நெறிப்படி உயிர் என்பதன் இயல்புகள் வரையறுக்கப்பெற்றுள்ளன. அவை பின்வருமாறு.

உயிர் நற்பேறுகளைப் பெறும். பெற்ற பேறுகளை இழக்கும். உயிர் பல்வேறு இடையூறுகளுக்கு ஆளாகும். தான் சார்ந்த இடத்தின் தன்மையைப் பெற்று நிற்கும். ஓர் உயிர் கருவில் தோன்றியபோதே அவ்வுயிரின் இன்ப, துன்பங்கள் நிர்ணயிக்கப் பெற்று விடுகின்றன. பிறப்பு இறப்பு நாள்கள் கணக்கிடப்பெற்றுவிடுகின்றன. முற்பிறப்பில் செய்த வினைகளே அடுத்த பிறவியில் உயிர்களுக்குத் தொடர்கின்றன.

[214] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, சமயக்கணக்கர் தம் திறம் கேட்ட காதை, அடி 150-155

**ஆசீவக நூல்**

ஆசீவகம் மற்கோலி கோசர் என்பவரின் நூலைச் சார்ந்து இயங்குவதாகும். ‘மற்கலி  நூலின் வகை இது” என்று மணிமேகலை இதனைக் குறிக்கிறது.

அணு பற்றிய விளக்கங்களில் முன்னுக்குப் பின் முரணாக பல செய்திகள் இருப்பதால் மணிமேகலை அடுத்த சமயவாதியிடம் விளக்கம் கேட்கத் தொடங்கினாள்.

**நிகண்டவாதி**

நிகண்டவாதியிடம் மணிமேகலை உன்னால் போற்றப்படும் தலைவன் யார்? நீ பின்பற்றும் நூற்பொருள் எவை என்று வினவினாள். அதற்கு நிகண்டவாதி பின்வருமாறு பதிலளித்தார்.

**தலைவன்**

நிகண்டவாதி எனப்படும் சமண சமயத்தின் தலைவராக அமைபவர் அருகர். இவர் இந்திரனால் வணங்கப்பெறும் பெருமை உடையவர் என்று நிகண்டவாதி குறிப்பிட்டார்.

**நுவல்பொருள்**

இச்சமயம் குறிக்கும் பொருள்கள் பத்து ஆகும். தர்மாத்திகாயம், அதர்மாத்திகாயம், காலம், ஆகாயம், மாசற்ற உயிர், பரமாணுக்கள், நல்வினை, தீவினைகள், கட்டுவிடுதல் ஆகியன அவையாகும்.

பொருள் இடம்பெயர உதவும் பொருள் (காற்று போன்றது) தர்மத்திகாயம் எனப்படும். பொருள்களை நிலைப்படுத்தி நிற்கச் செய்தல் அதர்மாத்திகாயம் ஆகும். காலம் குறுகியது, நீண்டது என்ற தன்மை உடையது. உலகில் உள்ள பொருள்கள் நிற்க இடம் தருவது ஆகாயம். உயிர் என்பது  உடம்புடன் கூடி, அதனுள் பரந்து நிற்கும் தன்மையது. புலன் உணர்ச்சி உடையது. பரமாணு என்பது பொருள் ஒன்றின் புறத்தோற்ற இணைவு பற்றியது. நல்வினை, தீவினை ஆகிய பண்டை வினை களைந்து, உயிர் அடையும் அழியா இன்பம் வீடு

எனப்படும். இவ்வாறு பத்துவகை பொருள்களையும் விளக்குகிறது நிகண்டவாதம்.

**<u>பொருளின் இயல்பு</u>**

உலகில் உள்ள பொருள்கள் உண்மையாக தமக்கென சில தன்மைகள் உடையனவாக விளங்கும். தான் சார்ந்திருக்கும் நிலையில் சார்ந்ததன் தன்மையையும் பெற்றிருக்கும். நிலைத்த தன்மை பெற்றதாகவும் இருக்கும். நிலையாத் தன்மை பெற்றதாகவும் இருக்கும். தோன்றல், நிலைபெறல், கெடல் என்ற மூன்று இயல்புகளை உடையதாக இருக்கும்.

வேம்பின் விதையில் இருந்து வேம்பே முளைப்பது நித்தியம். வேப்பம் விதை அழிவது அநித்தியம். என்ற நிலையில் பொருளின் தன்மையை அறிந்து கொள்ள இயலும்.

**சாங்கியவாதி**

நிகண்டவாதியின் கொள்கையிலும் நிறைவடையாத மணிமேகலை சாங்கியவாதியிடம் அவரின் கொள்கைகளைப் பற்றிய அறிய வினவுகிறாள்.

**மூலப்பகுதி**

இறைவனை ஏற்காத சாங்கியவாதி, மூலப்பகுதி என்பதை முன்வைக்கிறார். அம்மூலப்பகுதியானது. ‘‘ தன்னை இத்தன்மைத்து என அரியதற்கு அரியது. அது மூவகைக் குணமுடையது. மனத்தால் காரியங்களை அது செய்யாது மாட்சிமைப்பட்ட பொதுஇயல்பின் வழியில் செயல்படுவது. எல்லாப் பொருளும் தோன்றுவதற்கு இடம் அளிப்பது’’[215] என்று அறிவிக்கிறார் சாங்கியவாதி.

---

[215] சீத்தலைச்சாத்தனார், மணிமேகலை, சமயக்கணக்கர் திறம்கேட்ட காதை, அடிகள் 203-205

## பொருள்கள் தோன்றும் முறை

‘‘மூலப்பகுதியில் இருந்து பொருள்கள் தோன்றும் முறையைப் பற்றியும் சாங்கியவாதி குறிப்பிடுகிறார். மூலப்பகுதியில் இருந்து மான் என்று சொல்லப்படும் புத்தித் தத்துவம் வெளிப்படும். அந்தப் புத்தியிலிருந்து ஆகாயம் தோன்றும். ஆகாயத்தினின்று வாயு வெளிப்படும். அந்த வாயுவினின்று நெருப்பு வெளிப்படும். அந்நெருப்பிலிருந்து நீர் வெளிப்படும். நீரிலிருந்து நிலம் வெளிப்படும். அந்த நிலம் முதலியவற்றின் கூட்டத்தினின்று மனம் வெளிப்படும்” [216] என்று பொருள்களின் உற்பத்தி பற்றிக் குறிக்கிறார் சாங்கியவாதி.

புருடனால் அறியக்கூடிய பொருள்கள் இருபத்தைந்து என்று உரைக்கிறது. பஞ்ச பூதங்கள் (நிலம், நீர், காற்று, ஆகாயம், தீ), ஞானேந்திரியங்கள் ( மெய், வாய், கண், மூக்கு, செவி), தன் மாத்திரைகள் (சுவை, ஒளி,ஊறு, ஓசை, நாற்றம்), கன்மேந்திரியங்ள் (வாக்கு, கை, கால், பாயுரு,

---

[216] சீத்தலைச்சாத்தனார், மணிமேகலை, சமயக்கணக்கர் திறம்கேட்ட காதை, அடிகள் 206- 210

உபத்தம்), அந்தக்கரணங்கள் (மனம்,அகங்காரம், புத்தி, மூலப்பகுதி), இவற்றோடு உயிர் ஆக இருபத்தைந்து பொருட்கள் தத்துவங்களாக சாங்கியவாதியால் காட்டப்பெறுகின்றன.

**<u>வைசேடிகவாதி</u>**

சாங்கியவாதியின் மெய்ப்பொருள் விளக்கத்திலும் மணிமேகலை அமைதி அடையாத காரணத்தால் அடுத்து இருந்து வைசேடிகவாதியிடம் அவர்தம் கொள்கைகளைக் கேட்க விரும்பினாள்.

வைசேடிகவாதி குற்றமில்லாத பொருள், குணம், செயல், பொது, சிறப்பு, கூட்டம் என்று எமது அடிப்படை ஆறுவகைப்படும்.

இவற்றில் பொருள் என்பது குணங்களையும் செயல்களையும் உடையது. ஒன்பது வகையாக அது அமைகிறது என்றார். அவை நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், திசை, உலகம், ஆன்மா, மனம் என்பனவாகும். இவற்றில் நிலம் என்பது ஒலி, ஊறு, நிறம்,சுவை,மணம் என்றும் ஐந்து குணங்களை உடையது. மற்ற நான்கும் ஒவ்வொரு குணம் குறைவு பட அமைதல் இயல்பாகும்.

குணம் என்பது ஓசை, பரிசம், நிறம், மணம்,சுவை, பெருமை, சிறுமை, மென்மை, வன்மு. சீர்மை, நொய்மை, வடிவம், இடம், வலம், பக்கம் ஆகியன குறித்ததாகும்.

செயல் என்பது பொருள், குணம் ஆகியவற்றின் அடிப்படையில் நிகழ்வதாகும்.

பொதுவென்பது பொருளின் உண்மைத்தன்மையை உணர்த்துவது. போவதும் நிற்பதும் எல்லாப் பொருள்களுக்கும் பொதுக்குணம். இறத்தலும், இருத்தலும் பொருளின் முதன்மை இல்லாத் தன்மைக்கு உரியது.

சிறப்பு என்பது ஒன்றுக்கு உள்ள சிறப்புத் தன்மை கருதியது.

கூட்டம் என்பது குணத்துக்கும் குணிக்கும் உள்ள தொடர்பு பற்றியது. இவ்வாறு ஆறு பொருள்களின் அடிப்படையில் வைசேடிக வாதம் விளக்கம் பெறுகிறது.

**பூதவாதம்**

பூதங்கள் உணர்வுடையன, உணர்விலாதன என்று இருவகைப்படும். உணர்வுடையது உயிர். உணர்வில்லாது உடல். இவற்றின் கூட்டமே உயிரும் உடலும் ஆகின்றது.

பூதங்களின் கூட்டத்தால் உணர்வு தோன்றும். கள்ளில் களிப்பு உண்டாக பல பொருள்கள் சேர்க்கப்பெறுகின்றன. அவ்வகையில் கள் களிப்பு மிக்கதாக ஆகின்றது. இதன் காரணமாக மயக்க உணர்வு ஏற்படுவதுபோல பூதங்களின் கூட்டத்தால் உணர்வு ஏற்படுகிறது. இவ்வுணர்வு சென்று தேய்ந்து கழிந்து, இற்றுப்போய், அவை மூலப்பொருளில் ஒன்றும். பறையின் ஓசை எழுந்து, அதிர்ந்து, கெடுவது போன்றது இச்செயல்பாடு என்கிறார் பூதவாதி.

மேலும் இதனின்று வேறுபட்டது உலகாயதம் என்கிறார் பூதவாதி. காட்சி அளவை மட்டுமே ஏற்பது பூதவாதம். கருதல் அளவையை ஏற்காதது பூதவாதம். மேலும் வினைப்பயன், பிறவித் தொடர்ச்சி போன்றவற்றைப் பூதவாதம் ஏற்கவில்லை. மாறாக இம்மைப் பயன் இம்மையிலேயே விளையும் என்று குறிக்கிறது பூதவாதம்

இவ்வாறு தன் கால சமயங்களின் கொள்கைகளை எடுத்துரைக்கும் சர்வ சமய இலக்கியமாக மணிமேகலை விளங்குகின்றது.

# இயல்.4

## மணிமேகலைக் காலத்திற்குப் பிந்தைய நிலையில் மயங்களின் வளர்ச்சிப் போக்குகள்

மணிமேகலைக் காப்பியம் தமிழக மெய்ப்பொருளியல் வரலாற்றில் ஒரு மையப் புள்ளியாக அமைகிறது. மணிமேகலைக் காப்பியத்திற்கு முன்னான மெய்ப்பொருள் சிந்தனைகளை இது பதிவு செய்துள்ளது. மணிமேகலைக் காப்பியத்திற்குப் பின்பு சமய வாதங்கள், சமயக் கொள்கைகள் பதிவு செய்யப்படவும் இது ஒரு தூண்டுகோலாக இருந்துள்ளது. இக்காப்பியத்தைத் தொடர்ந்து எழுந்த சீவகசிந்தாமணி, வளையாபதி ஆகிய பெருங்காப்பியங்களில் சமண சமயத்தின் வளர்ச்சியை அறிந்து கொள்ள முடிகின்றது. குண்டலகேசியில் பௌத்த சமய வளர்ச்சியை அறிந்து கொள்ளமுடிகின்றது. ஐஞ்சிறு காப்பியங்களில் நீலகேசி தவிர்ந்த மற்ற காப்பியங்களில் சமணசமய வளர்ச்சியை அறிந்து கொள்ளமுடிகின்றது. நீலகேசியில் பௌத்த சமய வளர்ச்சியையும் நீலகேசி மற்ற சமயத்தாரை வாதுக்கு அழைக்கும் நிலையில் பிற சமயக் கருத்துகளையும் வளர்ச்சியையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

இவற்றைத் தொடர்ந்து பக்தி இலக்கிய காலம் தொடர்கிறது. இதில் சைவ, வைணவக் கருத்துகளை பக்தி இலக்கியப் பெரியவர்கள் பதிவு செய்துள்ளனர். தொடர்ந்து வந்த சைவ சித்தாந்த சாத்திரங்களில் சுபக்கம், பரபக்கம் என்ற நிலைகளில் சமய வாதங்கள் எடுத்துரைக்கப்பெறுகின்றன. ஒட்டக் கூத்தர் எழுதிய காரணை விழுப்புரையான் வளமடல் என்ற சிற்றிலக்கியம் உலகாயுதக் கருத்துகளை முன்வைக்கிறது. அதே நேரத்தில் மற்ற சமயங்களை கருதல் அளவைகளைத் தகர்க்கிறது. குறிப்பாக இம்மைக்கால இன்பத்தை முன்னிறுத்தி இந்நூல் செய்யப்பெற்றுள்ளது. இவ்வாறு தொடர்ந்து தமிழக மெய்யியல் வளர்ச்சி பெற்று வந்துள்ளது.

செவ்வியல் காலம் என்ற அடிப்படையில் காணும்போது ஐஞ்சிறுங்காப்பியங்கள் எழுந்த காலம் வரையான நிலையில் சமயங்களின் வளர்ச்சிநிலையைக் காண்பது என்பது இவ்வாய்வுத்திட்டத்திற்குப் பொருந்துவது என்பதால் அக்கால எல்லைவரை சமய வளர்ச்சி நிலைகளைக் காண்பது என்பது இங்குப் பொருத்தமுடையதாகின்றது,

**பௌத்த சமய வளர்ச்சி**

மணிமேகலைக்குப் பின்பும் பௌத்தசமயம் வளர்ச்சி பெறத் தொடங்கியது. அதன் வளர்ச்சியைக் குண்டலகேசி, நீலகேசி ஆகிய காப்பியங்களின் பதிவுகள் வழி அறியமுடிகின்றது. இவைதவிர வீரசோழியம், சித்தாந்தத் தொகை, மானாவூர்ப்பதிகம், திருப்பதிகம், விம்பசாரன்கதை, அபிதம்மாவதாரம் போன்ற பல நூல்களில் பௌத்தசமய வளர்ச்சிக்கான பதிவுகள் இடம்பெற்றுள்ளன. இவை தவிர பெயரளவில் மட்டுமே அறியப்படுகிற பௌத்த நூல்கள் சிலவும் இச்சமய வளர்ச்சியை எடுத்துரைப்பனவாக உள்ளன. ஆசாரிய புத்த தத்த மகோதரர் என்பவர் மதுராத்த விலாசீனி, வினய வினவிச்சயம், உத்தரவினிச்சயம், ஜினலங்காரம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். ஆசாரிய தருமபாலர் என்பவர் பரிமார்த்த மஞ்ஜீஸா, நெட்டிய கரணத்தகதா, பரமார்த்த தீபனீ போன்ற நூல்களை எழுதியுள்ளார். அநுருத்தர் ஆயிரம் மாத்த சங்கிரகம், பரமார்த்தாவினிச்சயம், நாமரூபப் பரிச்சேதம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். காபசதெரர் என்பவர் மோகவிச்சேதனீ, விமதிவிச்சேதனீ, விமதி வினோதினி, அநாகத வம்சதம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். இவ்வகையில் பௌத்த வளர்ச்சி தமிழக அளவில்

இருந்துள்ளது. இவற்றில் செவ்விலக்கிய கால எல்லைக்குட்பட்ட குண்டலகேசி, நீலகேசி ஆகியவற்றில் பதிவு செய்யப்பெற்றுள்ள பௌத்தசமய வளர்ச்சியை இப்பகுதி எடுத்துரைக்கிறது.

**<u>குண்டலகேசி</u>**

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான குண்டலகேசி பௌத்த சமய நூலாகும். இதனை இயற்றியவர் நாதகுத்தனார் ஆவார். இந்நூல் முழுமையும் கிடைக்கவில்லை. தற்போது ஒரு நூறு பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. இக்காவியத்தின் கதை பல திருப்பங்களைக் கொண்டது.

இராச கிருகம் என்ற நகரத்தைத் தலைமையாக வைத்து அரசாண்ட அரசனுக்கு மந்திரி ஒருவர் இருந்தார். அவரின் மகள் பத்திரை ஆவாள். இப்பத்திரை ஆவண நகரத்தில் வாழ்ந்த வணிகரின் மகள் என்ற கருத்தும் உளது. இவள் ஓர் இளைஞனைக் காதலித்தாள். அவன் அரசனால் குற்றவாளியாகக் கருதப்பெற்றவன் என்ற போதிலும் அவனை அக்குற்றத்திலிருந்து விடுவிக்கிறார் அமைச்சர். அதன்பின் அவனைத் தன் மகளுக்குத் திருமணம் செய்துவைக்கிறார். இவர்கள்

இருவரும் ஒன்றிணைந்து வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் இவர்கள் இருவருக்கும் ஊடல் வந்தது. ஊடல் வளர்ந்து பெரிதாகிறது. இருவரும் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிய எண்ணுகின்றனர். இதில் பத்தரை கணவனை முற்றிலும் பிரிந்துவிடும் அளவிற்குச் சென்றுவிடுகிறாள். இதன் காரணமாக அவளுக்கு உலக வாழ்வின்மீது வெறுப்பு தோன்றுகிறது. அவள் சமண சமயத்தில் இணைந்து துறவியாகிறாள். சமண சமயக் கருத்துகளை அவள் பரப்பி வந்தாள். மற்ற சமயத்தாருடன் வாதம் செய்து வெற்றி பெற்றாள்.

பத்தரை தன் தலையை மழித்துக் கொண்ட போதிலும் சுருள் சுருளாக அவளின் தலைமுடி வளர்ந்தது. இதன் காரணமாக அவள் குண்டலகேசி எனப்பட்டாள். குண்டலகேசி என்றால் குண்டலம் போன்று வளைந்து சுண்ட தலைமுடியை உடையவள் என்று பொருள். அதுவே அவளின் n;பயராக மக்கள் வழங்கினர். இதுவே காப்பியத்தின் பெயராகவும் ஆனது. இந்நிலையில் ஊர் ஊராகச் சென்று சமண சமயத்தை அவள் பரப்பி வந்தாள்.

இந்நிலையில் ஓர் ஊருக்குச் சென்றபோது அங்கு சமயவாதம் புரிவதற்காக நாவல் கிளை ஒன்றை நட்டுவிட்டு அவள் தனக்கான உணவைத் தேடி பிச்சைப் பாத்திரம் ஏந்திப்புறப்பட்டாள். அப்போது அவ்வூருக்குப் புத்தர்பிரானும் தன் சீடர்களுடன் வருகை புரிந்து இருந்தார். புத்தரின் சீடர்களுள் ஒருவரான சாரி புத்தர் என்பவர் குண்டலகேசி நட்ட நாவல் மரத்தின் அருகே வந்தார். அங்கு வந்து அங்கிருந்த சிறுவர்களிடம் அந்நாவல் மரத்தைப் பிடுங்கிடச் செய்தார். அந்நேரத்தில் குண்டலகேசி வர சாரி புத்தருக்கும் அவளுக்கும் சமயவாதம் நடைபெற்றது. இவ்வாதத்தில் குண்டலகேசி கேட்ட வினாக்களுக்குச் சாரிபுத்தர் விடைதருகிறார். ஆனால் சாரி புத்தர் வினவிய வினாக்களுக்குக் குண்டலகேசியால் விடையிறுக்க இயலவில்லை. இதன் காரணமாக அவள் சாரிபுத்தரைச் சரண் அடைந்தாள். அதற்குச் சாரி புத்தர் என்னைச் சரணடைய வேண்டாம். புத்தரைச் சரணடைக என்று கூறி அவளைப் புத்தரிடம் அழைத்து வருகிறார். புத்தரை வணங்கிப் பௌத்த மதம் சார்கிறாள் குண்டலகேசி. இதுவே இக்காப்பியக் கதையாகும்.

இக்காப்பியத்தில் பௌத்த சமயக் கருத்துகள் இடம்பெற்றுள்ளன. அவையடக்கமாக வரும் பாடலில் புத்தபெருமான் பெருமை எடுத்துரைக்கப்பெற்றுள்ளது.

நோய்க்குற்ற மாந்தர் மருந்தின்சுவை நோக்க கில்லார்

தீக்குற்ற காத லுடையார்புகைத் தீமை யோரார்

போய்க்குற்றமூன்று மறுத்தான்புகழ் கூறு வேற்கென்

வாய்க்குற்றசொல்லின் வழுவும்வழு வல்ல வன்றே

நோயாளிகள் மருந்தின் சுவை பற்றிக் கவலைப்படாது தன் நோய்தீர அதனை உண்பர். குளிரில் நடுங்குபவர்கள் புகையை ஏற்றுக்கொண்டு தீயை வரவேற்பார்கள். அரச வாழ்வைத் துறந்து: மூவகைக் குற்றங்களை நீக்கிய புத்த

நீலகேசி

ஐஞ்சிறுங்காப்பியங்களில் ஒன்றாக அமைவது நீலகேசி ஆகும். இதனை இயற்றியவர் யார் என அறியப்படவில்லை. இது பத்துச் சருக்கங்களை உடையது.

895 பாடல்களை உடையது. இது குண்டலகேசிக்கு எதிராக எழுந்த காப்பியம் என்றே கருதப்படுகிறது. பாஞ்சால நாட்டில் இருந்த சமண முனிவர் முனிச்சந்திரருக்கும் நீலிப் பேய்க்கும் இடையே ஏற்பட்ட கருத்து மோதலே காப்பியமாக படைக்கப்பெற்றுள்ளது. சமண மதமே இதில் வெல்கிறது. இதனுள் குண்டலகேசியின் நூறு பாடல்கள் அறிமுகம் செய்யப்பெறுகின்றன. நூறு பாடல்களின் முதற்குறிப்பு தரப்பெற்று குண்டலகேசியின் வாதங்கள் மறுக்கப்பெறுகின்றன. இதன் காரணமாக குண்டலகேசி மறைந்தாலும் அந்நூலில் இருந்த பௌத்த சமயப்பாடல்கள் இவை என அறிந்துகொள்ள

ஆதிதான் பெரியனாய் அறங்கெடும் அளவுஎல்லாம்

ஊதியமே உணர்ந்தவன் உனுறுதருமமே உரைத்தான்

யாதனையுந் தான்வேண்டான் அயலார்க்கே துன்புற்றான்

போதியான் எம்இpறைவன் பொருந்தினார் உயக்கொள்வான்.[217]

[217] நீலகேசி, பாடல் 176

என்ற  நிலையில் பௌத்த மதக் கருத்துகளுக்கு இடமளித்துள்ளது நீலகேசி

இதனுள் அமைந்துள்ள குண்டலகேசி வாதச் சருக்கம், அருகச் சந்திர வாதச் சருக்கம், மொக்கல வாதச் சருக்கம்,  புத்த வாதச் சருக்கம் ஆகியன பௌத்தக் கருத்துகளைக் கொண்டுள்ளன. இவற்றின் அடிப்படையில் பௌத்த மத வளர்ச்சியை ஓரளவிற்கு அறிந்து கொள்ளமுடிகின்றது.

**குண்டலகேசி**

நீலகேசி காப்பியத்தில் நீலகேசி தான் அறிந்த சமண சமயக் கருத்துகளுடன் பல்வேறு இடங்களுக்குச் சென்று வாதம் செய்கிறாள். அவ்வகையில் பாஞ்சால நாட்டில் குண்டலகேசி என்ற பௌத்த மதக் கொள்கையாளர் இருப்பதை அறிந்து அவளுடன் வாது செய்ய முனைகிறாள். குண்டலகேசிக்கும் நீலகேசிக்கும் நேருக்கு நேரான கருத்து மோதல்கள், தத்துவ விளக்கங்கள் அமைகின்றன. இவ்விவாதத்தில் நீலகேசி வெல்கிறாள் என்றாலும் பௌத்த சமயக் கருத்துகளை அவள் எதிர்கொள்ளும் நிலையில் பௌத்த சமயக் கருத்துகள் வெளிப்படுத்தப்பெற்றுள்ளன.

**அருகச் சந்திரர்**

குண்டலகேசியை வென்றபின் அருகச்சந்திரர் என்ற பௌத்தரை வாதில் வெல்லச் செல்கிறாள் நீலகேசி. அருகச் சந்திரர் உஜ்ஜயினி என்ற இடத்தில் இருக்கிறார். அங்குச் சென்று அவரை வாதுக்கு அழைக்கிறாள் நீலகேசி. அவருடன் வாது செய்து அவரையும் வெல்கிறாள்.

**மொக்கலன்**

மொக்கலன் என்பவர் பத்மபுரத்தில் இருந்த பௌத்த ஞானி ஆவார். இவர் சாரிபுத்தருக்கு ஈடான புத்தரின் சீடர். இவருடன் வாதுக்கு நிற்கிறாள் நீலகேசி. பெருத்த வாதம் நடைபெறுகிறது.

**புத்தர்**

நீலகேசி பௌத்த மதத்தின் பெருவளர்ச்சிக்குக் காரணமான கௌதம புத்தரைக் கபிலபுரத்தில் சென்று சந்திக்கிறாள். அவருடன் வாதுக்கு நிற்கிறாள்.

ஆன்மா தவத்தின் வழி நன்னெறி பெற இயலும் என்ற நிலையில் நீலகேசியின் கருத்துக்கு உடன்படுவதாக நீலகேசி குறிக்கிறது.

மேற்கண்ட பௌத்த அறிஞர்களை நீலகேசி சந்தித்ததாக நீலகேசி காப்பியம் குறிக்கிறது. இருப்பினும் புத்தரை நீலகேசி சந்தித்த நிகழ்வு புனைவு என்று கொண்டாலும் பௌத்தம் மணிமேகலைக்குப் பின்பு வளர்ச்சி பெற்றிருந்தது என்ற கருத்தை நீலகேசி நான்கு பௌத்த சமய வல்லுநர்களிடம் விவாதம் நடத்த முன்வந்ததிலிருந்து உணரமுடிகின்றது.

மணிமேகலைக் காப்பிய காலத்திற்குப் பின்பு சைவம், வைணவம் ஆகிய சமயங்கள் வளர்ச்சி பெற்றதற்கான அடையாளங்கள் அதிகம் கிடைக்கவில்லை. ஆனால் ஆறாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தர் வருகைக்குப் பின்னால் சைவம் எழுச்சியுற்றது. இதே காலத்தில் வைணவமும் ஆழ்வார்களால் வளர்ச்சி பெற்றது. எனவே செவ்விலக்கிய கால எல்லையில் மணிமேகலைக் காப்பிய காலத்திற்குப் பின்பு சைவ, வைணவ சமயங்களின் வளர்ச்சி என்பது குறிப்பிடும் அளவிற்கு இல்லை. பிரம்மவாதமும் மணிமேகலைக் காப்பிய காலத்திற்குப் பின் வளர்ச்சி

பெற்றதாக அறிய இயலவில்லை. வேதவாதம், ஆசீவகவாதம், நிகண்டவாதம் (சமணம்), சாங்கிய வாதம், வைசேடிகவாதம், பூதவாதம் ஆகியன இருந்ததற்கான அடையாளங்கள் உள்ளன. நீலகேசியில் இச்சமயங்கள் பற்றிய மறுப்புகள் இடம்பெற்றுள்ளன. இதன் காரணமாக இச்சமயங்கள் தமிழகத்தில் வளர்ந்திருந்தன என்பதை உணரமுடிகின்றது.

**வேதவாதம்**

வேதவாதம் சைவம், வைணவம், பிரம்ம வாதம் போன்றவற்றை உள்ளடக்கிய பகுதியாக நீலகேசிக்குள் கருதப்பெறுகிறது. பூதிகர் என்பவரின் தலைமையில் ஒரு வேதக்கல்லூரி காகண்டி என்ற இடத்தில் இருந்ததாக நீலகேசியில் குறிப்பிடப்படுகிறது. அங்குச் சென்று, பூதிகரிடம் வாதம் செய்து நீலகேசி வெற்றி பெறுகிறாள். வேதம் ஓதி, உயிர்ப்பலி இடலைத் தவிர்க்க வேண்டும் என்று நீலகேசி அறிவுறுத்துகிறாள். இதன் காரணமாக தூய்மையான வழிபாட்டை நோக்கி பூதிகர் வேத வாதத்தை மாற்றியமைக்க முனைகிறார் என்று குறிக்கிறது நீலகேசி.

இவ்வகையில் வேதவாதம் நீலகேசி காப்பிய காலத்தில் வளர்ந்திருப்பதை உணரமுடிகின்றது.

**ஆசீவகம்**

நீலகேசியில் ஆசீவகக் கருத்துகளை அறிந்தவராகக் காட்டப்பெறுபவர் பூரணர் ஆவார். இவர் குக்குட நகரில் வாழ்கிறார். இவருடன் வாது செய்கிறாள் நீலகேசி. சமணர்களைப் போலவே வாழ்ந்த இயல்புடையவர்களாக ஆசீவகர்களை நீலகேசி காட்டுகிறது. மணிமேகலைக்குப் பின்பு ஆசீவகம் வளர்ச்சி பெற்றிருந்தது என்பதற்கு நீலகேசிக் காப்பிய வாதம் சான்றாகிறது.

**சமணம்**

பெருங்காப்பியங்களான சீவக சிந்தாமணி, வளையாபதி, ஐங்சிறு காப்பியங்களான உதயண குமார காவியம், யசோதர காவியம், நாக குமார காவியம், சூளாமணி ஆகியன சமண சமயச் சார்பினைப் பெற்றனவாகும். இவற்றின் வழி சமண சமயத்தின் வளர்ச்சியை அறிந்து கொள்ள இயலும்.

**<u>சீவகசிந்தாமணி</u>**

திருத்தக்க தேவர் எழுதிய சீவக சிந்தாமணி சமண சமயக் காப்பியமாகும். சமண சமயத் துறவியாக விளங்கிய திருத்தக்க தேவர் எழுதிய இந்நூலின் முத்தி இலம்பகப் பகுதி முழுக்க முழுக்க சமண சமயக்கொள்கைகளை எடுத்துரைக்கிறது.

இரு சாரணர்கள் தோன்றி சீவகனுக்கு சமண சமயக் கொள்கைகளை எடுத்துரைக்கின்றனர். மானுடப் பிறப்பின் சிறப்பு, நிலையாமை, நரக கதித்துன்பம், விலங்குக்கதித் துன்பம், மக்கட்கதித்துன்பம், தேவகதித்துன்பம், நற்காட்சி, சீலம், தானம், தானப்பயன், சீலப்பயன், காட்சிப்பயன். வீடுபேறு ஆகியவை பற்றிய சமண சமய விளக்கங்களை இச்சாரணர்கள் வழங்குகின்றனர்.

‘‘கூடிய மும்மையும் சுடர்ந்த கொந்தழல்

நீடிய வினைமரம் நிரைத்துக் கட்டிட

வீடெனப் படும்வினை விடுதல் பெற்றதங்கு

ஆடெழிற் றோளினாய் அநந்த நான்மையே”[218]

என்ற பாடல் வீடுபேற்றின் தன்மையை விளக்குகின்றது. நல்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம் ஆகிய மும்மணிகளாகிய பெருஞ்சுடர் இருவினை என்ற மரத்தைச் சுட்டுப் பொசுக்கு நீங்கா இருவினை நீங்கல் வீடுபேறுஆகின்றது என்று குறிக்கிறது சீவகசிந்தாமணி. இக்கருத்துகளை ஏற்றுச் சீவகன் வீடுபேறு அடையும் நிலைக்கு நகர்வது முத்தியிலம்பகமாகும். இவ்விலம்பகத்தின்வழி சமண சமயத்தின் கொள்கைகளை வளர்த்தெடுத்த காப்பியம் சீவக சிந்தாமணி என்பது உறுதியாகின்றது.

**வளையாபதி**

வளையாபதி காப்பியம் முழுவதுமாய்க் கிடைக்கவில்லை. இதன் கதையாகக் கூறப்படும் நவகோடி நாராயணனின் கதை சமண நிலையில் ஏற்கத்தக்கதாய் இல்லை. இருப்பினும் இக்காப்பியப் பாடல்களாகக் கிடைத்துள்ளவற்றில் இருந்து

[218] திருத்தக்க தேவர், சீவக சிந்தாமணி, முத்தியிலம்பகம், பா.எ.2846

சமணச் செய்திகளைப் பெறமுடிகின்றது. யாக்கை, செல்வம், இளமை நிலையாமை பற்றிய பல செய்திகள் உடையனவாக இந்நூல் பாடல்கள் உள்ளன. இதனுள் இடம்பெற்றுள்ள சாது சரணம், அருக சரணம் ஆகியன சமண சமயம் சார்ந்தனவாகும். சாது சரணத்தில் "நிக்கந்த வேடத்து இருடி கணங்களை" வணங்குவதாக ஒரு குறிப்பு இந்நூலில் காணப்படுகிறது. இதன்வழி சமண இருடி கணங்கள் வழிபடும் நிலையில் இருந்தமை தெரியவருகிறது. இவ்வகையில் வளையாபதி காப்பிய காலத்தில் சமண சமயம் வளர்ச்சி பெற்றிருந்ததை உணரமுடிகின்றது.

**நீலகேசி**

நீலகேசி காப்பியம் சமண சமயக் காப்பியமாகும். இதனுள் இடம்பெறும் முனிசந்திரர் சமணசமயக் கருத்துகளை வெளிப்படத்துகிறார். நீலகேசியின் முதல்பகுதியான தருமஉரைப் பகுதி சமண சமயத் தத்துவ நெறிகளை விளக்கி நிற்கிறது.

காளி என்ற தேவதைக்கும் சமணத்திற்கும் இடையே நிகழும் முரண்பாடாக இந்நீலகேசி புனையப்பெற்றுள்ளது. உயிர்க்கொலை தவிர்த்தல் என்ற சமண சமய அடிப்படையே இக்காப்பியத்தின் மூலமாகும். வினைகளில் இருந்து விடுபடல் என்ற நிலையில் மகிழ்வைப் பெறமுடியும் என்ற கருத்தை முனிச் சந்திரர் குறிப்பிடுகிறார். இவரின் அறவுரைகளை ஏற்றே நீலகேசி மற்ற சமயத்தாரை வாதிற்கு அழைத்து வெல்கிறாள். முனிச்சந்திரர் பாஞ்சால தேசத்தில் இருப்பதாக நீலகேசி தெரிவிக்கிறது.

நீலகேசி காப்பியத்தின்வழி மணிமேகலைக் காப்பியத்திற்குப் பின்காலத்தில் சமணசமயம் உயர்நிலையைப் பெற்றிருந்தது என்பது விளங்குகிறது.

**உதயண குமார காவியம்**

உதயணன் கதையைக் காவியமாக்கும் இவ்விலக்கியத்தில் துறவுக்காண்டம் என்ற பகுதி சமணத் தத்துவங்களை விளக்குவதாக உள்ளது. இதனுள் முனிவர் ஒருவர் சமண சமயக் கருத்துகளை உதயணனுக்கு வழங்குகிறார்.

**நாக குமார காவியம்**

நாககுமாரனின் கதையை அறிவிக்கும் இச்சிறுகாப்பியம் நாககுமாரன் நிறைவில் துறவடையும்போது சமண சமயக் கருத்துகளுக்கு இடமளித்துள்ளது. இக்காப்பியத்தின் முன்பகுதியில் மகாவீரரைச் சந்திப்பதாகவும், அவரின் சீடரான கௌதம கணதரர் என்பவரைப் பணிந்து நல்லுரைகள் சொல்லப்படுவதாகவும் சில குறிப்புகள் காணப்படுகின்றன. இவற்றிலும் சமணசமயக் கருத்துகள் இடம்பெற்றுள்ளன.

**யசோதரகாவியம்**

வெண்நாவலுடையார்வேள் என்பவர் எழுதிய யசோதர காவியம் யசோதரனின் வரலாற்றை அறிவிப்பது ஆகும். உயிர்ப்பலியிடுவதற்காக இணையர் இருவரைத் தேடும் நிலையில் சமண இரட்டையர் அபயருசி, அபயமதி என்பவர்கள் கிட்டுகின்றனர். இவர்கள் சமண சமய சான்றோர் ஆன சுதத்தாச்சார்யார் சீடர்கள் ஆவர். இவர்களை உயிர்பலியிட நினைக்கும்போது அவர்கள் புன்சிரிப்புடன் மன்னர் உயிர்ப்பலி விட்டு இவ்வுலகம் காத்து வாழ்க என்று குறிப்பிடுகின்றனர்.

இந்நேரத்திலும் சிரிக்கும் அவர்களின் மன உறுதியைக் கண்டு அவர்களைப் பற்றி மன்னன் அறிந்து கொள்கிறான்.அவர்களின் சமயக் கொள்கையை அறிந்து கொள்கிறான். அவ்வகையில் சமணசமயக் கொள்கைகள் இதனுள் இடம்பெறுகின்றன.

**சூளாமணி**

தோலாமொழித்தேவரால் எழுதப்பெற்ற இக்காப்பியம் தன் நிறைவு நிலையில் தவம் செய்கிறபோது சமண சமயக் கருத்துகளை அறிவிப்பதாக உள்ளது,

இவை தவிர அவிநயம், யாப்பருங்கம், யாப்பருங்கலக்காரிகை, நேமிநாதம், வச்சணந்தி மாலை, நன்னூல்,நம்பியகப்பொருள் ஆகிய இலக்கண நூல்கள், திவாகர நிகண்டு, பிங்கலந்தை நிகண்டு, உரிச்சொல் நிகண்டு, சூடாமணி நிகண்டு, அகராதி நிகண்டு, கைலாச நிகண்டு, பொருட்தொகை நிகண்டு, பொதிகை நிகண்டு போன்ற நிகண்டு நூல்களும், ஸ்ரீபுராணம், மல்லிநாதர் புராணம், சாந்தி புராணம், மாபுராணம், மேருமந்திரபுராணம் போன்ற புராணங்களும், திருநூற்றந்தாதி, திருக்கலம்பகம், ஆதிநாதர் பிள்ளைத்தமிழ் போன்றனவும் சமணச் சார்பின. சமண

சமயம் தமிழகத்தில் உயர்வான இடத்தில் இருந்தமைக்கான இலக்கியச் சான்றுகள் இவையாகும்.

**<u>சாங்கியம்</u>**

மணிமேகலைக் காப்பியகாலத்திற்குப் பின்பு நீலகேசி பெருங்கதை போன்ற காப்பியங்களில் சாங்கிய சமய வளர்ச்சி எடுத்துரைக்கப்பெற்றுள்ளது. பெருங்கதையில் சாங்கியத்தாய் என்ற பாத்திரம் உதயணனுக்கு சாங்கிய சமயக் கருத்துகளை அறிவிப்பவளாக அமைகிறாள்.

நீலகேசியில் அஸ்தினாபுரத்தில் பராசரர் என்பவர் சாங்கிய சமய வல்லுநராகத் திகழ்ந்ததாகக் குறிக்கப்படுகிறது. இவரையும் நீலகேசி வாதில் வெல்கிறாள். இதன் காரணமாக சாங்கிய சமயம் தமிழகத்தில் வளர்ந்திருந்ததை அறியமுடிகிறது.

## வைசேடிக வாதம்

நீலகேசி வழியாக உலோக சித்து என்பவர் வைசேடிக வல்லுநராக இருந்தவர் என்பது தெரியவருகிறது. இவரிடம் வாதிட்டு நீலகேசி வெல்கிறாள்.அவரின் கொள்கைகளைக் கேட்டு அவற்றை முழுக்கக் கற்பனை என்று குறித்து மறுக்கிறாள் நீலகேசி. இவ்வகையில் வைசேடிகவாதம் நீலகேசி காப்பிய காலத்தில் வளர்ந்திருந்ததை அறியமுடிகிறது.

## பூதவாதம்

நீலகேசி பிசாசகர் என்பவர் பூதவாத ஆசிரியர் என்று குறிக்கிறது. அவருடன் நீலகேசி வாதம் புரிகிறாள். இவர் மதனஜித் என்ற அரசரின் அவையில் சமய அறிஞராக விளங்குபவர். அவரிடத்திற்கே சென்று அவரின் பூதவாதக் கொள்கைகளை மறுக்கிறாள் நீலகேசி.

பூதவாதியிடம் ஆன்மா, ஒப்பற்ற உலகம், சமய அடிப்படையில் கட்டுப்பாடு போன்றன குறித்த கருத்துகளை ஏற்கவேண்டும் என்று அச்சுறுத்தி

அவ்வாசிரியரைப் பணிய வைக்கிறாள் நீலகேசி. எனவே நீலகேசி காலத்தில் பூதவாதம் வளர்ச்சி பெற்றிருந்ததை அறியமுடிகிறது.

இவ்வாறு மணிமேகலைக் காப்பியத்திற்குப் பின்பு இந்திய மெய்ப்பொருளியல் சார்ந்த சமயங்களின் வளர்ச்சி என்பது தொடர்ந்துள்ளது என்பதை அறியமுடிகிறது. தற்காலத்தில் சாங்கியம், வைசேடிகம், அசீவகம் போன்ற சமயங்கள் தேய்வுற்ற நிலையை அறியும்போது இவற்றின் தேய்வுக்கான காரணங்கள் பற்றிய ஆராய வேண்டியிருக்கிறது. இந்திய, தமிழக மெய்ப்பொருளியல் வரலாறு கூர்மையுடன் ஆராயப்படவேண்டிய நிலைப்பாடு உடையது என்பதை மட்டும் உணரமுடிகின்றது.

## <u>தொகுப்புரை</u>

இந்திய தமிழக மெய்ப்பொருளியல் வரலாற்றில் மணிமேகலைக் காப்பியத்திற்குக் குறிக்கத்தக்க இடம் உண்டு. இக்காப்பியத்திற்கு முன்னும் பின்னும் இந்திய தமிழக மெய்ப்பொருளியல் வளர்ச்சியில் மணிமேகலையின் பதிவுகளும்

தாக்கங்களும் குறிக்கத்தக்க நிலைத்த தன்மையை உருவாக்கியுள்ளன என்பது கருதத்தக்கது.

மணிமேகலைக்குப் பின்னான மெய்ப்பொருள் வளர்ச்சியை குண்டலகேசி, நீலகேசி, சிவஞானசித்தியார் பரபக்கம் போன்றவற்றின் வழி அறியமுடிகின்றது.

நீலகேசி மற்ற சமயத்தாரைச் சந்திக்கிறாள் என்றபோதும் அச்சமயத்தாரின் பெயர்கள் புனைவுகளாக இருப்பது ஏன், அவர்கள் வாழும் இடம் தமிழகத்தில் இருந்து வேறான இடமாக இருப்பது ஏன் என்ற ஒரு கேள்வி எழுகிறது. ஒரு சமயத்தை வெல்ல மற்றொரு நாட்டுக்குச் செல்வது என்பது படைப்பாளனுக்குப் பாதுகாப்பினைத் தரும் என்ற எண்ணத்தால் இவ்வாறு களம் நகர்த்தப்பெற்றிருக்கலாம் என முடிய முடிகின்றது.

இருப்பினும் நீலகேசி தமிழ்க்காப்பியம். அதில் தமிழக சமயச் சூழல் பதிவாக்கப்பெற்றுள்ளது என்ற நிலையில் தமிழக மெய்யியல் சமய வளர்ச்சியை அறிந்து கொள்ள அது வாய்ப்பளிக்கிறது என்று முடியலாம்.

# இயல். 5

## சமயப் பின்புலத்தில் மக்கள் வாழ்க்கைமுறை

பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்ற இயல்புடைய வாழ்க்கையில் ஒரு இலக்கை ஏற்படுத்தி அவ்வழி நடக்க சமயங்கள் உதவுகின்றன. சாதாரண மனித உயிரை உயர்வு பெறும் ஆன்மாவாக உயர்த்தி உன்னத நிலையான வீடுபேற்றை அடைய வைக்கச் சமயங்கள் அடிகோலுகின்றன. வைதிக சமயங்கள், அவைதிக சமயங்கள் என்ற இரு நிலைப்பட்ட சமயங்களும் உயிர்களிடத்துள்ள தீய குணங்களை அகற்றி நற்குணங்களைப் புகட்டி அறங்கள் செய்யவைத்து முன்னேற்றும் முயற்சியில் முன் நிற்கின்றன. இதன் காரணமாக சமயப் பின்புலத்தில் மக்களின் வாழ்க்கை முறை நெறிப்படுத்தப்படுகிறது. அவ்வகையில் மணிமேகலைக் காப்பியம் மக்கள் உய்வு பெறும் நெறி பற்றிய விவாதங்களுக்கு இடம் தந்து முன்னேற்றம் மிக்க வாழ்க்கை முறை எதுவென அறியச் செய்ய முயல்கிறது.

“நறுமலர்க் கோதாய் நல்கினை கேளாய்:

தரும தலைவன் தலைமையின் உரைத்த

பெருமைசால் நல்அறம் பெருகா தாகி

இறுதிஇல் நல்கதி செல்லும் பெருவழி

அறுகையும் நெருஞ்சியும் அடர்ந்துகண் அடைத்தாங்குச்

செயிர்வழங்கு தீக்கதி திறந்து கல்என்று

உயிர்வழங்கு பெருநெறி ஒருதிறம் பட்டது

தண்பனி விழுங்கிய செங்கதிர் மண்டிலம்

உண்டுஎன உணர்தல் அல்லது யாவதும்

கண்டுஇனிது விளங்காக் காட்சி போன்றது

சலாகை நுழைந்த மணித்துளை அகவையின்

உலாநீர்ப் பெருங்கடல் ஓடா தாயினும்

ஆங்குஅத் துளைவழி உகுநீர் போல

ஈங்கு நல்அறம் எய்தலும் உண்டுஎனச்

சொல்லலும் உண்டுயான் சொல்லுதல் தேற்றார்”[219]

என்ற நிலையில் அறவாணர் உயிர்களுக்கு நல்லறம் போதிக்கும் நிலை பற்றி உரைக்கின்றார். வீட்டு நெறியானது அருகம்புல்லும், நெருஞ்சி முள்ளும் அடர்ந்த

---

[219] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, அறவாணர் தொழுத காதை, அடிகள் 56-70

காடாகிக் கிடக்கிறது. அது தீ நெறிகளால் மூடப்பட்டுக்கிடக்கிறது. பனியால் மூடிய சூரிய மண்டலத்தைக் காண இயலாது. ஆனால் சூரிய மண்டலம் இருப்பதை உணரமுடியும். அதுபோல வீட்டு நெறி உணரத்தக்கது. மணியின் உள் செல்லும் துளையில் கடலை அடைக்க முடியாது. சிறிது சிறிதாகவே நீர் மணித் துளையில் செல்லும். அவ்வாறே நன்னெறி சிறிது சிறிதாகவே அடையத்தக்கதாகும். ஆனால் வீட்டுநெறிப்படி யாரும் செல்ல விரும்புவதில்லை என்று அறவாணர் உயிர்கள் அடைய வேண்டிய உயர் வாழ்க்கை பற்றி அறிவிக்கிறார். இவ்வாழ்க்கையை அடைய முயல்கிறாள் மணிமேகலை.

**மணிமேகலை பௌத்த சமயம் சார்தல்**

காவிரிப்பூம்பட்டிணத்து இந்திரவிழாவில் நடனம் ஆடும் குலத்தைச் சார்ந்தவள் மணிமேகலை. மாதவி, தன் காதலன் கோவலனுக்கு உள்ள துயரம் கருதி இந்திரவிழாவில் நடனமாட வரவில்லை. அவளின் மகளான மணிமேகலை நடனமாட வரவேண்டிய சூழல். இந்நிலையில் மாதவியின் தாய் சித்திராபதி

மணிமேகலையை நடனமாட வரச் செய்ய பல முயற்சிகள் எடுக்கிறாள். தோழி வயந்தமாலையை அனுப்பி மணிமேகலையை அழைத்து வர முயற்சி செய்கிறாள்.

ஆனால் மாதவி மணிமேகலையைக் கற்புக்கரசி கண்ணகியின் மகள் அவள். அவள் தீத்தொழில் படாஅள் என்று மறுக்கிறாள். இதற்கு உரிய காரணமாக மாதவி குறிப்பது அறவணடிகளின் அறவுரையாகும். அறவணடிகள் அறவுரையை முன்வைத்தே மணிமேகலை தீத்தொழில் புரிய வரமாட்டாள். நல்திறம் படர்வாள் என்று மொழிகிறாள்.

‘‘அறவண அடிகள் அடிமிசை வீழ்ந்து
மா பெருந் துன்பம் கொண்டு உளம் மயங்கி
காதலன் உற்ற கடுந் துயர் கூறப்
"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும் பேர் இன்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோர் உறுவது அறிக!" என்று அருளி
ஐவகைச் சீலத்து அமைதியும் காட்டி

"உய் வகை இவை கொள்" என்று உரவோன் அருளினன்” [220]

என்று சமயப் பின்புலம் காரணமாகவே மணிமேகலையை நல்வழிப்படுத்துகிறாள் மாதவி. ஐவகை சீல அமைதி காட்டி மணிமேகலை என்ற பெண்ணை நல்வழிப் படுத்துகிறாள் மாதவி. இது முதல் தொடங்கி மணிமேகலை என்ற பெண்ணை மெல்ல மெல்ல நல்வழிப் படுத்தும் போக்கு காப்பியத்தில் இடம்பெறுகிறது. காமம் அற்றவளாக, களவு அற்றவளாக, சொல் தூய்மை மிக்கவளாக அவள் காப்பியத்தில் வளர்த்தெடுக்கப்படுகிறாள்.

## <u>பசி போக்கும் அறம்</u>

பௌத்த சமயப் பின்புலத்தில் மணிமேகலை அமுதசுரபிப் பாத்திரம் ஏந்திப் பசி போக்கும் அறத்தைச் செய்கிறாள். புத்த பாத பீடிகை உள்ள இடத்தில் தொழுத அமுதசுரபிப் பாத்திரத்தை மணிமேகலை பெறுகிறாள். அறங்களில் தலையாய அறமாக பசி போக்கும் அறம் விளங்குகிறது. அதனை மணிமேகலை செய்கிறாள். பசியால் ஏற்படும் தீமைகளை மணிமேகலைக் காப்பியம் பட்டியல் இடுகின்றது.

---

[220] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, ஊரலர் உற்ற காதை,அடிகள் 60-69

‘‘குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்

பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்

நாண்அணி களையும் மாண்எழில் சிதைக்கும்

பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்

பசிப்பிணி என்னும் பாவிஅது தீர்த்தோர்

இசைச்சொல் அளவைக்கு என்நா நிமிராது

புல்மரம் புகையப் புகைஅழல் பொங்கி

மன்உயிர் மடிய மழைவளம் கரத்தலின்

அரசுதலை நீங்கிய அருமறை அந்தணன்

இருநில மருங்கின் யாங்கணும் திரிவோன்

அரும்பசி களைய ஆற்றுவது காணான்

திருந்தா நாய்ஊன் தின்னுதல் உறுவோன்

இந்திர சிறப்புச் செய்வோன் முன்னர்

வந்து தோன்றிய வானவர் பெருந்தகை

மழைவளம் தருதலின் மன்உயிர் ஓங்கிப்

பிழையா விளையுளும் பெருகியது அன்றோ

ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்

ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்

உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை

மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே”[221]

என்று பசிப்பிணி போக்கும் அறம் பற்றி அறிவிக்கிறது மணிமேகலை. பசியின் காரணமாக குடிபிறப்பின் சிறப்பு அழியும். சிறப்பு, கல்வி, நாண், அழகு கெடும். மனைவியொடும் பிறர்வாயிலில் பிச்சை எடுக்க வைத்துவிடும். இத்தகைய பசியின் கொடுமையைத் தீர்ப்பவர்களின் புகழ் சொல்லில் அடங்காது.

விசுவாமித்திர முனிவன் கூட ஒரு முறை பசியின் காரணமாக செய்யக் கூடாத செயலைச் செய்துவிடுகிறான். பசிப்பிணியைப் போக்கிக் கொள்ளும் திறம் பெற்றவர்களுக்கு உணவிடுதல் என்பது அறத்தை விலை கூறி விற்பது போன்றது. பசி போக்கத் திறம் அற்றவர்களுக்கே வழங்கவேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு உணவிட்டவர்கள் உயிர் கொடுத்தோர் ஆகின்றனர்.

---

[221] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, பாத்திரம் பெற்ற காதை, அடிகள் 76-96

இத்தகைய பசி போக்கும் அறத்தை முதன்மையான அறமாக மணிமேகலைக் காப்பியம் முன்வைக்கிறது. பௌத்த நிலைப்பாட்டில் அல்லல் படும் மக்களுக்கு உதவும் அறமே சிறந்த அறமாகின்றது.

இதனையே மற்றொரு இடத்தில் ‘அறம் எனப்படுவது யாது எனக் கேட்பின் மறவாது இது கேள் மன் உயிர்க்கு எல்லாம் உண்டியும் உறையுளும் அல்லது கண்டது இல்”[222] என்று குறிக்கிறது மணிமேகலைக் காப்பியம். இவ்வகையில் குறிக்கத்தக்க அறமாக துன்பமின்றி உயிர்களைக் காத்தல் என்பது கொள்ளப்படுகின்றது.

**காமம்,கொலை,களவு துறப்பு**

கொலை, களவு, காமம் என்ற மூன்றும் உடல்வழியாகத் தோன்றும் தீவினைகள் ஆகும். இம்மூன்றையும் விலக்குகிறாள் மணிமேகலை.

"கற்புத் தான் இலள் நல் தவ உணர்வு இலள்

---

[222] மேலது,வஞ்சி மாநகர் புக்க காதை, அபடிகள் 227-231

வருணக் காப்பு இலள் பொருள் விலையாட்டி" என்று

இகழ்ந்தனன் ஆகி நயந்தோன் என்னாது

புதுவோன் பின்றைப் போனது என் நெஞ்சம்

இதுவோ அன்னாய்! காமத்து இயற்கை?

'இதுவே ஆயின் கெடுக தன் திறம்!'"[223]

என்ற நிலையில் காமத்தினை விலக்குகிறாள் மணிமேகலை

மணிமேகலை மீது சுமத்தப்பட்ட கொலைப்பழியும் நீங்குவதாக கதைப் போக்கு அமைகிறது. உதய குமாரனின் தாயான அரச மாதேவி மணிமேகலைக்குப் பல்வகைகளில் துன்பம் தருகிறாள். அத்துன்பங்களை ஏற்று அரசமாதேவியையும் நல்வழிப்படுத்துகிறாள் மணிமேகலை. அவளுக்குக் காமக்கீழ்மை, கொலைக்கொடுமை, கள் மயக்கம், பொய்த்துன்பம், களவுத் தீமை போன்றவற்றை

---

[223] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, மணிமேகலா தெய்வம் தோன்றிய காதை,அடி 86-91

எடுத்துரைக்கிறாள். இதன் காரணமாக சித்ராபதி மணிமேகலை அழைத்துச் செல்ல வந்தபோது அரசமாதேவி ஐவகைக்குற்றங்களிலும் கீழான பரத்தமையைச் செய்ய மணிமேகலையை உன்னுடன் அனுப்ப மாட்டேன் என்று உரைக்கிறாள். இவற்றோடு அறவாணர் வழிகாட்டலின்படி மணிமேகலை பல இடங்களுக்குச் சென்று பௌத்தசமயக் கருத்துகளைப் பரப்ப முனைகிறாள்.

மணிமேகலைக் காப்பியம் காட்டும் அறங்களின் மொத்த வடிவமாக மணிமேகலைப் பாத்திரம் படைக்கப்பெற்றுள்ளது. உயிர் மெல்ல மெல்ல நன்மை பெற்ற சமய அடிப்படையில் மேன்மை நிலை அடைய முயல்கிற முயற்சியே மணிமேகலைக்காப்பியம் ஆகும்.

**சமயக் கண்ணோட்டத்தில் ஆபுத்திரன்**

மணிமேகலைக் காப்பியத்தில் மணிமேகலை ஒரு குறிப்பிடத்தக்கப் பாத்திரம் என்றால் ஆபுத்திரனும் அதற்கு இணையாக அமையும் பாத்திரமாகும். இப்பாத்திரம் வேத மரபுகளை கேள்விக்கு உள்ளாக்குகிறது. ஆகம அளவையாகக் கருதப்படும் வேதநூல் ஒழுக்கத்தைக் கடிகிறது. வேள்வியில் உயிர்களைப் பலியிடலைத் தவிர்க்க

முனைகிறது. ஆகுதியில் இட வைத்திருந்த பசுவை மீட்டவன் ஆபுத்திரன். அவனைப் பின்வருமாறு அந்தணர்கள் குறை சொல்லுகின்றனர்.

‘‘பொன் அணி நேமி வலம் கொள் சக்கரக் கை

மன் உயிர் முதல்வன் மகன் எமக்கு அருளிய

அரு மறை நல் நூல் அறியாது இகழ்ந்தனை

தெருமரல் உள்ளத்துச் சிறியை நீ’’[224]

என்று விலக்கி வைக்கின்றனர். இதில் வைணவக் கடவுளான திருமால் மகனான பிரம்மா என்ற குறிப்பு வேதவாதத்தின் சார்பினைக் காட்டுவது. அந்தணர்கள் வேதவாதத்தின்படி இயங்குபவர்கள். அவர்களின் வேதவாதம் சரியன்று ஆபுத்திரன் முரண்படுகிறான்.

---

[224] சீத்தலைச்சாத்தனார், மணிமேகலை, ஆபத்திரன் திறன் அறிவித்த காதை, அடி 56-60

இதன்காரணமாக ஆபுத்திரன் விலக்கி வைக்கப்படுகிறான். மேலும் அவன் மதுரையை நோக்கிப் பயணிக்கிறான். அவனின் அறத்தால் நடுங்கிய இந்திரன் பல இடையூறுகளைச் செய்ய மனம் வெறுத்து இறப்பினை நாடுகிறான். இருப்பினும் அவன் தான் செய்த நல்வினை காரணமாக சாவக நாட்டின் அரசன் ஆனான் என்று குறிப்பிடுகிறது மணிமேகலை. இதன் காரணமாக முன் செய்த நல்வினை பின்பிறப்பில் நன்மை தருகிறது என்ற கருத்து மெய்ப்படுதலை காணமுடிகின்றது.

”மண் ஆள் வேந்தன் மண்முகன் என்னும்

புண்ணிய முதல்வன் திருந்து அடி வணங்கி

"மக்களை இல்லேன் மாதவன் அருளால்

பெற்றேன் புதல்வனை" என்று அவன் வளர்ப்ப

அரைசு ஆள் செல்வம் அவன்பால் உண்மையின்

நிரை தார் வேந்தன் ஆயினன் அவன் தான்”[225]

என்ற பகுதியில் ஆபுத்திரன் அந்தணர்களால் மறுக்கப்பட்டாலும் அடுத்த பிறவியில் அவன் அரசகதி பெற்றதாகக் காட்டப்படுவது வேத மறுப்பின் வெளிப்பாடு என்றே கொள்ளப்படவேண்டும்.

**<u>தொகுப்புரை</u>**

இவ்வகையில் சமயச் சார்புடன் வாழும் வாழ்க்கை நெறிப்பட்ட வாழ்க்கை என்பதும் இதன் காரணமாக உயர்வுகளைப் பெற முடியும் என்பதையும் உணரமுடிகின்றது.

---

[225] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, பாத்திரம் கொண்டு பிச்சை புக்க காதை, அடிகள் 40-45

# இயல். 6

## சமயங்களில் பெண்களுக்கான இடம்.

தமிழக மெய்ப்பொருள் வரலாற்றில் குறிக்கத்தக்க இடம் பெண்களுக்கு உண்டு. ஒவ்வொரு சமயத்திற்கும் ஒவ்வொரு ஆளுமைகளைக் குறிப்பிடும் அளவிற்குப் பெண் பாத்திரங்கள் தமிழ் இலக்கிய உலகில் படைக்கப்பெற்றுள்ளன. சிலப்பதிகாரக் காப்பியத்தில் சமண வல்லுநராகக் கவுந்தியடிகள், மணிமேகலைக் காப்பியத்தில் பௌத்த வல்லுநராக மணிமேகலை, குண்டலகேசிக் காப்பியத்தில் பௌத்த வல்லுநராகக் குண்டலகேசி, நீலகேசிக் காப்பியத்தில் சமண வல்லுநராக நீலகேசி, பெருங்கதையில் சாங்கிய வல்லுநராக சாங்கியத்தாய், வைணத்திற்கு ஆண்டாள், சைவத்திற்குக் காரைக்கால் அம்மையார் என்று பெண்களை முன்னிறுத்தும் சமயச் சூழல் தமிழ் இலக்கியப் பரப்பில் அமைந்துள்ளது.

இதன் காரணமாக பெண்களுக்கு உரிய இடம் சமய அளவில் வழங்கப் பெற்றிருக்கிறது என்பதை உணரமுடிகின்றது. பௌத்தம், சமணம், சாங்கியம் போன்ற சமயங்களில் ஒரு காலத்தில் பெண்கள் இடம்பெறக் கூடாது என்ற கட்டுப்பாடு இருந்த நிலையிலும் அவ்வவ் சமயக் காப்பியங்களில் பெண்களுக்கு இடம் தந்திருப்பது சிறப்பிற்குரியதாகும்.

**பௌத்த சமயமும் பெண்கள் நிலைப்பாடும்**

பௌத்த சமயத்தில் முதலில் பெண்களைப் பிக்குணிகளாகச் சேர்க்கக் கூடாது என்று புத்தபிக்குகள் மறுத்துள்ளனர். பின்பு பல கட்டுப்பாடுகளின் அடிப்படையில் பெண்களைச் சேர்க்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. இதுபற்றிய இணையப் பதிவொன்று இதனை வலுப்படுத்துவதாக உள்ளது, ‘‘“பிக்குணி பதி மோக்க” (பிக்குணியின் மோக்ஷப் பாதை) என்ற அடிப்படையில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பெற்றன.

அத்தகைய கட்டுப்பாடுகள் (சுல்ல வக்க, வினய பீடிக) பின்வருமாறு.

1. பிக்குணி எவ்வளவு வயதானாலும், பிக்குவிற்கு மரியாதைச் செலுத்த வேண்டும், ஆனால், பிக்கு அவ்வாறு பதிலிற்கு செய்யவேண்டியதில்லை.

2. “வஸ”காலத்தை, பிக்குணிகள், பிக்கு இல்லாமல் கழிக்கக்கூடாது. [பிக்குணி, எந்தக் காரணத்திற்கும் மடாலயத்தில் பிக்குகள், அவர்கள் இருந்தாலும், இல்லையென்றாலும், வசிக்கும் இடத்திற்கு / இடத்தைக் கடந்து செல்லக் கூடாது.]

3. “உபோசதா” சடங்கு எப்பொழுது நடக்கும் என, பிக்குவிடமிருந்துக் கேட்டுத்தெரிந்து கொள்ளவேண்டும், மற்றும் அவர்களுக்கு அறிவுரை வழங்கும் நாளையும் தெரிந்து கொள்ளவேண்டும்.

4. “பாவர்னா” என்ற முறையை (ஒருவன் தான் செய்த தவறுகளை – பார்த்தது, கேட்டது மற்றும் சந்தேகப்பட்டது) பிக்கு-சங்கத்தில் முதலிலும், பிறகு பிக்குணி-சங்கத்தில் மறுபடியும் செய்யவேண்டும்.

5. “மானத்தா” என்ற முறையை (ஒருவன் தான் செய்த தவறுகளை – பார்த்தது, கேட்டது மற்றும் சந்தேகப்படது) பிக்கு-சங்கத்தில் முதலிலும், பிறகு பிக்குணி-சங்கத்தில் மறுபடியும் செய்யவேண்டும்.

6. “பிக்குணி பதி மோக்க” விதிமுறையின்படி, ஆறு பசித்தியா விதிகளில் பயிற்சி பெற்ற பிறகு, “உபசம்பதா” முறையிலும் இரண்டு சங்கங்களிலும் தனித்தனியாக பயிற்சி பெறவேண்டும்.

7. பிக்குணி, ஒரு பிக்குவை திட்டவோ, நிந்திக்கவோ, தூஷிக்கவோ கூடாது.

8. பிக்குணி, ஒரு பிக்குவைக் கடிந்து கொள்ளவோ, குறைகூறவோ கூடாது. மேற்குறிப்பிட்ட “உபோசதா” மற்றும் “பாவர்னா” தேதிகளை குறிக்க பிக்குகளிடன் வாதிடக்கூடாது. ஆனால், பிக்குகள், பிக்குணிகளைக் கடிந்து கொள்ளலாம்.[226] இவ்வகையில் பற்பல கட்டுப்பாடுகளை அமைத்துப் பெண் பிக்குணிகளாக பௌத்தத்தில் சேர்க்கப்பெற்றனர்.

---

[226] https://buddhismstudies.wordpress.com/tag/

மணிமேகலை பௌத்த மதத்திற்குள் சேர்க்கப்படும் நிலையில் மணிமேகலை சில செய்திகளைக் குறிக்கிறது.

‘‘ஞான தீபம் நன்கனம் காட்ட

தவத்திறம் பூண்டு தருமம் கேட்டுப்

பவத்திறம் அறுகெனப் பாவை நோற்றனள் என”[227]

என்ற குறிப்பு மணிமேகலைக்கும் பௌத்தத் துறவு மேற்கொள்ளும் நிலையில் அவ்வகையில் சில வரையறைகள் சுட்டப்பட்டள்ளன என்ற கருத்தினைப் பெறமுடிகின்றது.

மணிமேகலைப் பாத்திரத்தைத் தவிர மணிமேகலா தெய்வம், தீவதிலகை போன்றோர் பௌத்த சமயம் சார்ந்த பெண்மணிகளாக மணிமேகலைக் காப்பியத்தில் இடம் பெறச் செய்யப்பெற்றுள்ளனர்.

---

227 சீத்தலைச்சாத்தனார், மணிமேகலை,பவத்திறம் அறுகென பாவை நோற்றகாதை,அடி 262-264

மணிமேகலா தெய்வம் தெய்வ சக்தி வாய்ந்த தேவதையாக விளங்குகின்றது. இத்தெய்வம் மணிமேகலையைப் பௌத்த நெறிப் படுத்துகிறது. இத்தெய்வமும் பௌத்த நெறிப்படி புத்தரை வணங்குகிறது.

'உயிர்கள் எல்லாம் உணர்வு பாழாகி

பொருள் வழங்கு செவித் துளை தூர்ந்து அறிவு இழந்த

வறம் தலை உலகத்து அறம் பாடு சிறக்கச்

சுடர் வழக்கு அற்றுத் தடுமாறுகாலை ஓர்

இள வள ஞாயிறு தோன்றியதென்ன

நீயோ தோன்றினை நின் அடி பணிந்தேன்

நீயே ஆகி நிற்கு அமைந்த இவ் ஆசனம்

நாமிசை வைத்தேன் தலைமிசைக் கொண்டேன்

பூமிசை ஏற்றினேன் புலம்பு அறுக" என்றே

வலம் கொண்டு ஆசனம் வணங்குவோள்”[228]

என்று புத்த பெருமானைப் போற்றி வணங்குகிறாள். அறியாமை இருள் போக்க சூரியனாய்த் தோன்றிய புத்த பெருமானை நாவால் போற்றினேன். தலையால் வணங்கினேன். மனத்தாமரையில் இருந்தினேன். எங்கும் துன்பம் தொலையட்டும் என்று வேண்டுகிறேன் என்று இத்தெய்வம் வணங்குகிறது.

மணிமேகலா தெய்வம் மணிமேகலைக்கு என்றும் துணையாக இருந்து, காத்துவரும் நிலையில் செயல்படுகிறது.

மணிமேகலைக் காப்பியத்தில் பௌத்தம் சார்ந்த மற்றொரு பெண்ணாக படைக்கப்பெற்றிருப்பவள் தீவதிலகை ஆவாள். இவள் மணிபல்லவத் தீவில் உள்ள புத்த பீடிகையை இந்திரனின் ஏவலால் காத்துவருபவள் ஆவாள். இந்தப் புத்தபீடிகையைக் காண்போர் முற்பிறப்பின் நிலையை அறிந்து கொள்வர்.

---

[228] சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, மந்திரம் கொடுத்த காதை அடிகள் 7-16

அதுமட்டுமில்லாமல் புத்த அறம் கேட்கத் தகுதியுடையவர் ஆவர் என்று தீவதிலகை குறிக்கிறாள். இவளும் தர்மத்தித்தின் தலைவராகப் புத்த பிரானைக் காண்கிறாள்.

இவ்வாறு பௌத்த மதம் சார்ந்து தம் வாழ்வை நிகழ்த்தும் பெண்களை மணிமேகலைக் காப்பியம் படைத்துள்ளது. குண்டலகேசியில் பௌத்த சமயப் பெண்கள் பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை.

ஆனால் நீலகேசியில் பெண் பிக்குணிகள் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. ஆனால் அவை நீலகேசியின் விமர்சனத்துக்கு உரியனவாக உள்ளன. ‘சிங்க தத்த ஸ்தவிரன்” என்ற பௌத்தத் துறவி ஒரு பிக்குணியிடம் தவறாக நடக்க முயற்சிப்பதாகவும், அவளை அடைய பௌத்த கோயிலே சிறந்த இடம் என்று குறிப்பதாகவும் குறிப்பு உள்ளது. [229]

மேலும் மற்றொரு நிகழ்வில் பௌத்தத் துறவி பிக்குணி ஒருவருடன் உடல் இச்சை கொள்ள முயன்றபோது அப்பிக்குணி மறுப்பதாகவும் அதற்கு

---

229 கே.என். இராமச்சந்திரன் (மொ. ஆ) நீலகேசி உரைநடைப. 190

அப்பௌத்தத்துறவி கற்பு என்பது பொது மக்கள் சார்ந்தது, ஆன்மீகத் தத்துவத்தை மீறியது ஆகாது என்று குறிப்பதாக ஒரு குறிப்பு காட்டப்பெறுகிறது.[230]

இவற்றின் வழியாக பெண் பிக்குணிகள் இருந்தமைக்கான சான்றும் அப்பெண் பிக்குணிகள் தம்மைப் பாதுகாத்துக்கொள்வது என்பது மிகப் பெரும் சவாலாக இருந்தது என்பதையும் உணரமுடிகின்றது.

இதே நிலை மணிமேகலைக் காப்பியத்தில் மணிமேகலைக்கும் அரசமாதேவியால் நிகழ்ந்தது என்பதும் இங்கு இணைத்துப் பார்க்கத்தக்கது. இவ்வளவில் பெண்கள் ஞானவழிக்குச் செல்லும்போதும் அவர்கள் உடல் சார்ந்த துயரங்களால் துன்பப்படுகிறார்கள் என்பது தெளிவாகின்றது.

**சமண சமயமும் பெண்கள் நிலைப்பாடும்**

சமண சமயத்தில் பெண்களுக்கு இடமே இல்லை. "பெண்பிறவி தாழ்ந்த பிறவி என்பதும், பாவம் செய்தவர் பெண்ணாகப் பிறக்கிறார் என்பதும் சமண சமயக்

---

230 மேலது

கொள்கை"[231] என்று சமண சமயத்தில் பெண்களுக்கான இடமின்மை குறிக்கப்பெற்றுள்ளது. இருப்பினும் நீலகேசி சமண சமயம் சார்ந்த பெண்ணாகப் படைக்கப்பெற்றுள்ளாள். தமிழ் இலக்கியப் போக்கில் சமணத்தில் பெண்களுக்கு இடம் இருந்தது என்பதை நிறுவும் குறிக்கத்தக்க பகுதி இதுவாகும்.

நீலகேசியின் பேய்த்தன்மை நீங்க முனிச்சந்திரர் உபாயம் கூறுகிறார். அவள் ஏற்கும் நிலையில் சமண சமயக் கருத்துகளை அறிவிக்கிறார். முதற்பகுதியான தரும உரைப் பகுதி முழுக்க முழுக்க சமண சமயக் கருத்துகளை உள்ளடக்கியது.

''உய்தல் வாயுரைத் தாயதன் மேலு
முயிருள்ளிட் டபல வுள்பொருள் சொன்னாய்
நைதலில் லாத்தெளி வோடுநன் ஞான
நானுங் கொண் டேனுன் னற்குண மெல்லாம்
பெய்துதந் தாய் பிழைத் தேற்கினி தாவோர்
பிராயச்சித் தம்பெரி யோயரு ளென்னச்
செய்த தீமை கெடக்கட னாட்டிற்

231 மயிலை சீனி வேங்கடசாமி, சமணமும் தமிழும்,ப.222

சினவ ரன்னெறி யேதெருட் டென்றான்''[232]

என்ற நிலையில் நீலகேசி இதுவரை புரிந்த துன்பங்களுக்குக் கழுவாய் கூறுகிறார் முனிசந்திரர். சமண சமயத்தில் பெண்களுக்கு இடமில்லா நிலையில் சமய வாதம் புரிய நீலகேசி என்ற பெண்ணைப் படைத்துக்காட்டியிருப்பது குறிக்கத்தக்க மாற்றம் ஆகும்.

**<u>தொகுப்புரை</u>**

---

[232] நீலகேசி, தருமஉரை பாடல்எண்.148

இவ்வகையில் மணிமேகலை காலத்திலும், மணிமேகலைக்குப்பின்னான காலத்திலும் பெண்கள் சமயத் துறையில் கலந்து கொண்டனர் என்பது குறிக்கத்தக்க செய்தியாகும்.

மற்ற சமயங்களின் பெண்களின் நிலைப்பாடு என்பது இன்னும் ஆராயத்தக்கதாகும்.

## முடிவுகள்

மணிமேகலை கால சமயங்களும் அவற்றின் முற்கால நிலையும் பிற்கால நிலையும் என்ற தலைப்பில் செய்யப்பெற்ற இவ்வாய்வுத்திட்டத்தின் வழியாகப் பின்வரும் முடிவுகள் பெறப்படுகின்றன.

1. சீத்தலைச் சாத்தனாரால் இயற்றப்பெற்ற மணிமேகலைக் காப்பியம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பெற்றிருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வரமுடிகின்றது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முந்தையதான தமிழக மெய்ப்பொருளியல் சூழலை அறிந்து கொள்வதற்கு மணிமேகலைக் காப்பியம் மிகச் சிறந்த இலக்கியச் சான்றாக அமைகின்றது.
2. சீத்தலைச் சாத்தனார் காப்பிய ஆசிரியராக மட்டும் அமையாமல் சமய விற்பன்னராகவும் அமைந்திருக்கிறார். பல்சமய நூற்புலமை, சான்றோர் பழக்கம் போன்றன அவரிடம் இருந்துள்ளன.

3. தமிழக மெய்ப்பொருள் மரபில் தன் சமயக் கருத்துகளை வலியுறுத்தும் சுபக்க முறை, பிற சமயக் கருத்துகளைக் கூறி அவற்றை விலக்கும் பரபக்கமுறை ஆகயிவற்றிற்கு இவரே தொடக்கமாகின்றார்.

4. விளிம்பநிலை மக்களின் ஆன்ம வளர்ச்சிக்கு உதவும் காப்பியமாகவும் மணிமேகலை அமைகின்றது. சாதாரண மக்களுக்கு எட்டாத உயரத்தில் இருந்த ஆன்மிகக் கருத்துகளை எளியோர்க்கும் உரியது என்று கொணர்ந்தவர் சீத்தலைச் சாத்தனார். மணிமேகலை பரத்தையர் குலத்தவள் என்றாலும் அவள் வீடுபேறு அடையத் தகுதி உடையவள் என்று மணிமேகலைக் காப்பியம் நிறைகிறது.

5. மணிமேகலையில் சுட்டப்படும் சமயங்கள் இருவகைப்பட்டனவாக உள்ளன. அவை வைதிக நெறி சார்ந்தன, அவைதிக நெறி சார்ந்தன என்று இருவகைப்படும். சைவவாதம், பிரம்ம வாதம், வைணவவாதம், வேதவாதம், சாங்கிய வாதம், வைசேடிகவாதம் ஆகியன வைதிக நெறிப்பட்டன. அதாவது வேத அடிப்படை வாய்ந்தன. ஆசீவகவாதம், நிகண்டவாதம் (சமணம்), பூதவாதம், பௌத்தம் ஆகியன அவைதிக நெறி சார்ந்தன. தமிழக மெய்யியல்

சூழலில் வேதத்தை ஏற்பது, வேதத்தை மறுப்பது என்ற இருநிலைப்பாடுடைய சமய நெறி இருந்துள்ளது என்பது மணிமேகலைக் காப்பிய வழி உறுதியாகின்றது.

6. எகிப்து, சீனா, இந்தியா ஆகிய நாடுகளில் உலக அளவில் மெய்ப்பொருள் தேடல் என்பது மிகப் பழங்காலத்திலேயே தோற்றுவிக்கப்பெற்றுள்ளது. கிரேக்க மெய்ப்பொருள் இயலுக்கு இணையானது இந்திய மெய்ப்பொருளியல் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இந்தியாவில் இருந்தே மெய்ப்பொருள் ஆராய்ச்சியின் பொது வரலாற்றைத் தொடங்கவேண்டும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இந்திய மெய்ப்பொருளியல் தேடல் என்பது மிகப் பழமை வாய்ந்தது என்பது உறுதியாகும்.

7. மணிமேகலைக் காப்பியத்திற்கு முன்பாக அமைந்த சமய நிலையை ஆரியர் வருகைக்கு முற்பட்ட சிந்துவெளி மக்களின் சமயநெறி, வேதநெறி, வேதங்களைப் புறக்கணித்த நெறி என்று மூவகைகளில் பகுத்துணர முடிகின்றது.

8. சிந்துவெளி மக்கள் காடுகளில் ஆசிரமங்கள் அமைத்து மெய்ப்பொருள் தேடலை நிகழ்த்தியுள்ளனர். மரம். பறவை, விலங்குகள் போன்றவற்றைப் போற்றி வணங்கும் முறைமை சிந்துவெளி மக்களிடம் இருந்துள்ளது. இறந்தவர்களைப் புதைத்தல் என்ற முறைமை சிந்து வெளி நாகரீகத்தின் அடையாளமாக இருந்துள்ளது.
9. வேத கால மெய்ப்பொருள் தேடல் என்பது விரிந்த கால எல்லையைக் கொண்டதாகும். மேலும் விரிவான வேதப் பிரதிகளையும் அது கொண்டுள்ளது. வேதங்கள், பிரமாணம், ஆரண்யகம், உபநிடதம், பிரம்ம சூத்திரம், பகவத் கீதை போன்ற பல வேதப் பிரதிகள் வேதமரபினைத் தழைக்கச் செய்தன.
10. தமிழகச் சூழலில் வேத மரபு தழைத்தோங்கியுள்ளது. தொல்காப்பியம் முதல் சிலப்பதிகாரம் வரை வேத மரபின் சார்பு இருந்துள்ளது. மேலும் வேதங்கள் வைதிக மதங்களுக்குச் சார்பாகவும் இருந்துள்ளன. இதனை மணிமேகலைக்கு முன்னாகத் தோன்றிய இலக்கியங்களின் வழி உணர முடிகின்றது.

11. வேத மரபினைப் புறக்கணிக்கும் நெறியும் தமிழகச் சூழலில் பரவலாகக் காணப்படுகிறது. தொல்காப்பியம் முதல் சங்க இலக்கியங்கள் வரை பற்பல வேத மறுப்புச் செய்திகள் இடம்பெறச் செய்யப்பெற்றுள்ளன. அவைதிக சமயங்களின் வளர்ச்சியின் காரணமாக இவ்வேதமறுப்பு முறை பரலவாக்கம் பெற்றது.

12.